"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,092,26,83,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,830,54,83,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 6893, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன்.*

திரு. தா. உதயசூரியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோமுகி அணையிலிருந்து நீர் வெளியேறும் வாய்க்கால்களைச் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,092,26,83,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,830,54,83,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 6970, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்.*

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆற்காடு தொகுதியில் உள்ள ஏரிகள் மற்றும் நீர்வழி வாய்க்கால்களை முறையாக தூர்வார வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,092,26,83,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,830,54,83,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2019 ஜூலை 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7217, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.கே.ஜி. நீலமேகம்.

திரு. டி.கே.ஜி. நீலமேகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் பொதுப் பணித் துறை அனுமதியோடு மாட்டுவண்டிக்குக் கட்டணம் நிர்ணயித்து மணல் அள்ளி விற்பனை செய்ய அனுமதிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,092,26,83,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,830,54,83,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7339, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன்.

திரு. கே.வி. சேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "போளூர் தொகுதி, போளூர் ஒன்றியம், செண்பகத்தோப்பு அணையினை முழுமையாக பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,092,26,83,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,830,54,83,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7400, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சண்முகையா.

திரு. செ. சண்முகையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் வட்டம், மலைப்பட்டி கிராமத்திற்கு அருகில் உப்பாற்று ஓடையின் குறுக்கே தடுப்பணை கட்டி, சில்லாங்குளம் வரை வரத்துக் கால்வாய் அமைத்து, கீழமங்கலம், ஆரைகுளம், குலசேகரநல்லூர், ஒட்டப்பிடாரம், புதியம்புத்தூர் உள்ளிட்ட பகுதிகளுக்குக் குடிநீர் மற்றும் பாசன வசதி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,092,26,83,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,830,54,83,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7586, மாண்புமிகு உறுப்பினர் திரு. V. செந்தில் பாலாஜி.

திரு. V. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி தொகுதி, கூடலூர் மேல்பாகம் ஊராட்சி, பெரியதிருமங்கலம், புஞ்சைகாளக்குறிச்சி, மேகரை ஆகிய பகுதிகளில் அமராவதி ஆற்றின் குறுக்கே தேவையான இடங்களில் புதிய தடுப்பணை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,092,26,83,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,830,54,83,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7742, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.செ. வில்வநாதன்.

திரு. அ.செ. வில்வநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆம்பூர் தொகுதியில் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான மலையாம்பட்டு ஏரி மற்றும் விண்ணமங்கலம் ஏரி ஆகியவற்றைத் தூர்வாரி, பாசனக் கால்வாய்களைச் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,092,26,83,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,830,54,83,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7934, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். காந்தி.

திரு. ஆர். காந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ராணிப்பேட்டை தொகுதி, நவ்லாக் பாலாற்றில்

மாட்டுவண்டி மணல்குவாரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,092,26,83,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,830,54,83,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8173, மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌ. தங்கப்பாண்டியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8365, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8514, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8694, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி.

திரு. ஆ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பூந்தமல்லி தொகுதியில் உள்ள செம்பரம்பாக்கம் ஏரியைத் தூர்வார வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,092,26,83,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,830,54,83,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

நண்பகல் 12–00

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, கட்டடங்கள் (பொதுப் பணித்

துறை), பாசனம் (பொதுப் பணித் துறை) ஆகியன பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளன. அவற்றில், தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர் பெருந்தலைவர் கர்மவீரர் காமராஜர் அவர்கள், தமது ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்டு மக்களின் நன்மைக்காக பல்வேறு நீர்த்தேக்கங்கள் மற்றும் நீராதார கட்டமைப்புகளை உருவாக்கி, தமிழ்நாட்டின் நீர் ஆதாரத்திற்காக பெரும்பங்கு வகித்திருக்கிறார்கள். அவரது 117–வது பிறந்த நாளன்று, அன்னாரது திருவுருவச் சிலை மற்றும் மணிமண்டபத்தை நான் திறந்து வைத்த இந்நன்னாளில் இம்மாமன்றத்தில் பொதுப் பணித் துறை, நெடுஞ் சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை தொடர்பான மானியக் கோரிக்கைகளைத் தாக்கல் செய்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று 3 மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் 3 மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள்.

திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண வேளாண்குடியில் பிறந்த என்னை, இந்த மாமன்றத்தில் உறுப்பினராக்கி, அமைச்சராக்கி, என்னை வளர்த்து ஆளாக்கிய எங்களுடைய அன்புத் தலைவர் கலைஞர் அவர்கள் இருக்கும்

@ 687 முதல் 1046 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I, II, மற்றும் III ஆக அச்சிடப்பட்டுள்ளன.

திசை நோக்கி வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்திருக்கிற எங்கள் கட்சியினுடைய தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், வருங்கால தமிழகம், எங்களுடைய தளபதி அவர்களையும் வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை ஆகியவற்றின் மீதான மானியக் கோரிக்கைகளின்மீது எனது உரையைத் தொடங்குகின்றேன்.

“தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலன்ஆள் பவர்க்கு.”

காரியங்களில் விரைவுடைமை, அதனை அறியும் கல்வி அறிவுடைமை, ஆண்மை உடைமை என்ற மூன்று பண்புகளும் அரசனுக்கு உயிர்ப் பண்புகள். எனவே, இந்தத் துறைகளுக்கு பொறுப்பு வகித்துக்கொண்டிருப்பவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். மக்களுக்குத் தேவையான அடிப்படைத் தேவைகளை அரசு செய்து தருவதுதான் பொதுப் பணியாகும். மக்களுக்குத் தேவையான சாலைகள் அமைத்தல், நீர் ஆதாரங்களைப் பாதுகாத்தல், குடிநீர் வழங்குதல், மின்சாரம் வழங்குதல், சுகாதாரப் பணிகள் போன்றவை பொதுப் பணி என்ற வகைப்பாட்டில் அடங்கும். அனைத்து மக்களையும் சென்றடைய வேண்டிய அத்தியாவசியமான பொதுப் பணிகளை தனியார் செய்வது சாத்தியமற்றது என்பதால், அரசே இப்பணிகளை நேரடியாகச் செய்வதற்கு பல துறைகள் துவங்கப்பட்டன. இதில் பிரதானமாக, நீர்நிலைகளைப் பாதுகாத்து, செம்மைப்படுத்த துவங்கப்பட்டதுதான் பொதுப் பணித் துறை ஆகும். 1858 ஆம் ஆண்டில்தான் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இந்தத் துறை முதன்முதலாகத் துவங்கப்பட்டது. துவங்கப்பட்டபோது மராமத்துத் துறை என்றிருந்த துறையின் பெயரை பொதுப் பணித் துறை என்று பெயர் மாற்றம் செய்து, வரலாற்றுச் சிறப்புமிக்க துவக்கத்தைச் செய்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தலைவர் கலைஞர் அவர்கள், 1967 ஆம் ஆண்டு முதல் 1969 ஆம் ஆண்டு வரை பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தபோது, இத்துறையில் பல முன்னோடித் திட்டங்களைச் செயல்படுத்தியது நாடறிந்ததே. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு நீர் ஆதாரமே அவசியமானது என்பதைக் கருத்தில் கொண்டு, நீர் வளத்தைப்

பெருக்கி, சேமித்து, திறம்படப் பயன்படுத்துவதற்கான பல்வேறு திட்டப் பணிகள் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் செயல்படுத்தப்பட்டன.

தமிழகத்தின் எதிர்கால நன்மைக்கு, மாநிலத்தில் பாயும் ஆறுகளை இணைக்கும் பணிகளை வேகப்படுத்துவது மிகவும் அவசியமாகும். கடந்த 8 ஆண்டுக் காலத்தில், கொள்கை விளக்கக் குறிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள நதிநீர் இணைப்புப் பணிகளைச் செயல்படுத்துவதில் இந்த அரசு போதிய கவனம் செலுத்தவில்லை என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பருவ மழை மிகவும் பொய்த்திருக்கிற இந்தக் காலகட்டத்தில்,கிடைக்கின்ற நீரை சரியாகப் பயன்படுத்துவது இந்தத் துறையினுடைய முக்கியமான பணியாக இருக்க வேண்டுமென்று கருதுகிறேன். இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள், 2, 3 ஆண்டுகளாக காவேரியிலே எப்படி தண்ணீர் வருகிறது, எப்படி பொதுப் பணித் துறைமூலம் பாசனத்திற்குத் தண்ணீர் தருகிறார்கள் என்பதை அந்தந்தப் பகுதியிலே பத்திரிகைகளின் வாயிலாக தெரிந்துகொள்வார்கள். ஆனால், காவேரிப் படுகையில் இருக்கிற வேளாண் பெருங்குடி மக்கள், என்னைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேரடியாகவே அதுகுறித்து அறிவோம்.

பிற்பகல் 12–05

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் தெரிந்திருக்கும். எனினும், நானும் என்னுடைய கருத்தைப் பதிவு செய்ய விரும்புகிறேன். கடந்த ஆண்டு பருவ மழை அதிகமாகப் பெய்து, காவேரியிலே வெள்ளம் வந்தது. வெள்ளம் வந்தபோது தண்ணீர் முழுவதும் காவேரியிலே சென்று, வழியிலே கடலிலே கலக்கும்வகையில் திறந்துவிட்டுவிட்டார்கள்.

குறுவை சாகுபடி இல்லை, சம்பா சாகுபடிக்கு முன்னதாகவே அந்தத் தண்ணீர் வந்த காரணத்தால், விவசாய நிலத்திற்குத் தர முடியாமல் தண்ணீர் நேரடியாகக் கடலுக்குச் சென்றது. அப்படி சென்ற தண்ணீருடைய அளவு, 100 டி.எம்.சி. தண்ணீர் இருக்கும் என்பது பொது மக்களுடைய கருத்தாகும். 100 டி.எம்.சி. தண்ணீர் என்பது ஒரு சாகுபடிக்குத் தேவையான தண்ணீர். நாங்கள் உடனே முதன்மைப் பொறியாளரை அழைத்து, இந்தத் தண்ணீரை நீங்கள்

கொள்ளிடம் வழியாகத் திருப்பினால் அந்தப் பகுதியில் இருக்கிற 500, 700 கிராமங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும், நிலத்தடி நீர் அதிகமாக வரும். எனவே, நீங்கள் அந்தத் தண்ணீரை கொள்ளிடத்திலே திருப்புங்கள் என்று சொன்னோம். ஆனால், கொள்ளிடத்திலே திருப்புவதற்கு அவர்கள் மறுத்துவிட்டார்கள். கொள்ளிடத்திலே மணல் அள்ளிக் கொண்டிருந்த காரணத்தால், தண்ணீரைத் திருப்பாமல், அது நேரடியாகக் கடலுக்குச் சென்றது. கடந்த ஆண்டு மட்டுமல்ல அதற்கு முந்தைய ஆண்டுகளில்கூட இதே நிலைதான்.

இப்பொழுது, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே நேரடியாக வந்து, இடிந்து போன முக்கொம்பு அணையைப் பார்வையிட்டு, புதிதாக 425 கோடி ரூபாய் செலவில் இடிந்து போன அணையைக் கட்டுகிறேன் என்று தெரிவித்து, இப்போது அந்தத் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். ஆனால், ஓராண்டு காலம், 1¼ ஆண்டு காலம் ஆகிறது, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்கூட அந்தப் பணியை வந்து பார்த்தார்கள், இதுவரை அடிப்படைப் பணிகள்கூட நிறைவேற்றப்படவில்லை. இன்னும் ஒரு மாத காலத்திலே மழைக் காலம் தொடங்கினால் அந்த முக்கொம்பு அணையை மூடினால்தான் முழுவதும் தண்ணீர் வரும். எனவே, அந்த அணையை அடைக்கக்கூடிய பணி இன்னும் நடைபெறவில்லை என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். டெண்டர் விடப்பட்டிருக்கிறது, வேலை தொடங்கப்பட்டிருக்கிறது, அதுவும் தெரியும்; நான் பார்த்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்னாள் அமைச்சர், அனுபவம் வாய்ந்தவர், அதிலே இருக்கிற பிரச்சினையெல்லாம் அவருக்கு நன்றாகத் தெரியும். அந்தத் தடுப்பணை எந்த இடத்திலே கட்டப்பட வேண்டும் என்று ஆய்வு செய்து, அதற்குப் பிறகு டெண்டர் விடப்பட்டு அந்தப் பணியையெல்லாம் நிறைவேற்றி, இப்பொழுது தடுப்பணை கட்டும் பணி துவங்கப்பட்டுவிட்டது. ஆகவே, இவற்றுக்கெல்லாம் ஒரு குறிப்பிட்ட காலம் இருக்கின்றது. அந்தக் கால அளவுகோலின்படிதான் ஒப்பந்தப் பணிகளைச் செய்ய

முடியும், ஒப்பந்தம் நாம் விட முடியும். அதுமட்டுமல்ல, எல்லா காலங்களிலும், உங்களுடைய ஆட்சிக் காலத்திலும் அதிகமாக வெள்ளநீர் வருகின்றபொழுது, உபரிநீர் கடலில்தான் கலந்தது. உங்களுடைய ஆட்சியிலும் அப்படித்தான் இருந்தது. எல்லா புள்ளிவிவரங்களும் என்னிடத்தில் இருக்கின்றன. ஆகவே, உபரியாக வருகின்ற நீர் கடலிலேதான் போய் கலக்கும், வேறு வழி கிடையாது. பாசனத்திற்குத் தேவையான நீரை நாம் முறையாக நம்முடைய விவசாயிகளுக்கு அளித்தோம். அதுமட்டுமல்ல, அணையிலே 120 அடி தண்ணீர்தான் தேக்க முடியும். அதுவும் உங்களுக்கு நன்றாகத் தெரியும். அதற்குமேல் எவ்வளவு நீர் வந்தாலும், அந்த நீரை நாம் வெளியேற்ற வேண்டும். அப்போதுதான் அணை பாதுகாப்பாக இருக்கும். ஆகவே, மழை அதிகமாக வந்த காரணத்தினாலே, அந்த நீரை அப்படியே வெளியேற்றிய காரணத்தினால்தான் உபரி நீராகக் கடலிலே கலந்ததேயொழிய வேறில்லை. அந்த நீரைக்கூட தடுப்பதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றபொழுது முடிவு எடுக்கப்பட்டு, கொள்ளிடத்திலே ஓர் அணை கட்டுவதற்காக ஆதனூர் மற்றும் குமாரமங்கலத்திலே அந்த அணையைக் கட்டுவதற்கு இப்பொழுது வேலை தொடங்கப்பட்டிருக்கிறது. அதேபோல, கரூருக்கு அருகிலே அணை கட்டுவதற்கும் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், இப்பொழுது கன மழையின் காரணமாக உபரியாக வருகின்ற நீரைத் தேக்குவதற்கு காவேரி ஆற்றில் 2, 3 இடங்களைத் தேர்வு செய்து அந்த நீரையும் தேக்குவதற்கு அரசு இப்பொழுது முயற்சி செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள்.

திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற விளக்கத்திற்கு நன்றி. பொதுவாக எவ்வளவு நீர் வந்தாலும், காவேரியிலே 2 இலட்சம் cusecs-தான் போகலாம். கொள்ளிடத்திலே 3 இலட்சம் cusecs போகலாம், ஆக, முழு வடிவம் கொடுக்கின்றபொழுது 5 இலட்சம் cusecs தண்ணீர் போகலாம். தஞ்சையை எடுத்துக்கொண்டால், கல்லணைக்குக் கிழக்கே இருக்கிற தஞ்சை மாவட்டத்திலே கடந்த காலத்திலே 46

ஆயிரம் கிலோ மீட்டர் வாய்க்கால்கள் இருந்தன. இப்பொழுது அவ்வளவு வாய்க்கால்கள் இல்லை, குறைவாக இருக்கின்றன. பல வாய்க்கால்கள் தூர் வாரப்படாமல் மேடிட்டுப் போய்விட்டன. அப்படி அந்த வாய்க்கால்கள் தூர் வாரப்பட்டு சரியாக இருக்குமானால், அந்தக் கொள்ளிடத்தில் போகிற தண்ணீரும், உபரி நீராகக் கடலில் கலப்பதற்கு முன்பாக ஆங்காங்கே இருக்கின்ற பகுதியிலே அந்தத் தண்ணீர் சென்று, குளங்களிலே தேங்கினால், அது ஒருபோக சாகுபடிக்குப் பயன்படும் என்ற கருத்தைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன். எனவே, வாய்க்கால்களைத் தூர் வாருகின்ற பணி கடந்த 2, 3 ஆண்டு காலமாகத் தொடர்ந்து நடைபெறவில்லை. அதுதான் இருக்கிற நிலைமை. பொதுவாக, நான் ஒன்று சொல்கிறேன். (குறுக்கீடு) ஒரு நிமிடம் நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) இது நியாயம்தானா? அப்போது எனக்கு அதிக நேரம் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற காலத்தை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். கார்காலத்திலேதான் மழை வெள்ளமாகப் பெருக்கெடுத்து காவேரியிலே வருகிறது என்பதுதான் யதார்த்தமான உண்மை. ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களில் பயிர்கள் கதிராக இருக்கும். எந்த வாய்க்காலிலும் தண்ணீரைத் திறந்துவிட முடியாது. உபரிநீர் நேரடியாகக் கடலில்தான் போய் சேர வேண்டுமே தவிர, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற யோசனை விவசாயிகளை அழிக்கிற யோசனையாக இருக்குமேதவிர, ஆக்கப் பூர்வமான யோசனையாக இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள்.

திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய கருத்துகளை நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள். கடந்த 6, 7 ஆண்டு காலமாக குறுவை சாகுபடி என்பது இல்லை. மேட்டூர் அணையிலே தண்ணீர்

திறக்கப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) நன்றாக நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். ஆங்காங்கு நிலத்தடி நீரை வைத்து போர் பம்புசெட் மூலமாக விவசாயம் செய்கிற 1¼, 1½ இலட்சம் ஏக்கர் மட்டும்தான் அந்தக் காலத்திலே பயிரிட முடியுமே தவிர, முழுமையாகக் கதிர் வராது. சித்திரை, வைகாசியிலே நாற்று நட்டு. . .(குறுக்கீடு) நான் சொல்லும்போது திரும்ப எழுந்திருந்தால், நான் எப்படிப் பேசுவது?

பிற்பகல் 12–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறாகச் சொன்னால் நாங்கள் சுட்டிக்காட்டித்தானே ஆக வேண்டும். "ஆடிப் பட்டம் தேடி விதை" என்பது பழமொழி.* (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *ஜூன் 12–ல் தண்ணீர் திறக்கப்பட்டால் அது குறுவை பட்டம். அது 90 நாளிலிருந்து 115 நாட்கள் மட்டுமே. வெள்ளம் போகிற காலம் என்பது கார்த்திகை மாதம், மார்கழி மாதம் அதாவது, நவம்பர், டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்கள். எனவே, அந்தக் காலம் சம்பா காலம். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது முற்றிலும் முரணானது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தூர் வாரப்படவில்லை என்ற கருத்தைச் சொன்னார்கள். எல்லா தொகுதிகளிலும் தூர் வாரிவிட்டோம். ஆனால், ஒட்டுமொத்தமாக டெல்டா பாசனம் இருக்கின்ற கால்வாயின் நீளம் அதிகம். ஆகவே, ஒவ்வோர் ஆண்டும் தூர் வாருவதற்கு நிதி ஒதுக்கப்பட்டு, அங்கு தூர் வாரப்பட்டது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்*

அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல; மழை பெய்து அணையிலே நீர் இருந்தால்தான் பாசனத்திற்குத் தண்ணீர் விட முடியும். அது உங்களுடைய ஆட்சியாக இருந்தாலும் சரி அல்லது எங்களது ஆட்சியாக இருந்தாலும் சரி. ஆகவே, குறிப்பிட்ட காலத்திலே தண்ணீர் திறந்துவிட முடியுமென்று சொன்னால், அங்கே பருவமழை நன்றாகப் பெய்து, பருவமழை நன்றாகப் பெய்த காரணத்தினாலே அதிகமாக மழைத் தண்ணீர் வந்து அணையிலே தேங்கினால்தான் பாசனத்திற்குத் திறந்துவிட முடியும். நீர் இருந்து திறந்து விடாமல் இருந்தால் அரசினுடைய தவறு. பருவமழை பொய்த்துவிட்டது, இயற்கை பொய்த்துவிட்டது. அதனால் தேவையான நீர் அணையில் இல்லாத காரணத்தால்தான் குறிப்பிட்ட காலத்திலே நீரைத் திறக்க முடியவில்லை. உங்களுடைய ஆட்சிக் காலத்திலும் உரிய காலத்திலே நீர் திறக்கப்படவில்லை. 1988, 1989 ஆம் ஆண்டுகளில் எல்லாம் உரிய காலத்திலே நீர் திறக்கப்படாமல் இருந்திருக்கின்றன. அந்தப் புள்ளிவிவரங்கள் எல்லாம் என்னிடத்தில் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள்.

திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கம் என்னவென்றால், Dam–ல் தண்ணீர் இருந்தால்தான் தண்ணீர் திறக்க முடியும் என்பதாகும். ஆக அவர் சொல்வது உண்மையாகும். அவர் சொல்வது வைகாசி மாதம் நாற்றுவிட்டு, ஆனி, ஆடி, ஆவணியில் குறுவைப் பயிர் அறுவடை செய்துவிடுவோம். புரட்டாசி மாதத்திற்குப் பிறகுதான் சம்பா பயிர் நடப்பட வேண்டும். மழை புரட்டாசியில் வரும் என்று சொன்னார். மழை புரட்டாசி, ஐப்பசியில் வருகின்றபோது பயிர் சிறியதாக இருக்குமே தவிர, அப்போது கதிர் வராது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பயிரிடுகின்றபோது கதிர் முன்னரே வந்துவிடுமோ என்பது தெரியவில்லை. நாங்கள் ஒவ்வொரு முறையும் 200 ஏக்கர் விவசாயம் செய்கிறோம். எனவே, அனுபவப்பட்டவன் என்ற வகையில் நான் சொல்கிறேன். வேறு ஒன்றுமில்லை. எனவே, நான் உங்களிடம் இதையெல்லாம் சொல்வதற்குக் காரணம். . . (குறுக்கீடு) என்னுடைய பேச்சை மாற்ற முயற்சி செய்ய வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்வது, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களால், கலைஞர் அவர்களின் தலைமையில் இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் உருவாக்கப்பட்டது. அப்படி உருவாக்கப்பட்டபோது, அங்கிருந்து நிலத்தடி நீரை அதிகமாக எடுத்தார்கள். அங்கேயிருந்த விவசாயப் பெருங்குடி மக்களெல்லாம் நிலத்தடி நீர் போனதால், எங்களுக்கு பம்புசெட்டில் தண்ணீர் வருவதில்லை என்று சொன்னபோது, அன்றைய முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களிடம் எங்களுக்கு ஒரு தடுப்பணை கட்டித் தாருங்கள் என்று கேட்டோம்; 30 கோடி ரூபாயில் ஒரு தடுப்பணையைக் கட்ட எங்களுக்கு அன்றைக்கு அனுமதியளித்த அதிகாரி இன்றைக்கு தலைமைச் செயலாளராக இருக்கின்றார்; அன்றைக்கு நிதித் துறைச் செயலாளராக இருந்தார். தடுப்பணை கட்டினோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொல்ல வருவது, கட்டளைக்குக் கீழே எடுத்துக்கொண்டால், காவேரியாக இருந்தாலும் சரி, கொள்ளிடம், முக்கொம்பினை எடுத்துக்கொண்டால் அணைக்கரை வரை எல்லா இடங்களிலும் தடுப்பணைகள் அமைத்தால் கிட்டத்தட்ட 100 டி.எம்.சி., 200 டி.எம்.சி. அளவுக்கு தண்ணீர் தேங்கக்கூடிய வழியிருக்கிறது. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையில் சொல்லியிருந்தார். அப்படி தடுப்பணை அமைத்தால் மற்ற கிராமங்கள் அழியும் என்று ஓர் அறிக்கையில் ஏற்கெனவே நீங்கள் தெரிவித்திருக்கிறீர்கள், அதை நான் படித்தேன். தடுப்பணை உயரமாக இல்லாமல் போதிய அளவு உயரம் குறைவாக வைத்தால்தான், தண்ணீரும் தேங்கும், நிலத்தடி நீரும் பெருகும், விவசாயமும் சிறப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் ஏற்கெனவே சொன்னேன். இன்றைக்கு உபரியாக வருகின்ற நீரை காவேரி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டி தண்ணீரைத் தேக்கி வைக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்குத்தான் ஆதனூர் மற்றும் குமாரமங்கலத்தில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்தபோது அறிவிக்கப்பட்டு, அந்தப் பணி

தொடங்கப்பட்டுவிட்டது. 1½ டி.எம்.சி. தண்ணீர் அதில் தேக்கி வைக்க முடியும். மூன்று போகத்திற்குத் தண்ணீர் கொடுக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவதற்காக, அந்தத் தடுப்பணை கட்டப்படுகிறது. அதேபோல, கரூருக்கு அருகில் ஒரு தடுப்பணை கட்டுவதற்கு என்னுடைய அறிவிப்பிலே அதற்கான நிதியொதுக்கீடு செய்து அறிவிக்க இருக்கின்றேன்; அது வரவிருக்கிறது.

பிற்பகல் 12–15

அதுமட்டுமல்லாமல் மூன்று இடங்களிலே தடுப்பணை கட்டுவதற்கு ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏனென்று சொன்னால், காவேரி ஆற்றைப் பொறுத்தவரைக்கும் சமவெளிப் பரப்பாக இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல் 200 டி.எம்.சி., 300 டி.எம்.சி., தண்ணீரைத் தேக்கி வைக்க முடியாது. ஒன்று அல்லது ஒன்றேகால் டி.எம்.சி. தண்ணீருக்குமேல் தேக்கி வைக்க முடியாது. அந்த அளவுக்குத்தான் ஆற்றின் பரப்பளவு இருக்கிறது. சம பரப்பளவாக இருக்கின்ற காரணத்தினாலே, சமவெளியாக இருக்கின்ற காரணத்தினாலே, நாம் காவேரி ஆற்றிலே தடுப்பணை கட்டுகின்றபொழுது ஒரு குறிப்பிட்ட அளவுதான் தண்ணீரைத் தேக்க முடியும். எந்த இடத்திலும் ஒன்றேகால் டி.எம்.சி.–க்குமேல் தண்ணீரைத் தேக்கி வைக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. நம்முடைய பொறியாளர்கள் ஆய்வுப் பணிகளை மேற்கொண்ட பிறகு எந்தெந்த இடங்களில் தடுப்பணை கட்டுவதற்கு சாத்தியம் இருக்கின்றதோ, அந்த இடங்களிலெல்லாம் தடுப்பணை கட்டுவதற்கு அரசு முயற்சி செய்ததன் அடிப்படையிலே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற காலத்தில் ஒரு தடுப்பணை அறிவிக்கப்பட்டு, அந்தப் பணி துவங்கப்பட்டுள்ளது. இப்பொழுது கரூருக்கு அருகிலே, கரூருக்கும் நாமக்கல்லுக்கும் இடையிலே காவேரி ஆற்றிலே தடுப்பணை கட்டுவதற்கு நிதி ஒதுக்கீட்டினை நாங்கள் அறிவித்திருக்கின்றோம். அதுமட்டுமல்லாமல், மேலும் மூன்று இடங்களில் தடுப்பணை கட்டுவதற்கு ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எங்களுடைய ஆட்சிக் காலத்திலே அந்தத் தடுப்பணைகள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி). ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல எங்கேயும் 100 டி.எம்.சி. தண்ணீரைத் தேக்குவதற்கான வாய்ப்பே கிடையாது. ஒரு டி.எம்.சி., ஒன்றேகால் டி.எம்.சி. தண்ணீர்தான் தேக்கி வைக்க முடியும். அதுவும் சமவெளிப் பரப்பாக இருக்கின்ற

காரணத்தினாலே மக்களுக்கு எவ்வித இடையூறும் இல்லாத பகுதிகளைத் தேர்ந்தெடுத்து அந்தப் பகுதிகளில்தான் தடுப்பணை கட்டுவதற்கு அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள்.*

திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துறையைக் கவனிக்கின்ற காரணத்தினால் அனைத்து விவரங்களையும் உடனுக்குடன் அறியக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆனால், அந்த ஊரிலே பிறந்து வளர்ந்தவன் நான். கல்லணைக்குக் கிழக்கில் கொள்ளிடத்தின் அகலம் 2 கிலோ மீட்டர் இருக்கிறது. ஆற்றின் ஆழம் 30 அடி இருக்கிறது. விளாங்குடி பாலம் வழியாக திருமானூர் செல்கின்றபோது, அணைக்கரைக்கு முன்பாக எவ்வளவு நீரை வேண்டுமானாலும் உங்களால் தேக்க முடியும் என்பதைக் கவனத்தில்கொள்ளுங்கள். அங்கே ஒரு பெரிய அணை கட்டினால்—தடுப்பணை அல்ல, கதவணை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட சொன்னார்கள். நான் 50 ஆண்டுகளுக்கு முன்பாக மேட்டூருக்கு வருகின்றபோது உங்களுடைய ஊரான எடப்பாடி எப்படி இருந்தது என்பதும், இப்பொழுது எடப்பாடி எப்படி இருக்கிறது என்பதும் எனக்குத் தெரியும். 3* barrages *கட்டப்பட்டுள்ளன. 3* barrages *கட்டப்பட்ட காரணத்தினால் அங்கு நிலத்தடி நீர் பெருகியது. இப்பொழுது உங்களது ஊரைப் பார்த்தால் சிம்லா போல் இருக்கிறது. நான் உங்கள் ஊருக்கு வந்திருந்தேன். மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. முத்துசாமி அவர்கள் இல்லத்தில் நடந்த துக்க நிகழ்ச்சிக்காக போகும்போது எங்களுக்கெல்லாம் பெரிய ஆச்சரியமாக இருந்தது. அந்தப் பகுதி மக்கள் அவ்வளவு சிறப்பாக, முழுமையான வளத்துடன் இருக்கிறார்கள். எனவே, ஆங்காங்கே அதுபோல கதவணைகள் அமைக்கப்பட வேண்டும். நான் சொல்வது, மற்ற மாவட்டங்களில் இருக்கிற மக்களைவிட தஞ்சை மாவட்ட மக்களை சிறப்பாக இந்த அரசு கவனிக்க வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 30 அடி ஆழம் இருக்கிறது என்று சொன்னார்கள். எங்களுடைய பகுதியிலும் 30 அடி ஆழம் இருக்கிறது. எனது தோட்டத்திற்கு அருகிலே 30 அடி ஆழத்திலே ஒரு barrage கட்டப்பட்டிருக்கிறது. வெறும் 0.5 டி.எம்.சி. தண்ணீர்தான் தேக்கி வைக்கப்படுகிறது. Hydro electricity திட்டத்திலே கீழ் நீர் மேட்டூர் திட்டத்தின் வாயிலாக 4 அணைகள் கட்டப்பட்டு, அங்கே நீர் மூலமாக மின்சாரம் தயாரிக்கிறார்கள். இப்பொழுது மேலும் இரண்டு இடங்களில் அணைகள் கட்டப்பட்டிருக்கின்றன. அந்தப் பகுதிகளெல்லாம் ஆழமாக இருக்கும். ஆனால், தண்ணீரைக் குறைவாகத்தான் தேக்கி வைக்க முடியும். எங்கள் தோட்டத்தில் ஆறடி ஆழத்தில் பக்கெட்மூலம் தண்ணீர் எடுக்கலாம். ஆனால், அந்தப் பகுதியில் சேமித்து வைக்கும் நீரின் அளவு, அரை டி.எம்.சி.தான். இதைவிட உங்கள் பகுதிகளான திருச்சியிலிருந்து தஞ்சாவூர் வரைக்கும் பார்த்தால் அனைத்தும் சமவெளிப் பகுதிகளாகத்தான் இருக்கின்றன. கரைகளெல்லாம் 10 அடி உயரத்தில் இருக்கின்றன. ஆகவே, அங்கே கதவணைகள் அமைக்கப்பட்டு, வெள்ளம் வருகின்ற காலத்தில் கதவுகள் திறக்கப்பட்டு தண்ணீர் வெளியேற்றப்படும். தண்ணீர் உபரியாக வருகின்ற காலத்திலே அந்தத் தண்ணீரைத் தேக்கி நிலத்தடி நீரைச் செறிவூட்டி பாசனத்திற்குப் பயன்படுத்த வேண்டுமென்று தெரிவித்துள்ளீர்கள். அதனடிப்படையிலே மாண்புமிகு அம்மா அவர்களது அரசால் அதைச் செயல்பாட்டுக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதற்காகத்தான் ஓய்வுபெற்ற 5 பொறியாளர்களை நியமித்திருக்கிறோம். 2 தலைமைப் பொறியாளர்கள், 3 கண்காணிப்புப் பொறியாளர்களை நியமித்து, பருவ காலங்களிலே எங்கெங்கெல்லாம் மழைநீர் வீணாகக் கடலில் கலக்கின்றதோ, அதையெல்லாம் கணக்கிட்டு அந்தப் பகுதிகளிலே நதியின் குறுக்கே தடுப்பணை கட்டப்படும், ஓடையின் குறுக்கே தடுப்பணை கட்டப்படும். பெய்கின்ற மழையில் ஒரு சொட்டு நீர்கூட வீணாகாமல் இருப்பதற்காக நீர் மேலாண்மை என்ற அமைப்பை உருவாக்கி, அதன் மூலமாகப் பொறியாளர்களை நியமித்து ஒரு வருட காலமாக அந்தப் பொறியாளர்கள் தமிழ்நாடு முழுவதும் ஆங்காங்கே சுற்றுப்பயணம் செய்து, ஓடையின் குறுக்கே, நதியின் குறுக்கே எந்தெந்தப் பகுதிகளில் தடுப்பணையைக் கட்ட வேண்டும் என்ற குறிப்புகளையெல்லாம் தந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் காவேரி ஆற்றின் குறுக்கே 3 இடங்களைத்

தேர்வு செய்திருக்கிறோம். வருகின்ற காலக்கட்டத்திலே தேர்வு செய்த 3 இடங்களிலும் கதவணை கட்டப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தொழில்நுட்ப வல்லுநர்களால் முழுவதும் technical ஆக பெறப்பட்ட செய்தியைத்தான் நான் இந்த அவையிலே தெரிவிக்கின்றேன். ஓரிடத்தில் கதவணையைக் கட்டினால் 10 டி.எம்.சி., 20 டி.எம்.சி. என தண்ணீரைத் தேக்கலாம் என்று நீங்கள் உங்களுடைய எண்ணத்தின் அடிப்படையிலே சொல்கின்றீர்கள். என்னைப் பொறுத்தவரைக்கும், அதிகாரிகளுடைய, பொறியாளர்களுடைய, தொழில்நுட்ப வல்லுநர்களுடைய கருத்தைக் கேட்டு, இந்தக் கருத்தை நான் இந்த அவையிலே தெரிவிக்கின்றேன்.

பிற்பகல் 12–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள்.

திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்ட மக்கள் தமிழ்நாடு முழுமைக்கும் சோறு போடுகின்ற ஒரு பணியைச் செய்து கொண்டிருக்கிறார்கள். கடந்த 50 ஆண்டு காலமாக கோவை மாவட்டம், மதுரை மாவட்டம், திருச்சி மாவட்டம் உள்ளிட்ட அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மக்கள் தண்ணீர் இல்லாத காரணத்தால், விவசாயம் செய்யாமல் வேறு பணிகளுக்குச் சென்று தங்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொண்டுவிட்டார்கள். ஆனால், தஞ்சை மாவட்டத்திலிருக்கிற மக்கள், 12 மாதங்களும் தொடர்ந்து விவசாயப் பணியைத் தவிர, வேறு எந்தப் பணியையும் செய்யாத காரணத்தால், அவர்கள் முன்னேற்றமே இல்லாமல் தொடர்ந்து அதே விவசாயிகளாக இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்த அரசு மற்ற மாவட்டங்களைக் காட்டிலும், தஞ்சை மாவட்டத்திற்கு அதிகக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்வதற்காகத்தான் அதைச் சொன்னேனேதவிர வேறொன்றுமில்லை.

'சோழ நாடு சோறுடைத்து' என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் தஞ்சை மாவட்டத்தின் கடைமடைப் பகுதி, நம்முடைய மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களுடைய பகுதி; அதிகமாக மழை பெய்கின்ற காலங்களில் இது நீரிலே மூழ்குகிறது; தண்ணீர் இல்லாத காலங்களிலே காய்கிறது. அதையெல்லாம்

ஒழுங்குபடுத்த வேண்டுமெனில், அனைத்து வாய்க்கால்களையும் சீர் செய்ய வேண்டும் என்பதை எடுத்துச் சொல்வதற்குத்தான் இதைச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்டா பகுதியிலிருக்கின்ற விவசாயிகளின் நலனைக் காக்க வேண்டுமென்பதற்காகத்தான் நாங்கள் இதற்கென்று தனியாக ஓர் இந்திய ஆட்சிப் பணி அதிகாரியை நியமித்திருக்கின்றோம். திரு. பாலாஜி, இ.ஆ.ப., அவர்களை டெல்டா பாசனப் பகுதிகளிலுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவே தனி அதிகாரியாக நியமித்திருக்கிறோம். நீங்கள் பிரச்சினைகளைச் சொல்கின்றீர்கள். அதேபோன்று எங்கெல்லாம் பிரச்சினைகள் ஏற்படுகின்றனவோ அங்கெல்லாம் அவர் செல்வார். உதாரணமாக, கடைமடைப் பகுதிக்குத் தண்ணீர் செல்லவில்லை என்றால், உடனடியாக அந்தப் பகுதிக்குச் சென்று, அந்தப் பகுதிக்கு ஏன் தண்ணீர் செல்லவில்லை என்பதை ஆராய்ந்தறிந்து, பிரச்சினையை நிவர்த்தி செய்வார். அதற்காகவே நாங்கள் தனி சிறப்பு அதிகாரியை நியமித்திருக்கிறோம். டெல்டா பாசன விவசாயிகள் நீரை நம்பி பிழைக்கக் கூடியவர்கள். அவர்களுடைய வாழ்வாதாரம் சிறக்க வேண்டும் என்பதற்காகத்தான் சிறப்பு அதிகாரியை எங்களுடைய அரசு நியமித்திருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள்.*

திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தபோது, பாசனத் துறையில் திரு. பொன்னுச்சாமி என்பவர் முதன்மைப் பொறியாளராக இருந்தார்; அவர் நேரடியாக முதலமைச்சர் அவர்களோடு பேசக்கூடிய வாய்ப்பையும் பெற்றிருந்தார். அவர் திருச்சியிலே இருந்தார், தற்போது கரூரில் இருக்கிறார். மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடுகிறபோது, தஞ்சையிலே 1 சென்டி மீட்டர், 2 சென்டி மீட்டர் என எந்தப் பகுதியில் மழை பெய்தாலும், அதை அறிந்து அந்தப் பகுதிக்குச் செல்கின்ற வாய்க்காலில் தண்ணீரை*

நிறுத்துவார். மேட்டூர் அணையிலிருந்து அந்தப் பகுதிக்குச் செல்லும் தண்ணீரைக் குறைத்து விடுவார். அந்தளவுக்கு நீர் மேலாண்மையில் அதிகக் கவனம் செலுத்தும் பணி, எங்கள் தலைவர் முதல்வராக இருந்த காலத்தில் செய்யப்பட்டது. அதையும் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான், இதை நான் உங்களிடம் தெரிவிக்கிறேன்.

எங்களுடைய ஆட்சிக் காலத்தில் காவேரிக் கரையைப் பலப்படுத்தும் பணி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது. நிலத்தடிநீரை ஓரிடத்தில் 2 டி.எம்.சி., 5 டி.எம்.சி. என தேக்க முடியாது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஓரிடத்தில் 1 டி.எம்.சி. நீர் மேலே நிற்குமானால்கூட, கீழேயே எப்போது வேண்டுமானாலும் தண்ணீர் எடுத்துக்கொள்ளக்கூடிய அளவிற்கு அதிகமான நீர் ஊறி வரும், நிலத்தடி நீர் பெருகும் என்ற காரணத்தால்தான் அதை நான் சொன்னேன். ஆக, காவேரிப் படுகையை நீங்கள் சரி செய்ய வேண்டும்.

அடுத்து, 'குடிமராமத்து' என்ற ஒரு திட்டத்தை அறிவித்து, ஆங்காங்கே ஏரிகளைத் தூர்வாருகின்ற பணியைத் துவக்கியிருப்பதாகவும், அதற்காக நிதி ஒதுக்கியிருப்பதாகவும் சொல்கிறார்கள். தமிழ்நாட்டில் மொத்தம் 39 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏரிகள் இருக்கின்றன. அவற்றில், 8 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏரிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. தற்போது கிட்டத்தட்ட 30,000 ஏரிகள் இருக்கின்றன. நான் மற்ற மாவட்டங்களைப் பற்றி சொல்வதைக் காட்டிலும், எங்களுடைய ஒன்றுபட்ட திருச்சி மாவட்டத்திலிருக்கின்ற ஏரிகளின் கணக்கை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். அங்கு கிட்டத்தட்ட 1,000 ஏக்கர் பரப்பளவுள்ள ஏரிகள் 100–க்கும் மேலாக இருக்கும். அந்த ஏரிகளைச் சரி செய்தாலே நமக்கு நிலத்தடி நீர் 5 ஆண்டு காலத்திற்குக் குறையாமல் இருக்கும். நீங்கள் ஒதுக்கியிருக்கிற தொகையைப் பார்த்தால், கடந்த ஆண்டு 9,340 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, அவற்றில் 8 ஆயிரத்து சொச்சம் கோடி ரூபாய்தான் பொதுப் பணித் துறையால் செலவு செய்யப்பட்டிருக்கிறது. எனவே, முழுமையாகச் செலவு செய்ய வேண்டும். அருகிலிருக்கின்ற மாநிலங்களைப் பார்க்கின்றபோது, நம்மைவிட சிறிய மாநிலம் தெலுங்கானா, 18 எம்.பி.–க்களைக் கொண்டிருக்கின்ற அந்த மாநிலம் 80,000 கோடி ரூபாய் செலவிலே நீர்ப் பாசனத் திட்டங்களை 3 ஆண்டு காலத்தில் நிறைவேற்றியிருக்கிறது. அதற்கு முன்பாக,

ஆந்திர மாநிலத்திலே திரு. ராஜசேகர ரெட்டி அவர்கள் இருந்தபோது, 1 இலட்சத்து 80 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் மத்திய அரசினுடைய முழு மானியத் தொகையில் திட்டங்களை நிறைவேற்றினார்கள். நம்முடைய ஆட்சியில் இங்கு 10 ஆயிரம் கோடி ரூபாய், 8 ஆயிரம் கோடி ரூபாய் என செலவு செய்தால், எந்தக் காலத்திலே நாம் நீர் மேலாண்மையைக் கொண்டுவர முடியும் என்பது தெரியவில்லை. அதிகமான நிதியை ஒதுக்குங்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் அதை அதிகமாகக் கவனியுங்கள். மற்ற துறைகளைக் காட்டிலும் இது மிக முக்கியமான துறை. வருங்கால சமுதாயத்திற்குத் தண்ணீர் இருக்க வேண்டுமென்று சொன்னால் இந்தத் துறைக்கு அதிகமான நிதியை ஒதுக்க வேண்டும். இதைச் செயல்படுத்தினால்தான், நிச்சயமாக வருங்கால சமுதாயம் தண்ணீரைப் பெறும். எனவே, பெரிய ஏரிகளை ஆழப்படுத்தவும், அகலப்படுத்தவும், வரத்து வாய்க்கால்களை சரி செய்யவும் உரிய பணிகளை குடிமராமத்து என்ற வகையிலே செய்தால் நன்றாக இருக்கும். ஏற்கெனவே குடிமராமத்து என்று சொன்னால், ஆயக்கட்டுக்காரர்கள், நீர்ப் பாசனத்தில் எந்த விவசாயி இருக்கிறாரோ அவரை Member ஆகக் கொண்டு, அந்த ஊரில் இருக்கிற தலைவரை உறுப்பினராகக் கொண்டு, அவர்கள் தலைமையிலேதான் இந்தக் குடிமராமத்துப் பணி நடைபெற்றது. ஆனால், இன்றைக்கு யார் யாரோ குடிமராமத்துப் பணியில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள் என்று சொல்லி, உடனடியாக பணியைச் செய்கிறார்கள். கிராமத்துக்காரர்கள் எடுத்துச் செய்தார்கள் என்றால் அந்தப் பணி சிறப்பாக இருக்கும். எனவே, அந்தப் பணியை மேலும் நீங்கள் சிறப்பாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீர் மேலாண்மைத் திட்டத்திற்காக அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டீர்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தைக் காட்டிலும் கூடுதலான நிதியைத்தான் நாங்கள் ஒதுக்கியிருக்கிறோம். குறைவான நிதி அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், நீர் மேலாண்மையை மேலும் அதிகரிக்க வேண்டுமென்பதற்காகத்தான்

இந்த அமைப்பையே நாங்கள் உருவாக்கியிருக்கின்றோம். ஏனென்று சொன்னால், இன்றைக்கு தலைமைப் பொறியாளர்களோ அல்லது கண்காணிப்புப் பொறியாளர்களோ, 6 மாதங்கள், 3 மாதங்கள் பணியில் இருப்பார்கள்—மரியாதைக்குரிய நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்குத் தெரியும், அவர் ஏற்கெனவே பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தவர்—அதற்குப் பிறகு அவர்கள் retire ஆகிவிடுவார்கள். மீண்டும் இன்னொரு தலைமைப் பொறியாளர் வருவார்; ஒரு கண்காணிப்புப் பொறியாளர் வருவார். ஆகவே, இந்தத் திட்டத்தை முழுமையாக நிறைவேற்ற முடியாது என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் 'நீர் மேலாண்மை' என்ற ஒரு தனி அமைப்பை உருவாக்கி, அதற்கென்று ஓய்வு பெற்ற, திறமையான, இதில் நல்ல முறையிலே பணியாற்றக்கூடிய ஓய்வுபெற்ற பொறியாளர்களை நாங்கள் நியமித்து, அவர்கள் எல்லா மாவட்டங்களிலும் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார்கள். அப்படி சுற்றுப்பயணம் செய்து, எந்தெந்தப் பகுதிகளிலே உபரியாக இருக்கின்ற நீர் வீணாகிறதோ அதையெல்லாம் கண்டறிந்து, அரசுக்குத் தகவல் கொடுத்து, அந்த அடிப்படையிலே அரசு அதைச் செயல்படுத்துகிறது.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற அந்தக் குடிமராமத்து என்கிற திட்டத்தை இப்போது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுதான் தொடங்கியிருக்கின்றது. பல ஆண்டுக் காலமாக, கிட்டத்தட்ட 83, 85 ஆண்டுக் காலம் மேட்டூர் அணை தூர் வாரப்படாமல் இருந்தது. இப்போது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால்தான் தூர் வாரப்படுகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) உடனடியாக எல்லா வண்டல் மண்ணையும் அள்ளி வெளியிலே எங்கே கொண்டு போய் கொட்டுவீர்கள்? நாங்களே இந்த வண்டல் மண்ணை அள்ளிக்கொள்கிறோம், நீங்கள் விலையில்லாமல் கொடுங்கள் என்று அங்கிருக்கின்ற விவசாயப் பெருமக்கள் எல்லோரும் கோரிக்கை வைத்தார்கள். சுமார் 50 மைல் சுற்றளவில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் மேட்டூர் அணையில் இருக்கிற வண்டல் மண்ணை அள்ளி தங்களுடைய நிலத்திற்கு இயற்கை உரமாக இடுகின்றார்கள். என்னுடைய தோட்டத்திற்குக்கூட அங்கிருந்துதான் வண்டல் மண்ணை அள்ளிக்கொண்டு வந்திருக்கின்றேன். ஒரே ஆண்டில் அள்ளிவிட்டால் எங்களுடைய நிலத்தினுடைய இயற்கை வளம் போய்விடும்; ஒவ்வோர் ஆண்டும் தண்ணீர் குறைகின்றபொழுது நாங்கள் அந்த வண்டல் மண்ணை அள்ளி எடுத்துக்கொள்கிறோம்

என்று சொன்னார்கள். அந்த அடிப்படையிலே, இப்பொழுது நானே நேரடியாகச் சென்று, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களோடு, சட்டமன்ற உறுப்பினர்களோடு, அந்தப் பகுதியிலே இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களோடு சேர்ந்து அந்தத் திட்டத்தைத் துவக்கி வைத்தேன். இப்போது அந்தத் திட்டம் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அங்கே இருக்கின்ற விவசாயப் பெருங்குடிமக்கள் மேட்டூர் அணையிலே படிந்துள்ள வண்டல் மண்ணை அள்ளி தங்களுடைய நிலங்களுக்கு இயற்கை உரமாக இடுகின்றார்கள். அதனால் இந்த ஆண்டு நல்ல விளைச்சலும் கிடைத்திருக்கின்றது. ஆகவே, அங்கிருக்கின்ற விவசாயிகள் 10, 15 ஆண்டுக் காலம் தொடர்ந்து அந்த வண்டல் மண்ணை அள்ளலாம். அந்தத் திட்டத்தையும் நாங்கள் துவக்கி வைத்திருக்கின்றோம்.

அதேபோல் குடிமராமத்துத் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். 16,098 ஏரிகள் பொதுப் பணித் துறையின் சார்பாகப் பராமரிக்கப்படுகின்றன. இதில் 100 ஏக்கருக்குமேல் பாசனப் பயிர்கள் அதிகமாக இருக்கின்றன. குடிமராமத்துத் திட்டத்தை முதன்முதலாக ரூ.100 கோடியில் பரீட்சார்த்த முறையிலே துவக்கிப் பார்த்தோம். இந்தத் திட்டம் எவ்வாறு செயல்படுகின்றது என்பதைப் பார்த்து திட்டம் சிறப்பாக இருந்தால் மேலும் விரிவுபடுத்தலாம் என்று கருதி, முதலில் 100 கோடி ரூபாயிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் இந்தத் திட்டத்தில் கிட்டத்தட்ட 1,519 ஏரிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. 1,511 ஏரிகளில் இன்றைக்கு பணிகள் நிறைவு பெற்றிருக்கின்றன. அங்கிருக்கின்ற விவசாயிகளும், பொதுமக்களும், இந்தத் திட்டம் சிறப்பான திட்டம், இந்தத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டார்கள். முதற்கட்டமாக நாங்கள் இந்தப் பணியைத் துவக்குகின்றபொழுது, பரீட்சார்த்த முறையிலே ஒரு ஏரிக்கு 5 இலட்சம் ரூபாய், 10 இலட்சம் ரூபாய் என்றுதான் ஒதுக்கினோம். ஆனால், அங்கிருக்கின்ற விவசாயச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள், ஆயக்கட்டுக்காரர்கள் எல்லோரும், 'இது போதாது, அந்த ஏரியைப் பராமரிப்பதற்கு, கரையை பலப்படுத்துவதற்கு, அதேபோல மதகுகளைச் சரி செய்வதற்கு, வரத்து வாய்க்காலை சுத்தப்படுத்துவதற்கு, உபரி நீர் வெளியேறுவதற்கான வாய்க்காலை சுத்தப்படுத்துவதற்கு, அந்த ஏரிக்கு எவ்வளவு தொகை செலவழிக்க முடியுமோ, போதுமான நிதியை நீங்கள் மதிப்பீடு செய்து, அந்த ஏரிக்கான தொகையை முழுவதும் அளித்தால்தான் இந்தக் குடிமராமத்துத் திட்டம் சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்தார்கள்.

ஆக, அந்த விவசாயச் சங்கத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையிலே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மீண்டும் அந்தத் திட்டத்தை இன்றைக்கு விரிவுபடுத்தியிருக்கிறது. அதன்வாயிலாக, 328 கோடி ரூபாயில் 29 மாவட்டங்களில் 2017–2018–ல் 1,511 குடிமராமத்துப் பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

பிற்பகல் 12–30

இந்தக் குடிமராமத்துத் திட்டத்திற்கு இந்த ஆண்டு கிட்டத்தட்ட 1,829 ஏரிகள் மீண்டும் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன. இதற்காக, 499.68 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. இதிலே விவசாயச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் ஆயக்கட்டுக்காரர்கள் இவர்களையெல்லாம் ஈடுபடுத்தி, அவர்கள் தங்களது பங்களிப்பாக 10 சதவிகிதத்தை அளிக்க வேண்டும் அல்லது உழைப்பைக் கொடுக்க வேண்டும். ஆக, 10 சதவிகிதத்தை அவர்களின் பங்களிப்பாக அளித்ததால், அந்தப் பாசனச் சங்கத்திலே உள்ள அவர்களிடமே அந்தக் குடிமராமத்துத் திட்டப் பணி ஒப்படைக்கப்பட்டு, பணி நிறைவேற்றப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, ஏதாவது, எங்கேயாவது தவறு நடந்தால், அதைச் சுட்டிக்காட்டினால், அதற்குரிய நடவடிக்கையை அரசு எடுக்கும்.

அதுமட்டுமல்ல, இதைக் கண்காணிப்பதற்காக, இந்தத் திட்டம் மேலும் சிறப்பாக வர வேண்டுமென்பதற்காக, அம்மா அவர்களுடைய அரசு, நான் ஏற்கெனவே சொன்ன இந்திய ஆட்சிப் பணி அதிகாரி திரு. பாலாஜி அவர்களையும் இதில் நேரடியாக ஈடுபடுத்தியிருக்கின்றது. மாவட்ட ஆட்சித் தலைவர்களும் அந்தந்த மாவட்டங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் குடிமராமத்துப் பணிகளை நேரடியாகப் பார்வையிட்டு வருகிறார்கள். யாருடைய தலையீடும் இல்லாமல் முழுக்க முழுக்க விவசாயிகளைப் பயன்படுத்தி, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று அவர்களிடம் கேட்டுக்கொண்டிருக்கின்றோம்.

அதுமட்டுமல்ல, மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், செயலாளர் அந்தஸ்தில் உள்ள ஐ.ஏ.எஸ். அதிகாரிகளையும் பல்வேறு மாவட்டங்களுக்கு அனுப்பி வைத்து, இந்தப் பணிகள்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கண்காணிக்கப்பட்டு வருகின்றன என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள்.*

திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நேரு, நீங்கள் பேச ஆரம்பித்து அரை மணி நேரம் ஆகிவிட்டது. (குறுக்கீடு) இன்னும் 5 நிமிடங்களில் உரையை முடியுங்கள்.*

திரு. கே.என். நேரு: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் அரை மணி நேரம் பேசியிருக்கிறார்கள். நான் ஒன்றும் பேசவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் கேள்வி கேட்டீர்கள், அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு) இன்னும் 5 உறுப்பினர்கள் பேச வேண்டும். (குறுக்கீடு) எனக்கு இருக்கின்ற பிரச்சினையை நான் உங்களிடத்திலே சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) இன்னும் 5 உறுப்பினர்கள் பேசி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். நான் 2–00 மணிக்கு சபையை முடிக்க வேண்டும். கொஞ்சம் ஒத்துழைப்புக் கொடுங்கள்.*

திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நீண்ட நேரம் காவேரி படுகையைப் பற்றியும், ஏரிகளைத் தூர்வார வேண்டுமென்பதைப் பற்றியும் சொல்லியிருக்கிறேன். அதற்கான விளக்கங்களையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.*

கோதாவரியையும், காவேரியையும் இணைக்கின்ற திட்டத்தை முதல் கட்டமாக நாங்கள் எடுக்கிறோம் என்று ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் நேரத்திலே சொன்னார்கள். கோதாவரியையும், காவேரியையும் இணைக்கின்ற திட்டம் நான்காண்டு காலத்திற்கு முன்பாக, ஐந்தாண்டு காலத்திற்கு முன்பாக மத்திய அரசு அறிவித்து, இப்போது அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதாக இங்கே சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அதற்கான அடிப்படைப் பணிகள் எதுவும் துவங்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஏற்கெனவே, இந்தச் சட்டமன்றத்திலே எட்டாண்டு

காலமாக அனைத்து கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகங்களில் தொடர்ந்து குறிப்பிடப்பட்டுள்ள நான்கு, ஐந்து திட்டங்களை மட்டும் நான் எடுத்துரைக்க விரும்புகிறேன். அதற்கு மட்டும் எனக்கு நேரம் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாமிரபரணி, கருமேனியாறு, பச்சையாறு, நம்பியாறு இணைப்புத் திட்டம். இந்த தாமிரபரணி, கருமேனியாறு, பச்சையாறு, நம்பியாறு இணைப்புத் திட்டத்தை, 369 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தலைவர் கலைஞர் அவர்கள் 21–2–2009 அன்று பாளையங்கோட்டையில் துவக்கி வைத்தார்கள். இப்பணி கழக ஆட்சிக் காலத்தில் தொடர்ச்சியாக நடைபெற்று வந்தது. அ.இ.அ.தி.மு.க. அரசு வந்தபிறகு, 2011–2012 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை புத்தகம், பக்க எண் 27–ல் இத்திட்டத்திற்காக நிதி ஒதுக்கியிருந்தீர்கள். இத்திட்டத்தை நான்கு கட்டங்களாகப் பிரித்துச் செயல்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாக, 2011–2012 ஆம் ஆண்டிற்கான பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையிலே குறிப்பிட்டிருந்தீர்கள். தொடர்ந்து, 2014–2015, 2015–2016, 2016–2017, 2017–2018 மற்றும் 2018–2019 ஆம் ஆண்டுகளுக்கான கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகங்களிலும் இத்திட்டத்தைப் பற்றி குறிப்பிட்டுள்ளீர்கள். அதில் நில எடுப்புப் பற்றிதான் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது, இந்தத் திட்டத்திற்கு 3,086 ஏக்கர் நிலம் தேவை. இதில், இதுவரை 502 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது என 2019–2020 ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகம், பக்க எண் 66–ல் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆக, கடந்த எட்டு ஆண்டு காலமாக நிலம் கையகப்படுத்தப்படும் பணி 17 சதவிகிதம்கூட முடிவடையவில்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில எடுப்புப் பணி எவ்வளவு சிரமம் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஏதோ திட்டத்தை அறிவித்ததற்காக நான் இதைச் சொல்லவில்லை. கருமேனியாறு–நம்பியாறு திட்டம் நான்கு கட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. அதில், முதல் மற்றும் இரண்டாவது கட்டப் பணிகள் 90 சதவிகிதம் முடிவுற்றிருக்கின்றன. மூன்றாவது கட்டப் பணிகள்

துவங்கப்பட்டிருக்கின்றன. நிலம் எடுக்கின்ற பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நான்காவது கட்டத்திற்கும் நிலம் எடுக்கின்ற பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்போது புது நில எடுப்புச் சட்டம் வந்துவிட்டது. உங்களுடைய ஆட்சியிலே நீங்கள் கொண்டுவந்தபோது அப்போதைய நில எடுப்புச் சட்டம் என்பது வேறு. பின்னர், நில எடுப்புச் சட்டம் மாற்றப்பட்டுவிட்டது. ஆக, புது நில எடுப்புச் சட்டத்தின்படி, அதற்கு நிதி தேவைப்பட்டது. ஆகவே, மீண்டும் மறு மதிப்பீடு செய்யப்பட்டு, இந்தப் பணி துவங்கி, இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பணியில் எந்தத் தொய்வும் இல்லை. நிலம் எடுப்பதிலேதான் காலதாமதம் ஆகின்றது. மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். விவசாயிகளிடத்திலே பேச்சுவார்த்தை நடத்தி, அவர்களை சமாதானப்படுத்தி, அவர்களிடமிருந்து சமாதானக் கடிதத்தைப் பெற்றுத்தான் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, நிலம் கையகப்படுத்தப்பட்டவுடனே, இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும். விவசாயிகளை எந்தக் காலகட்டத்திலும் எதுவும் செய்ய முடியாது என்பது நன்றாகத் தெரியும். ஆகவே, சில கருத்துகளைத்தான் சொல்ல முடியும். ஆகவே, விவசாயிகள் நிலம் தருவதற்கு முன்வந்தால், விரைவாக, துரிதமாக குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் இந்தப் பணி நிறைவேற்றப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள்.

திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 8 ஆண்டு காலத்தில் நில எடுப்பு சம்பந்தமாகக் குறிப்பிடப்பட்டுள்ள 3,086 ஏக்கர் நிலத்திலே, வெறும் 17 சதவிகிதம் மட்டுமே செய்யப்பட்டிருக்கிறது. திட்டம் நிறைவேற இன்னும் எத்தனை ஆண்டு காலம் ஆகுமென்று தெரியவில்லை. தொடர்ந்து நான் சொல்கிறேன். காவேரி–அக்னியாறு, கோதையாறு–பாம்பாறு, வைகை–குண்டாறு இணைப்புத் திட்டம்; இந்தத் திட்டங்கள் அனைத்தும் எல்லா கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகங்களிலும் குறிப்பிடப்பட்டு வருகின்றன. ஆனால், திட்டங்கள் இதுவரை ஆரம்பிக்கப்படவும் இல்லை; நடைபெறவும் இல்லை.

நான் படித்தால் நேரமாகும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் நான் பேசுவதற்கு விடமாட்டார். அடுத்ததாக, தென்பெண்ணையாறு-செய்யாறு இணைப்புத் திட்டம். அந்தத் திட்டம் குறித்து 8 ஆண்டுக் காலமாக கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்திற்காக நிலங்கள் கையகப்படுத்தப்பட்டிருக்கின்றன; ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது; அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, திட்டம் துவங்கப்பட்டதாகத் தெரியவில்லை.

அடுத்ததாக, நீராறு–நல்லாறு இணைப்புத் திட்டம். அந்தத் திட்டத்திலும் இதையேதான் சொல்கிறார்கள். தொடர்ந்து ஆனைமலை ஆற்றுநீரை திருப்பி விடுவதற்கான கருத்துருவை எங்களுக்கு அனுப்புங்கள் என்று கேரள அரசு நம்மிடம் கேட்கிறது. உடனடியாக உங்களுக்கு 2 டி.எம்.சி. தண்ணீர் தருகிறோம் என்று சொல்கிறார்கள். கருத்துரு அனுப்புவதற்கே 3 ஆண்டு காலமாகியிருக்கிறது. இப்போது கருத்துரு அனுப்பியிருக்கிறீர்கள். அவர்கள் இன்னும் அதற்குப் பதில் சொல்லவில்லை. அந்தத் திட்டமும் அப்படியே நிற்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பல்வேறு நதிகள் இணைப்புத் திட்டங்களைப் பற்றிச் சொன்னார்கள். உங்களுடைய ஆட்சிக் காலத்திலிருந்தே அப்படித்தான் இருக்கிறது. ஏதோ எங்களுடைய ஆட்சிக் காலத்தில் மட்டும் நதிகள் இணைப்புத் திட்டங்களைச் செய்யவில்லை என்ற கருத்தைச் சொல்வது சரியாக இருக்காது. ஆகவே, ஒவ்வோர் ஆட்சிக் காலத்திலும் நதிகள் இணைப்புத் திட்டத்தை நாம் கொண்டு வருகிறோம். அதுவொரு நீண்டகாலத் திட்டம். எடுத்தவுடனே அதை நிறைவேற்ற முடியாது. ஒரு திட்டத்தை ஓர் அரசு போடுகிறது என்று சொன்னால், அதை படிப்படியாகத்தான் நிறைவேற்ற முடியும்.

இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆனைமலையாறு திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். இடைமலை ஆறு திட்டத்தில் இன்றைக்கு கேரள அரசு அணையைக் கட்டி முடித்துவிட்டது. ஆனால், இதுவரை நமக்கு தடையில்லாச் சான்றை அவர்கள்

கொடுக்கவில்லை. அதனால், ஆனைமலையாறு திட்டத்தை நம்மால் நிறைவேற்ற முடியவில்லை. அவர்கள் அந்தத் தடையில்லாச் சான்றைக் கொடுத்தால், உடனே அத்திட்டம் நிறைவேற்றப்படும். ஆகவே, கேரள அரசுக்கு பலமுறை கடிதம் எழுதப்பட்டுவிட்டது. இடைமலை ஆறு திட்டத்தை அவர்கள் முடித்துவிட்டு, முடிக்காத மாதிரி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு கேரள முதலமைச்சர் அவர்களிடத்திலே கடிதம் மூலமாக நாம் கேட்டிருக்கின்றோம். நீங்கள் இடைமலை ஆறு திட்டத்தை விரைவாக முடித்துவிட்டீர்கள், அதற்கு தடையில்லாச் சான்று கொடுங்கள், உடனடியாக நாங்கள் ஆனைமலையாறு திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றோம். எனவே, பன்மாநிலப் பிரச்சினையாக இருக்கின்ற காரணத்தினாலே, அண்டை மாநிலத்தோடு பேசி, ஓர் இணக்கமான உறவை ஏற்படுத்தி, அவர்களிடத்திலே அனுமதி பெற்றுத்தான் இந்தத் திட்டங்களை எல்லாம் நிறைவேற்ற வேண்டிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலேதான் காலதாமதம் ஏற்படுகின்றது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். நீங்கள் சொன்ன ஆனைமலையாறு திட்டத்தை அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக நிறைவேற்றுவதற்கு பாடுபடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள்.

திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்பெண்ணையாறு−பாலாறு இணைப்புத் திட்டத்தைப் பற்றி தொடர்ந்து 2014 முதல் 2019 வரை கொள்கை விளக்கக் குறிப்புகளிலே குறிப்பிடப்பட்டுள்ளது. அதிலே, 1,737 ஏக்கர் நில எடுப்பு செய்ய வேண்டுமென்பதிலே கிட்டத்தட்ட 10 சதவிகிதப் பணிகூட முடிவடையவில்லை. அதேபோல, காவேரி−சரபங்கா நதி இணைப்புத் திட்டம். அதுவும் 8 ஆண்டு காலமாக இதே மாதிரிதான் இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிலமெடுப்பதிலே உள்ள சிரமங்களைப் பற்றிச் சொல்கிறார்கள். நில எடுப்புப் பணியிலே விவசாயிகளை சமாதானப்படுத்தி நிலங்களை எடுக்க வேண்டுமென்று சொல்கிறார். அரசாங்கம் எந்த நிலத்தை எடுக்கிறதோ அவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பைக் கொடுக்கலாம். அவர்கள் நிலம் கொடுத்தால் அவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பைக் கொடுக்கும் என்ற புதிய திட்டத்தின்மூலம்,

இந்த இணைப்புத் திட்டத்தை உருவாக்கினால்தான் தமிழ்நாடு விவசாயத்திலே முன்னேற முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு, உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நேரமில்லை, நீங்கள் 40 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். உரையை முடியுங்கள்.

திரு. கே.என். நேரு: அன்றைக்கு தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது, அண்ணன் வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் வேளாண்மைத் துறை அமைச்சராக இருந்தார்கள். தலைவரோடு உரையாடுகின்றபோது நானும் அருகில் இருந்தேன். அப்போது தமிழ்நாட்டினுடைய மொத்த உணவுப் பண்டங்களின் தேவை ஒரு கோடியே 64 இலட்சம் டன்கள். ஆனால், இப்போது ஒரு கோடியே 26 இலட்சம் டன்தான் விளைகிறது. ஏற்கெனவே 30, 35 இலட்சம் டன் குறைவாக விளைகிறது. நான் சொல்வது 1996–2001–ல். இப்போது எத்தனை ஆண்டு காலமாகியிருக்கிறது, தேவை எவ்வளவு அதிகரித்திருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். நமக்கு மழை குறைவாக இருக்கிற காரணத்தினால் தண்ணீர் இல்லை. இந்த இணைப்புத் திட்டங்களை விரைவாகச் செய்து, கிடைக்கிற நீரைப் பயன்படுத்த வேண்டுமென்பதற்காகத்தான் இவ்வளவு தூரம் நான் இதை இங்கே சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–40

தொடர்ந்து தூர் வாருவதைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே சொன்னார்கள். வைகை நீர்த்தேக்கம், பேச்சிப்பாறை நீர்த்தேக்கம், மேட்டூர் நீர்த்தேக்கம், அமராவதி நீர்த்தேக்கம், ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டையெல்லாம் தூர் வார வேண்டும் என்று ஏற்கெனவே அறிவித்திருந்தீர்கள். சென்னையில்கூட வெள்ளம் வந்தது. வெள்ளம் வருகின்றபோது, அந்த அணைக்கட்டுகளைச் சரியாகப் பராமரிக்காத காரணத்தினால் நிறைய பாதிப்புகள் ஏற்பட்டன என்று இப்போதுகூட முதலமைச்சர் அவர்கள் 2,300 கோடி ரூபாய்க்கு மேலாக ஒதுக்கீடு செய்திருக்கின்றார்கள். அது எப்போது நிறைவேறும்? மழை இல்லாத காரணத்தினால் அரசாங்கம் தப்பி இருக்கின்றது. மழை எப்போதும் உள்ள அளவிற்கு இருந்திருக்குமேயானால் தமிழ்நாட்டில் நிறைய பாதிப்புகள் உண்டாகியிருக்கும். அதையும் கவனத்தில் கொண்டு நீங்கள் செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் குறிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு சிலவற்றை கொண்டுவர விரும்புகிறேன். உய்யகொண்டான் ஆறு எங்களுடைய திருச்சியின் மையப் பகுதியில் ஓடுகின்றது. நகரத்தில் மட்டும் 20 கிலோ மீட்டர் அளவிற்கு உய்யகொண்டான் ஆறு வருகிறது. உய்யகொண்டான் ஆற்றில் அனைத்து கழிவுநீரும் கலக்கின்ற காரணத்தினால், திருச்சி மாநகரத்தில் சுகாதாரச் சீர்கேடு முழுமையாக இருக்கின்றது. அதைத் தூர் வாருகின்றபோது இடையில் இருக்கின்ற கரையை concrete *போட்டு சுவர் எழுப்பினார்கள். அதில் வெட்டப்பட்ட மண்ணை கால்வாயிலேயே போட்டுவிட்டார்கள். அதனால் தண்ணீர் தேங்கி, கொசு உற்பத்தியாகி, திருச்சி நகரத்தில் மிகவும் சீர்கேடான நிலை இருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு, உங்கள் உரையை முடியுங்கள்.*

திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு 5 நிமிடம் கொடுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இல்லை. நீங்கள் என்னுடைய கஷ்டத்தைப் புரிந்துகொள்ளுங்கள்.* (குறுக்கீடு) *இல்லை, நான் 2–00 மணிக்கு சபையை முடித்துவிட்டு, பிற்பகலில் 2 மானியக் கோரிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். இன்னும் 5 உறுப்பினர்கள் பேச வேண்டும். இதற்குமேல் உங்களுக்கு நேரம் ஒதுக்க வாய்ப்பு இல்லை. உங்களுடைய உரையை முடியுங்கள்.*

திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நீங்கள் பேசுகிற நேரத்தை எனக்கு ஒதுக்கியிருந்தாலே நான் என்னுடைய உரையை முடித்திருப்பேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இல்லை. உரையை முடியுங்கள்.*

திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிவட்டச் சாலை; கிட்டத்தட்ட 10 ஆண்டு காலமாக பஞ் சப்பூரிலிருந்து கரூர்* bypass–*ஐ இணைக்கின்ற அந்த வெளிவட்டச் சாலைப்பணி அப்படியே நிலுவையில் இருக்கின்றது. அந்தப் பணியை முடித்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

அதேபோன்று கழக ஆட்சிக் காலத்தில் திருவெறும்பூருக்கு சுற்றுச்சாலை அமைப்பது சம்பந்தமாக கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள். அந்தத் திட்டமும் அப்படியே நிற்கின்றது. புதிய பேருந்து நிலையப் பணியும் அப்படியே நிற்கின்றது. திருச்சி நகரம் மிகவும் நெருக்கடியாக இருக்கின்றது. இதனை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்தில் ஏற்கெனவே சொல்லியிருக்கின்றேன். ஆகவே, இந்தப் பணிகள் அனைத்தையும் நிறைவேற்றித் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இங்கே கட்டடங்களைப் பற்றி பேசுவதற்கு நான் நிறைய கருத்துகளை எழுதி எடுத்து வந்திருக்கின்றேன். எனக்குப் பேசுவதற்கு அனுமதி தரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. நான் உங்களுக்கு அனுமதி தரவில்லை என்று சொல்லாதீர்கள். உங்களுக்குப் பேசுவதற்கு 45 நிமிடங்கள் கொடுத்துவிட்டேன். அதுவும் தாராளமாகக் கொடுத்துவிட்டேன். உங்களது உரையைச் சுருக்கிப் பேச வேண்டியது உங்களது கடமை, அதில் நான் ஒன்றும் சொல்ல இயலாது. உரையை முடியுங்கள்.

திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் தொகுதி, திருவாரூர் நகராட்சி, மலப்புரம்-தஞ்சை சாலையை இணைக்கும் ஓடம்போக்கி ஆற்றின் குறுக்கே புதியதாக பாலம் கட்டித் தர வேண்டும் என்று நம்முடைய உறுப்பினர் திரு. கலைவாணன் அவர்கள் கோரினார்கள். மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் நேரடியாக இரண்டு முறை சென்று பாலம் கட்டித் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இதுவரை அது முடியவில்லை என்று உறுப்பினர் சொல்லியிருக்கின்றார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், போதும். நிறைவாக நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் குடிநீர்ப் பற்றாக்குறை இருக்கின்றது. சென்னையில் இருக்கின்ற செம்பரம்பாக்கம் ஏரிக்கு வருகின்ற வரத்து வாய்க்கால்களில் நிறைய அடைப்பு இருக்கின்ற காரணத்தினால். . .

2019 ஜூலை 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் புது* subject*–க்கு போய்க்கொண்டே இருக்கின்றீர்கள். என்னால் உங்களுக்கு நேரம் தர முடியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. நேரு அவர்கள், தயவுசெய்து அமரவும்.* (குறுக்கீடு) *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உய்யகொண்டான் வாய்க்காலைப் பற்றி குறிப்பிட்டார்கள். உய்யகொண்டான் வாய்க்கால் திருச்சி மாநகராட்சிப் பகுதியில் உத்திரமேரூரிலிருந்து திருவெறும்பூர் வரை சுமார் 7 கிலோ மீட்டர் நீளத்தில் 15 மீட்டர் அகலத்தில் பயணிக்கிறது அதில் 34 இடங்களில் கழிவுநீர் கலக்கிறது. இதில்; முக்கியமாக* cantonment, *ஆழ்வார்தோப்பு, பாலக்கரை, எட்டுத்தெரு, பரமல் ஏரி, அரியமங்கலம் மற்றும் திருவெறும்பூர் ஆகிய இடங்கள் கழிவுநீர் கலக்கும் முக்கிய இடங்களாகும். திருச்சி மாநகராட்சியின் பாலக்கரை பகுதியில் திட மற்றும் திரவக் கழிவுகள் வாய்க்காலில் கலப்பதைத் தடுப்பதற்காக 2016 ஆம் ஆண்டில் 1,500 மீட்டர் நீளத்திற்கு வாய்க்காலின் இரு புறமும் தடுப்புச் சுவர் மற்றும் கம்பி வேலி அமைக்கும் பணி 12.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டது. உய்யகொண்டான் வாய்க்காலில் கழிவுநீர் கலப்பதால் படரும் ஆகாயத் தாமரை வாய்க்காலில் நீர் விநியோகம் செய்யப்படுகின்ற நேரத்தில் ஏற்படும் செடி. கொடிகளின் வளர்ச்சியைப் பொறுத்து கால இடைவெளியில் குறைந்தபட்சம் 3 முறை அகற்றப்பட்டு வருகின்றன. வாய்க்காலில் படரும் ஆகாயத் தாமரையை அகற்றுவதற்கு நடப்பு ஆண்டு 17.50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திருச்சி மாநகராட்சியில் முதல் கட்டமாக அம்ருத் திட்டத்தின்கீழ் ரூ.344 கோடி மதிப்பீட்டில் மாநகராட்சியின் மையப் பகுதி, மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் முழுமையாகச் செயல்பாட்டிற்கு வருகின்றபோது உய்யகொண்டான் வாய்க்காலில் கழிவுநீர் கலப்பது முழுமையாகத் தடுக்கப்படும். திருச்சி மாநகராட்சிப் பகுதியில் கோரையாறு வடிகால், உய்யகொண்டான் ஆற்றில் விழுந்து குடமுருட்டி கால்வாயில் கலக்கின்றது. உய்யகொண்டான் வாய்க்காலில் 26–வது கிலோ மீட்டரில் 14.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொட்டில் பாலம் அமைக்கப்பட்டு வெள்ளச் சேதம் முற்றிலும் தவிர்க்கப்படுவதால் பாசனத்திற்குத் தடையின்றி தண்ணீர் வழங்க உறுதி செய்யப்படுகிறது.*

மாண்புமிகு உறுப்பினர் கழிவுநீர் கலப்பதால் அங்கே நீர் அசுத்தம் அடைவதாகச் சொன்னார்கள், மாசடைவதாகச் சொன்னார்கள். அதற்கெல்லாம் தீர்வு காண்பதற்காக, பாதாள சாக்கடைத் திட்டம் இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல, பெண்ணையாறு–செய்யாறு இணைப்புத் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். அங்கே புதிய நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின்கீழ், நிலத்தைக் கையகப்படுத்தத் தேவையான செலவினம் குறித்து திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. நில அளவு மற்றும் மட்ட அளவு எடுக்க ரூ.35 இலட்சத்திற்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, பெண்ணாறு–பாலாறு பற்றியும் சொன்னார்கள், இந்தத் திட்டமும் நில எடுப்புப் பணியில்தான் இருக்கின்றது. நில எடுப்புப் பணியில்தான் எல்லாமே பிரச்சினையாக இருக்கின்றது. இந்தத் திட்டத்தையெல்லாம் நிறைவேற்றுவதற்கு அம்மாவினுடைய அரசு முயற்சி செய்து வருகின்றது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் பல கேள்விகளைக் கேட்டிருக்கின்றீர்கள், கருத்துகளைச் சொல்லியிருக்கின்றீர்கள். அவற்றிற்கான விளக்கங்கள் எல்லாம் என்னுடைய பதிலுரையில் இடம் பெறும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள், இதற்குமேல் வாய்ப்பில்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) போதும், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள். அவர் முன்னாள் அமைச்சர். திருவாரூர் மாவட்டம் ஓடம்போக்கி ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட வேண்டும் என்றார்கள். இரண்டு முறை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்கள் என்றும் சொன்னார்கள். இரண்டு முறையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்

அறிவுரையின் அடிப்படையிலேதான் அந்தப் பாலத்தினை நான் ஆய்வு செய்தேன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் பரிந்துரையின் அடிப்படையில், NABARD திட்டத்தின்கீழ் tender விடுகிற நிலையில்தான் இருக்கிறது, பாலம் கட்டுவது உறுதியாகிவிட்டது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், அவர் பேசுகிறபோது நெல் விளைச்சலைப் பற்றி கவலைப்படுவதாகவும் முன்பிருந்த புள்ளிவிவரங்களைப் பற்றியும் இங்கே குறிப்பிட்டார்கள். நெல் விளைச்சலைப் பொறுத்தவரை, வேளாண்மைத் துறையில் தொடர்ந்து Krishi Karman விருதினை தமிழக அரசுதான் பெற்று வருகின்றது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2002 ஆம் ஆண்டு செய்துகொண்ட ஒப்பந்தம்–MoU–ன்படி நம்முடைய பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவையான 2,92,000 மெட்ரிக் டன் அரிசியை ஒவ்வொரு மாதமும் மத்திய தொகுப்பிலிருந்து நாம் பெறுகிறோம். கூடுதலாகத் தேவைப்படுகிற அரிசியையும் நாம் வழங்கிக் கொண்டிருக்கிறோம். எனவே, அரிசியினாலே எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. தேவையில் எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. அரிசி விலையும் கட்டுக்குள் இருக்கிறது, தேவையும் சரியாக இருக்கிறது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, இதற்குமேல் வாய்ப்பில்லை.

(திராவிட முன்னேற்ற கழக உறுப்பினர்கள் எழுந்து நின்று கோஷமிட்டனர்).

இங்கே பாருங்கள், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு 47 நிமிடங்கள் ஒதுக்கியாகிவிட்டன. இதற்குமேல் நான் என்ன செய்ய முடியும்? மாண்புமிகு உறுப்பினர் கேள்வி கேட்கிறார். மாண்புமிகு அமைச்சர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பதில் சொல்கின்றார்கள். ஆகவே, இதற்கு நான் என்ன செய்ய முடியும்? நேரம்தான் தர முடியும். (குறுக்கீடு) அதைப் பயன்படுத்துவது உங்களுடைய திறமையைப் பொறுத்தது. ஆகவே, நீங்கள்

கேட்கும்போது, மாண்புமிகு அமைச்சருடைய பதிலைத் தருவதற்கு வாய்ப்பு தரப்படுகிறது. வேறு வழியில்லை. (குறுக்கீடு) இதற்குமேல் எவ்வளவு நேரம் தர முடியும்? இன்னும் 5 உறுப்பினர்கள் பேச வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். பின்னர், 2 மணிக்கு சபையை முடியுங்கள் என்று சொல்வீர்கள். நான் எப்படி முடிக்க முடியும்? (குறுக்கீடு) இல்லை. இதெல்லாம் செய்ய முடியாது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. நேரு, உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை. இன்றைக்கு ஒருநாள் நடந்தால்கூட நான் ஏதாவது பார்த்துக்கொள்வேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் முதலில் பேசும் மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு மணி நேரம், ஒன்றேகால் மணி நேரம் பேசுகிறீர்கள். என்னால் அவையைக் கட்டுப்படுத்த, நேரத்தை ஒன்றும் செய்ய முடியவில்லை. நீங்கள் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். நீங்கள் ஒத்துழைத்தால்தான், பேரவைத் தலைவர் உங்கள் எல்லோருக்கும் நிறைவாகச் செய்ய முடியும். (குறுக்கீடு) பிறகு நான் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள், உரையை முடியுங்கள். ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே நிமிடத்தில் உரையை முடிக்கிறேன். நிறைய பேசுவதற்காக நான் 5 நாட்கள், 6 நாட்கள் தயார் செய்து வந்தேன். ஆனால் இங்கே பேசவிடவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரிசியின் தேவையைப் பற்றிச் சொன்னார்கள், இன்றைக்கு இருக்கிற அரிசி தேவைக்கு வெளியிலிருந்து வாங்குகிறோம். நாமே நம்முடைய விவசாயிகளை வைத்து, விளைவித்து மக்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் இவ்வளவு தூரம் சொன்னேனே தவிர, இன்றைக்கு இருக்கிற உணவுக் கொள்கை—நீங்கள் கேட்டவுடன் 2,92,000 மெட்ரிக் டன் அரிசியைத் தருகிறார்கள். நாங்கள் எல்லாம் உணவு அமைச்சராக இருந்தபோது, ஒவ்வொரு மாதமும் மத்திய அரசை கெஞ்சிக் கெஞ்சித்தான் அரிசியை வாங்க வேண்டும். எனவே, மத்தியத் தொகுப்பிலே இருந்து அந்த அரிசி வந்து, இந்தப் பஞ்சத்தைத் தீர்ப்பேன் என்று சொல்வதைவிட உள்ளூரிலே நம்முடைய விவசாயிகள் விளைவித்த நெல்லைப் பயன்படுத்தும் நிலையினைக் கொண்டுவர வேண்டும் என்பதற்காகத்தான் அதைச் சொன்னேனே தவிர, வேறொன்றுமில்லை. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சருக்கு வணக்கம். எல்லோருக்கும் வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், என்னவென்று சொல்லுங்கள்.

பிற்பகல் 12–50

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரையாற்றுகிறபோது, ஏரிகளைத் தூர் வாருவதைப் பற்றிச் சொன்னார்கள். நானும் ரொம்ப நாட்களாகக் கேட்டுக்கொண்டிருக்கின்றேன். 'எந்தெந்த ஏரிகளைத் தூர் வாருகிறார்கள் என்கிற அந்த list–ஐ எங்களிடம் கொடுங்கள்' என்று சென்ற வருடத்திலிருந்து கேட்கிறேன். நீங்களும் கொடுக்க மாட்டேன் என்கிறீர்கள். நானும் இந்த அவையில் 10 தடவை கேட்டுப் பார்த்துவிட்டேன், தரப்படவில்லை. அதிகாரிகளையும் கேட்டுப் பார்த்தேன், அப்பொழுதும் தரப்படவில்லை. என்னுடைய தொகுதியில், எந்த ஏரிகளைத் தூர் வாருகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இது ஒரு விஷயம். எந்தெந்த ஏரிகள் எடுக்கப்பட வேண்டும், எந்தெந்த ஏரிகள் தூர் வாரப்பட வேண்டுமென்று எங்களுக்குத்தான் தெரியும். எங்களைக் கேட்காமலேயே அவர்களாகவே, அவர்களுடைய இஷ்டத்திற்கு ஏதோ **என்பதற்காக அவர்களாகவே அந்தப் பணியைச் செய்தால், என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) இரண்டாவதாக... (குறுக்கீடு) நான் உங்களைச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) நான் உங்களைச் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களே, சற்று பொறுங்கள். நீங்கள் பேசுகிறபோது, ** என்று குறிப்பிட்ட அந்த வார்த்தை, நான் பேசியது உட்பட, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மற்ற விஷயங்களைப் பற்றி பேசுங்கள்.

திரு. துரைமுருகன்: அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடுங்கள். சரி. அதனால், எங்களைக் கேட்க வேண்டும். இரண்டாவது விஷயம், எந்த ஏரிகளைத் தூர் வாருகிறார்கள் என்பது எங்களுக்குத் தெரிந்தால்தான் நாங்களும் அந்த ஏரிக்குச் சென்று, சரியாக அந்தப் பணியைச் செய்கிறார்களா என்பதைப் பார்க்க முடியும். ஆனால்,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

இதுவரையில் அந்தப் பட்டியல் வழங்கப்படவில்லை. நானும் P.W.D. Minister ஆக இருந்தவன்தான். ஆனால், அந்த அதிகாரிகளும், 'ஐயா, உங்களுடைய தொகுதியில் இந்தந்த ஏரிகளில் தூர் வாருகிறோம்' என்று சொன்னதும் கிடையாது. அவற்றை நானும் சென்று பார்த்ததும் கிடையாது. அந்த list–ஐக் கேட்டால், அது தரப்படவில்லை. எந்தெந்த ஏரிகள் எடுக்கப்படுகின்றன என்பதே எனக்கு சித்த வைத்தியம் மாதிரி இருக்கிறது. அன்றைக்கே அவர் சொன்னார். நானும் அன்றைக்கே சொன்னேன். 'Political influence இல்லை' என்று சொன்னார்கள். ஆனால், என்னுடைய தகுதிக்கு இந்தச் சபையில் நான் சொல்லமாட்டேன். அந்தப் பணி எப்படி நடக்கிறது என்பதை என்னிடம் தனியாகக் கேளுங்கள். அந்தப் பணி எப்படி நடக்கிறது என்று நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணி சிறப்பாக நடைபெற வேண்டுமென்பதற்காகத்தான் குடிமராமத்துத் திட்டத்தைக் கொண்டு வந்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) முழுக்க, முழுக்க விவசாயிகளைப் பயன்படுத்தி, இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று திட்டம் தீட்டப்பட்டது. அதனால்தான் எந்தவித ஒப்பந்தங்களும் விடுவது கிடையாது. ஏனென்றால், பாசன விவசாயிகள் சங்கம், ஏற்கெனவே தெரிவித்தபடி, அந்த விவசாயச் சங்கங்களுக்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் சிறப்பு அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் கூறுவதுபோல, 'சில பிரச்சினைகள் வந்தன' என்பதைச் குறிப்பிட்டவுடன் அது அரசின் கவனத்திற்கு வந்தவுடன், இந்தத் திட்டம் சிறப்பாக நடைபெற வேண்டும் என்பதற்காகத்தான் செயலாளர் அந்தஸ்தில் உள்ள மூத்த I.A.S. அதிகாரியை நியமித்திருக்கின்றோம். இதற்கென்று தனியாக I.A.S. அதிகாரி, திரு. பாலாஜி அவர்களை நியமித்திருக்கின்றோம். இரண்டு அதிகாரிகளைக்கூட தற்போது suspend செய்திருக்கிறோம். அந்த இடத்திற்குச் சென்று பார்வையிட்டு, சரியாக பணி செய்யப்படவில்லை என்பதற்காக அந்தவகையில் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அதுமட்டுமல்ல, எல்லா மாவட்டங்களுக்கும் அவர்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கிறார்கள். அப்படி சுற்றுப்பயணம் மேற்கொள்கிறபோது, எங்கெங்கெல்லாம்

குடிமராமத்துப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றனவோ, அந்தப் பணிகளையெல்லாம் சென்று பார்த்து, அவை சரியாக நடக்கின்றனவா என்று அரசுக்குத் தகவல் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, அந்தப் பணி துவங்குவதற்கு முன்பாக தற்போது அறிவிக்கப்பட்டிருக்கக்கூடிய 1,829 ஏரிகள் இருக்கும் பகுதிகளுக்கெல்லாம் அரசால் நியமிக்கப்பட்டுள்ள நம்முடைய சிறப்பு அதிகாரி அவர்கள் நேரடியாகச் சென்று விவசாயிகளை அழைத்து, அவர்களோடு அங்கேயே பேசுகிறார்கள். இதுபற்றி, நெடுஞ்சாலை, பொதுப் பணித் துறைகளின் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகங்களிலும் விளக்கம் கொடுத்திருக்கிறோம். அந்த I.A.S., அதிகாரி அங்கே சென்று, அங்கேயே இருந்து, அங்கே இருக்கிற பாசனச் சங்கங்களைச் சேர்ந்த விவசாயிகளை அழைத்து, அவர்களோடு பேசி, இந்தத் திட்டத்தை இவ்வாறு நிறைவேற்ற வேண்டுமென்று அவர்களுக்கு ஆலோசனை வழங்குகின்றார்கள். அங்கேயிருக்கின்ற விவசாயிகளின் ஆலோசனையைக் கேட்டு, அதனை அரசுக்குத் தெரிவிக்கின்றார்கள். விவசாயச் சங்கங்களுக்கும் அரசுக்கும் அவர்கள் பாலமாக இருந்து செயல்படுகிறார்கள். எந்த இடத்திலும் தவறு நடக்கக் கூடாது என்பதைக் கருதிதான், அரசு உன்னிப்பாகக் கவனித்து வருகிறது. அதோடு மாவட்ட ஆட்சித் தலைவர்களும் இத்திட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். அந்த வகையில், இந்தப் பணி நடைபெறுவதை நேரடியாகச் சென்று பார்க்க வேண்டும், அந்தப் பணியில் ஏதாவது பிரச்சினை இருந்தால் உடனடியாகத் தீர்வு காண வேண்டுமென்பதற்காகவும், யாருடைய தலையீடும் இல்லாமல், முழுக்க, முழுக்க விவசாயிகளைப் பயன்படுத்தி, இந்தக் குடிமராமத்துத் திட்டம் உருவாக்கப்பட்டு, செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார். அவருடைய தொகுதியில் எந்தெந்த ஏரிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன என்ற விவரங்களை அவர்களுக்குத் தெரிவிக்கின்றேன். முதன்முதலில் இந்தத் திட்டத்தை அறிவிக்கின்றபோது, 1,519 ஏரிகளுக்கு, வெறும் ரூ.100 கோடிதான் ஒதுக்கப்பட்டது. ஆங்காங்கே சின்னச் சின்னப் பணிகளைச் செய்வதற்காகத்தான், அந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், அந்த விவசாயச் சங்கங்களைச் சேர்ந்தவர்கள், அந்தப் பாசன விவசாய ஆயக்கட்டுக்காரர்களெல்லாம், 'இந்த நிதி போதாது, அந்த ஏரிகள் முழுவதையும் சீர் செய்ய வேண்டும்' என்று கோரிக்கை வைத்தார்கள். அதன் அடிப்படையில்,

தற்போது ஓர் ஏரியைக் குடிமராமத்துத் திட்டத்தின்கீழ் கொண்டு வரவேண்டுமென்று சொன்னால், அந்த ஏரிக்கு எவ்வளவு செலவு செய்ய முடியும் என்பது குறித்து மதிப்பீடு செய்து, அந்த மதிப்பீட்டின் அடிப்படையிலே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தக் குடிமராமத்துப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டம் ஓர் உன்னதமான திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு வறட்சியாக இருக்கின்ற காலத்தில், அரசாங்கம் இருக்கின்ற நிதியை முறையாகப் பயன்படுத்தி, விவசாயிகளின் துணைகொண்டு, இந்தத் திட்டத்தை நாங்கள் செயல்படுத்திக்கொண்டிருக்கிறோம். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் எங்கேயாவது பிரச்சினை இருந்தால், அரசிடம் சொல்லுங்கள். அதனைச் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். தவறு நடந்தால், அதற்கும் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னதை மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் அவர்கள் சரியாக எடுத்துக்கொள்ளவில்லை அல்லது புரிந்துகொள்ளவில்லையென்று எண்ணுகிறேன். நான் சொன்னது, 2,92,000 மெட்ரிக் டன் அரிசி என்பது பொது விநியோகத் திட்டத்திற்கு ஒரு மாதத்திற்கானது. அது இல்லாமல், வெளி மார்க்கெட்டில் அரிசி வாங்கி சாப்பிடுபவர்களும் எந்தவிதப் பிரச்சினையும் இல்லாமல் இருக்கிறார்கள். அதனால்தான் Krishi Karman விருதினை நாங்கள் தொடர்ந்து பெற்றுக்கொண்டிருக்கிறோம், தமிழக அரசு தொடர்ந்து பெற்றுக்கொண்டிருக்கிறது. ஆக, விளைச்சல் இல்லையென்றால், வெளி மார்க்கெட்டில் அரிசியின் விலை உயர்ந்துவிடும். விளைச்சல் சரியாக உள்ள காரணத்தினால்தான், வெளி மார்க்கெட்டிலும் விலை சரியாக இருக்கிறது. வெளி மார்க்கெட்டில் வாங்கிச் சாப்பிடுபவர்களுக்கும் பிரச்சினை இல்லை. மேலும், பொது விநியோகத் திட்டத்தின்கீழ் 6 கோடியே 61 இலட்சத்து 60 ஆயிரத்து 57 நபர்களும் பயனடைகிறார்கள். அவர்களுக்கும் எந்தப் பிரச்சினையும்

இல்லாமல், தமிழகத்தில் அரிசி பிரச்சினை இல்லாமல் சென்று கொண்டிருக்கிறது என்பதைத்தான் சொன்னேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் அனுமதியோடு, 2016–2017 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகள், 2017–2018 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகள், அதேபோல் நடப்பாண்டில், 2019–2020 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்ற குடிமராமத்துத் திட்டப் பணிகள் குறித்த விவரங்கள் அனைத்தும் எங்களிடத்தில் இருக்கின்றன. உங்களுக்கு வேண்டுமென்றால் நாங்கள் தருகிறோம். முதற்கட்டமாக பரீட்சார்த்த முறையில், 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. பிறகு படிப்படியாக உயர்ந்து, அங்கிருக்கின்ற விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று, அங்கிருக்கின்ற விவசாயிகள் என்னென்ன கோரிக்கைகளை வைத்தார்களோ, அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுகின்ற அடிப்படையில் இந்தக் குடிமராமத்துப் பணிகள் திட்டம் நிறைவேற்றப்படுகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாசன விவசாயிகள் சங்கம் கொண்டு வந்ததே, அதை ஆரம்பித்தவனே நான்தான். அது இன்றைக்கு நன்கு வளர்ந்திருக்கிறது. குடிமராமத்துத் திட்டம் நல்ல திட்டம். அதை நான் ஒப்புக்கொள்கிறேன். அதை நீங்கள் தற்போது செய்து கொண்டிருக்கிறீர்கள். அதிலும் அதிக பிரச்சினைகள் உண்டு. எனக்கே தெரியும். நிலமே இல்லாதவர் எல்லாம் பாசன விவசாயிகள் சங்கத்தில் உறுப்பினராக இருக்கின்றார். அதையெல்லாம் விடுங்கள். ஒன்றிரண்டு அப்படித்தான் இருக்கும். இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், நான் கேட்பது இதுதான். ஒரு சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரியாமலேயே சில பணிகள் நடைபெறுகின்றன. நான் இருக்கும்போது என்ன செய்தேன்*

என்று தெரியுமா? விவசாயிகளை அவர்களுக்கு எந்தெந்த ஏரிகளில் பணி செய்ய வேண்டும் என்று அவர்களுடைய இஷ்டத்திற்கு எழுதிக் கொடுக்கச் சொல்லி, அவற்றில் இரண்டு ஏரிகளை எடுத்து பணிகளைச் செய்தேன். அதுபோன்று எங்களிடம் கேட்க வேண்டும். எந்த ஏரி முக்கியமானது, எந்த ஏரியை எடுக்க வேண்டும் என்று கேட்க வேண்டும். எங்களுக்கே ஒன்றும் தெரியவில்லை. (குறுக்கீடு) தெரியாது என்பதை விடுங்கள். போய்ப் பார்ப்பதும் கிடையாது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் படித்தவற்றில் நான் குறுக்கிடவில்லை. செய்த திட்டங்கள் குறித்து நான் ஒன்றும் சொல்லவில்லை. 300 கோடி ரூபாய் ஒதுக்குகிறீர்கள். போனமுறை கேட்டபோது சொன்னீர்கள் அல்லவா? இன்னும் சொல்லப்போனால், நான் ஒன்று சொல்கிறேன், forehead–லேயே மண்ணை எடுத்துக்கொண்டு போய்விட்டான். அதாவது ஏரிக்கு வருகிற மதகிலேயே மண்ணை எடுத்துவிட்டான். அதனால் தண்ணீர் அங்கேயே நின்று போய்விட்டது. Front–க்கு வரவில்லை. எங்களுக்குத் தெரிந்திருந்தால் அங்கு போய்ப் பார்த்திருப்போம், போட்டோ எடுத்து உங்களிடம் கொண்டு வந்து கொடுத்திருப்போம். எங்களுக்கே தெரியாமல் அதுபோன்ற பணிகள் நடக்கிறதே என்கிற குறைபாடே தவிர, வேறு ஒன்றும் இல்லை. எங்களுக்குத் தெரிவிக்கச் சொல்லுங்கள். We are entitled to know.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்கிறார், இதில் யாருடைய குறுக்கீடும் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் விவசாயிகளை வைத்து இந்தப் பணிகளை மேற்கொள்கின்றோம். ஏனென்றால் அவர்களுக்கு தகவல் தெரிவிக்கின்றோம். அரசியல் தலையீடு இருந்தால் அதில் பிரச்சினைதான் வரும். எனவே, விவசாயச் சங்கத்தை வைத்து, ஆயக்கட்டுக்காரர்களை வைத்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றலாமா? வேண்டாமா? உங்களுக்குத் தகவல் தெரிவிக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதில் எந்த மாறுபட்ட கருத்தும் கிடையாது. அதே வேளையில், முழுக்க முழுக்க விவசாயிகளை ஈடுபடுத்தி இந்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இந்தக் குடிமராமத்துத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்றோம். அதுமட்டுமல்ல, குடிமராமத்துப்

பணிகள் குறித்த விவரங்களை இணையதளத்தில் வெளியிடுகிறோம். அதை நீங்கள் பார்க்கவில்லை என்றால், அதற்கு நான் பொறுப்பல்ல. ஆகவே, இன்றைக்கு இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும், ஏதாவது குறைபாடுகள் இருந்தால், சுட்டிக்காட்டினால், அதை நிவர்த்தி செய்வதற்கு அம்மா அவர்களுடைய அரசு துணை நிற்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்கின்றேன்.

வறட்சியான காலகட்டத்தில், நீரை சேமித்து வைக்க வேண்டும் என்ற காரணத்தினால்தான், குடிமராமத்துத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். உங்களுக்கும் நன்றாகத் தெரியும். அனைத்து ஏரிகளையும் தூர் வார வேண்டும் என்று சொன்னீர்கள். அனைத்து ஏரிகளும் படிப்படியாகத் தூர் வாரப்பட வேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். ஆகவே, இனிவருகின்ற காலங்களில், எந்தெந்த ஏரிகள் தூர்வாரப்படும் என்பது குறித்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்படும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களே, அதிக நேரம் ஆகிவிட்டது. (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்குச் சொல்வதாக சொல்கிறீர்கள். அப்படியானால் நாங்கள் யார்? உங்களைப் போன்று நாங்களும் விவசாயிகள்தான். இது அண்டை வெட்டிய கை, நான் ஏர் ஓட்டியவன், நாற்று நட்டவன், ஒரு விவசாயி. ஆகையால் எங்களுக்கும் தெரியும். ஒரே ஒரு கேள்வி மட்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நான் கேட்பதென்னவென்றால், உங்கள் திட்டம் குறித்து M.L.A–க்களை மதித்து சொல்லச் சொல்லுங்கள். M.L.A–க்களை மதியுங்கள். நாங்களும் மக்களிடம் வாக்குகள் வாங்கி வந்திருக்கிறோம். அதுதான் திட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் விவசாயியாக இருந்தால் எங்கள் திட்டத்தை நன்கு புரிந்துகொள்ள வேண்டும்

என்று அன்போடு இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஏரிக்குட்பட்ட விவசாயிகளை அழைத்துத்தான் பேசுகிறார்கள். அந்தப் பாசன ஏரிக்குட்பட்ட ஆயக்கட்டுக்காரர்கள், பாசனதாரர்களிடம் பேசுகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தெரிவிக்கிறோம், இணையதளத்திலும் வெளியிடுகிறோம். இணையதளத்தில் வெளிப்படைத் தன்மையோடு நாங்கள் வெளியிடுகிறோம். எந்தெந்த ஏரிகள் எந்தெந்த மாவட்டங்களில் எடுத்துக்கொள்ளப்பட்டன என்கின்ற விவரம் இணையதளத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். இதில் தவறு இருக்கும்பட்சத்தில், அம்மா அவர்களின் அரசு உண்மையாக நடவடிக்கை எடுக்கும். அதில் எந்த பாரபட்சமும் கிடையாது. ஆகவே, விவசாயிகளின் நலன் கருதித்தான் இந்தத் திட்டத்தினைக் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், இதில் ஏதாவது பிரச்சினை இருந்தால், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நிச்சயம் அதற்குண்டான நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை அவர்கள்.

***திரு. S. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவரை நினைவுகூர்ந்து, பொதுப் பணித் துறை உள்ளிட்ட மானியக் கோரிக்கைகளை இங்கே தாக்கல் செய்திருக்கிறார்கள். பெருந்தலைவர் காமராஜர் என்றாலே, மிகவும் எளிமையானவர். நீர்ப்பாசனத்திற்கு மிகுந்த முக்கியத்துவத்தைக் கொடுத்தவர். தேவைப்பட்ட இடங்களிலெல்லாம் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே பல நீர்த்தேக்கங்களைக் கட்டியவர்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக்கொண்டிருந்த காரணத்தினால் நான் குறுக்கிடக்கூடாது என்றிருந்தேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கடந்த காலத்தில் பொதுப் பணித் துறையின் அமைச்சராக இருந்தார்கள். சட்டமன்ற உறுப்பினர்களிடத்தில், 'எந்தெந்த ஏரிகள் தூர் வாரப்பட வேண்டுமென்று கடிதம் கொடுங்கள்' என்று சொன்னார்கள். நாங்களும் கடிதம் கொடுத்தோம். ஆனால், எந்த ஏரியைத் தூர் வாரினீர்கள், எப்போது தூர் வாரினீர்கள் என்ற தகவலை எப்போதுமே சட்டமன்றத்தில் நீங்கள் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தவரை எங்களுக்குக் கொடுக்கவில்லை. அன்றையதினம் 2006–ல் சட்டமன்ற உறுப்பினராக இருந்த அத்துணைபேருக்கும் இது நன்றாகத் தெரியும். சட்டமன்றப் பதிவேட்டிலும் இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இவ்வாறு பேச எழுந்தால், விவாதம் நீண்டுகொண்டே செல்லும்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, sorry, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டதால் சொல்லி முடித்துவிடுகிறேன். சட்டமன்ற உறுப்பினர்களிடம் உங்கள் தொகுதியில் எந்தெந்த ஏரிகள் தூர் வாரப்பட வேண்டும் என்று கேட்டிருந்தோம், அவர்களும் எழுதிக் கொடுத்தார்கள். தூர் வாரப்பட்ட விவரத்தை நான் சொல்லவில்லை என்றார். அந்த ஏரிகள் தூர் வாரப்பட்டனவா என்று சட்டமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள்தான் போய் பார்க்க வேண்டும். அந்த ஏரி தூர் வாரப்பட்டதா, இல்லையா என்று நீங்கள்தான் போய்ப் பார்த்திருக்க வேண்டும். அந்த ஏரிகள் தூர் வாரப்படவில்லையென்றால் என்னிடம் தெரிவித்திருக்க வேண்டும். நான் எப்படி அந்த விவரங்களைச் சொல்லிக்கொண்டிருப்பேன்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடிமராமத்திற்கான

பாசனதாரர்களை அமைக்கும் முறை பொறுப்பாளர்களைத் தேர்வு செய்யும் நடைமுறையில் உள்ள விவரங்கள் குறித்து, மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது யார் யாரோ தூர் வாருகிறார்கள் என்று பேசினார். சரியான முறையில் தூர் வாரவில்லை என்றும் பேசினார். வழிகாட்டுதல் முறையின்படிதான் இந்தப் பாசன அமைப்பு முறையை ஏற்படுத்துகின்றார்கள். அந்த விவரங்களை அவைக்குத் தெரிவிக்கின்றேன்.

குடிமராமத்துப் பணிகளை மேற்கொள்ள விவசாயச் சங்கங்களைப் பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்யப்பட்ட விவசாயச் சங்கங்களில், உரிய ஏரியின்மூலம் பயனடையும் விவசாயிகள் 51 விழுக்காடு அல்லது அதற்கு மேலாகவோ உறுப்பினராக இருக்க வேண்டும். இவ்வாறு அமைக்கப்பட்ட விவசாயச் சங்கத்திற்கு மட்டுமே குடிமராமத்துப் பணிகள் வழங்கப்படுகின்றன. மேற்கண்டவாறு அமைக்கப்பட்ட விவசாயச் சங்கங்கள் ஏதாவது ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் மட்டுமே வங்கிக் கணக்கினைத் துவங்கி இருக்க வேண்டும். இவ்வாறு அமைக்கப்பட்ட விவசாயச் சங்கத்திற்கு மட்டுமே நியாயமான அடிப்படையில் குடிமராமத்துப் பணிகள் உரிய அலுவலர்களால் வழங்கப்படும். அனைத்து விவசாயச் சங்கங்களும் சங்கப் பதிவு செய்தவுடன் வருமான வரி நிரந்தரக் கணக்கு எண், சரக்குகள் மற்றும் சேவைகள் வரி எண் ஆகியவற்றை சரக்கு மற்றும் சேவை வரி தகவு மாநில வரிகள் துறையின் வாயிலாகப் பதிவு செய்து பெற வேண்டும். பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் ஒவ்வொரு வருடமும் புதுப்பிக்கப்பட வேண்டும். பாசன அமைப்பு முறை மேலாண்மை சட்டம்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட சங்கங்களில் ஐந்தரை ஆண்டுகளுக்குப் பிறகு தேர்தல் நடத்தப்பட வேண்டும். ஏற்கெனவே பதிவு செய்யப்பட்ட பாசன சங்கங்களில் உறுப்பினராக இருந்தவர்கள் தற்போது நிலத்தை விற்றுவிட்டு, நில உரிமையாளராக இல்லாதபட்சத்தில் சங்கத்தில் உறுப்பினராகத் தொடர இயலாது. மாண்புமிகு உறுப்பினர், நிலமே இல்லாதவர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அந்தச் சட்டத்தின்படி நிலமே இல்லாதவர்கள் உறுப்பினர்களாகத் தொடர இயலாது. ஏற்கெனவே, பாசன சங்கத்திற்கு எனத் தொடங்கப்பட்ட வங்கிக் கணக்கை தற்போது நடைபெறும் குடிமராமத்துப் பணிகளுக்குப் பயன்படுத்தக் கூடாது. குடிமராமத்துப் பணிகளுக்கென்று

தனியாக வங்கிக் கணக்கு துவங்கப்பட வேண்டும். குடிமராமத்துப் பணிகளுக்கு நடப்பு விலை விகிதப் பட்டியல் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு விலையில் 90 விழுக்காடு தொகை அரசால் வழங்கப்படும். விவசாயச் சங்கங்கள் தங்களுடைய 10 சதவிகிதப் பங்களிப்பை பணமாகவோ அல்லது பணியாகவோ அல்லது பொருளாகவோ, உழைப்பாகவோ அளிக்க வேண்டும். பணமாகச் செலுத்தினால் அரசுக் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விவசாயச் சங்கங்கள் தங்களுடைய 10 சதவிகிதப் பங்களிப்பை பணமாகச் செலுத்தும்பட்சத்தில் அரசால் வழங்கப்படும் 15 விழுக்காடு முன்பணத் தொகையானது அரசாணை எண் 283, பொதுப் பணித் துறை, நாள் 29–10–2018–ன்படி விவசாயச் சங்கங்களின் கணக்கில் வரவு வைக்கப்படும். விவசாயச் சங்கத்தினர் தங்களுடைய 10 சதவிகிதப் பங்களிப்பை பொருளாக அளிக்கும்பட்சத்தில், அவர்கள் அளித்த பொருளை மதிப்பீடு செய்து 10 விழுக்காடு பங்கு அரசுக்குச் செலுத்தப்பட்டுவிட்டது என்பதை உறுதி செய்தபின் முன்பணமாக 15 விழுக்காடு தொகை விவசாயச் சங்கங்களின் கணக்கில் வரவு வைக்கப்படும்.

பிற்பகல் 1–05

விவசாயச் சங்கத்தினர் தங்களுடைய 10 சதவிகிதப் பங்களிப்பை பணியாக அளிப்பதாக இருந்தால், மதிப்பீட்டில் 10 விழுக்காடு அளவிற்கு ஈடாக பணியினை விவசாயச் சங்கங்கள் முடித்ததை உறுதி செய்தபின், முன்பணமாக 15 விழுக்காடு தொகை விவசாயச் சங்கங்களின் கணக்கில் செலுத்தப்படும். இவ்வாறு வழங்கப்படும் 15 விழுக்காடு முன்பணமானது, 3 தவணைகளில் பிடித்தம் செய்யப்படும். வேலையின் முடிவுத்தன்மைக்கேற்ப பட்டியல் தயாரித்து, விவசாயச் சங்கங்களுக்குப் பணம் பட்டுவாடா செய்யப்படும். வேலைகள் முடிந்தவுடன் இறுதிப் பட்டியல் தயார் செய்து, விவசாயச் சங்கத்திற்குப் பணம் வழங்கப்படும். மேலும், நடைபெறுகின்ற முறையான சரக்குகள் மற்றும் சேவைகள் வரித் தொகையினை பணிப் பட்டியலில் கீழ்க்கண்ட விகிதங்களில் பிடித்தம் செய்து, விவசாயச் சங்கங்களின் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிக் கணக்கில் செலுத்தப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பணிகளின் தன்மை	சரக்கு மற்றும் சேவை வரி (GST) பிடிக்கப்பட வேண்டிய விழுக்காடு
பணியின் மொத்த ஒப்பந்த தொகையில் மண் வேலையின் பங்கு மட்டும் 75 விழுக்காட்டிற்கும் மேலாக இருந்தால்	5 விழுக்காடு
பிற பணியினங்களுக்கு	12 விழுக்காடு

இந்தத் திட்டம் சிறப்பாக நடைபெற வேண்டும். எந்தவிதத்திலும், எந்தப் பிரச்சினைக்கும் உள்ளாகக் கூடாது என்பதற்காகத்தான் இந்த condition–ஐ எல்லாம் போட்டு, குடிமராமத்துப் பணிகளை மேற்கொள்கின்றோம். மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் அனுபவம் வாய்ந்தவர். எங்கேயாவது பிரச்சினை இருந்தால், அதைச் சுட்டிக்காட்டினால் அரசு அதில் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை அவர்கள்.*

திரு. S. செம்மலை: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெருந்தலைவர் காமராசர் அவர்கள் தேவையான இடங்களிலெல்லாம் நீர்த்தேக்கங்களை ஏற்படுத்தி, விவசாயம் செழிப்பதற்கு பாசன வசதி செய்துகொடுக்க வழிவகுத்தவர் என்பதெல்லாம் நமக்கு நன்றாகத் தெரியும். எனவே, அந்த வழியிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் ஓர் எளிமையான முதலமைச்சர். பெருந்தலைவர் காமராசர், எது இந்த நாட்டிற்கு முக்கியம் எனக் கருதி, நீர்ப் பாசனத்திற்கு முக்கியத்துவத்தைத் தந்தாரோ அதைப்போல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நீர்ப் பாசனத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிற வகையில்தான், (மேசையைத் தட்டும் ஒலி) சமீபத்திலே விதி 110–ன்கீழ் அவர் அறிவிப்பு செய்தபோதுகூட, 312 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 10,000 தடுப்பணைகளைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். எனவே, அந்தவகையிலே பெருந்தலைவர் காமராசரோடு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை*

ஒப்பிட்டுப் பார்ப்பது சரியாக இருக்கும் என நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு தாக்கல் செய்திருக்கிற பொதுப் பணித் துறை பற்றி பேச விரும்புகிறேன். பொதுப் பணித் துறை என்று சொன்னாலே அதற்கு இரண்டு பக்கங்கள்; ஒன்று கட்டடம், மற்றொன்று பாசனம். பாசனம் என்பதற்கு நாம் விளக்கம் சொல்கிறபோது, நீர் மேலாண்மையைப் பற்றி (Water Management) பேசாமல் இருக்க முடியாது. நீர் மேலாண்மை என்பது ஏதோ இப்பொழுது, நேற்று அல்லது சமீபத்திலே வந்ததல்ல. சங்க காலத்திலேயே அதுவும் சொல்லப்போனால், புறநானூறிலே நீர் மேலாண்மையைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. சிலப்பதிகாரத்திலே நீர் மேலாண்மையைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. அதேபோல திருக்குறளிலே நீர் மேலாண்மையைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. சங்க இலக்கியங்களிலெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. நான் இதை எதற்குச் சொல்கிறேன் என்று சொன்னால், நீர் மேலாண்மைக்கு pioneer நம்முடைய பண்டைத் தமிழகம்தான் என்பதற்காக நான் இதைச் சொல்கிறேன்.

கல்லணையைப் பற்றிப் பேசினார்கள். கல்லணையைக் கட்டியது கரிகாலன். அது எப்போது தெரியுமா? கி.பி. இரண்டாம் நூற்றாண்டு. இரண்டாம் நூற்றாண்டிலேயே சீறி வந்த வெள்ளத்தைச் சிறை பிடித்து, ஆற்றுப்படுத்தி, இருபுறமும் கரை அமைத்து, கல்லணையைக் கட்டினான் கரிகாலன் என்று சொல்வார்கள். அன்றைய பண்டைக்கால தமிழகம், இன்னும் சொல்லப்போனால் சோழர் காலம்தான் இந்த நீர் மேலாண்மைக்கு, நம்முடைய pioneer, முன்னோடி என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்குப் பிறகு பத்தாம் நூற்றாண்டில் பரந்தாம சோழன், வீராணம் ஏரியை அமைத்தார். மதுராந்தக சோழன் மதுராந்தகம் ஏரியை அமைத்தார். பிற்கால சோழன், ராஜேந்திர சோழன் கங்கைகொண்ட சோழபுரத்திலே பொன்னேரியை அமைத்தார். ஆக, நம்முடைய தமிழ் மன்னர்கள் ஏரிகளை, குளங்களைப் பாசனத்திற்காக அதிக அளவில் கட்டினார்கள் என்பது வரலாற்று உண்மை. இப்போதுகூட காஞ்சிபுரத்தை எடுத்துக்கொண்டால், காஞ்சிபுரம் மாவட்டத்தில் அதிக ஏரிகள், கிட்டத்தட்ட 912 ஏரிகளுக்கு மேலாக இருப்பதாகக் கணக்கிட்டு சொல்லப்படுகிறது. அப்படி ஏரிகளை அமைத்து, அந்த மன்னர்கள் என்ன செய்தார்கள் என்று சொன்னால், தேக்கி வைப்பதற்காக மட்டும் ஏரிகள் அல்ல, கால்வாயை வெட்டி, வாய்க்காலை அமைத்து, கிளை வாய்க்காலை அமைத்து, கன்னி

வாய்க்காலை அமைத்து, விவசாய நிலங்களுக்கு கடைமடை வரை தொடர்ச்சியாக எந்தவிதத் தடையுமின்றி செல்வதற்கு வரத்து வாய்க்கால் அமைத்தார்கள். பிற்காலத்தில் அது ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, அழிக்கப்பட்டு, அந்தத் தொடர்ச்சி துண்டிக்கப்பட்டு விட்டது. பல ஆண்டுகளுக்குப் பிறகு, துண்டிக்கப்பட்ட அந்தப் பாசன வாய்க்கால்களைத் தூர் எடுத்து, அதனைச் சீரமைக்கவும்; அணை மற்றும் ஏரிகளில் இருக்கிற வண்டல் மண்ணை எடுத்து, அதனை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கவும்; வடிகால் வாய்கால்களை எல்லாம் சீர்படுத்தி பழைய நிலைக்குக் கொண்டு வரவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அற்புதத் திட்டமான குடிமராமத்துத் திட்டத்தை அறிமுகப்படுத்தி, அதனைச் சிறப்பான முறையில் நிறைவேற்றி வருகின்றார்கள்.

பிற்பகல் 1–10

கரிகாலச் சோழரைப் பற்றிச் சொல்கிறபோது, 'பொன்னிக்குக் கரை கண்ட பூபதி' என்று சொல்வார்கள். எனவே, இந்தக் குடிமராமத்துத் திட்டம் மன்னர் காலத்தை நினைவுபடுத்துகிற வகையில் இருப்பதால், மாண்புமிகு முதலமைச்சரை 'குடிமராமத்து மன்னன்' என்றழைப்பது பொருத்தமாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) எப்படி நாம் மாண்புமிகு துணை முதல்வரை 'ஜல்லிக்கட்டு நாயகன்' என்ற பட்டப் பெயரோடு அழைக்கிறோமோ, அதைப்போன்று அழைக்கலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த திட்டம் சாதாரணத் திட்டமல்ல.

'வரப்புயர நீருயரும்
நீருயர நெல்லுயரும்
நெல்லுயரக் குடியுயரும்
குடியுயரக் கோலுயரும்
கோலுயரக் கோனுயர்வான்'

என்று சொல்வதைப்போல மக்களுடைய நலனுக்காகவே இந்தத் திட்டத்தை மிகச் சிறப்பாகச் செய்து வருகிறார்கள்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஏரிகள் அதிகம். ஆனால், ஆறுகள் அதிகமில்லை. அப்படி இருக்கின்ற ஓரிரண்டு ஆறுகளும் அண்டை மாநிலங்களோடு தொடர்புடையனவாகவே இருக்கின்றன. காவேரியை எடுத்துக்கொண்டால், கர்நாடக

மாநிலத்தோடு தொடர்புள்ள நதியாக இருக்கிறது. முல்லைப் பெரியாறை எடுத்துக்கொண்டால், கேரள மாநிலத்தோடு தொடர்புள்ள நதியாக இருக்கிறது. பாலாறை எடுத்துக்கொண்டால் ஆந்திர மாநிலத்தோடு தொடர்புள்ள ஒரு நதியாக இருக்கின்றது.

காவேரி நதியைப் பொறுத்தவரையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டப் போராட்டத்தை நடத்தி, ஒழுங்காற்றுக் குழுவை அமைத்திருந்தாலும், உத்தரவினைப் பெற்றிருந்தாலும், அந்த நீரை நாம் பெறுவதற்கு மிகுந்த சிரமத்திற்குள்ளாகிறோம். அதேபோன்று முல்லைப் பெரியாறு நதியைப் பொறுத்தவரையில், 152 அடியாக உயர்த்துவதற்கு உச்ச நீதிமன்றத்தின் உத்தரவினைப் பெற்றிருந்தாலும், இன்றைக்கு அதனையும் நடைமுறைப்படுத்த முடியாத நிலையில் இருக்கிறது.

மேகதாது அணையைப் பொறுத்தவரையில் அதனைத் தடுத்து நிறுத்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். காவேரிப் படுகையில் ஹேமாவதி அணையைக் கட்டியதையும், கபினி அணையைக் கட்டியதையும், ஹேரங்கி அணையைக் கட்டியதையும் அன்றைக்கிருந்த ஆட்சியாளர்கள் தடுத்திருப்பார்களேயானால், இந்தச் சங்கடம் நமக்கு வந்திருக்காது. உச்ச நீதிமன்ற உத்தரவுகளை நாம் பெற்றிருந்தும், நமக்கு நீர் வந்து சேர்கிறதா என்று சொன்னால், இல்லை. கர்நாடக அரசு திட்டமிட்டு, அவர்களுடைய மாநிலத்தில் இருக்கும் அணைகளில்கூட தண்ணீரைத் தேக்கி வைக்காமல், அணைக்கு வருகின்ற தண்ணீரை குறுக்கே divert செய்து அவர்களுடைய ஏரிகளுக்கும், பாசனத்தை விரிவுபடுத்துவதற்கும் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்று தகவல் சொல்லப்படுகிறது. இதனை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, காவேரி நதிநீர் ஆணையத்தின் அதிகாரிகளுக்கு எடுத்துச்சொல்லி, அப்படி நமக்கு வருகின்ற நீரை, அவர்கள் தந்திரமாக தடுப்பார்களேயானால், அதனை monitor செய்து, அந்த நீரை மேட்டூர் அணைக்குக் கொண்டு வந்து சேர்க்கிற வகையில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1–15

முல்லைப் பெரியாறு அணையைப் பொறுத்தவரையில் 152 அடியாக நீர்மட்டத்தை உயர்த்தலாம் என உச்ச

நீதிமன்றமே உத்தரவிட்டிருக்கிறது. ஆனால், கேரள அரசு அதனைத் தடுத்துக்கொண்டிருக்கிறது. அந்த 152 அடி நீர் மட்டத்தை உயர்த்துவதை Resorts Lobby தடுக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. நீர்ப்பிடிப்புப் பகுதியில், தனியார்கள் அதிகளவில் resorts–ஐ கட்டியிருக்கிறார்கள். ஆக, Resorts Lobby, அரசாங்கத்திற்கு நிர்பந்தம் கொடுத்து, 152 அடி நீரை எட்டவிடாமல் தடுத்துக் கொண்டிருப்பதாக தகவல் வந்திருக்கிறது. எனவே, அந்த Resorts Lobby கேரள அரசாங்கத்தை நிர்பந்தித்து நீர் மட்டத்தை உயர்த்துவதைத் தடுப்பார்களேயானால், அந்தச் செய்தி உண்மையாக இருக்குமேயானால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எந்த வகையில் அங்கே நீர் மட்டத்தை உயர்த்தலாம் என்பது குறித்து தயவுசெய்து எண்ணிப்பார்த்து, ஆராய்ந்து, அதையும் நிவர்த்தி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்னால் உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல, கோதாவரி–காவேரி இணைப்புத் திட்டம் ஓர் அற்புதமான திட்டம், தொலைநோக்குத் திட்டம். 60,000 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே, 215 டி.எம்.சி. தண்ணீர் கிடைக்கிற திட்டம். அந்த 215 டி.எம்.சி. தண்ணீர் நமக்குக் கிடைக்குமேயானால் இந்தப் பிரச்சினைகள் அனைத்தும் நிச்சயமாக தீர்க்கப்பட்டுவிடும் என்பது அனைவருடைய கருத்தாகும். அந்தவகையிலே, கோதாவரி–காவேரி இணைப்புத் திட்டம், நீண்டகாலத் திட்டமாக இருந்தாலும்கூட, கிருஷ்ணா நதி, பெண்ணையாறு, பாலாறு வழியாக காவேரியில் வந்து இணைகிறது. இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களும், மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்காரி அவர்களும் உறுதி கொடுத்துள்ளார்கள். இந்தத் திட்டம் விரைவிலே நிறைவேற்றப்படும் என்று சொன்னாலும்கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவருவது, அந்த நீர், நேராக பாலாறு வழியாக வந்து, காவேரி முக்கொம்பிற்குத்தான் வந்து சேரும். ஆக அப்படி அந்த நீர் அங்கே வந்து சேரும்பட்சத்தில், மேட்டூர் அணைக்கு தண்ணீர் கிடைப்பதற்கு வாய்ப்பில்லை. நான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பின்படி, கர்நாடக அணைகளிலிருந்து நமக்கு வரவேண்டிய தண்ணீரை முழுமையாகப் பெற்றால்தான், மேட்டூர் அணைக்கு அதிகமாக தண்ணீர் கிடைக்கும். கோதாவரி–காவேரி இணைப்புத் திட்டம் டெல்டா பாசனத்திற்கு மிகவும் வசதியாக இருக்கும்.

ஆனால், மேட்டூர் அணைக்கு தண்ணீர் வர வேண்டுமென்று சொன்னால், கர்நாடக அரசு நமக்கு வழங்க வேண்டிய தண்ணீரை முழுமையாக வழங்க வேண்டும். அதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்து, மாதந்தோறும் நமக்கு வர வேண்டிய நீரைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஒரு கனவுத் திட்டமாக இருப்பது உபரிநீர் திட்டம். முன்னாள் அமைச்சராக இருந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. நேரு அவர்கள்கூட உபரிநீர் வீணாகச் சென்று கடலில் கலப்பதாக இங்கே தெரிவித்தார். அப்படி, மேட்டூர் அணையில் நீர் நிரம்பி உபரிநீர் வீணாக வெளியே செல்வதைத் தடுப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு திட்டத்தை அறிவித்து, அதற்கு நிதி ஒதுக்கீடு செய்து, ஆய்வு செய்து feasibility report எல்லாம் வாங்கியிருக்கிறார்கள். அந்த உபரி நீரை, நீரேற்று இயந்திரங்கள் மூலமாக, சேலம் மாவட்டத்தில் இருக்கின்ற 100–க்கு மேற்பட்ட ஏரிகளில் நிரப்புவதன்மூலம் அங்கே ஏரிப் பாசனம் வளம் பெறும், கிணறுகளுக்கு நீர் கிடைக்கும், கிணற்றுப் பாசனம் பெருகும்; அதேபோல நிலத்தடி நீரும் உயரும். அந்தவகையில், விவசாயம் செழிப்பாக நடப்பதற்கான வாய்ப்பும் அதிகமாக இருக்கின்றது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கர்நாடகத்திலிருந்து பெற வேண்டிய நீரைப் பெற்று, அந்த உபரிநீர் திட்டத்தை விரைவில் நிறைவேற்றினால், சேலம் மாவட்ட மக்களுக்கு, குறிப்பாக விவசாயிகளுக்கு அது நல்ல பலனை அளிக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, அச்சன்கோவில் நதி–பம்பா நதி நீர் அரபிக் கடலில் கலப்பதைத் தடுப்பதற்காக, வைப்பாறு நதியோடு அதை இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சாலைக் கட்டமைப்பைப் பொறுத்தவரையில், நாட்டினுடைய வளர்ச்சிக்காக, தொழில் வளர்ச்சிக்காக, பொருளாதார வளர்ச்சிக்காக இந்தச் சாலைக் கட்டமைப்பு என்பது மிக மிக அவசியமாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கட்டுப்பாட்டில் இந்தத் துறை இருப்பதன் காரணமாக தேசிய நெடுஞ்சாலையைவிட தரமான சாலைகளாக நெடுஞ்சாலைகள் இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் இருந்து வருவதை எல்லோரும்

அறிவார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களும் அதை மறுக்க மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். தமிழ்நாட்டில் single roads என்பதே கிடையாது. Double road, four lane, six lane (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல இருக்கிற சாலைகளை விரிவுபடுத்துதல் (widening), சுற்றுச்சாலை (Ring Road), புறவழிச் சாலை (Bypass Road) தேவையான இடங்களில் பாலங்கள், இப்படி பல்வேறு நிலைகளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பொதுப் பணித் துறைக்கும், நெடுஞ்சாலைத் துறைக்கும் மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்கூட, பொதுப் பணித் துறையையும், நெடுஞ்சாலைத் துறையையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய கட்டுப்பாட்டில் வைக்கலாமா என்று அடிக்கடி இங்கே கேட்பார்கள். அவருக்கு, நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த இரண்டு துறைகளும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கட்டுப்பாட்டில் இருப்பதால்தான் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் துறைகள் மிகச் சிறப்பாக இன்றைக்கு செயல்பட்டு வருகின்றன. அந்தத் துறைகளில் அதிகளவில் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

பிற்பகல் 1–20

முருகப் பெருமான் கையில் வேல் இருந்தால் எப்படி அந்த வேலுக்கு மகிமையோ, அதுபோல், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கட்டுப்பாட்டில் இந்த இரு துறைகளும் இருப்பதன் காரணத்தினால்தான் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இரு துறைகளிலும் அளப்பரிய சாதனைகளை அவராலே செய்ய முடிகின்றது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் ஒரு தகவலைச் சொல்லிக்கொள்கிறேன். மத்திய பட்ஜெட்டிலே நல்ல நோக்கத்தோடுதான் ஒன்றைச் செய்திருக்கிறார்கள். சாலை மேம்பாட்டிற்காக பெட்ரோல், டீசலுக்கு 2 சதவிகிதம் cess விதித்திருக்கிறார்கள். இது நல்ல திட்டம்தான். இதனை உயர்த்தியதன் காரணமாக நிச்சயமாக ஏழையெளிய மக்கள் மற்றும் நடுத்தர மக்கள் பாதிக்கப்படுவார்கள். மத்திய அரசு வேண்டுமானால் வேறு வகையில் நிதியினைத் திரட்டலாம். சாலை மேம்பாட்டிற்காக மத்திய அரசு அதிக கவனம் செலுத்துகின்றது. ஆனால், இதில் ஒரு பிரச்சினை இருக்கிறது. இந்த 2 சதவிகித cess

விதித்திருப்பது, ஏழை, நடுத்தர மக்களை நிச்சயமாகப் பாதிக்கும், விலைவாசி உயரும். ஏனென்றால் போக்குவரத்து வாகனங்களில் டீசல், பெட்ரோலைப் பயன்படுத்துவதால் நிச்சயமாக இது விலைவாசி உயர்வுக்குக் காரணமாகிவிடும். எனவே, மத்திய அரசை வலியுறுத்தி விதிக்கப்பட்ட அந்த 2 சதவிகித cess–ஐ நீக்குவதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு நீர்வழிச் சாலைகளைப் பொறுத்தவரையில், National Waterways Act, 2016 என்ற அந்த Act–ன்படி இந்தியாவில் 111 தேசிய நீர் வழிச்சாலைகளை identify செய்து வைத்திருக்கிறார்கள். சாலைகளுக்கும், இரயில்வே போக்குவரத்திற்கும் கொடுக்கும் முக்கியத்துவத்தை நீர்வழிப் போக்குவரத்திற்கும் கொடுக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து. காரணம், சரக்குப் போக்குவரத்துக்கு இது கூடுதல் வழித்தடமாக அமைகின்றது, செலவும் குறையும், முதலீடும் குறையும், சுற்றுச்சூழல் பாதிப்பும் குறையும். அந்தவகையில் இதனைக் கவனத்தில்கொள்ள வேண்டும் என்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதுபோல், பாலாறு முதல் தாமிரபரணி வரை மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிப் பாயும் அனைத்து ஆறுகளையும் இணைத்து வடக்குத் தெற்காக ஒரே மட்டத்தில் 900 கி.மீ. நீளத்திற்கு நவீன நீர்வழிச் சாலையை அமைத்தால் நன்றாக இருக்கும் என்று வல்லுநர்கள் சொல்கிறார்கள். அதையும் அவர்கள் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

துறைமுகங்களைப் பொறுத்தவரையில், இன்றைக்கு நாகப்பட்டினம், கடலூர் போன்ற சிறு துறைமுகங்களை மேம்படுத்தி சரக்குப் போக்குவரத்திற்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 2015 ஆம் ஆண்டு நான் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது தூத்துக்குடி, குளச்சல் துறைமுகங்களுக்கு ஏற்கெனவே நிதி ஒதுக்கப்பட்டுவிட்டது. தூத்துக்குடி துறைமுகத்தினை விரிவுபடுத்துவதற்கும், ஆழப்படுத்துவதற்கும் நிதி ஒதுக்கப்பட்டுவிட்டது. அத்திட்டம் இன்னும் துவங்கப்படவில்லை. இதனை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்று, நிதி ஒதுக்கீடு செய்த தூத்துக்குடி

துறைமுகத்தினை ஆழப்படுத்தி விரிவுபடுத்த வேண்டும். அதுபோல், குளச்சல் துறைமுகத்தினையும் கவனத்தில்கொள்ள வேண்டும். இதனை ஏன் சொல்கிறேன் என்றால், தூத்துக்குடிக்கு எந்த பெரிய கப்பல்களும் வரமுடியாத சூழ்நிலை உள்ளது. வெளிநாட்டிற்கு export செய்கின்ற கப்பல்கள் எல்லாம் கொழும்பு வழியாகச் செல்கின்றன. எனவே, தூத்துக்குடி துறைமுகத்தின்மீது மிகுந்த அக்கறைகொண்டு அந்தத் திட்டத்தினை நிறைவேற்ற வேண்டும் என்று மிகவும் அக்கறையுடன் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

அதுபோல், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நாட்டின் வளர்ச்சிக்காக, பொருளாதார வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு வருகிறார்கள் என்பதை நாம் அனைவரும் நன்றாக அறிவோம். அந்தவகையில், சாதாரணமாக சொல்வார்கள், A politician always thinks about the next election; a statesman only thinks about the next generation என்று. அந்தவகையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் மற்றவர்களைப் போல ordinary politicians ஆக இல்லாமல் statesmen–ஆக இருந்து நமது State–ன் status–ஐ உயர்த்த வேண்டும் என்று அவர்களை அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், கட்டடத்தைப் பொறுத்தவரையில், நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சிந்தனையில் உதித்த திட்டமான மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்குக் கட்டாயமாக்கியிருக்கிறார்கள். அதைப்போல பொதுப் பணித் துறையில் கட்டப்படுகின்ற கட்டடமானாலும் சரி, வீட்டு வசதி வாரியத்தினால் கட்டப்படுகின்ற கட்டடங்களானாலும் சரி, தனியார் கட்டடங்கள் ஆனாலும் சரி, commercial building–ஆக இருந்தாலும் சரி, கடைகள், வணிக வளாகங்களாக இருந்தாலும் சரி, அந்தக் கட்டடங்களிலெல்லாம் கட்டாயமாக solar panels–ஐ அமைக்க வேண்டும் என்பதைக் கட்டாயமாக்கினால் சிறப்பாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லி இந்த மானியக் கோரிக்கையினை வரவேற்று அமர்கிறேன், நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

2019 ஜூலை 15]

பிற்பகல் 1–25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *நன்றி. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரும், என்னுடைய கல்லூரி நண்பருமான திரு. செம்மலை அவர்கள் எப்போதுமே* controversy *இல்லாமல் பேசுகிறவர். ஆனாலும், அவர் இன்று, 'ஏதோ ஹேரங்கி, ஹேமாவதி கட்டுகின்றபோதெல்லாம் நாங்கள் பேசாமல் இருந்துவிட்டோம்' என்று சொன்னார்,*

On 8th July 1971, Thiru M. Karunanidhi, Chief Minister, moved the following resolution:

"This House views, with serious concern, the unilateral action of the Government of Mysore in proceeding with the execution of Hemavathi, Kabini, Harangi, Swarnavathi and other reservoir projects on the tributaries of the Cauvery in Mysore, in flagrant violation of all the provisions of the agreements of 1892 and 1924 between Tamil Nadu and Mysore and without proper prior intimation of project details to and prior concurrence of the Government of Tamil Nadu and without the prior approval of the Government of India much to the detriment of our national Solidarity. *அப்பொழுதே ஒரு தீர்மானத்தை இப்படி சரமழையாக எடுத்திருக்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு.* S. *செம்மலை அவர்கள்.*

திரு. S. செம்மலை: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான்* controversial *ஆகப் பேசவில்லை. நான் சொன்னது, இப்போது மேகதாது அணையைக் கட்டுவதைத் தடுப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எத்தனை முனைப்போடு, அதற்குத் தடையை ஏற்படுத்துகின்ற வகையில், அதைத் தடுத்து நிறுத்திக்கொண்டிருக்கிறாரோ, அதைப்போல அன்றைக்கு நீங்கள் ஆட்சியில் இருந்தபோது ஹேமாவதி ஆகட்டும், கபினி ஆகட்டும் அல்லது ஹேரங்கி ஆகட்டும், அந்த அணைகளைக் கட்டுவதைத் தடுத்திருந்தால் இன்றைக்கு இந்தச் சிரமம் இருந்திருக்காது என்பதைத்தான் சொன்னேனே தவிர, வேறொன்றும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி. எஸ். விஜயதரணி அவர்கள். சரியாக 10 நிமிடங்கள். இதோ பாருங்கள், சரியாக 10 நிமிடங்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *சரி, சரி, ஆரம்பத்திலேயே சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த தினமான, கல்வி வளர்ச்சி தினத்தில், அணைகளைக் கட்டுவதற்குக் காரணமாக இந்தியாவில் இருந்த பெருமகனார், அவருக்குப் பெருமை சேர்க்கும் அளவிற்குப் பொருத்தமாக அவருடைய பிறந்த தினத்தன்று, இன்றைக்கு நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, பாசனம் மற்றும் கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது விவாதம் செய்வதற்கு மாமன்ற உறுப்பினர்களுக்கு வாய்ப்பை உருவாக்கித் தந்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக, தமிழகத்தில் மிகவும் வறட்சியான ஒரு சூழ்நிலை தற்போது ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. 28 மாவட்டங்களில் தண்ணீர்ப் பற்றாக்குறை இருந்தவண்ணம் இருக்கிறது. இதற்கென்று பல்வேறு முயற்சிகளை அரசு எடுத்த நிலையிலும், தண்ணீர் என்பது ஒரு பஞ்சமாகவே பார்க்கப்படுகிறது. தண்ணீரை சேமிக்கக்கூடிய திட்டங்களை வலிமைப்படுத்தக்கூடிய பல்வேறு விஷயங்கள் தமிழக அரசின் சார்பிலும், N.G.O.–க்கள் சார்பிலும், இன்னும் பல்வேறு மக்களின் சுயமுயற்சியாலும் எடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, பள்ளி மாணவர்களிடையே சாலை விதிகள் மற்றும் மழைநீர் சேமிப்பு குறித்த விழிப்புணர்வை நாம் உருவாக்க வேண்டும். வருங்கால தலைமுறைக்கு இது அவசியமான ஒன்று என்று கருதுகிறேன்.

அதேபோல மழைக் காலங்களில் காவேரி ஆற்றில் ஓடிவரும் வெள்ளநீரைச் சேமித்து, அணை கட்டி, கால்வாய் வெட்டி, ஆழப்படுத்தி குளங்களில் அதை விட வேண்டும். மேட்டூர் அணைக்கு வரும் உபரிநீரை சரபங்கா, திருமணிமுத்தாறு, அயற்றாறு கரை வழியாக இணைப்புக் கால்வாய் வெட்டி, குளங்களில் நீர் சேமிப்பதால் சேலம், திருப்பூர், கரூர் மாவட்டங்களில் நிலத்தடி நீர் செறிவூட்டப்படும். நீலகிரி மலையில் ஓடி கேரளாவில் பாயும்

பாண்டி ஆற்றுத் தண்ணீரை தமிழ்நாடு எல்லைக்குள்ளே திருப்பி நெய்யாற்றில் விடலாம். இதனால் ஆண்டுக்கு சராசரியாக 3 டி.எம்.சி. தண்ணீர் சேமிக்கப்படும். அமராவதி ஆற்று மிகைநீரை, மழைக் காலங்களில் ஓடிவரும் வெள்ளநீரை திருப்பூர் மாவட்டம், வட்டமலைக்கரை ஓடை நீர்த்தேக்கத்தில் தடுப்பணை கட்டி திருப்பிவிடலாம். இப்படி நீரைத் திருப்பி விடக்கூடிய பல்வேறு கால்வாய்களை அமைத்து ஒருங்கிணைக்கக்கூடிய திட்டங்கள் நீர் மேலாண்மைத் திட்டத்தின்மூலமாக சீராக உருவாக்கப்பட வேண்டும். நீர் மேலாண்மைக்கென்று ஒரு தனி ஆணையரகம் உருவாக்கப்பட்டு, அது தற்போது செயல்பட்டுக்கொண்டிருப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்த ஆணையரகத்தின் மூலமாக இன்னும் பல புதிய திட்டங்களை வடிவமைக்க அரசு முன்வர வேண்டும். அதற்காக அதிக நிதி ஒதுக்கப்பட வேண்டும்.

பிற்பகல் 1–30

இந்தியாவில் உள்ள மொத்த அணைக்கட்டுகளின் எண்ணிக்கை 4,887. இதில், மகாராஷ்டிராவில் 1,693, மத்தியப் பிரதேசத்தில் 898, குஜராத்தில் 619, ஆந்திரா மற்றும் தெலுங்கானாவில் 349, கர்நாடகத்தில் 231 அணைக்கட்டுகள் இருக்கின்றன. ஆனால், தமிழகத்தில் 116 அணைக்கட்டுகள் மட்டுமே உள்ளன. பெருந்தலைவர் காமராசர் அவர்களால் கட்டப்பட்டவை 72 அணைக்கட்டுகள். தற்போது இது 116 ஆக மட்டுமே உயர்ந்துள்ளது. குறிப்பாக, காவேரி ஆறு சமவெளிப் பகுதியில் இருப்பதால் அணைகள் கட்டுவது மற்றும் நீரைத் தேக்குவது என்பது சிரமமான ஒன்றாக இருப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அத்தகைய சிரமங்களுக்கு மாற்று ஏற்பாடாக, அதை ஆய்வுக்கு உட்படுத்தி, மேலும் என்ன செய்யலாம் என்ற ஆலோசனையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஈடுபடுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

சாலைகளைப் பொறுத்தவரையில், சாலைகளுக்கென்று, குறிப்பாக, highways–க்கென்று ஒரு தனி ஆய்வு மையம் உருவாக்கப்பட்டிருக்கிறது. சாலைகளை மேம்படுத்தவும், சாலைகளை சரிவர அமைப்பதற்குமான இந்த ஆய்வு மையம் சென்னையில் இயங்கி வருகிறது. அந்த அலுவலகம் அடையாறில் அமைந்திருப்பதை நான் பார்த்திருக்கிறேன். அதேபோன்று, நீர் மேலாண்மை ஆணையரகம் வாயிலாக இன்னும் பல சிறப்புத் திட்டங்களை புதிதாக உருவாக்குவதன் மூலமாக நீர் சேமிப்பு

அதிகரிக்கும். குறிப்பாக, மேட்டூர் அணையில் 96 டி.எம்.சி. நீரையும், பவானிசாகர் அணையில் 33 டி.எம்.சி. நீரையும், முல்லைப் பெரியாறு அணையில் 16 டி.எம்.சி. நீரையும், பரம்பிக்குளம் அணையில் 18 டி.எம்.சி. நீரையும், சாத்தனூர் அணையில் 7 டி.எம்.சி. நீரையும் சேமிக்க முடிகிறது. ஆக, இந்த பெரிய அணைகளில் 170 டி.எம்.சி. நீரை மட்டுமே தேக்கி வைக்க முடிகிறது. வைகை, பேச்சிப்பாறை, பெருஞ்சாணி மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தின் அணைகளில் தண்ணீரின் கொள்ளளவு 30 டி.எம்.சி. மட்டுமே உள்ளது. ஆக மொத்தம், 200 டி.எம்.சி. நீரை மட்டுமே நம்மால் தேக்க முடிகிறது. ஆனால், கர்நாடக மாநிலத்தில் 5 பெரிய அணைகளில் 580 டி.எம்.சி. நீரையும், ஆந்திரா மற்றும் தெலுங்கானா மாநிலங்களில் 919 டி.எம்.சி. நீரையும் தேக்கி வைக்க முடிகிறது. தமிழகம் ஒரு முற்றுகை மாநிலமாக இருப்பதால், விவசாயத்திற்காகவும், குடிதண்ணீருக்காகவும் பிற மாநிலங்களை நம்பி இருக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. எனவே, நீர் மேலாண்மைத் திட்டத்தின் வாயிலாகத்தான் இதை நாம் சரி செய்ய முடியும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீர் மேலாண்மைத் திட்டத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். நீர் மேலாண்மை சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்பதற்காகத்தான் ஓர் அமைப்பை உருவாக்கியிருக்கிறோம். ஏனென்றால், பொறியாளர்களாக, கண்காணிப்புப் பொறியாளர்களாக, தலைமைப் பொறியாளர்களாக வருகின்றபோது குறிப்பிட்ட காலத்திற்குள் பணி ஓய்வு பெற்றுவிடுகின்றார்கள். ஆகவே, பணி ஓய்வு பெற்ற சிறந்த வல்லுனர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களை நீர் மேலாண்மைத் திட்டத்தில் ஈடுபடுத்தி, உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல பருவ காலங்களில் பெய்கின்ற மழைநீர் எங்கெங்கெல்லாம் வீணாகிறது என்பதைக் கணக்கிட்டு, அதன் அடிப்படையில், எந்தெந்த நதிகளின் குறுக்கே தடுப்பணை கட்டுவது, எந்தெந்த ஓடைகளின் குறுக்கே தடுப்பணைகள் கட்டுவது என்பதற்கான ஆய்வுப் பணிகளை தற்பொழுது அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள். இந்த ஆய்வு கடந்த ஓராண்டு காலமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த அடிப்படையில் காவேரி

ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுவதற்காக 3 இடங்களைத் தேர்வு செய்திருக்கிறார்கள். அதனடிப்படையில், காவேரி ஆற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்டுவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

ஆகவே, சமவெளிப் பரப்பாக இருக்கின்ற காரணத்தினால், போதிய அளவு நீரைத் தேக்க முடியாத சூழ்நிலை இருக்கின்றது. இதற்காக அதிக நிதியும் தேவைப்படுகிறது. 1 டி.எம்.சி. நீரை தேக்க வேண்டுமென்றால்கூட ரூ.500 கோடி செலவு செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், அண்டை மாநிலங்களை நம்பித்தான் இருக்க வேண்டியிருக்கிறது. அங்கிருந்து வருகின்ற உபரி நீர்தான் நம் மாநிலத்திற்குக் கிடைக்கிறது. நமது மாநிலத்திற்குத் தர வேண்டிய பங்கு நீரைக்கூட எந்த மாநிலமும் நமக்கு முழுவதுமாக தருவது கிடையாது. ஆகவே, அவ்வாறு கிடைக்கின்ற உபரி நீரை முழுவதுமாக சேமிக்க வேண்டுமென்பதற்காகத்தான் நீர் மேலாண்மை என்ற அமைப்பை ஏற்படுத்தி, அதில் ஓய்வு பெற்ற பொறியாளர்களைக் கொண்டு, அவர்களை மாநிலம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொள்ளச் செய்து, எந்தெந்த நதிகள் மற்றும் எந்தெந்த ஓடைகளின் குறுக்கே தடுப்பணைகள் கட்ட வேண்டும் என்று கணக்கிட்டு, ஆய்வு செய்து, அந்த ஆய்வின் அடிப்படையில் தற்போது அரசால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேச்சிப்பாறை அணைக்கு சிறப்பு நிதி ஒதுக்கி, அதைத் தூர் வாரி, கரைகளை பலப்படுத்தி, அதன்மூலம் கிடைக்கும் மணல் மற்றும் பிற பொருட்களை எங்கள் கன்னியாகுமரி மாவட்ட மக்களுக்கே அரசு விலைக்குத் தந்தால், வீடுகள் கட்டுகின்ற பணிகளுக்கு அதை நாங்கள் பயன்படுத்திக்கொள்வோம். இதனை மாண்புமிகு முதல்வர் அவர்களின் சிறப்புக் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

நாளுக்கு நாள் மக்கள்தொகைப் பெருக்கம், புதிய தொழிற்சாலைகள் உருவாக்கம் மற்றும் பல்வேறு புதிய உணவுப்

பொருட்கள் தேவை அதிகரிப்பு போன்ற பல விஷயங்கள் இந்த காலகட்டத்தில் நடைபெற்று வருகின்றன. செம்பரம்பாக்கம் ஏரி கடந்த 2015–ல் நிரம்பி வழிந்தது. அதேபோன்று, 2018–ல் மேட்டூர் அணை நிரம்பி வழிந்து, நூற்றுக்கணக்கான டி.எம்.சி. வெள்ள நீர் வெளியேறி வீணாகக் கடலில் கலந்தது. இராமநாதபுரம் உள்ளிட்ட பல தென் மாவட்டங்களில் ஏரிகள் தற்போது தண்ணீரின்றி, பாளம் பாளமாக வெடித்து, வறண்டிருக்கின்றன. மிகை நீரை வறட்சியான பகுதிகளுக்குக் கொண்டு சேர்க்க கால்வாய்கள் அமைத்து, நீர் சேமிப்பை இந்த அரசு உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–35

சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை, நபர் ஒருவருக்கு, நாள் ஒன்றுக்கு 107 லிட்டர் தண்ணீர் தரப்படும் என்று கூறப்பட்டது. இது டெல்லியில் 270 லிட்டரும், மும்பையில் 260 லிட்டரும், புனேயில் 220 லிட்டரும், பெங்களூரில் 160 லிட்டரும் உள்ள நிலையில் நமக்கு 107 லிட்டர்தான் தண்ணீர் தரப்பட்டு வந்தது. இருந்தாலும், தற்போது நிலவிவரும் தண்ணீர் தட்டுப்பாட்டால் அது 10 லிட்டரிலிருந்து 50 லிட்டர் வரை மட்டுமே வழங்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அதைச் சரிகட்டும் வகையில் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தை தற்போது அமலுக்குக் கொண்டு வருவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். வீராணம் ஏரி போன்ற பல்வேறு ஏரிகள் வாயிலாக இந்தப் பெரிய திட்டங்களை மேலும் செம்மைப்படுத்தி, சென்னை குடிநீர்த் திட்டத்தை நிறைவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் இன்னும் இரண்டு நிமிடங்கள்தான் இருக்கின்றன. ஒரே துறையில் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். வேறு ஏதாவது பேசுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: உரையை முடித்துவிடுகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரை, 4,000 குளங்களில் பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் 2,040 பாசனக் குளங்களும், கோயில்கள் மற்றும் தனியார் நிலவியல் குளங்களும் உள்ளன. தென்மேற்குப் பருவமழை பொழிய தொடங்கியபிறகு 20 சதவீதம் அளவுக்குக் குளங்களில் தண்ணீர் நிரம்பி உள்ளன. பாசனக் கால்வாய்கள், ஆறுகள் தூர் வாரப்படாமல் இருப்பதால், அதை உடனடியாக குடிமராமத்து முறையில்

செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொதுப் பணித் துறை குளங்களும் தூர் வாரப்படுகின்றன என்று கருதுகிறேன். குடிமராமத்துத் திட்டத்தின்கீழ் அந்தப் பணிகளைச் செய்வது என்பது என்னைப் பொறுத்தவரை சிறப்பாக இயங்கி வருகிறது. ஆனால், யார் யார் இந்தப் பணிகளைச் செய்கிறார்கள் என்ற கண்காணிப்பு என்பது மிகவும் அவசியம் என்று கருதுகிறேன். அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். குறிப்பாக, கடந்த ஆண்டு பொழிந்த மழையால் மழைநீர் சேமிப்புக்காக மூன்று ஆண்டுகளில் ஆயிரம் கோடி ரூபாய் செலவிலும், குறிப்பாக 2018–2019 ஆம் ஆண்டில் ரூ.292 கோடியில் தடுப்பணைகள் கட்டப்படும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருந்தார்கள். அந்த அறிவிப்புகளை விரைவில் செயல்படுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட பகுதிகளின் தண்ணீர் தேவையைப் பொறுத்தவரை, நெய்யாறு இடதுகரைக் கால்வாய் பிரச்சினையின் காரணமாக போடப்பட்ட வழக்கை விரைவில் நடத்தி முடிக்க வேண்டும். என்னுடைய கோரிக்கையை ஏற்று, அந்த வழக்கை உச்ச நீதிமன்றத்தில் நீங்கள் போட்டிருந்தீர்கள். அந்த வழக்கில் தற்போது, கேரள அரசு Counter–ஐ fil செய்துவிட்டது என்று நினைக்கிறேன். ஆகையால், அந்த வழக்கை விரைவில் நடத்தி முடிக்க வேண்டும். கால்வாய் வெட்டப்பட்டதே நாம் தண்ணீர் பெறுவதற்காகத்தான். பெருந்தலைவர் காமராஜர் ஆட்சிக் காலத்தில் தண்ணீர் பெறுவதற்குத்தான் கால்வாய் வெட்டப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) இல்லை, அதுதான் நீங்கள் நன்றி சொல்லி, உரையை முடியுங்கள். இன்னும் மூன்று உறுப்பினர்கள் பேசி, முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கால்வாய் வெட்டப்பட்டது தண்ணீர் பெறுவதற்குத்தான் என்று ஒரே பாயிண்டில். . .(குறுக்கீடு) Supreme Court–ல் நாம் வழக்கை ஜெயித்துவிட முடியும். இது ரொம்ப நல்ல case. ஆகையால், இந்த வழக்கை சீக்கிரமாக நடத்தி முடிக்க வேண்டும். அதன்பிறகு, எவ்வளவு டி.எம்.சி. தண்ணீர் என்பது குறித்துதான் நாம் பேச்சுவார்த்தை நடத்த வேண்டி வரும்.

ஆகையால், இந்த நெய்யாறு இடதுகரை கால்வாய்ப் பிரச்சினை உடனடியாக தீர்க்கப்பட வேண்டும். எங்கள் தொகுதியிலுள்ள கல்லுக்கூட்டத்தில் ஒரு தடுப்பணையாவது கட்டுவதன் மூலமாக அந்த நீரை தொகுதிக்குள் இருக்கக்கூடிய பகுதிகளுக்குக் கொண்டு செல்வதற்கான வாய்ப்புகள் இருக்கும். அதற்கு ஆய்வுகூட நடத்தியிருக்கிறார்கள். அந்த ஆய்வின் கருத்துருக்களைப் பெற்று, உடனடியாக அதற்கு மதிப்பீடுகள் தயார் செய்து, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பொதுப் பணித் துறையில் NMR—*தினக் கூலி பணியாளர்களைப் பொறுத்தவரையில், 1,030 தகுதி வாய்ந்த நபர்களின் சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டிருக்கின்றன.* (குறுக்கீடு) *இரண்டு பிரச்சினைகள்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, நன்றி சொல்லி உரையை முடியுங்கள். இன்னும் மூன்று உறுப்பினர்கள் பேச வேண்டும்.* (குறுக்கீடு)

திருமதி எஸ். விஜயதரணி: *உரையை முடித்துவிடுகிறேன். இரண்டே இரண்டு பிரச்சினைகள்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் முடிக்கிறீர்களா, இல்லையா? இரண்டு நிமிடங்கள் எல்லாம் கிடையாது.* (குறுக்கீடு) *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா அவர்கள்.* (குறுக்கீடு) *நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் 43 பேர் இருக்கிறார்கள். இந்தப் பணியாளர்களுக்கு பணி நிரந்தரம் செய்து காலமுறை ஊதியம் வழங்க கோரிக்கை வைக்கிறேன். அதேபோல, எங்கள் தொகுதியைச் சார்ந்த பல்வேறு சாலைகள். . .*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா அவர்கள்.* (குறுக்கீடு) *நன்றி மட்டும் சொல்வதாக இருந்தால் சொல்லலாம்.* (குறுக்கீடு) *இல்லை, நீங்கள் சூழ்நிலையைப் புரிந்துகொள்ள வேண்டும். நன்றி மட்டும் சொல்லுங்கள்.*

2019 ஜூலை 15]

பிற்பகல் 1–40

திருமதி எஸ். விஜயதரணி: நான் பதிவிலே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றுதான் சொல்கிறேன். அதாவது எங்கள் தொகுதியில் இருக்கக்கூடிய சாலைகள். . . (குறுக்கீடு) ஒரேயொரு முக்கியமான விஷயம். அதற்காகத்தான் நேரம் கேட்கிறேன்.

எங்கள் தொகுதியில் இருக்கக்கூடிய நிறைய சாலைகள் குண்டும் குழியுமாக இருக்கின்றன. அவற்றின் list–ஐ S.E., D.E., ஆகியோரிடம் கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டு வருவதோடு, அந்தச் சாலைகளை அமைத்துத் தருமாறும் கேட்டுக்கொள்கிறேன். நீளமாகப் படித்து நேரத்தை வீணடிக்காமல், ஒரேயொரு பிரச்சினையைப் பற்றி மட்டும் சொல்லி உரையை முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா, பேசுங்கள். (குறுக்கீடு) வேண்டாம். நீங்கள் நன்றி சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் முடித்ததும் மற்ற உறுப்பினர்களும் பேச வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் நன்றி சொல்லுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: நான் அனைத்து குறிப்புகளையும் கீழே வைத்துவிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நன்றி சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள். வேறு விவரங்கள் இருந்தால், அடுத்த முறை பேசும்போது பேசுங்கள். உங்களுக்குத்தான் அடிக்கடி வாய்ப்பு வழங்கப்படுகிறதே! (குறுக்கீடு) நன்றி சொல்கிறீர்களா? (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: ஒரே ஒரு வரி மட்டும்தான். எனது தொகுதிக்குட்பட்ட ஒரு முக்கியமான பிரச்சினையைச் சொல்லிவிடுகிறேன். கடையால் பேரூராட்சி, ஆறுகாணி, முல்லைப்பூக்காணி, அனைமுகம், பத்துகாணி, கற்றுவா, மருதம்பாறை பகுதிகளில், 700–லிருந்து 1,053 வரை இருக்கக்கூடிய புல எண்களில், 1 ஏக்கர் இலவச நிலம் தருவதாக 2006–ல் அறிவித்தார்கள். அதில் 109 பயனாளிகளுக்குக் கிடைக்காமல், ஏக்கத்தோடு இருக்கிறார்கள். நிலம் பெற்ற விவசாயிகள் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் 30 சென்ட் முதல் 80 சென்ட் வரையிலான ஒரு ஏக்கருக்கும் குறைவான

நிலம்தான் வைத்திருக்கிறார்கள். அந்த விவசாய பூமிகளை அவர்களுக்குத் தந்து, அவர்களை ஆதரிக்க வேண்டும். வருவாய்த் துறைக்குச் சொந்தமான நிலம்தான் அது. பொதுப் பணித் துறை நிலமோ, நீர்வழிப் புறம்போக்கு நிலமோ கிடையாது. எனவே, அவர்களுக்கு பட்டா வழங்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்

கோதையாறு—ஆம்பாடி பகுதியிலும், குழித்துறை தாமிரபரணி ஆற்றின் குறுக்கே வெள்ளாங்கோடு, திக்குறிச்சி, விளாத்திவிளை, விளாத்துறை ஊராட்சியில், ஆற்றுக்கடவு, முளமூட்டுக்கடவு, முஞ் சிறை ஆகிய பகுதிகளிலும் தடுப்பணைகள் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுருளகோடு பகுதி, பழையாற்றின் குறுக்கே அருமநல்லூர் மற்றும் பூதப்பாண்டி பகுதிகளிலும், ராஜாக்கமங்கலம், பன்றி வாய்க்கால் ஓடை குறுக்கே பெருஞ்செல்வவிளை, தோப்பூர், மேல சங்கரன்குழி, கீழ சங்கரன்குழி ஆகிய பகுதிகளிலும் தடுப்பணைகள் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குழித்துறையில் கூடுதலாக நீதிமன்றக் கட்டடமும், விளவங்கோடு, ஒருங்கிணைந்த வட்டாட்சியர் அலுவலகமும், புதிதாக உருவாக்கப்பட்ட கிள்ளியூர், திருவட்டாறு தாலுகாக்களுக்கு அலுவலகக் கட்டடங்களும் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விளவங்கோடு, குழித்துறை அரசு மேல்நிலைப் பள்ளியில் அறிவியல் ஆய்வகக் கட்டடம் கட்ட வேண்டுமென்றும், கன்னியாகுமரி மாவட்டம், அரசு ரப்பர் கழகத் தொழிலாளர்களின் தினக் கூலியை உயர்த்தி வழங்க அரசாணை வெளியிட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மார்த்தாண்டம்—ஞாறான்விளை—பனச்சமூடு சாலையிலுள்ள நேசமணி பாலத்தை பலப்படுத்த வேண்டுமென்றும், ஞாறான்விளை—திக்குறிச்சி—சிதறால் சாலை, பயணம்—உண்ணாமலைக்கடை—சிறாயன்குழி சாலை, தொடுவட்டி, முளங்குழி—ஐரேனிபுரம் சாலை, காப்புகாடு—கருக்கி ஐரேனிபுரம் சாலை, பள்ளியாடி—ஸ்டார் ஜங்சன், இலவுவிளை—ஐரேனிபுரம்

சாலை, உத்திரங்கோடு–மஞ்சாலுமூடு-முக்கூட்டுக்கல் சாலை, மாலைக்கோடு சாலை ஆகியவற்றை இருவழித் தட சாலைகளாக விரிவுபடுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மார்த்தாண்டம்–குழித்துறை வெட்டுமணி இடையே மேம்பாலப் பணி நடைபெற்றபோது மாற்றுச் சாலையில் இயக்கப்பட்ட கனரக வாகனங்களால் சேதமுற்ற சாலைகளைச் செப்பனிட வேண்டுமென்றும், பம்மம் அருகே உள்ள அணுகு சாலையை இருபுறமும் அகலப்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மேம்பாலத்திலிருந்து மார்த்தாண்டம் பேருந்து நிலையம் செல்லும் வழி, மேலே ஏறும் வழி, பாலப் பகுதிகளை அகலப்படுத்த வேண்டுமென்றும், நாகர்கோவில் செல்லும் பயணிகளைக் காக்கும் வகையில் நிழற்குடை அமைத்துத் தர வேண்டுமென்றும், தேசிய நெடுஞ்சாலை–47 வளைவுகளை அகலப்படுத்தி, நடுவில் சாலைத் தடுப்புகளை வைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

பார்வதிபுரம்–ஆரல்வாய்மொழி சாலை, தக்கலை–மார்த்தாண்டம்–குழித்துறை–திருத்துவபுரம்–களியக்காவிளை சாலைகளிலுள்ள வளைவுகள் மற்றும் திருப்பங்களை அகலப்படுத்தி, பலப்படுத்த ஆவன செய்ய வேண்டுமென்றும், மார்த்தாண்டம்–விரிகோடு–மாமூட்டுக்கடை–நட்டாலம்–எட்டணி–கருங்கல் சாலையை சீரமைத்து செப்பனிட வேண்டுமென்றும், காவேரி நீர் தமிழகம் வரும் எல்லையான ராசிமணல் பகுதியில் அணை கட்ட அரசு ஆவன செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நெய்யாறு திட்டத்தைப் பற்றி இங்கே சொன்னார்கள். 1965 ஆம் ஆண்டு நெய்யாறு திட்டம் பயன்பாட்டிற்கு வந்தது. அதிலிருந்து தொடர்ந்து விவசாயிகள் பயனடைந்து வந்தார்கள். கிட்டத்தட்ட 9,200 ஏக்கர் நிலம் இதன்மூலம் பாசனம் பெற்று வந்தது. திடீரென்று 2004 ஆம் ஆண்டில், கேரள அரசு தண்ணீர் விடுவதை நிறுத்திவிட்டது. பலமுறை பேச்சுவார்த்தை நடத்தியும் உடன்பாடு எட்டப்படவில்லை. எனவே, 2012 ஆம் ஆண்டு நாம் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருக்கிறோம்.

வழக்கு நடைபெற்று, அந்தப் பகுதி விவசாயப் பெருங்குடி மக்களுடைய எண்ணத்தை நிறைவேற்றிடும்விதமாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் எண்ணத்தை நிறைவேற்றிடும்விதமாக, வழக்கில் நமக்குச் சாதகமான தீர்ப்பினைப் பெறுவதற்கு அரசு உரிய நடவடிக்கையை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா அவர்கள்.*

***திரு. வி.வி. இராஜன் செல்லப்பா:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் இதயங்களில் என்றென்றும் வாழும் தெய்வம், என்னை நாடாளுமன்ற மேலவை உறுப்பினராக, மதுரை மாநகராட்சி மேயராக, மதுரை வடக்குத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக, மதுரை மாநகர், புறநகர் மாவட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்ற வாய்ப்பு அளித்திட்ட அம்மா அவர்களை நினைவுகூர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அருமை அண்ணன் எடப்பாடியார் முதல் இங்கிருக்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் கடைசித் தொண்டன் வரை இந்நல்லாட்சியை 'அம்மா அரசு, என்று விவாதங்களிலே பதிவு செய்கிறோம். 1967 ஆம் ஆண்டில், தேசியக் கட்சிகளிடமிருந்து நமது பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியைக் கைப்பற்றிய பிறகு மிகச் சில நாட்களிலே பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்தார்கள். அண்ணா அவர்களின் மறைவிற்குப் பிறகு, மதிப்பிற்குரிய கலைஞர் அவர்கள் முதலமைச்சரானார்கள். தொடர்ந்து, இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். முதலமைச்சர் ஆனார்கள். அவரைத் தொடர்ந்து மீண்டும் கலைஞர், பின்னர் நமது அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தார்கள்.

சட்டமன்ற விவாதப் பதிவேடுகளில் நாங்கள் பார்த்தவரை, தலைவர்கள் மறைந்த பிறகு எந்த அரசும் அண்ணா அரசு என்றோ, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அரசு என்றோ, கலைஞர் அரசு என்றோ பதிவாகவில்லை. கலைஞர் அரசு என்று பதிவாவதற்கு வாய்ப்பும் இல்லை. அம்மா நீங்கள் முதல்வராக மறைந்து 952 நாட்கள் ஆகிவிட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனாலும், இந்த அரசு, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசு, அம்மாவின் பெயராலேயே தொடர்ந்து அம்மா அரசாக

ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, நீங்கள் காற்றிலே ஒரு தென்றல், கவிதையிலே ஒரு வெண்பா, அதிசயங்களிலே ஒரு பிரமிடு, காட்டு மரங்களிலே ஒரு சந்தன மரம், வீட்டு மலர்களிலே ஒரு மல்லிகை. உங்களை மனதார வணங்குகிறேன். நீங்கள் என்னை வாழ்த்திய நாட்களைவிட, நீங்கள் என்னை வாழ்த்திய நாட்களைவிட, தாயாய் நின்று எச்சரித்து அறிவுரை வழங்கிய நாட்களே அதிகமாகும் தாயே என்று உங்களை வணங்குகிறேன் தாயே. உங்களின் வழியிலே நின்று, இன்றைக்கு வழிநடத்தும் மாண்புமிகு முதலமைச்சர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆட்சிமுறையைப் பார்க்கிறபோது, பழைய புத்தகத்தில் படித்த ஒரே ஒரு செய்தி மட்டும் எனக்கு ஞாபகம் வருகிறது.

பிற்பகல் 1–45

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக இருந்தபோது, மூதறிஞர் இராஜாஜி அவர்களின் பாராட்டு விழாவிலே கலந்துகொண்டபோது ஒரு செய்தியைச் சொன்னார்கள். ஒரு தலைவர் அறிவாளியாக இருக்கலாம், ஆனால், மற்றவர்களையும் அறிவாளியாக்குபவர்தான் மிகச் சிறந்த தலைவர். ஒரு தலைவர் உறுதி படைத்தவராக இருக்கலாம், ஆனால், மற்றவர்களையும் தன்னைப்போன்றே, உறுதி படைத்தவராக்குபவர்தான் மிகச் சிறந்த தலைவர்.

ஒரு தலைவர் தெளிவுள்ளவராக இருக்கலாம். ஆனால், குழப்பம் மிகுந்த நிலையில், தெளிவைக் காட்டுவதோடு, பிறரையும் தெளிவுபடைத்தவர்களாக ஆக்குபவர்தான் சிறந்த தலைவர். சிலர் நியாயத்துக்காக நல்லமுறையில் போராடுவார்கள் என்பதோடு புகழை நிலைநாட்டுவார்கள், சிலர் பிரச்சினைகளை நல்ல முறையில் விளக்கி, தெளிவுபடுத்துவார்கள் என்ற முறையில் புகழை நிலைநாட்டுவார்கள். ஆனால், வெகு சிலருக்குத்தான் தேர்ந்தெடுத்த துறை ஒவ்வொன்றிலும் தனிச் சிறப்பு ஏற்படுத்தும் ஆற்றல் இருக்கும். அத்தகைய ஆற்றல் பெறுவதுதான் ஒரு சிறந்த தலைமையின் இலக்கணம் ஆகும் என்று பேரறிஞர் அண்ணா அன்றைக்குச் சொன்னார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன அத்தனை ஆற்றலையும் ஒருசேரப் படைத்த இலக்கணமாக தமிழக முதலமைச்சர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்கள் திகழ்கிறார்கள் என்பதையும்,

அவரை நோக்கி நான் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று மாண்புமிகு அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்குத் துணை நிற்கிற வகையிலே, அரசியல் வாழ்வில் தனக்கென்று ஒரு பாணியாக, பணிவும், கனிவும், துணிவும் மிக்கவராகக் கலந்து, இன்றைக்கு மிகச் சிறந்த முறையில் செயலாற்றுகிற மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அவையிலே உட்கார்ந்திருக்கிற மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், நம்முடைய அருமை அண்ணன் எதிர்க்கட்சித் துணைத் தலைவர்; திரு. துரைமுருகன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, மொழிப் போராட்டத்திலே கலந்து கொண்டு வீர வணக்க மாநாட்டை நடத்துவதற்கு தோள்கொடுத்து, முன்நின்ற மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அவையில் இல்லாவிட்டாலும் அவர்களுக்கு என்னுடைய மிகச் சிறந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1977—லிருந்து சட்டமன்ற உறுப்பினராக, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்திலே பணியாற்றி, அதற்கு முன்னரும் பணியாற்றி, இன்றளவுக்கும் இந்த அவையிலே உட்கார்ந்துகொண்டு வணக்கம் செலுத்துகிற அளவுக்கு ஓர் உயரிய மரியாதை தரும் அருமை அண்ணன் மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களையும் நான் வணங்குகிறேன். அந்தவகையிலே இன்றைக்கு மிகச் சிறந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் வழியிலே, மாண்புமிகு அம்மா அவர்கள் வழியிலே பொறுப்புமிக்க அருமை அண்ணன் மாண்புமிகு எடப்பாடியார் அவர்கள் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, கட்டடங்கள் மற்றும் பாசனம் (பொதுப் பணித் துறை) என்ற மிக முத்தான, அற்புதமான துறைகளிலே எனக்குப் பேசுவதற்குப் பெருமையைக் கொடுத்திருக்கிறார்கள், அவர்களுக்கு நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, நான் 3 ஆம் வகுப்பிலே, 5 ஆம் வகுப்பிலே படித்தபோது மன்னர் அசோகன் மரம் நட்டார் என்ற செய்தி புத்தகத்திலே இருந்தது. இன்றைக்கும் அந்த செய்தி 3 ஆம் வகுப்பிலே, 5 ஆம் வகுப்புப் பாடப் புத்தகத்தில் இருந்துகொண்டிருக்கிறது. மறக்க முடியாத செய்தியாக அசோகன் மரம் நட்டார் என்ற

செய்திதான் மக்கள் மனதிலே, ஏழைகள் மனதிலே இருக்கிறது. அதனைப்போல்தான் இன்றைக்கும் சரி, எதிர்காலத்திலும் சரி, மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள் குடிமராமத்து செய்தார் என்ற செய்தி வரலாற்றில் இடம் பெறப்போகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அது யாராலும் மறக்க முடியாத ஒன்று. அந்த அளவுக்கு ஒப்பற்ற அரசாக இந்த அரசு இன்றைக்குச் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

அதனைப்போன்றுதான் திருக்கோயில் இல்லாத ஊர்களே இருக்காது என்பார்கள். அதேபோன்றுதான் போக்குவரத்து நெருக்கடியைப் போக்கிட இன்றைக்கு பல்வேறு உயர்மட்டப் பாலங்கள் கட்டப்பட்டு எந்த ஊரில் சென்றாலும், உயர்மட்டப் பாலங்கள் இல்லாத ஊர்களே இல்லை. அந்த அளவுக்கு அத்தனை ஊர்களிலும் உயர்மட்டப் பாலங்களை மிகச் சிறப்பான தொழில்நுட்பத்தோடு அற்புதமாக அமைத்திருக்கிறார். தேசிய நெடுஞ்சாலையாக இருந்தாலும் சரி, மாநில நெடுஞ்சாலையாக இருந்தாலும் சரி, கிராமப்புற சாலையாக இருந்தாலும் சரி, இதுபோன்ற நல்ல பணிகளை நடத்திக் காட்டியிருக்கிறார். தமிழகத்தில் உயர்மட்டப் பாலங்களின் எண்ணிக்கையை உயர்த்தி சாதனை புரிந்திருக்கிற உயர்ந்த மனிதர், நம்முடைய சாதனைத் தலைவர் எடப்பாடியார் என்பதால் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகச் சாலைகளை அகலப்படுத்தி, சீரமைத்து, பயண நேரத்தைக் குறைத்து, பாதுகாப்பான சாலைகளை ஏற்படுத்தி, மனிதர்களின் ஆயுட்காலத்தை அதிகப்படுத்திட்ட சரித்திர நாயகனாகத்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் இன்றைக்குக் கண்களுக்குப்படுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கட்டடக் கலை வல்லுநராக, இன்றைக்கு பொதுப் பணித் துறை கட்டடங்களையெல்லாம் மிகச் சிறப்பாக ஆய்ந்து, எப்படி மதுரை மன்னனாக இருந்தாலும் சரி, நாயக்கர் மன்னனாக இருந்தாலும் சரி, பாண்டிய மன்னனாக இருந்தாலும் சரி, சோழ மன்னனாக இருந்தாலும் சரி, கட்டடக் கலையில் எப்படி கவனம் செலுத்தினார்களோ அதனைப்போன்று கவனம் செலுத்தி, இன்றைக்கு பொதுப் பணித் துறைக் கட்டடங்கள் எல்லாம் மிகச் சிறப்பான முறையில் இடம் பெற்றிருக்கின்றன. அந்தவகையிலேதான், முழுமையாக தேசிய

நெடுஞ்சாலைகளில் கிராமச் சாலைகள் 66 ஆயிரத்து 39 கிலோ மீட்டர் தூர நீளமுள்ள சாலைகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை 11 ஆயிரத்து, 330 கோடி ரூபாய் செலவாகும் என்று சொல்லலாம் என்று எண்ணினாலும்கூட அதற்குள்ளே நான் விரிவாகச் செல்லவில்லை. நம்முடைய எதிர்க்கட்சியிலே இருந்த சட்டமன்ற உறுப்பினர், நேற்று முன்தினம் ஒரு கேள்வியைத் தொடுத்தார்கள். தென்மாவட்டங்களிலே என்ன பணி நடைபெற்றது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பார்த்துக் கேட்டார்கள். அந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டிய கட்டாயத்திலே நாங்கள் இருக்கிறோம். குறிப்பாக, எங்களுடைய இனிய அண்ணன் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். கேட்கிறபோது எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி, ஏனென்றால் எங்களுக்கு ஒரு வாய்ப்பு. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் எத்தனை நன்மைகளைப் பெற்றிருக்கிறோம் என்பதை சட்டமன்றத்தில் சொல்வதற்கான வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

பிற்பகல் 1–50

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தான் முதலமைச்சராகப் பொறுப்பேற்று இன்றோடு 29 மாதங்கள் முடிகின்றன. 30–வது மாதத்தில் அடியெடுத்து வைக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 29 மாதங்களில், நினைத்துப் பார்த்தால் அவர் சேலத்திற்கு அதிகமாகச் சென்றதில்லை. கோவைக்கு அதிகமாகச் சென்றதில்லை, தென்பாண்டி மண்டலத்தின் தலைநகராம் மதுரைக்கு 30 முறை வந்திருக்கிறார். எதற்கு? திட்டங்களைச் செய்வதற்கு, செயல்முறைகளை வடிவமைப்பதற்கு. ஆற்றல்மிக்க தலைவராக இதுவரை எந்த முதலமைச்சரும் 29 முறை, 30 முறை வந்ததாக வரலாறு இல்லை. ஒவ்வொரு முறை வருகிறபோதும் உலகத் தமிழ்ச் சங்கக் கட்டடமா, பாலமா, உயர்மட்டப் பாலமா, சாலையா, அத்தனையும் திறந்து வைத்திருக்கிறார். அதோடுமட்டுமல்ல; இன்னொன்றையும் சொல்கிறேன். எனது மிக நெருங்கிய அண்ணன் மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே. எஸ்.எஸ்.ஆர். அவர்கள், என்ன செய்தீர்கள் என்று கேட்டார்கள். ஒன்றே ஒன்றைச் சொல்கிறேன். அண்ணன் முதலில் என்ன செய்வார் என்றால், பாண்டிகோயிலிலிருந்து விருதுநகருக்கு 1 மணி நேரம் 80 நிமிடங்களில் செல்வார். அந்த by–pass

சாலையிலே 2 மணி நேரம் செல்வார். 27 கிலோ மீட்டர் உள்ள by–pass சாலையிலே, இன்றைக்கு 15 நிமிடத்திலே போகக்கூடிய அளவிற்கு, 213 கோடி ரூபாய் திட்டச் சாலையை மிகச் சிறப்பாக (மேசையைத் தட்டும் ஒலி) அமைத்திருக்கிறார் நம்முடைய முதலமைச்சர். (மேசையைத் தட்டும் ஒலி) மதுரையிலே அதோடு எத்தனை திட்டங்கள்? இன்றைக்கு வரலாற்றை எடுத்துச் சொல்லப்போனால், 50 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே அங்கே எம்.ஜி.ஆர். பேருந்து நிலையத்திலிருந்து ஆனையூர் வரைக்கும் சாலை அமைத்திருக்கிறார்கள்.

உயர்மட்டப் பாலங்களைப் பொறுத்தவரை, காளவாசல் உயர்மட்டப் பாலம். கோரிப்பாளையம் உயர்மட்டப் பாலம், சுற்றுச்சாலைகளில் இருக்கிற உயர்மட்டப் பாலங்களை வரிசையாக எடுத்துக்கொண்டால், பெரியார் பேருந்து நிலைய யானைக்கல் திட்ட அறிக்கை உயர்மட்டப் பாலம், மதுரை சிந்தாமணி கால்வாய்க்கான வரைவு பாலம் என, பல்வேறு பாலங்கள் மதுரையைச்சுற்றி உயர்மட்டப் பாலங்கள் அற்புதமாக வந்திருக்கின்றன. திட்டமிட்டு பல்வேறு சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. என்னிடம் பட்டியல் இருக்கிறது. ஒவ்வொரு பட்டியலாக வாசித்தால் நிறைய நேரமாகிவிடும். அந்த அளவுக்கு உயர்மட்டப் பாலங்களை, சாலைகளை மதுரைக்குக் கொண்டு வந்து கொடுத்திருக்கிறவர் மாண்புமிகு முதலமைச்சர். மாண்புமிகு துணை முதலமைச்சர் அங்கே துணைக்கோள் நகரத்தைக் கொண்டு வந்தார்கள். அன்றைக்கு அம்மா கொண்டு வந்தார்கள்.

அதோடுமட்டுமல்ல; 312, 900 குடிசைமாற்று வீடுகள் நம்முடைய ராஜா தெருவுக்குக் கூடுதலாகவும், ஆத்திகுளத்துக்குக் கூடுதலாகவும் இன்றைக்கு மதுரைக்குக் கிடைத்திருக்கின்றன. மதுரைக்கு எந்தத் திட்டங்களும் வராமல் இல்லை. பல்வேறு சாலைகள் போடப்பட்டுள்ளன. கட்டடங்கள் என்று எடுத்துக் கொண்டீர்களென்றால், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், முதன்மைப் பொறியாளர் அலுவலகம், மருத்துவக் கல்லூரியிலே ஏறக்குறைய 150 கோடி ரூபாய்க்கு பயிலரங்கங்கள், கூடுதலாக 200 கோடி ரூபாய்க்கு பொதுப் பணித் துறையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜய பாஸ்கர் அவர்களுடைய பரிந்துரையின்பேரில் பல்வேறு மருத்துவ அரங்கங்கள், மருத்துவக் கட்டடங்கள் இராஜாஜி மருத்துவமனைக்கு வந்து சேர்ந்திருக்கின்றன. மாண்புமிகு சட்டத்

[திரு. வி.வி. இராஜன் செல்லப்பா] [2019 ஜூலை 15

துறை அமைச்சர் அவர்களின் பரிந்துரையின்பேரிலே, சட்டக் கல்லூரியிலே பயிலரங்கம் வந்திருக்கிறது, அரங்கம் வந்திருக்கிறது, உயர் நீதிமன்றக் கட்டடங்கள் வந்திருக்கின்றன, மாவட்ட நீதிமன்றக் கட்டடங்கள் வந்திருக்கின்றன. கட்டடங்களாக இருந்தாலும் சரி, பாசனமாக இருந்தாலும் சரி எந்தவகையிலும் குறை சொல்ல முடியாது. 360 கண்மாய்கள் குடிமராமத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. நீர் வளம், நில வளம் என 160 கண்மாய்கள் குடிமராமத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆக, அத்தனை சாதனைகளையும் செய்திட்ட அரசுதான் இந்த அம்மாவினுடைய அரசு, தமிழக அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்கள் தலைமையிலான அரசு. அதோடு வரலாற்றுச் சிறப்புமிக்க AIIMS மருத்துவமனையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல, முல்லைப் பெரியாறிலிருந்து குழாய் மூலமாக 1,054 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மதுரைக்குக் குடிநீர் கொண்டுவந்தவர். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் 4, 5 நிமிடங்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். அதனால் சாதனைகளைக் குறைத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். 1,054 கோடி ரூபாய்க்கு முல்லைப் பெரியாறிலிருந்து குழாய்மூலம் 24 மணிநேரமும் குடிநீர் அளிக்கக்கூடிய, குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மிகப் பெரிய திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

உள்ளாட்சித் துறையில் மதுரையை சீர்மிகு நகரமாக மாற்றுவதற்கு 1,000 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் மதுரை அற்புதமாக மாறிக் கொண்டிருக்கிறது. ஏனென்றால், எதிர்க்கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் கேட்டதால் நான் இதனைச் சொல்கின்றேன். இத்தனைத் திட்டங்களும், மதுரை மற்றும் மதுரையைச் சுற்றியிருக்கிற அத்தனைப் பகுதிகளுக்கும் வந்திருக்கின்றன. மதுரைக்கான எங்களுடைய கோரிக்கைகளெல்லாம் மிகச் சிலதான் இருக்கின்றன. அவை என்னவென்று சொன்னால், மதுரையிலே சிந்தாமணி கால்வாய், கிருதுமால் கால்வாய், சொட்டதட்டி கால்வாய், அனுப்பானடி கால்வாய் என்று 12 கால்வாய்கள் இருக்கின்றன. அதிலே 10 கால்வாய்கள் உள்ளாட்சித் துறைமூலம் சுத்தப்படுத்தப்பட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும், நிதி அமைச்சர் அவர்களும் ரூபாய் 750 கோடி ஒதுக்கீடு செய்த காரணத்தால் ஏறக்குறைய 10 கால்வாய்கள் சீரமைக்கப்பட்டு விட்டன. சிமென்ட்

சாலைகள் போடப்பட்டுவிட்டன. இன்னும் பந்தல்குடி கால்வாய், வண்டியூர் கால்வாய் ஆகிய இரண்டு கால்வாய்களும் சீரமைக்கப்பட வேண்டும். அந்த பந்தல்குடி கால்வாயையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக சீரமைத்துக் கொடுப்பதாக உறுதியளித்திருக்கிறார்கள். அந்த உறுதியை இன்றைக்கு அவர் நிறைவேற்றுவார் என்று நம்புகிறேன். அதைப்போன்று வண்டியூர் பூங்காவைச் சீரமைப்பதற்காக, சிறப்புப்படுத்துவதற்காக பல்வேறு திட்டங்கள், மாநில அரசுக்கு, சுற்றுலாத் துறைக்கு மற்றும் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. Smart City திட்டம் குறித்தும் கோப்பு அனுப்பப்பட்டிருக்கின்றது. மேலும், இன்றைக்கு அத்தனைத் திட்டங்களும் கிடப்பிலே இருக்கின்ற காரணத்தால்தான் Smart city திட்டத்தில் நிதியுதவி கொடுத்து, அந்தப் பூங்காவையும் சீர்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல; எங்களுக்கு மிகச் சிறந்த திட்டமாக, மதுரை, மேலூர் அம்பலக்காரர்பட்டியில் SIDCO மூலமாக இன்றைக்கு 38 ஏக்கர் நிலத்தை எடுத்து, ரூபாய் 18 கோடி செலவிலே SIDCO வளாகத்தை அமைத்துக் கொடுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக, அருமைப் பெரியோர்களே, இத்தனைத் திட்டங்களைச் செய்து தந்த அரசு, மிகச் சிறப்பான அரசு, சிறப்பான முதலமைச்சர் அவர்கள்தான் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–55

பல்வேறு கோரிக்கைகளைப் பதிவு செய்வதற்காக நான் வைத்திருக்கிறேன். இங்கே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் சிலர் வேண்டுகோள் வைத்தார்கள். சுங்கச் சாவடியைக் கடக்கின்றபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் அங்கே இலவசமாக அனுமதிக்கப்பட்டாலும்கூட, fast track என்று சொல்லப்படுகின்ற விரைவுப் பாதையிலே எல்லா சட்டமன்ற உறுப்பினர்களையும் அனுமதிக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். விவாதத்தின்போது சில விஷயங்களை மகிழ்ச்சியாகக் கேட்க முடிந்தது. அந்தப் பகுதியில் இருக்கும் பல பேர் சொன்னார்கள், நாளைய முதல்வர் என்றார்கள், அடுத்த முதல்வர் என்றார்கள். அதோடுமட்டுமல்ல, அருமை நண்பர் ஒருவர் பேசும்போது தேவலோகத்திலிருந்து வருவார், அத்தனை குறைகளையும் பிரச்சினைகளையும் தீர்ப்பார் என்று

சொன்னார்கள். அதேபோல இந்த side–ல் இருந்து எங்களுடைய நல்ல உறுப்பினர்களெல்லாம் சொன்னார்கள். அபிஷ்டு, திருமணமாகாதவர்களைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். பல்வேறு வாழைப்பழக் கதை எல்லாம் சொன்னார்கள். அருமை அண்ணன் மாண்புமிகு திரு. ஜெயக்குமார் அவர்கள் வரும், வராது என்ற செய்திகளையெல்லாம் சொன்னார்கள். எனக்குக்கூட ஒரு சின்ன செய்தி ஞாபகத்திற்கு வந்தது. எங்கள் கிராமத்தில் நான் காலையில் டீ குடிப்பதற்காகச் சென்றேன். காலையில் போகும்போது ஒரு bench–ல் 4, 5 பெரியவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். நானும் உட்கார்ந்து டீ குடித்துவிட்டு, அந்தப் பெரியவரிடம் என்னப்பா ஒரு board தொங்குகிறதே என்று கேட்டேன். அந்த board–ல் என்ன இருந்தது என்றால், ‘இன்று ரொக்கம் நாளை கடன்’ என்று. என்னப்பா என்று கேட்டால், இன்றைக்கு ரொக்கம் கொடுக்க வேண்டும், நாளைக்கு கடன் வாங்கிக்கொள்ளலாம் என்றார்கள். நாளைக்கும் போனோம், நாளைக்கும் அதே board தொங்கியது. அப்பொழுதுதான் அந்தக் கடைக்காரர் சொன்னார், இந்த board நிரந்தரமாகத் தொங்கும். “இன்று ரொக்கம்” என்பது சொக்கத்தங்கம் எடப்பாடி அண்ணன் பழனிச்சாமி அவர்கள். அந்தக் கடன் உங்களுக்கெல்லாம் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே “நாளை கடன்”, அது நாளை நாளையாகப் போய்க்கொண்டிருக்குமே தவிர, அண்ணா தி.மு.க.–வின் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சி என்றைக்கும் அருமை அண்ணன் எடப்பாடியார் தலைமையில் மிகச் சிறப்பாக நடக்கும் என்று சொல்லி, இந்த நல்ல வாய்ப்பைக் கொடுத்த அனைவருக்கும் நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நி. சதன் பிரபாகர் அவர்கள்.

***திரு. நி. சதன் பிரபாகர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே கன்னிப் பேச்சில் பேசுகின்ற வாய்ப்பு கிடைத்த நான் முதலில் குரு வணக்கத்தைத் தெரிவிக்க விரும்புகின்றேன். இங்கே குருவாக இருக்கின்ற எனது அரசியல் குரு அண்ணன் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் கருணையோடு தனது சிஷ்யனுக்கு நீண்ட நேரம் ஒதுக்கிக் கொடுப்பார் என நம்புகிறேன். 10 நாட்களுக்கு முன்பாக நமது பேரவை உறுப்பினர், மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள் தனது பேச்சில் கூறிய கருத்துக்கு ஒரு பதிலுரை அளிக்க

விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, நான் பேசுகிறேன். பேசி முடித்தபிறகு நீங்கள் சொல்லலாம். அதாவது 'குனிந்து குனிந்து கும்பிடுபோடும்' என்ற வார்த்தையைக் குறிப்பிட்டார். அதை 'ஆம்' என்று ஏற்றுக்கொள்ளத்தான் நான் பேசுகின்றேன். குனிந்து குனிந்து கும்பிடுபோடும் நாங்கள் நிச்சயமாக குனிந்து குனிந்து கும்பிடு போட்டோம். கீழே விழுந்து கும்பிடு போட்டோம். ஏனென்றால், நாங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களை தலைவியாக மட்டும் பார்க்கவில்லை. எங்கள் தெய்வமாகப் பார்க்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் குல தெய்வமாக நாங்கள் பார்க்கின்றோம். எனவேதான் நாங்கள் இன்றைக்கும் விழுந்து விழுந்து கும்பிடு போடுகிறோம். அம்மா அவர்கள் இருக்கும்போது கும்பிடு போட்டால் பதவி கிடைக்கும். இன்று நாங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா நினைவிடத்தில் போய் கும்பிடு போடுகிறோமென்றால், அம்மாவின் ஆன்மாவை நாங்கள் நம்புகின்றோம். நிச்சயமாக அம்மாவின் ஆன்மாவை நாங்கள் நம்புகின்ற காரணத்தினால்தான்—இன்றைக்கு அத்தனை தொண்டர்களும் மாண்புமிகு அம்மாவின் ஆன்மாவால் வழிநடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றோம் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன். 25 ஆண்டுகளுக்குப் பின்னால் நிச்சயமாக அது ஓர் ஆலயமாக மாறும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) 'சுமைதாங்கி' என்ற படத்தில் கவிஞர் கண்ணதாசன் அவர்களின் பாடல் வரிகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மனிதன் என்பவன் தெய்வமாகலாம்,
வாரிவாரி வழங்கும்போது வள்ளலாகலாம்
வாழைப் போல தன்னை தந்து தியாகியாகலாம்
உறுதியோடு மெழுகு போல ஒளியை வீசலாம்
ஊருக்கென்று வாழ்ந்த நெஞ்சம் சிலைகளாகலாம்
உறவுக்கென்று விரிந்த உள்ளம் மலர்களாகலாம்
யாருக்கென்று அழுதபோதும் தலைவனாகலாம்
மனம்! மனம்! அது கோவிலாகலாம்
மனிதன் என்பவன் தெய்வமாகலாம்.

என்று அந்தப் பாடலில் வருகின்ற வரிகளுக்கேற்ப ** அப்படிப்பட்ட அம்மா நிச்சயமாக இன்னும் அடுத்த நூற்றாண்டு துவக்கத்தில் தெய்வமாக வழிபடப்படுவார் என்பதை இந்தத் தருணத்திலே நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு, இந்திய முஸ்லிம் லீக் உறுப்பினர் திரு. முஹம்மது அபூபக்கர் ஆகியோர் எழுந்து நின்று ஏதோ பேசினர்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள், கன்னிப் பேச்சு, கடைசியாகச் பேசிக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள்.*

திரு. நி. சதன் பிரபாகர்: *இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு சொலவடை சொல்வார்கள். 'செத்தும் கொடுத்தான் சீதக்காதி' என்று சொல்வார்கள். அதைப்போல இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தான் மறைந்த பிறகும் பதவிகளை வாரி வாரி வழங்குகின்ற. . .*

பிற்பகல் 2–00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் கன்னிப் பேச்சு பேசுகிறார். அவர் பேசி முடித்தவுடன், உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன்.*

திரு. நி. சதன் பிரபாகர்: *ஒரு சின்ன உதாரணத்தைச் சொல்கிறேன். (குறுக்கீடு) ஒரு சின்ன உதாரணத்தை நான் சொல்கின்றேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *ஆட்சேபணைக்குரிய அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) அவை என்னவென்று தெரியும். (குறுக்கீடு) அந்த வார்த்தைகளை நான் கூறினால், அவையும் அவைக் குறிப்பில் பதிவாகும். அதனால்தான், நான் அந்த வார்த்தைகளைச் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேசுங்கள்.*

திரு. நி. சதன் பிரபாகர்: *நிச்சயமாக நான் சொல்கின்றேன். அதற்கு உதாரணம் நான்தான். ஏனென்றால், மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களும், சட்டமன்ற இடைத் தேர்தலுக்கான வேட்பாளரைத் தேர்வு செய்தபொழுது, நான் நின்று கொண்டிருந்த இடம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நினைவிடம் என்பதை நான் பணிவோடு இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத்*

தட்டும் ஒலி) சட்டமன்ற இடைத் தேர்தலுக்கான வேட்பாளர்களை அறிவிக்கப் போகிறார்கள் என்று சொல்கிறார்கள். அப்படிச் சொல்லிக்கொண்டிருந்தபோது எனக்கு ஒரே மனக் குழப்பமாக இருந்தது; ஏனென்றால், அம்மா அவர்கள் இறந்த பிறகு, ஒரு மனக் குழப்பத்தில் இருந்த காலகட்டத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு வாரியத்தின், அதாவது TNPSC Group–I தேர்வில் Deputy Registrar (Co–operative) ஆக தேர்வு பெற்றும், அந்தப் பதவியை வேண்டாம் என்று கூறிவிட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆளுமையால் ஈர்க்கப்பட்டு, அரசியலுக்கு வந்த என்னை, படிப்படியாக ஊராட்சி கிளைக் கழகச் செயலாளர், ஊராட்சி கழகச் செயலாளர், மாவட்ட இளைஞரணி இணைச் செயலாளர் என பல்வேறு பதவிகளைக் கொடுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் இன்றைக்கு இல்லையே என்ற ஏக்கத்தில் நின்றுகொண்டிருந்தபோது, எனது பெயர் பரமக்குடி தொகுதிக்கு அன்றைக்கு அறிவிக்கப்பட்டபோது, நான் உண்மையிலேயே மெய்சிலிர்த்துப் போனேன். அதுமட்டுமல்ல, நான் சட்டமன்றத்திற்குள் நுழைந்து, அம்மா அவர்களின் படத்தை தேடிப் பார்த்தபோது மெய்சிலிர்த்துப் போனேன். அம்மாவின் காலடியிலேயே என்னை உட்காரவைத்து அழகு பார்க்கின்ற ஒரு வாய்ப்பு எனக்கு இன்றைக்குக் கிடைத்திருக்கிறது என்பதை நினைத்து நான் பெருமைப்பட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்பில் தெய்வமாக, ஆற்றலில் புயலாக, கனிவில் தாயாக, கடமையில் சிங்கமாக, மனிதத்தில் புனிதமாக, மகத்துவத்தில் இமயமாக, புதுமைகள் செய்த புரட்சித் தாய் அம்மாவின் திருவடி நிழலை வணங்குகின்றேன். அம்மாவின் வழியில், ஆன்மாவின் ஒளியில் கட்சிப் பணியையும், ஆட்சிப் பணியையும் களிப்போடு கவனித்து வரும் எடப்பாடி சிங்கமே! பந்தயக் குதிரைபோல பார் சுற்றும் பூமிபோல சுழன்று சுழன்று பணியாற்றும் சுந்தரத் தமிழ்மகனே! (மேசையைத் தட்டும் ஒலி) மேட்டுக்குடிக்கு மட்டுமே சொந்தமாக இருந்து வந்த ஆங்கிலக் கல்வியை ஏழையும் பெற வேண்டுமென எல்.கே.ஜி., யு.கே.ஜி., வகுப்புகளை அரசுப் பள்ளிகளில் அறிமுகம் செய்த அற்புதமே! தாயை இழந்து தமிழகம் தவித்தபோது, ‘தமிழகத்தைக் காப்பேன்’ என்று கட்டியம் கூறி தலைமை ஏற்ற கற்பகத் தருவே! முடிந்தது கட்சி, முடங்கியது ஆட்சி என்று கொக்கரித்தவர்களுக்கு மத்தியில் தனது அறிவின் மூலமும், ஆற்றலின் மூலமும் பதிலடி கொடுத்த சேலத்து சிங்கமே!

(மேசையைத் தட்டும் ஒலி) தமிழ் மண்ணைக் காக்க, மனித குலத்தைக் காக்க, நெகிழியை ஒழித்து, நாட்டையே திரும்பிப் பார்க்க வைத்த முன்னோடி முதல்வரே! இன்று தமிழகத்தின் வளர்ச்சி கண்டு தரணியே வியக்கின்றது; முதல்வரின் சாதனைப் பூக்கள் மக்களின் இதயமெல்லாம் மணக்கின்றது; காற்று புயலாய் மாறி, கஜா என்னும் பெயர் கூறி தமிழகத்தையே தடம் மாற்றியபோதும், ஆயிரம் புயலின் வேகத்தோடு முதல்வர் ஆற்றிய பணிகள் கண்டு அகிலமே வியக்கிறது. திட்டங்களையும், சட்டங்களையும் வற்றாது வழங்கி வரும் ஜீவ நதியே! விதையாய் விழுந்து விருட்சமாய் வளர்ந்த வீரமே உங்களை வணங்குகிறேன். தேனி தந்த ஆணிவேரே! அம்மாவின் பாதையை கீதையாய் போற்றும் தூயவரே! நம்பிக்கை நாயகரே! நாணயத்தில் தூயவரே! கழகமே சுவாசம் என வாழ்ந்து வரும் மாண்புமிகு ஒருங்கிணைப்பாளரே! மாநிலத்தின் துணை முதல்வரே உங்களைப் பணிவோடு வணங்குகிறேன்.

எனது பரமக்குடி சட்டமன்றத் தொகுதியில் அல்லும் பகலும் அயராது உழைத்து, எனது வெற்றிக்காகப் பாடுபட்ட எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அண்ணன் திரு. மணிகண்டன் அவர்களையும் பணிவோடு வணங்குகின்றேன். எனக்காக உழைத்த மாவட்ட கழகச் செயலாளர், மகளிரணி இணைச் செயலாளர், ஒன்றிய கழகச் செயலாளர், நகரச் செயலாளர் உள்ளிட்ட அத்தனை கிளைக் கழக நிருவாகிகள், மாவட்டக் கழக நிருவாகிகள், சார்பு அணி நிருவாகிகள், எனது உறவினர்கள் மற்றும் நண்பர்கள் உள்ளிட்ட அத்துணை பேருக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு இந்த மாமன்றத்தில் பேச வாய்ப்பளித்த எனது தொகுதி மக்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை நான் பதிவு செய்துகொள்வதோடு, இன்றைக்கு பொதுப் பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை ஆகிய துறைகள் பற்றிய மானியக் கோரிக்கைகள்மீதான விவாதத்தில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், பேச அனுமதியளித்த மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–05

பொதுப் பணி நீர் ஆதாரங்கள் துறையின்கீழ், மொத்தம் 127 அணைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவற்றில், 85 அணைகள் பாசனத்திற்காகவும், 38 அணைகள் மின் உற்பத்திக்காகவும், 4 அணைகள் சென்னை குடிநீர் ஆதாரத்திற்காகவும் பொதுப் பணித் துறையால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவற்றிலிருந்து மொத்தமாக பாசனத்திற்காக 230 டி.எம்.சி. தண்ணீரும், குடிதண்ணீருக்காக 11 டி.எம்.சி. தண்ணீரும் பெறப்பட்டு வருகின்றன. தமிழக பொதுப் பணித் துறையின்மூலம் 39,202 பாசன ஏரிகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. முக்கியமாக நமது நீராதாரத் துறை குறித்து சொல்ல வேண்டுமென்றால், மிகவும் முக்கியமான இரண்டு திட்டங்களைக் குறித்து நான் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். காவேரி நீர் பற்றி நான் பேசியாக வேண்டும். மற்றொன்று, முல்லைப் பெரியாறு பற்றி நான் பேசியாக வேண்டும்.

காவேரி நீராதாரத்தைப் பொறுத்தளவிலே, அவற்றை Gazette–ல் வெளியிட்டு சாதனை படைத்தது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு என்பதை நான் கனிவோடு இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சதன் பிரபாகர் அவர்கள் பேசும்போது, ** என்று பேசிய அந்தப் பேச்சு, நான் சொன்னது உட்பட அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) அதற்குத்தான் பொறுமையாக இருக்க வேண்டுமென்று சொல்வது.

திரு. நி. சதன் பிரபாகர்: மாண்புமிகு அம்மா அவர்கள் பேரவைக்கு கடைசியாக வந்த நாள் 2–9–2016. அப்போது அம்மா அவர்கள் காவேரி மேலாண்மை ஆணையம், காவேரி நீர் முறைப்படுத்தும் குழு நடைமுறைக்கு வரும்வரையிலும் மற்றும் நீதிமன்ற வழக்குகள் இறுதியாக்கம் செய்யப்படும் வரையிலும் காவேரிப் படுகையில் கர்நாடகா மற்றும் கேரள அரசுகள் எவ்விதத் திட்டத்தையும் மேற்கொள்ள அனுமதிக்கக் கூடாது என்று மத்திய

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அரசை வலியுறுத்தி, அரசினர் தனித் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்தார். அந்தத் தீர்மானத்தை மத்திய அரசு சுட்டிக்காட்டி, காவேரி மேலாண்மை வாரியத்தை அமைத்துக் கொடுத்ததற்கு இன்றைக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கடைசி நாள் அலுவல் குறிப்பு என்று குறிப்பிட்டு மத்திய அரசு இந்தத் தீர்ப்பை வழங்கியிருக்கின்றது.

அதுபோக, இன்றைக்கு குடிமராமத்துப் பணிகளைப் பற்றிக் கூறும்பொழுது புறநானூற்று வரி ஒன்று எனக்கு ஞாபகம் வருகின்றது.

“பெருங்குளக் காவலன்போல
அருங்கடி அன்னையும் துயில் மறந்தனளே”

இதற்கு என்ன அர்த்தம் என்றால், ஒரு தாய் எப்படி தன்னுடைய சின்ன குழந்தை தூங்கும்போது அரவணைத்து கையைப் போட்டுக் கொண்டு படுத்திருந்து கூடவே அந்தக் குழந்தையைக் காப்பாற்றுவாளோ அதுபோல நமது முதல்வர் அவர்கள் தமிழ்நாட்டில் குடிமராமத்து செய்யக்கூடிய அந்த அணைகளையெல்லாம் கட்டிக் காத்து வருகின்றார். ஆக, அந்த வைர வரிகளுக்கு ஏற்ப குடிமராமத்துப் பணிகளை மேற்கொண்டு ‘இன்றைக்கு குடிமராமத்து நாயகன்’ என்ற பெருமையைப் பெற்றிருக்கிறார் என்றால், அது மிகச் சிறப்பாக அமைந்திருப்பதுதான் காரணம். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, நதி நீர் இணைப்பைப் பற்றிப் பேசும்போது மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் ஒன்றைச் சொன்னார். அதாவது, நில எடுப்புக்கு காலதாமதம் ஏற்படுகிறது என்று சொன்னார். அதை நமது மாண்புமிகு முதலமைச்சரும், ஆமாம், நில எடுப்பில் கொஞ்சம் தாமதம் ஆகிறது என்று சொன்னார். ஏனென்றால், நிலம் எடுப்பதில் அவர்கள் வல்லவர்கள் என்பதை நான் இங்கே ஒத்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர் யாரைப் பற்றிச் சொன்னார்? (குறுக்கீடுகள்)

திரு. நி. சதன் பிரபாகர்: இல்லை, நிலம் எடுப்பதில் வல்லவர் என்று சொன்னேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உட்காருங்கள். என்ன நீங்கள்? (குறுக்கீடுகள்) உறுப்பினர், பேசுங்கள்.

திரு. நி. சதன் பிரபாகர்: குடிமராமத்துக்கு 2016–2017 ஆம் ஆண்டில் 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து 1,519 பணிகளும், 2017–2018 ஆம் ஆண்டில் 328.99 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ய திட்டங்கள் தீட்டப்பட்டன. 2019–2020 ஆம் ஆண்டு, 29 மாவட்டங்கள் பயன் பெறும் வகையில் 1,829 பணிகளும், ரூ.499.68 கோடி செலவில் திட்டங்கள் தீட்டப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. நமது முதல்வர் கூட சொன்னார். இதில் எந்த இடைத்தரகரும் கிடையாது; எந்த ஒப்பந்ததாரரும் கிடையாது. நேரடியாக அந்தச் சங்கம் மூலமாக அந்த விவசாயிகள், பாசனதாரர்கள் மூலமாகத்தான் அந்தப் பணிகள் நடைபெறுகின்றன என்று சொன்னார். நிச்சயமாக, இராமநாதபுரம் மாவட்டத்தில் அத்தனை பணிகளும் அப்படித்தான் நடைபெற்று வருகின்றன என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அதுபோல், நீர் நிலைகளைத் தூர் வாரும் பணிகளும், கிட்டத்தட்ட அனைத்து அணைகளும் தூர் வாரப்பட்டு இன்றைக்கு பணிகள் நடைபெற்று வருகின்றன. நமது முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, மேட்டூர் அணை, பேச்சிப்பாறை அணை, அமராவதி அணை, வைகை அணை போன்ற அணைகள் எல்லாம் தூர் வாரப்பட்டு இன்றைக்கு ஆழப்படுத்தப்பட்டுள்ளன. வீராணம் ஏரியைத் தூர் வாருவதற்கு ரூ.40 கோடி ஒதுக்கப்பட்டு தூர் வாரி முடிக்கப்பட்டுள்ளது.

அதுபோல், அத்திக்கடவு–அவினாசி திட்டத்தை நடைமுறைப்படுத்தி, இன்றைக்கு மிகப் பெரிய ஒரு திட்டத்தை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மக்களின் பயன்பாட்டுக்குக் கொண்டு வந்துள்ளார்கள்.

பவானி ஆற்றின் வெள்ள உபரி நீர் வீணாவதைத் தடுக்கும் பொருட்டு திருப்பூர், கோவை, ஈரோடு ஆகிய மாவட்டங்களில் வறண்ட பகுதிகளுக்கு குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் விதமாக ரூ.1,652 கோடி செலவில் 28–2–2019 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, காவேரியின் கழிமுகப் பகுதிகளில் அந்தக் கரைகளையெல்லாம் பலப்படுத்தும் விதமாக சுமார் ரூ.1,560 கோடி செலவில் இன்றைக்கு பணிகளெல்லாம் நடைபெற்றுக்

கொண்டிருக்கின்றன என்பதைப் பணிவோடு நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதுபோல, பாசன மேம்பாட்டுத் திட்டம் என்ற ஒரு திட்டம்; IAMWARM என்று சொல்லக்கூடிய அந்தத் திட்டத்தின்மூலம் நீர்வள, நிலவளத் திட்டத்தின் தொடர் திட்டமாக நீர்வள ஆதாரத் துறை மற்றும் அதன் தொடர்புடைய ஏழு துறைகள் ஒருங்கிணைந்து செயல்படுகின்றன.

பிற்பகல் 2–10

புதிய நீர்த்தேக்கங்களை உருவாக்குவதில் இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். 1,124.20 கோடி ரூபாய் செலவில் பெரம்பலூர் மாவட்டம், கொட்டரை கிராமத்தின் அருகே உள்ள மருதையாற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கமும், 330 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னைக்குக் குடிநீர் வழங்குவதற்கும், சுமார் 240 ஏக்கர் பாசன வசதி பெறுவதற்கேற்ப திருவள்ளூர் மாவட்டம், கண்ணன்கோட்டை கிராமம், ராஜனேரி மற்றும் தேர்வாய்க்கண்டிகை ஏரிகளை இணைத்து ஒரு நீர்த்தேக்கமும் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் நில எடுப்புப் பணி சற்று காலதாமதமானாலும், இன்று முடியும் தருவாயில் உள்ளது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி சம்பந்தமான கோரிக்கைகளில் முக்கியமான ஒருசில தொகுதிக் கோரிக்கைகளை மட்டும் நான் இங்கே வைக்க விரும்புகிறேன்.

போகலூர் ஒன்றியம், மந்திவலசை கிராமத்தில் மக்களின் போக்குவரத்து வசதிக்காக வைகை ஆற்றின் குறுக்கே மேம்பாலம் அமைத்துத் தர வேண்டுகிறேன். நிலத்தடி நீர்மட்டம் உயரும் வகையில், வைகை ஆற்றின் குறுக்கே சூடியூர் மற்றும் செவ்வூர் ஆகிய இரண்டு இடங்களில் தடுப்பணைகள் அமைத்துத் தர வேண்டுகிறேன். எனது தொகுதியில் விடுபட்ட கண்மாய்கள், முன்னாள் ஜமீன் கண்மாய்கள் மற்றும் சிறுபாசனக் கண்மாய்களையும் குடிமராமத்துப் பணிகளில் சேர்க்க வேண்டுமென்று எனது கோரிக்கையில் எழுதியிருந்தேன். ஆனால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அதைச் சேர்த்துவிட்டார்கள் என்பதற்காக நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வைகை ஆற்றின் கரையில் மஞ்சள்பட்டினம் பகுதியில் சுமார் 1 கி.மீ. தூரத்திற்கு அணுகுசாலை அமைத்து, அப்பகுதியினை மதுரை–இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையுடன் இணைக்கும் வகையில் தரைப்பாலம் ஒன்றும் அமைத்துத் தர வேண்டுகிறேன். நெடுங்காலமாக தூர் வாரப்படாமல் இருக்கும் நாராயண காவேரி கால்வாய் மற்றும் சங்கரத்தேவன் கால்வாய்களைத் தூர் வார வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

மண்டலமாணிக்கம் அருகில் குண்டாற்றின் கரையில் தடுப்பணை ஒன்றையும், பார்த்திபனூர்–கமுதி புறவழிச் சாலையை விரைந்து முடிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். அபிராமம்–முதுகுளத்தூர் புறவழிச் சாலையை புதிதாக அமைத்துத் தர வேண்டுகிறேன். சத்திரக்குடி மற்றும் அபிராமம் ஆகிய இடங்களில் பேருந்து நிலையங்கள் அமைக்க வேண்டுகிறேன். நயினார்கோவில் ஒன்றியம், அரியான்கோட்டை–காவனூர் சாலையை அகலப்படுத்த வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். பரமக்குடி நகரின் மையப் பகுதியில் முதுகுளத்தூர், இளையான்குடி, மதுரை, இராமேஸ்வரம் சாலைகள் இணையும் ஓட்டப்பாலம் என்னுமிடத்தில் விபத்துகளைத் தடுக்கும் வகையில், ரவுண்டானா அமைத்துத் தர வேண்டுகிறேன். பரமக்குடி நகரில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை அமைத்துத் தர வேண்டுகிறேன். முக்கியமாக, நெசவாளர்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அந்த நெசவாளர்களுக்குரிய ஜி.எஸ்.டி. 5 சதவிகிதம் என்பதை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்று, முற்றிலுமாக நீக்கித் தர வேண்டுமென்று மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களிடம் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஏனைய அத்தனை தொகுதிக் கோரிக்கைகளையும் நான் சட்டமன்றத்தில் படித்ததாக ஏற்றுக்கொண்டு, அவற்றை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

காஞ்சித் தலைவன் கண்டெடுத்த இதயக் கனியின் ஒளி விளக்கு; தெய்வத்தாய் மாண்புமிகு அம்மா குடியிருக்கின்ற கோயிலுக்கு நினைவிடம் அமைப்பது எனது கடமை என அரச கட்டளையிட்டு நினைத்ததை முடித்தவனே! (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் வீட்டுப் பிள்ளையே! (மேசையைத் தட்டும் ஒலி)

கழகத்தை மீட்ட சுந்தரபாண்டியரே! (மேசையைத் தட்டும் ஒலி) உமக்கு உற்ற துணையாக இருந்துவரும் மன்னாதி மன்னன், மதுரை வீரன், ஜல்லிக்கட்டு நாயகனுடன் இணைந்து இரு சகோதரர்களும் மருது சகோதரர்களாக நீதிக்குத் தலை வணங்கி, உழைக்கும் கரங்களாக, புதிய பூமியைப் படைப்போம் என புறப்பட்டுள்ள நீவிர் இருவரும் இன்றுபோல் என்றும் வாழ்க! (மேசையைத் தட்டும் ஒலி) பணம் படைத்தவர்கள் கையிலும், சர்வாதிகாரிகளின் கையிலும் அரசியல் சென்றுவிடக் கூடாது என்றும், நல்லவன் வாழ்வான்! தருமம் தலைகாக்கும் என்ற நீதிமொழிகளுக்கேற்ப தாயின் மடியில் வளர்ந்த கொங்கு நாட்டு ராஜா தேசிங்கே! (மேசையைத் தட்டும் ஒலி) பாண்டிய நாட்டு ராஜ ராஜனே! நீவிர் இருவரும் பல்லாண்டு வாழ்க! பல்லாண்டு வாழ்க!

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு ‘பாரத ரத்னா’ விருதை வழங்க, இம்மாமன்றம் ஒற்றுமையோடு இருந்து மத்திய அரசை வலியுறுத்துவதற்கான முயற்சியை எடுக்க வேண்டுமென்ற எனது முக்கியமான கோரிக்கையைப் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனக்குப் பேச வாய்ப்புக் கொடுத்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

தொகுதிக் கோரிக்கைகள்:

பரமக்குடி நகரப் பகுதிகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரானது வைகை ஆற்றில் கலக்காதவண்ணம் வைகை ஆற்றின் கரையில் கால்வாய் அமைத்து, சுத்திகரிப்பு நிலையம் ஒன்று அமைத்துத் தர வேண்டுகிறேன். பரமக்குடி நகரின் மையப் பகுதியில் உள்ள நகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் அரசின் சார்பில் கலையரங்கம் ஒன்று அமைத்துத் தர வேண்டுகிறேன்.

நயினார்கோவில் ஒன்றியத்திற்கு புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடம் அமைத்துத் தர வேண்டுகிறேன். பரமக்குடி ஒன்றியம், வழிமறிச்சான் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் மற்றும் கமுதி ஒன்றியம், உடையநாதபுரம் அரசு ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகவும் தரமுயர்த்தித் தந்திட வேண்டுகிறேன்.

பரமக்குடி தொகுதி மாணவர்கள் பயன்பெறும் வகையில், நூலகத்துடன்கூடிய அரசு போட்டித் தேர்வு மையம் ஒன்றை அமைத்துத் தர வேண்டுகிறேன். பரமக்குடி நகரின் மையப் பகுதியில் சந்தைப்பேட்டை அருகில் விளையாட்டுத் துறைக்குச் சொந்தமான விளையாட்டு மைதானத்தில் நீச்சல் குளம் அமைத்துத் தருமாறு வேண்டுகிறேன். பிரசித்திப் பெற்ற நயினார்கோவில் ஸ்ரீநாகநாத சுவாமிகள் ஆலயத்தின் தெப்பக்குளத்தினைச் சீர் செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன். நயினார்கோவில் ஒன்றியம், பாண்டியூரில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைத்துத் தர வேண்டுகிறேன். ஆதி திராவிடர் நலத் துறையின் சார்பில் வங்காருபுரம் மற்றும் ஆ.பள்ளப்பச்சேரி ஆகிய இடங்களில் சமுதாயக் கூடம் அமைத்துத் தர வேண்டுகிறேன்.

கதர்த் துணிகளுக்கு வழங்கப்பட்டது போல், பரமக்குடி நகரில் உள்ள கைத்தறி நெசவாளர்கள் பயன்பெறும் வகையில் தற்போதுள்ள 5% GST வரியை முற்றிலுமாக நீக்க மத்திய அரசை வலியுறுத்த வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள். உறுப்பினர் திரு. இராஜா, இன்றைக்கு நேரம் இல்லை. சீக்கிரம் உரையை முடிக்க வேண்டும். எனவே, தங்கள் உரையை சீக்கிரம் முடியுங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணாவின் அருகில் துயில்கொள்ளும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை நான் வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) நெடுஞ்சாலைத் துறை மற்றும் பொதுப் பணித் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த தமிழகத்தினுடைய எதிர்காலம், போற்றுதலுக்குரிய தமிழகத்தினுடைய எதிர்க்கட்சித் தலைவர், நாளை இந்த நாட்டை ஆளக்கூடிய தலைவர், கழகத் தலைவர் அண்ணன் தளபதி அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்று பிறந்த நாள் விழா காணும் பெருந்தலைவர் கர்மவீரர் காமராஜருக்கு என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முக்கியமாக, இன்றைக்கு நெடுஞ்சாலைத் துறை, கட்டடங்கள் மற்றும் பாசனம் (பொதுப் பணித் துறை) ஆகிய மானியக்

கோரிக்கைகள்மீது பேசுகின்ற நேரத்தில், தமிழ்நாட்டில் 32 மாவட்டங்கள் இருந்தாலும், 32 மாவட்டங்களில் 4 மாவட்டங்களைத் தவிர, மீதி 28 மாவட்டங்களில் இருக்கின்ற மக்கள் ஜி.எஸ்.டி. சாலை, தேசிய நெடுஞ்சாலைகளைக் கடந்து செல்கின்ற ஒரு நிலை இருக்கின்றது. ஒரு காலத்தில் கிண்டியில் ஒரு மேம்பாலம் கட்டப்பட்டது. அந்த மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டால் பிரச்சினை தீரும் என்று நாங்கள் நினைத்தோம். அதற்குப் பிறகு கத்திபாராவில் ஒரு மேம்பாலம் கட்டப்பட்டது. அந்த மேம்பாலமும் கட்டி முடிக்கப்பட்டால் பிரச்சினை தீரும் என்று நாங்கள் நினைத்தோம். இப்பொழுது பல்லாவரத்திலே ஒரு மேம்பாலம் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது. மேடவாக்கத்திலே ஒரு மேம்பாலம் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது. கீழ்க்கட்டளை, கோவிலம்பாக்கம் பகுதியிலே ஒரு மேம்பாலம் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆக, வேளச்சேரியிலும் ஒரு மேம்பாலம் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் trainமூலம் வெளியூருக்குப் போய்விடுவீர்கள். ஆனால், சென்னையைச் சுற்றியிருக்கின்ற பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகிறார்கள். குறிப்பாக, பள்ளிக்குச் செல்கின்ற மாணவர்கள், கல்லூரிக்குச் செல்கின்ற மாணவர்கள், அரசு ஊழியர்கள் சென்னையைச் சுற்றியுள்ளவர்கள் காலையிலும், மாலையிலும் சென்னைக்கு வர வேண்டுமென்று சொன்னால், குறைந்தது ஒன்றரை மணி நேரமாகும். நேற்று நான் மேடவாக்கத்திற்குச் சென்று பார்க்கும்போது, அந்தப் பணிகளெல்லாம் நின்றிருப்பதாகச் சொல்கிறார்கள். இந்த அரசு உடனடியாக அந்தப் பணிகளையெல்லாம் நிறைவேற்றித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 2–15

2014–ல் இதே அவையிலே முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள் மீனம்பாக்கத்திலிருந்து செங்கல்பட்டு வரை 40 கிலோ மீட்டர் தூரத்திற்கு 6 வழிச்சாலை போடுவதாகச் சொன்னார்கள். அந்தப் பணிகள் இதுவரை நடைபெறவில்லை. அதற்குப் பிறகு 2016–2017 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பிலே, 199–வது பக்கத்திலே தற்பொழுது 6 வழிச்சாலை அமைக்க தனியாக ஒரு மதிப்பீடு தேசிய நெடுஞ்சாலைத் துறை ஆணையத்தின் மூலமாகக் கேட்கப்பட்டுள்ளது எனத்

தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆக, இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில், இந்தப் பணிகளெல்லாம் எப்போது செய்து முடிக்கப்படும்? முதலில் சொன்னதுபோல, பாலங்களை எல்லாம் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டியதுதான். மேம்பாலங்களைக் கட்டிக்கொண்டே இருக்க வேண்டியதுதான். நாம் இருப்போமா, இல்லையா என்ற ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிறது.

இன்னொரு பக்கம் பார்த்தால், இன்றைக்கு சென்னை–திரிசூலம் வரை மெட்ரோ இரயில் வந்திருக்கின்றது. திரிசூலத்திலிருந்து வண்டலூர் Zoo வரை மெட்ரோ இரயில் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும். ஒரு காலத்திலே சென்னை, தாம்பரத்திலே கிறிஸ்தவக் கல்லூரி முதலில் வந்ததா அல்லது மின்சார இரயில் முதலில் வந்ததா என்றொரு போட்டி இருக்கும். 175 ஆண்டுக்கால பாரம்பரியமிக்க அந்தக் கல்லூரி மற்றும் சென்னை புறநகர் வளர்ந்திருக்கிறது என்று சொன்னால், அது மின்சார இரயில் மூலமாகத்தான். சென்னையைவிட அதிக மக்கள் தாம்பரத்தைச் சுற்றியிருக்கின்ற பகுதிகளில்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நீங்கள் எப்படி சேலத்திற்கு முக்கியத்துவம் தருகிறீர்களோ, எப்படி கோயம்புத்தூருக்கு முக்கியத்துவம் தருகிறீர்களோ, எப்படி ஈரோட்டிற்கு முக்கியத்துவம் தருகிறீர்களோ அதுபோன்று தர வேண்டும். உங்களுடைய கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகங்களைப் பார்த்தேன். அங்கேயெல்லாம் பொது மக்கள் அதிகம் இல்லை. ஆனால், சென்னையைப் பொறுத்தவரையில், கோடிக்கணக்கான மக்கள் வாழ்கின்ற இந்தப் பகுதிக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல பாலங்களைச் சுட்டிக்காட்டி, அந்தப் பணிகளெல்லாம் மந்த நிலையில் செயல்படுவதாகச் சொன்னார்கள். இடையிலே மணல் பிரச்சினை வந்துவிட்டது. உங்களுக்கு நன்றாகத் தெரியும். பல பேர் பொதுநல வழக்கு போட்ட காரணத்தினாலும், மணல் கிடைக்காத காரணத்தினாலும், அந்தப் பணிகளை வேகமாகச் செய்ய முடியவில்லை. இப்பொழுது வேகமாக, துரிதமாக

அந்தப் பணிகளெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. உங்களுடைய ஆட்சிக் காலத்திலும்கூட, போரூர் பாலத்திற்கு பூஜை போட்டு 10 சதவிகித பணியைத்தான் ஆரம்பித்தீர்கள். ஆனால், அந்தப் பாலத்திற்குத் தேவையான நிலத்தினைக் கையகப்படுத்தாமல் போய்விட்டீர்கள். 3, 4 ஆண்டுக் காலமாக நீதிமன்றத்திலே வழக்கு நடைபெற்று, நீதிமன்றத்திலே தீர்ப்பைப் பெற்ற பிறகுதான், நாங்கள் அந்தப் பாலத்தைக் கட்டி முடித்தோம். ஆகவே, பாலங்களைக் கட்டுகின்றபோது பல்வேறு பிரச்சினைகள் வருகின்றன. அந்தப் பிரச்சினைகளை எல்லாம் தீர்த்த பிறகுதான் பாலப் பணிகளை மேற்கொள்ள முடியும். சில இடங்களிலே நிலம் எடுக்கின்ற பிரச்சினையும் இருக்கின்றது. நிலத்தை எடுக்கப் போனால், அந்த நிலத்தின் உரிமையாளர் நீதிமன்றத்திற்குச் சென்று விடுகிறார். அப்படிச் செல்கின்றபொழுது பல நாட்கள் ஆகிவிடுகின்றன. இப்பொழுதுகூட phase II உங்கள் பகுதியில்தான் வருகின்றது என்று கருதுகின்றேன். அதில் கிட்டத்தட்ட அரை கிலோ மீட்டர் தூரத்திற்கு பணி செய்ய வேண்டியிருக்கிறது. மற்ற எல்லாப் பணிகளும் முடிந்துவிட்டன. அரை கிலோ மீட்டர் அளவில் இருக்கின்ற பகுதியிலுள்ள நிலத்தினுடைய உரிமையாளர் நீதிமன்றத்திற்குப் போனதையடுத்து கிட்டத்தட்ட பல முறை வாய்தா போடப்பட்டுவிட்டது. கிட்டத்தட்ட 30–க்கும் மேற்பட்ட வாய்தாக்கள் போடப்பட்டுவிட்டன. இன்னும் தீர்ப்பு கிடைக்கப் பெறவில்லை. ஆகவே, இப்படிப்பட்ட காரணங்களால் காலதாமதமாகிறதே ஒழிய, அரசினால் அல்ல. ஆகவே, அந்தப் பாலப் பணிகளை விரைந்து முடிப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.

பிற்பகல் 2–20

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நகர மன்றத் தலைவராக இருக்கும்போது தாம்பரத்தில் மேம்பாலம் கட்டுவதற்கு எவ்வளவு கஷ்டப்பட்டேன் என்பது எனக்குத் தெரியும். சென்ற முறை இதே கூட்டத் தொடரிலே நான் பேசினேன். பெருங்களத்தூரிலே ஒரு மேம்பாலம் இரயில்வே துறையால் கட்டி முடிக்கப்பட்டது. ஆனால், இப்பொழுது அதே பகுதியிலே 8 வழிச்சாலை அமைக்கப்படுமென்று சொல்லி, முதலில்

20 கோடி ரூபாய்க்கு ஒரு டெண்டர் வைத்திருந்தீர்கள். இன்னொரு பக்கம் 44 கோடி ரூபாய்க்கு ஒரு டெண்டர் வைத்திருக்கிறீர்கள். ஆக, 8 வழிச்சாலை அமைக்கும் பணிகள் முடிந்தால்தான், இந்தப் பாலம் கட்டப்படுமென்று போன முறை சட்டமன்றத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதே அவையிலே சொன்னார்கள். நான் கேட்பது என்னவென்று சொன்னால், ரோடு போடட்டும், மேம்பாலம் கட்டுவதில் உங்களுக்கு என்ன பிரச்சினை என்பது எனக்குத் தெரியவில்லை. Encroachment எல்லாவற்றையும் எடுத்துவிட்டார்கள். பெருங்களத்தூருக்கும், பீர்க்கன்கரணைக்கும் அதிக அளவில் மக்கள் செல்கிறார்கள். இன்றைக்கு தாம்பரத்திற்கு எவ்வளவு மக்கள் வருகிறார்களோ, அதே அளவிற்கு மக்கள் பெருங்களத்தூருக்கும் வருகிறார்கள்; வண்டலூருக்கும் வருகிறார்கள்; Zoo–க்கும் வருகிறார்கள். இன்னும் ஒரு படி மேலே போய் சொல்ல வேண்டுமென்று சொன்னால், தாம்பரத்தில் உள்ள எங்கள் வீட்டிலிருந்து நான் வெளியில் வர முடியாது. போக்குவரத்து நெரிசல் இப்போது எங்கே அதிகமாக இருக்கின்றது என்று பார்த்தீர்களென்றால், தாம்பரம் பகுதியில்தான் அதிகமாக இருக்கின்றது. ஒரு காலத்தில் கிழக்கு தாம்பரத்திலிருந்து மேற்கு தாம்பரம் செல்வதற்காக ஒரு மேம்பாலம் கட்டியதுபோய், இப்போது மேற்கு தாம்பரத்திலிருந்து கிழக்கு தாம்பரம் போக வேண்டுமென்று சொன்னால், சேலையூரிலிருந்து கேம்ப் ரோடு வழியாக மஹாலட்சுமி நகர் தாண்டி ராஜகீழ்பாக்கம் வரை ஒரு மேம்பாலம் கட்டினால்தான் பயன் ஏற்படும்; அங்கு வாழும் பொது மக்களுக்கும் பயனுள்ளதாக அமையும். நீங்கள் சொன்னமாதிரி இப்போதெல்லாம் நில எடுப்பு என்றால் case போட்டுவிடுகிறார்கள். இந்த மாதிரி case எல்லாம் போடுவார்கள்; ஒருவர் ஒரு கட்டைத்தொட்டியை வைத்துக்கொண்டு ஒரு case போடுகின்றார். அந்த ஒருவரைக்கூட நம்மால் solve செய்ய முடியவில்லை. ராஜகீழ்பாக்கத்தில் ஒரே ஒரு வெற்றிலைப் பாக்குக் கடை. இந்தப் பக்கம் ஒரேயொரு கட்டைத்தொட்டி, அதாவது மரக்கடை. இந்த இரண்டையும் solve செய்தால், பொது மக்கள் சென்றுவருவதற்கு ஏதுவாக பாலம் அமைக்க முடியும். நான்கூட நகர மன்றத் தலைவராக இருந்து சட்டமன்ற உறுப்பினராக நிற்கும்போது ஒரு பிளாட்டுக்குச் சென்று ஓட்டு கேட்டேன். உங்களுக்கு என்ன குறை என்று கேட்டேன். அவர்கள் என்ன பதில் சொன்னார்கள் தெரியுமா? Everything is comfortable என்று சொன்னார்கள். Everything is comfortable என்றால் எல்லா வசதிகளும் இருக்கின்றன என்று அர்த்தம். அதற்கு என்ன காரணம் என்று சொன்னால், நாங்கள் மேம்பாலம் கட்டும்போது

தாம்பரத்தைச் சுற்றி இருக்கின்ற அத்தனை சாலைகளையும் போட்டோம். அன்றுகூட மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார், உறுப்பினர்களும் சொன்னார்கள். நாங்கள்தான் O.M.R. சாலையைப் போட்டோம் என்றார்கள். ஏதாவது ஒரு சாலை, அது O.M.R. சாலையை விரிவுபடுத்துவதாக இருந்தாலும் சரி, வண்டலூரிலிருந்து கேளம்பாக்கம் செல்கிற சாலையாக இருந்தாலும் சரி, வண்டலூரிலிருந்து காஞ்சிபுரம் செல்கிற சாலையாக இருந்தாலும் சரி, ஒரு தடவையேனும் போடப்படுகின்ற சாலைகளை நேரடியாகப் பார்த்த வரலாறு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் அவர்களைத் தவிர வேறு எந்தத் தலைவருக்கு இருக்கின்றது? (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் ஒரு முறைதான் பார்த்தீர்கள், நாங்கள் தினந்தோறும் சாலைகளைப் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) நான் போகும்போதெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கின்றேன். எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. வி.வி. இராஜன் செல்லப்பா அவர்கள் சொன்னதைப்போல, நான் Ring Road–ல் செல்லும்போது எங்கே பாலப் பணிகள் நடக்கின்றன, எவ்வளவு பணி நடைபெற்றிருக்கிறது என்பதையெல்லாம் கணக்கிட்டு அது துரிதமாக நடைபெற வேண்டும் என்று நாங்கள் அறிவுரை சொல்லிக்கொண்டிருக்கின்றோம். இப்போது வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே போகின்றது. வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்ற காரணத்தினால்தான், அங்கே போக்குவரத்து நெரிசலை முற்றிலும் குறைக்க வேண்டும் என்பதற்காகத்தான் ஆங்காங்கே உயர்மட்டப் பாலங்களைக் கட்டுகின்றோம், சாலை சந்திப்புகளைக் கட்டுகிறோம். உறுப்பினர் அவர்கள் பெருங்களத்தூரைப் பற்றிச் சொன்னார்கள். பெருங்களத்தூரைப் பொறுத்தவரையில், விரைவாக டெண்டர் விடப்பட இருக்கின்றது. பிறகு அந்தப் பணிகள் துவங்கப்படும் என்பதையும் இந்த நேரத்தில் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.*

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் மேம்பாலம் கட்ட வேண்டும் என்பதற்காகத்தான் பெருங்களத்தூரில் ஒரு temporary bus stand–ஐ ஏற்படுத்தினார்கள். அந்த temporary bus stand–ஐ permanent bus stand என்று நிறைய பேர் நினைத்துக்கொண்டிருக்கின்றார்கள். அங்கே பேருந்து நிலையம் இருக்க வேண்டிய அவசியமே கிடையாது. அங்கே அந்தப் பேருந்து நிலையத்தை உடனடியாக எடுத்தால்தான் போக்குவரத்து நெரிசல் குறையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு தாம்பரம் அருகில் உள்ள சுத்தானந்தபாரதி தெரு, என்பது old GST Road. இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னதைப்போல் old GST Road யாருக்குமே தெரிய வாய்ப்பு இல்லை. இப்போது நீங்கள் பார்க்கின்ற GST Road நேராக வரும். ஒரு முறை முன்னாள் பாரதப் பிரதமர் நேரு அவர்கள் அங்குள்ள railway gate–ல் நின்றுவிட்டார் என்ற ஒரு செய்தி வந்து பல பேர் அவரைப் பார்க்கச் சென்றார்கள். அந்த railway gate–ஐக்கூட திறக்கச் சொல்லிச் சொன்னார்கள். ஆனால், திறக்க முடியாது என்று சொன்ன அந்த railway gate keeper–ஐ டெல்லிக்கு அழைத்து அவருக்கு விருது கொடுத்தார்கள். அவருடைய குடும்பம் இன்றைக்கும் முடிச்சூரில் இருக்கிறது. இப்போது அந்த old GST Road எங்கே இருக்கின்றது என்று யாரைக் கேட்டாலும் தெரியாது. இப்போதுகூட மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அண்ணன் திரு. துரைமுருகன் அவர்கள் சொன்னார்கள். நாங்கள்கூட மேம்பாலம் கட்டினோம். கட்டும்போது மொத்தச் சாலைகளையும் போட்டுவிட்டுத்தான் மேம்பாலம் கட்டினோம். மேம்பாலம் கட்டுகிறார்கள் என்று முதல்நாள் சென்னையிலிருந்து தாம்பரத்திற்கு நான் பம்மல் வழியாக, Ponds company வழியாகச் சென்று bypass road–ல் என்னுடைய வீட்டிற்குச் சென்றேன். நேரடியாகச் சென்றால் 5 நிமிடம், குறுக்கே சென்றதால் 3 நிமிடம் extra ஆனது. இதை எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், Infrastructure–ஐ develop செய்கின்றபோது அரசு அதிகாரிகள் தனிக் கவனம் எடுத்து பொது மக்களுக்குப் பாதிப்பு இல்லாத வகையில் அந்தப் பணியைச் செய்தால் நல்லது. நீங்கள் அகலப்படுத்திக் கொடுத்தால் கண்டிப்பாக பொது மக்கள் வரவேற்பார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

[திரு. எஸ்.ஆர். இராஜா] [2019 ஜூலை 15

அதேபோல் பக்கத்தில் இருக்கின்ற மாடம்பாக்கத்திலிருந்து ராஜகீழ்பாக்கம், ராஜகீழ்பாக்கத்திலிருந்து மாடம்பாக்கம், அங்கிருந்து பக்கத்திலிருக்கின்ற சித்தாலப்பாக்கத்திற்கு 5 கிலோ மீட்டர் தொலைவில் ஒரு சாலை இருக்கின்றது. அதன் இரண்டு பக்கங்களிலும் கால்வாய் இல்லாத ஒரு நிலை இருக்கின்றது. நம்முடைய நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள் அதனைச் செய்து கொடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதுபோல் பக்கத்தில் இருக்கின்ற Eastern Bypass Road, 150 அடி road. அந்த 150 அடி ரோடு அறிவிக்கப்பட்டு பல ஆண்டுகாலம் ஆகிவிட்டது. உங்கள் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தைப் பார்த்தேன்; நில எடுப்பிற்கென 79 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதிலும் 39 கோடி ரூபாய்க்குத்தான் பணிகள் நடைபெற்றிருக்கின்றன. இடத்தை எடுப்பதற்கே இவ்வளவு நாட்கள் என்றால் எப்போது நீங்கள் சாலையைப் போடுவீர்கள்? அந்தச் சாலையில் 12 ஏக்கர் நிலம், அரசு நிலம். அரசு நிலம் மட்டும் அதில் கிடையாது; மேலும், திருவஞ்சேரி கிராமத்திலுள்ள SF 21/3, 12 ஏக்கர் அரசுக்குச் சொந்தமான land ceiling-ல் வரும் இடத்தினை தவறாகப் பயன்படுத்தி, அரசு அதிகாரிகளோ அல்லது சமூக விரோதிகளோ சற்றேறக்குறைய 50 கோடி ரூபாய் மதிப்புள்ள அந்த நிலத்திற்கான போலி தஸ்தாவேஜுகளைத் தயாரித்து எடுத்திருக்கின்றார்கள். அதைக் கண்டிப்பாக இந்த அரசு மீட்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 2–25

அதேபோல தாம்பரத்தைச் சுற்றியிருக்கின்ற பல பகுதிகள், குறிப்பாக திருநீர்மலை சாலை என்று எடுத்துக்கொண்டால், பாதி சாலை நகராட்சி சாலை, பாதி சாலை Highways சாலையாக இருக்கின்றது. காந்தி சாலையில் ஒரு பாதியை எடுத்திருக்கிறோம். ஆனால், ஒரு பாதியை நகராட்சியிடம் ஒப்படைத்திருக்கின்றார்கள். சுத்தானந்த பாரதி சாலையை எப்படி சொன்னேனோ, அதுபோல இவையெல்லாம் சின்ன சின்ன சாலைகள். இவையெல்லாம் பஸ் செல்கின்ற routes. நான் சென்றமுறைகூட இதுகுறித்துப் பேசினேன், அந்தச் சாலைகளையெல்லாம் மீண்டும் Highways சாலைகளாக எடுத்தால், இந்தப் பணிகளையெல்லாம் செய்வதற்குண்டான வாய்ப்புகள் நன்றாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மழைநீர் கால்வாய். முடிச்சூர் சாலை குறித்து இதே அவையிலே முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள், விதி 110–ன்கீழ் சொன்னார்கள். முடிச்சூர் சாலையை நான் அகலப்படுத்தி இரண்டு பக்கமும் கரை கட்டித் தருகிறேன் என்று அன்றைக்கு சொன்னார்கள். இதுவரை அந்தப் பணி நடைபெறவில்லை. கால்வாய்ப் பணி மட்டும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. Encroachment*–ஐ எடுத்து அந்தச் சாலைகளை அகலப்படுத்த முடியவில்லை. குறிப்பாக மண்ணிவாக்கம் பகுதியிலிருந்து முடிச்சூர் வரை அந்தக் கால்வாயைக் கட்டினால் மழைநீர் தேங்குவதற்கு வசதியாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோல இன்னொரு செய்தியைச் சொல்கிறார்கள்.* Highways*–ல்* tender *விடும்போது, தார் எல்லாம்* Indian Oil Corporation*–இடம் வாங்க வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால் யாருமே* Indian Oil Corporation*–இடம் வாங்குவதில்லை. எல்லாமே சீனாவிலிருந்து வாங்குவதாக ஒரு செய்தியைச் சொல்கிறார்கள். அது எந்தளவிற்கு உண்மை என்பது எனக்குத் தெரியாது. இருந்தாலும் அப்படி தவறு இருந்தால், அதை. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* tender *விடும்போது* pre–qualification*–ல் எல்லாமே தெரிவித்துவிடுகிறார்கள். என்னென்ன ஆதாரம் இருக்க வேண்டும், அதை எப்படிச் செயல்படுத்த வேண்டும் என்று அந்த ஒப்பந்தப்புள்ளியிலேயே தெரிவிக்கப்படுகிறது. அதன் அடிப்படையில்தான்* tender *விடுகிறார்கள்.* Indian Oil Corporation *இடம்தான் வாங்குகிறார்கள். அப்படி ஏதாவது தவறுதலாக வாங்கி இருந்தால், நீங்கள் சுட்டிக்காட்டினீர்கள் என்றால், அரசு நடவடிக்கை எடுக்கும். அதேபோல, இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு கருத்துகளைச் சொன்னார்கள். எல்லாவற்றிலும் வேகமாக, துரிதமாக அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. உங்களுடைய தொகுதியில்தான் அதிகமான சாலைப் பணிகள் நடைபெற்றிருக்கின்றன. பல்வேறு சாலைப் பணிகளும் அதிகமாக உங்கள் தொகுதியில்தான் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை காட்டுப்பள்ளி துறைமுகத்தில் நவீன வசதிகள் கொண்ட கப்பல் கட்டும் தளங்கள், சரக்குப் பெட்டகங்களைக் கையாளும் இயந்திர வசதிகள் உள்ளன. இது தனியார் துறையும் TIDCO–வும் இணைந்து, ஆயிரம் ஏக்கர் நிலம் தரப்பட்டு, இன்றைக்கு மிகப் பெரிய தனியார் துறைமுகமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. முன்னாள் மத்திய அமைச்சர் திரு. ஜி.கே. வாசன் அவர்கள் எண்ணூர் துறைமுகத்திற்கு காமராஜர் துறைமுகத்தை என்று பெயர் வைத்திருக்கின்றார்கள். அதுபோல, தூத்துக்குடி துறைமுகத்தை ஒரு காலத்திலே மத்திய அரசாங்கம் கொண்டு வந்தபோது நஷ்டத்திலே இருக்கின்றது என்று சொல்லி, அந்தத் தூத்துக்குடி துறைமுகத்தை மூட வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் அன்றைக்கு இருந்த நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் எவ்வளவு நஷ்டம் வந்தாலும், அந்தத் துறைமுகம் இருக்க வேண்டும் என்று சொல்லி, அதன் பிறகு தூத்துக்குடி துறைமுகத்திற்கு முன்னாள் மத்திய அமைச்சர் அவர்கள் வ.உ.சி. பெயரை வைத்திருக்கின்றார்கள். நான் சொல்ல வருவது நம்முடைய major port ஆக இருக்கின்ற காட்டுப்பள்ளி துறைமுகத்திற்கு பேரறிஞர் அண்ணாவினுடைய பெயரைச் சூட்ட வேண்டும் என்று இந்த நேரத்திலே இந்த அரசை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, இன்னும் நிறைய பேசலாம். வாய்ப்பு இருக்கிறது. கொஞ்சம் உரையை முடியுங்கள். நேரமில்லை. 4.30 மணிக்கு சபை மீண்டும் கூட வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பதிலுரை இருக்கிறது.

பிற்பகல் 2–30

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு பொது subject-ஐ மட்டும் சொல்லிவிடுகிறேன். மீதியைப் பதிவு செய்வதற்காகத் தங்களிடம் கொடுத்து விடுகிறேன். தேசிய பசுமைத் தீர்ப்பாயம் தமிழக அரசுக்கு 100 கோடி ரூபாய் அபராதம் விதித்திருக்கின்றது. ஆனால், இந்த அரசு 2,300 கோடி ரூபாய் செலவில் கூவம், அடையாறு உள்ளிட்ட

சென்னை நதிகளைத் தூய்மைப்படுத்தும் என்று விதி 110–ன்கீழ் அவசர அவசரமாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேரவையில் அறிவித்தார். இந்தத் திட்டத்தில் சென்னை நதிநீர் மீட்பு trust *ஆகச் செயல்பட வேண்டும் என முதல்வர் அறிவிப்புச் செய்திருக்கிறார். இதற்கான கருத்துரு 2006–2011 ஆம் ஆண்டில், தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது உருவாக்கப்பட்டது. ஆனால், 8 ஆண்டுகளாக இதற்கான நடவடிக்கைகள் இல்லை. கலைஞர் எண்ணியதை முனைப்புடன் செயல்படுத்தியிருந்தால், அரசு ரூ.100 கோடி அபராதம் கட்டவேண்டிய அவல நிலை இன்று வந்திருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்பொழுதாவது சென்னை நதிநீர் தூய்மைப்படுத்தும் திட்டத்தைச் செயல்படுத்த முன்வந்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ரூ.100 கோடி அபராதத்தைப் பற்றிச் சொன்னார்கள். கூவம், அடையாறு மற்றும் பக்கிங்ஹாம் கால்வாய் ஆகியவற்றில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவும், நீர் ஆதாரங்கள் போன்றவற்றிலிருந்து நீக்கவும் உத்தரவிட வேண்டி தென் மண்டல தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தில் வழக்குத் தொடரப்பட்டது. அடையாறு, கூவம் மற்றும் பக்கிங்ஹாம் கால்வாயிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், மாசு கட்டுப்படுத்துதல் மற்றும் பக்கிங்ஹாம் கால்வாயை ஆழப்படுத்துதல், அகலப்படுத்துதல் மற்றும் வெள்ளத் தடுப்புச் சுவர் அமைக்கும் பணிகள் காலதாமதமாக நடைபெறுவதால் தேசிய பசுமைத் தீர்ப்பாயம் 31–10–2018 அன்று பொதுப் பணித் துறை 2 கோடி ரூபாய் அபராதம் செலுத்த வேண்டுமென உத்தரவு பிறப்பித்தது. இதனை எதிர்த்து, உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டதன் அடிப்படையில், இந்த ஆணையை உயர் நீதிமன்றம் நிறுத்தி வைத்தது. தேசிய பசுமைத் தீர்ப்பாயம் கேட்டுக்கொண்டதன்படி, ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணி முழுவதும் 2022–க்குள் முடிவடையும் என தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், பொதுப் பணித் துறைக்குத் தெரிவித்ததையடுத்து, இத்தீர்ப்பாயத்திடம் செயல் திட்ட அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இந்த அறிக்கையில் அடையாறு, கூவம், பக்கிங்ஹாம் கால்வாய் மற்றும் ஓட்டேரி நல்லாவில்*

மொத்தம் 71,268 ஆக்கிரமிப்புகள் உள்ளன என்றும், இதுவரையில் 14,400 ஆக்கிரமிப்புகளுக்கு மறு குடியிருப்பு குடிசை மாற்று வாரியத்தால் வழங்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. மீதமுள்ள ஆக்கிரமிப்புகள் 2022 ஆம் ஆண்டிற்குள் படிப்படியாக அகற்றப்படும் என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அறிக்கையை தேசிய பசுமைத் தீர்ப்பாயம் ஏற்றுக்கொள்ளாமல் 13–2–2019 அன்று பிறப்பித்த ஆணையில், சென்னை நீர்வழித் தடங்கள் மாசடைந்து சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பாக உள்ளதால் மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.100 கோடி வழங்குமாறு உத்தரவிட்டது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து, சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு தாக்கல் செய்த வழக்கில் 25–6–2019 வரையில் தீர்ப்பை நிறைவேற்றுவதற்கு இடைக்காலத் தடை ஆணை வழங்கப்பட்டது. இவ்வழக்கு 12–7–2019 அன்று மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, சட்டப்படி தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தை அணுகுமாறு உத்தரவிட்டு, இம்மனுவைத் தள்ளுபடி செய்து, இடைக்கால ஆணையை விலக்கிக்கொண்டு தீர்ப்பளித்துள்ளது. இது தொடர்பாக சட்ட வல்லுநர்களைக் கலந்தாலோசித்து மேல்முறையீடு செய்வது குறித்து இந்த அரசு தகுந்த முடிவெடுக்கும். இருப்பினும், இந்த ஆக்கிரமிப்புகளெல்லாம் தற்பொழுது நடந்ததல்ல. அவர்களுடைய ஆட்சிக் காலத்திலிருந்து இப்பொழுது வரைக்கும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு கட்டப்பட்ட குடியிருப்புகளை அகற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. ஏனென்றால் இவை எல்லாம் பல ஆண்டுகளுக்கு முன்பு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு கட்டப்பட்ட கட்டடங்கள் ஆகும். இதில் 71,268 ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன. எனவே, அந்த ஆக்கிரமிப்புகளையெல்லாம் உடனே எடுத்துவிட முடியாது. இந்த ஆக்கிரமிப்புகளையெல்லாம் படிப்படியாகத்தான் அகற்ற முடியும். 2022 ஆம் ஆண்டுக்குள் ஆக்கிரமிப்புகள் முழுவதும் அகற்றப்படும் என்று நீதிமன்றத்தில் சொன்னோம். ஆனால், நீதிமன்றம் அதனை ஏற்றுக்கொள்ளாமல் அபராதம் விதித்திருக்கின்றது. இதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர் சென்னையிலே வசிக்கின்றவர். ஏழையெளிய மக்கள் அதிகம் நிறைந்த பகுதி. அந்த ஆக்கிரமிப்புகள் உடனடியாக அகற்றப்பட்டால் அவர்களுக்கு மாற்று இடம் கொடுக்க வேண்டும். அந்த மாற்று இடத்தை அரசு தேர்வு செய்து, அவர்களுக்குக் கொடுத்து வருகிறது. இதுவரைக்கும் 14,400 ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டிருக்கின்றன. எஞ்சிய ஆக்கிரமிப்புகளை படிப்படியாக அகற்றி, நீதிமன்ற உத்தரவை

அரசு செயல்படுத்தும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகளுக்கும் அரசு தேவையான நிதி ஒதுக்கீடு செய்து, அந்தப் பணியும் தற்போது நிறைவேற்றப்பட்டு வருகிறது என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், திரு. எஸ்.ஆர். இராஜா, சீக்கிரம் உரையை முடியுங்கள்.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *அந்த சப்ஜெக்ட்டைக்கூட இன்னும் நான் முடிக்கவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்களுடைய தொகுதிக் கோரிக்கைகளைக் கொடுத்துவிடுங்கள். நான் அவற்றைப் பதிவு செய்துகொள்கிறேன்.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *நான் ஒரேயொரு விஷயத்தைச் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேற்றையதினம் பேரவை விதி 110–ன்கீழ் ரூ.25 கோடி நிதியை சிட்லப்பாக்கம் பகுதிக்கு அறிவித்திருக்கிறார்கள். அதுபோல, பீர்க்கன்கரணைக்கும் ரூ.9 கோடியே 81 இலட்சம் அளவிற்கு ஏரியைச் சீர் செய்வதற்கு ஒதுக்க வேண்டும். இப்பொழுது பத்திரிகைகள் நிறைய இருக்கின்றன. குறிப்பாக, 15 தினங்களாக தொடர்ந்து தினமலர் பத்திரிகையில் எந்தெந்த ஏரிகளை பொது மக்கள் சீர் செய்து வருகிறார்கள் என்று செய்தி வருகிறது. பொது மக்கள் இன்றைக்கு அதிக awareness உடன் இருக்கிறார்கள். என்ன awareness என்றால், ஏரிகள் நன்றாகப் பராமரிக்கப்பட வேண்டும் என்று நினைக்கிறார்கள்.ஏரியில் இருக்கின்ற தண்ணீர் நன்றாகஇருக்க வேண்டுமென்று நினைக்கிறார்கள். பொதுமக்களுக்கு இதுகுறித்த awarenessஇருக்கிறது. சமூக ஆர்வலர்கள் வேகமாக அந்தப் பணியில் ஈடுபட்டு, பணியைச் செய்து கொண்டிருக்கிறார்கள். தாம்பரம் தொகுதியில் உள்ள பெருங்குடியில் ஓர் ஏரி இருக்கிறது. அதனைச் சீர்செய்ய ரூ.90 இலட்சம்தான் செலவாகியிருக்கிறது. இப்பொழுது போய்ப் பாருங்கள், பெருங்குடி ஏரியில் தண்ணீர் இருக்கும். ஆக, தாம்பரத்தில் இருக்கின்ற ஏரிகளெல்லாம் இப்பொழுது மோசமான நிலையில் இருக்கின்றன. உண்மையிலேயே, பழைய தாம்பரத்தில் நான் இருக்கின்ற ஊரில் ஒரு குளம் இருக்கிறது. அந்தத் தண்ணீரில்*

முகத்தைக் கழுவினால், கண் பார்வை போய்விடும் என்று Water Supplies Department–ல் report கொடுக்கிறார்கள். ஆக, மிகப் பெரிய அளவில் கழிவுநீர் ஏரிகளுக்குப் போவதால், இத்தகைய ஒரு நிலை இருக்கிறது. மாடு தண்ணீர் குடித்தாலே pollution என்று சொல்கிறோம். அத்தகைய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆக, இந்த நேரத்திலே அரசு இதில் கவனம் செலுத்த வேண்டும். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு விஷயத்தைச் சொல்லிவிட்டு, அத்துடன் உரையை முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், போதும். உட்காருங்கள்.

பிற்பகல் 2–35

திரு. எஸ்.ஆர். இராஜா: மீதியுள்ள என்னுடைய தொகுதிக் கோரிக்கைகளை நீங்கள் பதிவு செய்துகொள்கிறேன் என்று சொல்லிவிட்டீர்கள். நான் சொல்ல வருவது என்னவென்று சொன்னால், தாம்பரத்தைச் சுற்றியிருக்கின்ற இடத்தில் யார் வேண்டுமானாலும் fl tகட்டுகிறார்கள். அந்தக் குடியிருப்புகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரை எங்கு கொண்டுவந்து விடுவார்கள்? CMDA என்ன செய்கிறார்கள்? 6 வீடுகள் கட்டலாம், 8 வீடுகள் கட்டலாம் என்று சொல்கிறது. நான் சொல்ல வருவது என்னவென்றால் இனிமேல் வீடுகளே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உட்காருங்கள். போதும், உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஏரிகள் எல்லாம் இந்த ஆட்சிக் காலத்தில் வந்ததல்ல. அவர்கள் ஆட்சிக் காலத்திலும் அந்த ஏரிகள் இருந்தன. அப்பொழுதும் கழிவுநீர் கலந்துகொண்டுதான் இருந்தது. ஆனால், இப்பொழுது விழிப்புணர்வு ஏற்பட்ட காரணத்தினாலே, மக்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் தானாக முன்வந்து, அந்த ஏரிகளையெல்லாம் சுத்தம் செய்வதற்கும், நீர்நிலைகளைக் காப்பதற்கும் முன்வந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இவையெல்லாம் பழங்காலத்திலிருந்து இருக்கின்றன. நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். 14,098 ஏரிகள் PWD-இடம் இருக்கின்றன. இந்த ஏரிகள் அனைத்துமே நீண்ட காலமாக இருக்கின்ற

ஏரிகள்தான். ஏதோ தற்போது எங்கள் அரசில்தான் கழிவுநீர் கலப்பதுபோலவும், நாங்கள் நடவடிக்கை எடுக்காததுபோலவும் ஒரு தோற்றத்தை அளிப்பதுபோல் பேசுவது முறையா என்பதை இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்க வேண்டும். எங்கு கழிவுநீர் கலந்தாலும், அதைத் தடுப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது. அதுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், காவேரி நதி நீரானாலும் சரி, பவானிசாகரானாலும் சரி, அமராவதியானாலும் சரி, வைகை நதியானாலும் சரி, அவற்றில் மாசுபட்ட நீர் கலப்பதைத் தடுப்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, உரிய நடவடிக்கைகளை எடுத்து, அதனை மறு சுழற்சி செய்து, அந்த மாசுபட்ட நீரை நதியில் விடுவதற்கு இப்போது விரிவான திட்ட அறிக்கையைத் தயாரித்துக் கொண்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, இன்றைக்கு, பெரிய பெரிய நகரங்களில், சென்னை நகரத்திலும் சரி, தமிழகம் போன்ற பெரு நகரங்களில் இருக்கின்ற கழிவுநீர் அனைத்தும் அங்கிருக்கின்ற நதிகளில் சென்று கலக்கின்றன. அப்போது அந்த நதி மாசுபடுகின்றது; ஏரிகளில் சென்றும் கலக்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மாசுபட்ட நீர் அனைத்தையும் மறு சுழற்சி செய்து, சுத்தப்படுத்தி, குளங்களிலும், ஆறுகளிலும் நீரை விடுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள். நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

திரு. எஸ்.ஆர். இராஜா: இதுவரை எனக்கு ஆதரவு அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு, ஒரே ஒரு விஷயம்... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லாவற்றையும் பதிவு செய்துகொள்கிறேன்.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறையின்மூலம் தாம்பரம் தொகுதிளைச் சுற்றியிருக்கின்ற பல்லாவரம், சோழிங்கநல்லூர் ஆகிய பகுதிகளுக்கு தனி அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் அன்போடு கேட்டு அமர்கின்றேன், நன்றி. வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

தாம்பரம் நகராட்சிப் பகுதியில் சொத்து வரியினைக் குறைத்து மதிப்பீடு செய்ய கேட்டுக்கொள்கிறேன்.

தாம்பரத்தில் உள்ள தாம்பரம் பெரிய ஏரி, இரும்புலியூர் ஏரி, வண்ணாந்தாங்கல் ஏரி, புலிக்கொரடு ஏரி, இடும்பன் ஏரி, எட்டித்தாங்கல் ஏரி ஆகியவற்றை ஆழப்படுத்தி, தூர்வாரி கரை உயர்த்தித் தரப்பட வேண்டும். தாம்பரம், முல்லை நகர் வீட்டு வசதி வாரியத்தில் உள்ள புத்தாங்கல் ஏரியைத் தூர்வாரி, கரை உயர்த்தித் தரப்பட வேண்டும். இந்த ஏரியை (TNSUDP) *திட்டம்மூலம் பூங்கா அமைத்து, சுற்றிலும் கரைமேல் நடைபாதை அமைத்து விளக்குகள் பொருத்தித் தரப்பட வேண்டும்.*

தாம்பரம் நகராட்சி, கடப்பேரி பகுதியில் உள்ள புத்தேரியை சுத்தப்படுத்தி, தூர்வாரி ஆழப்படுத்தி, கரையை உயர்த்தி நீராதாரம் உயரச் செய்ய வேண்டும். அற்புதம் நகரிலிருந்து GST *சாலை வரை விளக்குகளுடன் சாலை அமைத்து, இலகு வாகனங்கள் சென்று வரும் வழியை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தாம்பரம் தொகுதி, முடிச்சூர் ஊராட்சியில் உள்ள பெரிய ஏரியையும், சித்தேரியையும் தூர்வாரி, ஆழப்படுத்தி கரையை உயர்த்தித் தர வேண்டும். தாம்பரம் தொகுதி, மாடம்பாக்கம் பெரிய ஏரியை தூர்வாரி, ஆழப்படுத்தி, கரையை உயர்த்த வேண்டும். தாம்பரம் தொகுதியில், செம்பாக்கம் பகுதியில் பொதுப் பணித் துறை பராமரிப்பில் உள்ள செம்பாக்கம் பெரிய ஏரியைத் தூர்வாரி, ஆழப்படுத்தி, கரையை உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மழைக் காலங்களில் உபரி நீர் வெளியேற கலங்கல் பகுதி அமைத்துத் தரப்பட வேண்டும். கரையில் நடைபயிற்சிக்கு ஏற்றவாறு பாதை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

செம்பாக்கம் நகராட்சியில், கௌரிவாக்கம் பகுதியில் உள்ள ஏரியை ஆழப்படுத்தி, தூர்வாரி கரையை உயர்த்தி, நீராதாரம் கிடைக்கும் வகையில் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தாம்பரம் தொகுதியில், திருவஞ்சேரி ஊராட்சியில் உள்ள ஏரியைத் தூர்வாரி, ஆழப்படுத்தி, கரையை உயர்த்தித் தர வேண்டும். அகரம்தென் ஏரியைத் தூர்வாரி, ஆழப்படுத்தி, கரை உயர்த்தி கட்டித் தர வேண்டும். இதன் வழியில் வேங்கடமங்கலம் ஊர் எல்லையில் தண்ணீர் தேங்க பெரிய தேக்க

அணை உள்ளது. இதனைப் புதுப்பித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சேலையூரில் உள்ள ஏரியைத் தூர்வாரி, ஆழப்படுத்தி, கரையை உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாம்பரம் நகராட்சி பேருந்து நிலையத்தை, மிகப் பெரிய மாடல் பேருந்து நிலையமாக அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். தாம்பரம், முடிச்சூர் ரோடு, வேளச்சேரி ரோடு, காந்தி ரோடு, இராஜாஜி ரோடு ஆகிய பகுதிகள் மற்றும் தாம்பரம் நகராட்சிப் பகுதியில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

தாம்பரம் தொகுதி, கிழக்கு தாம்பரம் பகுதியில் உள்ள 24, 25, 26 மற்றும் 27 ஆகிய வட்டங்களில் தலா ஓர் அரசு ஆரம்ப சுகாதார மருத்துவமனையை அமைத்துக் கொடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். தாம்பரம் தொகுதி, கிழக்கு தாம்பரத்தில் தற்போது 20 படுக்கை வசதிகளுடன்கூடிய சிறிய பிரசவ மருத்துவமனையை, தரம் உயர்த்திய மருத்துவமனையாக மாற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தாம்பரம் தொகுதியைச் சுற்றியுள்ள செம்பாக்கம் நகராட்சி, சிட்லபாக்கம் பேரூராட்சி, பெருங்களத்தூர் பேரூராட்சி, பீர்க்கன்கரணை பேரூராட்சி, மாடம்பாக்கம் பேரூராட்சி, முடிச்சூர் ஊராட்சி, அகரம் ஊராட்சி ஆகிய பகுதிகளுக்கு பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிட்லபாக்கம் பேரூராட்சியினை நகராட்சியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாம்பரம் நகராட்சியினை மாநகராட்சியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சிட்லபாக்கம் பேரூராட்சிப் பகுதியில் கூடுதலாக பத்து இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தாம்பரம் GST சாலையில் உள்ள தாம்பரம் கிழக்குப் பகுதியையும், மேற்குப் பகுதியையும் இணைக்கும் மேம்பாலத்திலிருந்து தாம்பரம் முக்கிய வியாபாரப் பகுதியான சண்முகம் சாலைக்குச் செல்ல ஒரு வழி ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேம்பாலம் வழியாக வியாபாரப் பகுதியான சண்முகம் சாலை சென்று வரும்படியாக மேம்பாலத்தினை மாற்றியமைத்து (Re–modification) செய்து தர

வேண்டியும், முடிச்சூர் சாலையின் மறுபுறம் சர்வீஸ் சாலைகள் அமைத்துத் தரவும் வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

முடிச்சூர் மற்றும் அகரம் ஊராட்சி பொதுமக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ராஜகீழ்பாக்கம் ஏரியையும் செம்பாக்கம் ஏரியையும் இணைக்கும் கால்வாயை அகலப்படுத்தித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். தாம்பரம் ரயில் நிலையத்தையும், பேருந்து நிலையத்தையும் இணைக்கும் வகையில் நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய நடை மேம்பாலப் பணிகளை விரைவில் முடிக்க வேண்டும். தாம்பரம் நகராட்சிப் பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டத்தை விரைந்து முடித்துக் கொடுக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

தாம்பரம் நகராட்சிக்கு I.A.S. அந்தஸ்தில் ஓர் அதிகாரியை நியமிக்கக் கேட்டுக்கொள்கிறேன். பீர்க்கன்கரணையில் உள்ள ஏரியைத் தூர்வாரி, ஏரியில் எடுத்த மண்ணைக் கொண்டு கரையைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 2015 ஆம் ஆண்டின் பெருமழை வெள்ளம் காரணமாக சி.டி.ஓ. காலனி, பாரதி நகர், கிருஷ்ணா நகர், முடிச்சூர் போன்ற பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மத்திய அரசின் நிதியை சரியாக ஒதுக்கீடு செய்து, பணிகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிலுரை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா தெய்வத்தை வணங்கி, மாண்புமிகு அம்மா அவர்கள் இதயம் உள்ள இறைவனாக, மண்ணில் மலர்ந்தவர், மக்கள் நலனை மனதில் நிறுத்தி, மாண்புகள் கண்டவர், மாநிலமே மகிழும் வண்ணம் அக்கறை கொண்டவர், தேவை என்ன என்று தெரியும் முன்னே, சேவை செய்தவர், (மேசையைத் தட்டும் ஒலி) இல்லையென்ற சொல்லே இங்கே இல்லை என்பவர், (மேசையைத் தட்டும் ஒலி) எல்லோருக்கும் எல்லாம் பொதுவே என்று உரைத்தவர், சட்டங்களையே சலவை செய்யும் வித்தை கற்றவர், (மேசையைத் தட்டும் ஒலி) சரித்திரத்தையே மாற்றி எழுதும் துணிவைப் பெற்றவர், (மேசையைத் தட்டும் ஒலி) சாணக்கியனையும் மாணவனாக்கும் ஞானம் பெற்றவர், (மேசையைத் தட்டும் ஒலி) ஏழைகளின் கனவுகளையெல்லாம் நினைவாக்கியவர், (மேசையைத் தட்டும்

ஒலி) உலகில் தமிழ்நாட்டை உயர்த்திப் பிடித்தவர், மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, எனது பதிலுரையைத் துவக்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறை. பொருளாதாரத்தில் வேகமாக வளர்ந்து வரும் இந்தியா, உலகிலேயே இரண்டாவது அதிக சாலை வலைதளங்களைக் கொண்டுள்ளது. சாலைப் போக்குவரத்தானது, சரக்கு மற்றும் பயணிகளின் போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்தல், எளிதாக அணுகுதல், செயல்பாடுகளில் இணக்கமான சூழல் மற்றும் நம்பகத்தன்மை ஆகியவற்றினால் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. இந்தியாவிலேயே தமிழ்நாடு, அதிக அளவில் நகரமயமாக்கப்பட்ட மாநிலமாகத் திகழ்கிறது. மேலும், வளர்ச்சியடைந்த, நிலையான பொருளாதாரம் மற்றும் கல்வி வளர்ச்சி பெற்ற மாநிலமாகவும், பல துறைகளில் முன்னோடியாகவும் விளங்குகிறது. வாகன உற்பத்தி, பொறியியல், தோல் பொருட்கள், ஆடை உற்பத்தி, தொழிற்சாலைகள், சுகாதாரம், சுற்றுலா மற்றும் கலாச்சார மையங்கள் ஆகியவற்றில் முன்னணி வகிப்பதுடன், விவசாய வளர்ச்சியில், நாட்டிற்கே நெற்களஞ்சியமாக உள்ளது.

இந்தியாவிலேயே தமிழ்நாடு 11–வது பெரிய மாநிலமாக 1,30,058 சதுர கிலோ மீட்டர் மொத்தப் பரப்பளவு கொண்டு திகழ்கிறது. இம்மாநிலத்தின் மக்கள் தொகை ஒரு சதுர கி.மீ.–க்கு 555 நபர்களாக உள்ளது. வாகனங்களின் எண்ணிக்கை 1951 ஆம் ஆண்டு 27,325–லிருந்து 2018 ஆம் ஆண்டு 2 கோடியே 56 இலட்சத்து 67 ஆயிரத்து 844 ஆக உயர்ந்துள்ளது.

பிற்பகல் 2–40

இம்மாநிலத்தில் 2016–ல் சாலை அடர்த்தி ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு 361 கிலோ மீட்டராகவும், 100 சதுர கிலோ மீட்டருக்கு 200 கிலோ மீட்டர் நீளமாகவும், இந்திய சராசரியான 170 கிலோ மீட்டர் நீளத்தைவிட அதிகமானதாகவும் உள்ளது. தமிழ்நாட்டில் சாலைக் கட்டமைப்பு 1951–ல் 32,307 கிலோ மீட்டர் நீளத்திலிருந்து 8.08 மடங்கு உயர்ந்து 2016–ல் 2 இலட்சத்து 61 ஆயிரத்து 35 கிலோ மீட்டராக உயர்ந்துள்ளது. தற்சமயம் 66 ஆயிரத்து 39 கிலோ மீட்டர் நீளச் சாலைகள் மத்திய மற்றும் மாநில நெடுஞ்சாலைத் துறைகளால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு இந்தியாவிலேயே அதிக அளவில் நகரமயமாக்கப்பட்ட மாநிலமாகத் திகழ்கிறது. உலகமயமாக்கப்பட்ட பொருளாதாரத்தில், போட்டி நிலையினை உயர்த்தவும், உற்பத்தி மற்றும் செயல்திறனை அதிகரிக்கவும், சிறந்த சாலை கட்டமைப்பானது அவசியமாகிறது. பசுமையான சாலைகள், அவற்றில் பாதுகாப்பான பயணம் என்கின்ற உயரிய இலட்சியத்துடன் மாநிலத்தின் அனைத்துத் தரப்பு மக்களின் சமூகப் பொருளாதார நிலையினை மேம்படுத்தும் நோக்கத்தோடு நெடுஞ்சாலைத் துறை செயல்படுகிறது.

நல்ல சாலை இணைப்புகள் நகர மற்றும் கிராமப்புறங்களின் பொருளாதார மேம்பாட்டை ஊக்குவிக்கின்றன. தமிழ்நாட்டில் சாலை மற்றும் துறைமுக உள்கட்டமைப்புகளை உருவாக்குதல், மேம்படுத்துதல், பராமரித்தல் ஆகியவற்றுடன் தமிழ்நாடு முழுவதும் சமநிலை சமூகப் பொருளாதார வளர்ச்சி அடைய நல்ல தரமான சாலை இணைப்புகள், அகலமான சாலைகள், சுற்றுச் சாலைகள், பாலங்கள், இரயில்வே கடவில் மேம்பாலங்கள், கீழ்ப்பாலங்கள் மற்றும் சிறு துறைமுகங்களை மேம்படுத்துதல் ஆகியவற்றை நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் நெடுஞ்சாலைத் துறையால் 11,169 கிலோ மீட்டர் நீள மாநில நெடுஞ்சாலையாகவும், 11,612 கிலோ மீட்டர் நீள மாவட்ட முக்கிய சாலையாகவும் மற்றும் 36,624 கிலோ மீட்டர் நீள மாவட்ட இதர சாலையாகவும் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும், தேசிய நெடுஞ்சாலையின் மொத்த நீளம் 6,634 கிலோ மீட்டர். இதில் 1,900 கிலோ மீட்டர் சாலைகள் மாநில அரசின் தேசிய நெடுஞ்சாலை அலகின்மூலமும் 4,734 கிலோ மீட்டர் சாலைகள் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம்மூலமும் பராமரிக்கப்படுகின்றன.

மூன்று ஆண்டு சாதனைகள்: மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நல்லாசியுடன் நடைபெற்றுவரும் இந்த அரசானது நெடுஞ்சாலைத் துறையின்மூலம் பல்வேறு திட்டங்களின்கீழ் சாலை உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் இத்துறையின் வாயிலாக மொத்தம் 19,608.81 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 20,237 கிலோ மீட்டர் சாலைகளில் அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகிய பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், 281 பாலங்கள் மற்றும் 629 சிறு பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. இதுதவிர

சாலை பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகளுக்கு 2,991.74 கோடி ரூபாய் செலவிடப்பட்டு 10,486 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் இடர்ப்பாடற்ற போக்குவரத்தினைக் கையாள ஏதுவாகப் புதுப்பிக்கப்பட்டுள்ளன. 2018–2019 ஆம் ஆண்டில், திருச்சி மாவட்டம், திருச்சி இரயில்வே சந்திப்புப் பகுதியில் 115.59 கோடி ரூபாய் மதிப்பிலும், கோயம்புத்தூர் மாவட்டம், காரமடைப் பகுதியில் 41.40 கோடி ரூபாய் மதிப்பிலும் கட்டி முடிக்கப்பட்ட இரயில்வே மேம்பாலங்கள் உட்பட மொத்தம் 2018–2019–ல் 6 இரயில்வே மேம்பாலங்கள், 247.04 கோடி ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறை பொறியாளர்களின் திறனை மேம்படுத்துதல். நெடுஞ்சாலைத் துறையில் கடந்த 3 ஆண்டுகளில் புதியதாக 376 உதவிப் பொறியாளர்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டனர். இவர்களின் பணித் திறனை ஆரம்பகட்டத்திலேயே மேம்படுத்த பணிசார்ந்த பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் பாலம் கட்டுதல், சாலை அமைத்தல் ஏனைய கட்டமைப்புகளை நவீன தொழில்நுட்பத்துடன் கட்டுமானம் செய்வதற்கு கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள், நிலம் கையகப்படுத்துவது மற்றும் முன்நுழைவு அனுமதி பெறப்படுவதற்குக் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள் தொடர்பாக பயிற்சி வழங்கப்பட்டது. இதனால் அவர்கள் பணியினை முழுவேகத்தில் ஆரம்பிக்க உதவுகிறது. புதிதாக பணியில் சேரும் பொறியாளர்களுக்கும் மற்றும் பணியில் பல்வேறு நிலைகளில் உள்ள பொறியாளர்களுக்கும் இப்பயிற்சியினைத் தொடர்ந்து வழங்க திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதனால் பணியில் காலதாமதம் தவிர்க்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018–2019–ல் மேற்கொள்ளப்பட்ட முக்கிய பணிகள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி நெடுஞ்சாலைத் துறை முனைப்புடன் சாலை மேம்பாட்டுப் பணிகளை செயலாக்கத்திற்கு எடுத்துக்கொண்டு, பல்வேறு சாலைகளைச் சீரிய முறையில் பராமரித்து வருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்கள் மறைந்தும் மறையாமல் மக்களின் நினைவுகளில் என்றென்றும் நிற்பதற்குக் காரணம் அரிய பல மக்கள் நல திட்டங்களைச் செயல்படுத்தியதுதான். (மேசையைத் தட்டும் ஒலி)

அந்தவகையில் நெடுஞ்சாலைத் துறையில் 2004–2005 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்திய உன்னதமான திட்டம், ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்–CRIDP. இத்திட்டத்தில் சாலை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல், பாலங்கள் கட்டுதல், சிறு பாலங்கள் கட்டுதல், சாலை பாதுகாப்புப் பணிகள் மற்றும் புறவழிச் சாலைகள் அமைத்தல் போன்ற உள்கட்டமைப்புகளை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. நெடுஞ்சாலைத் துறையின்மூலம் பராமரிக்கப்படும் சாலைகளில் கடந்த 5 ஆண்டுகளில் 2014–2015 ஆம் ஆண்டு முதல் 2018–2019 ஆம் ஆண்டு வரை 21,357 கிலோ மீட்டர் சாலைகளில் உறுதிபடுத்துதல் மற்றும் அகலப்படுத்தும் பணிகள் இத்திட்டத்தின்கீழ் முடிக்கப்பட்டுள்ளன. கோவை, சேலம், திருச்சி, மதுரை ஆகிய நகரங்களில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு பாலங்கள் கட்டப்படுகின்றன. கோயம்புத்தூர்–இராமநாதபுரம் மற்றும் சுங்கம் சந்திப்பில் மேம்பாலம், கவுண்டம்பாளையம் சந்திப்பில் மேம்பாலம், GN Mills சந்திப்பில் மேம்பாலம் ஆகியனவற்றிற்கு அண்மையில் ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சேலம் மாநகரில் திருவாக்கவுண்டனூர் சாலை சந்திப்பு, சேலம் இரும்பு உருக்காலை சாலை சந்திப்பு, குரங்குச்சாவடி மற்றும் AVR Roundana–வை இணைக்கும் வகையில் சாலை மேம்பாலம் ஆகியன பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வந்ததால் போக்குவரத்து நெரிசல் பெருமளவில் குறைந்துள்ளது. மதுரையில் காலவாசல் சந்திப்பில், பாலப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பரவை–துவரிமான் இணைப்புப் பாலம் வைகை ஆற்றின் குறுக்கே கட்டப்படுகிறது. மதுரை சுற்றுச்சாலைப் பணி விரைவில் முடிக்கப்பட உள்ளது. பாண்டிகோயில் சாலை சந்திப்பில் ஒரு பல்லடுக்கு பாலப் பணி நடைபெறுகிறது. பாலங்கள் கட்டும் சில நேர்வுகளில் நிலம் கையகப்படுத்துவதில் சிரமம் ஏற்படும்போது கட்டுமானப் பணி தாமதப்படுகிறது. இதைத் தவிர்ப்பதற்காக தனிக் கவனம் செலுத்தப்படுகிறது. அனகாபுத்தூரில் பாலம் கட்டப்பட்டபின் அணுகு சாலை–மாண்புமிகு உறுப்பினர் வரவில்லை–மத்திய இராணுவ நிலத்தில் அமைய இருந்ததால், உரிய அனுமதி பெறுவதில் தாமதம் ஆகியது. இதனைக் களைய அப்போதைய இராணுவ அமைச்சரிடம் நானே நேரில் பேசிய பின், உரிய அனுமதி தற்போது பெறப்பட்டுள்ளது. பாலத்தின் அணுகு சாலை விரைவில் அமைக்கப்பட்டு, பொதுமக்களின்

பயன்பாட்டிற்குப் பாலம் திறந்துவிடப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

புறவழிச் சாலைகள். நகரங்களில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கவும், கனரக வாகனங்கள் நகரப் பகுதிகளில் செல்வதால் ஏற்படும் விபத்துகளை பெருமளவில் குறைக்கவும், வாகன எரிபொருள் செலவினைக் குறைக்கவும் புறவழிச் சாலைகள் உதவுகின்றன. கடந்த 8 ஆண்டுகளில், 24 புறவழிச் சாலைப் பணிகள் முடிக்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) 4 நகரங்களுக்கு புறவழிச் சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 42 நகரங்களில் புறவழிச் சாலைப் பணிகளுக்காக நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், 24 புறவழிச் சாலைப் பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இரயில்வே மேம்பாட்டுப் பணிகள். இரயில்வே கடவுகளுக்கு மாற்றாக இரயில்வே மேம்பாலங்கள் மற்றும் கீழ்ப்பாலங்கள் கட்டும் பணிகள் இரயில்வே திட்ட பணியின்கீழ் இரயில்வே துறை மற்றும் தமிழ்நாடு அரசு 50:50 நிதி பகிர்மான அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. இரயில்வே திட்டப் பணிகளின்கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட 102 பணிகளில் 54 பணிகள் 1,758 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டுமானத்திற்கு நிதி ஒப்புதல் அளிக்கப்பட்டன. ஏனைய பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. 2011 முதல் 30–6–2019 வரை மொத்தம் 69 இரயில்வே மேம்பாலங்கள், கீழ்ப்பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் இரயில்வே பாலங்கள் கட்டி முடிப்பதற்கு பல்வேறு காரணங்களால் குறைந்தபட்சம் 5 முதல் 10 ஆண்டு காலம் ஆகியது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, ஒரு இரயில்வே பாலம் கட்ட வேண்டுமென்று சொன்னால், 5 ஆண்டுகளிலிருந்து 10 ஆண்டுகாலம் நீடித்தது. அந்த காலதாமதத்திற்கான காரணங்கள் ஆராயப்பட்டு அவை களையப்பட்டதால், தற்போது 5 ஆண்டுகளுக்குள் பாலங்கள் கட்டி முடிக்கப்படுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) நிலம் கையகப்படுத்துவதிலே சிக்கல் இருந்தால்கூட அதனைக் களைய தனிக் கவனம் செலுத்தப்படுகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

NABARD வங்கி கடனுதவித் திட்டம். உள்ளாட்சி சாலைகள் மற்றும் அரசு சாலைகளில் பாலங்கள் கட்டுதல், புதிய இணைப்புப் பாலங்கள் கட்டுதல் மற்றும் சாலைகள் மேம்பாடு போன்ற பணிகள் NABARD வங்கி கடனுதவியுடன் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், போக்குவரத்து அதிகமாக உள்ள உள்ளாட்சி சாலைகள், மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்தப்படுகின்றன. கடந்த 8 ஆண்டுகளில் 773 பாலங்கள் 1,890 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு 512 பாலங்கள் முடிக்கப்பட்டுள்ளன. 2,957 கிலோ மீட்டர் நீள உள்ளாட்சி சாலைகள் 1,490 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்பாடு செய்ய எடுத்துக்கொள்ளப்பட்டு 1,384 கிலோ மீட்டர் நீளச் சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 446 கிலோ மீட்டர் நீளச் சாலைப் பணிகள் 259 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்பட உள்ளன.

பிற்பகல் 2-50

சென்னை பெருநகர பகுதியில் மேம்பாட்டு பணிகள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை பெருநகரப் பகுதிகளில் நாளுக்கு நாள் பெருகி வரும் வாகனப் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு சாலை மற்றும் பால கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு நெடுஞ்சாலைத் துறை முனைப்புடன் தனிக் கவனம் செலுத்தி பணியாற்றி வருகிறது. தற்பொழுது 9 முக்கிய இடங்களில் பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன. கோயம்பேடு பேருந்து நிலையம் அருகில், கொளத்தூர் இரட்டை ஏரி, கொரட்டூர், கீழ்க்கட்டளை, வேளச்சேரி சந்திப்பு, பல்லாவரம், மேடவாக்கம், வண்டலூர், திருவொற்றியூர்–பக்கிங்ஹாம் கால்வாயின் குறுக்கே நடைபெறும் பாலப் பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

இவற்றிற்கும் மேலாக சென்னை நகர வாகனங்கள் வெளியூர் செல்லும்போதும் மற்றும் புறநகர வாகனங்கள் சென்னை மாநகரத்திற்குள் நுழையும் முக்கிய இடமான பெருங்களத்தூரில் மிகுந்த போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதை நாம் அனைவரும் அறிவோம். மாண்புமிகு உறுப்பினர்கள் கூட சொன்னார்கள்; ஆக, போக்குவரத்து நெரிசலுக்குத் தீர்வு காணும் வகையில் மிகப் பெரிய பல்லடுக்கு பாலம் ஒன்றை அமைக்க தற்போது ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. விரைவில் பணி துவங்கப்படவுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பெருங்களத்தூரிலிருந்து சிங்கபெருமாள் கோவில் வரை தற்போது

உள்ள 4 வழிப்பாதையை 8 வழிப்பாதையாக அகலப்படுத்துவதற்கு மத்திய தரைவழி போக்குவரத்து அமைச்சகத்திடம் சிறப்பு அனுமதி மற்றும் ஒப்புதல் பெறப்பட்டு, தற்போது நெடுஞ்சாலைத் துறைமூலம் பணிகள் நடைபெற்று வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் சென்னை நகர மக்கள் வெளியூர் பயணம் மேற்கொள்ளும்போது போக்குவரத்து இடையூறின்றி சுகமான, பாதுகாப்பான பயணம் மேற்கொள்ளலாம். மேலும், சென்னை மாநகரத்தின் முக்கிய சாலை சந்திப்புகளில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு பாலம் அல்லது பல்லடுக்கு மேம்பாலம் கட்டுவதற்கு ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்–II. உலக வங்கி நிதி உதவியுடன் 427 கி.மீ. நீளச் சாலைப் பணிகள் (கடின தள புருவங்களுடன் கூடிய இருவழிச் சாலைகளாக அகலப்படுத்துதல்) பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமானம் வகை ஒப்பந்தம் (EPC) மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 579 கி.மீ. நீளமுள்ள சாலைப் பராமரிப்புப் பணிகள் வெளித் திறன் மற்றும் செயல்பாட்டு அடிப்படையிலான சாலைப் பராமரிப்பு (OPRC) ஒப்பந்த முறை மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மொத்தமுள்ள 427 கி.மீ. நீளச் சாலைப் பணிகள் 10 தொகுப்புகளாகப் பிரிக்கப்பட்டு 9 தொகுப்புகளில் பணிகள் நிறைவடைந்துள்ளன. 3 தொகுப்புகளில் 146 கி.மீ. நீளச் சாலைகள் (PPP) பொது மற்றும் தனியார் பங்களிப்பு முறையில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு ஒரு தொகுப்பில் பணி நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் தொடர்ச்சியாக கூடுதலாக 169.73 மில்லியன் டாலர் கூடுதல் கடன் உதவி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சென்னை–கன்னியாகுமரி தொழிற்தட திட்டம். ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் 654 கி.மீ. நீளச் சாலைகள் 6 ஆயிரத்து 448 கோடி ரூபாய் மதிப்பில் மேம்பாடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணியின் செயலாக்கத்திற்கு தலைமைப் பொறியாளர் உள்ளிட்ட 588 புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கான ஆசிய வளர்ச்சி வங்கியுடனான கடன் ஒப்பந்தம் 2020 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை எல்லைச் சாலை. சென்னை மாநகரத்திற்குள் கனரக வாகனங்கள் செல்வதைத் தவிர்க்கும் பொருட்டு எண்ணூர் துறைமுகத்தில் தொடங்கி மாமல்லபுரம் அருகில் உள்ள பூஞ்சேரியில்

முடிவடையும் வகையில் 133.38 கி.மீ. நீளமுள்ள சென்னை எல்லைச் சாலையைச் செயல்படுத்த நிலம் கையகப்படுத்தும் பணி பல்வேறு நிலைகளில் உள்ளது. 25.11 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணி (பகுதி–1) 2 ஆயிரத்து 504.63 கோடி ரூபாய் மதிப்பில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிதி உதவிமூலம் துவங்கப்படவுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

தேசிய நெடுஞ்சாலை. தமிழ்நாட்டில் 6 ஆயிரத்து 634 கி.மீ. தேசிய நெடுஞ்சாலைகள் உள்ளன. மாநில அரசு 1,900 கி.மீ. தேசிய நெடுஞ்சாலைகளைப் பராமரித்து வருகிறது. மீதமுள்ள 4 ஆயிரத்து 734 கி.மீ. சாலைகளை தேசிய நெடுஞ்சாலை ஆணையம் பராமரித்து வருகிறது. தேசிய நெடுஞ்சாலைகளில் திட்டம் மற்றும் திட்டம் சாராப் பணிகளின்கீழ் மத்திய நிதியுதவியுடன் பணிகள் நடைபெற்று வருகின்றன. நெடுஞ்சாலைத் துறையின் சீரிய முயற்சியினால் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு அதிகமான நிதி மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டு சாலை மற்றும் பால கட்டுமானப் பணிகள் நடைபெறுகின்றன. ஆண்டுத் திட்டம் 2016–2019–ன்கீழ் மத்திய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் 2,662.62 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகளுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இவற்றில் 2,026.60 கோடி ரூபாய் செலவில் 819 கி.மீ. நீளமுள்ள 78 சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. புதுப்பிக்கப்பட்ட மத்திய சாலை நிதி திட்டத்தின்கீழ் 1,291.26 கோடி ரூபாய் செலவில் 1,778 கி.மீ. நீளத்திற்கு 273 சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு கடல்சார் வாரியம். 1,076 கிலோ மீட்டர் நீளம் கொண்ட தமிழ்நாடு கடற்கரையில் அமைந்துள்ள 18 சிறு துறைமுகங்களை தமிழ்நாடு கடல்சார் வாரியம், நிருவகித்து மேம்படுத்தி வருகிறது. 2018–2019 ஆம் ஆண்டில் சிறு துறைமுகங்களின்மூலம் 9 இலட்சத்து 62 ஆயிரத்து 894 மெட்ரிக் டன் சரக்குகள், 4 இலட்சத்து 11 ஆயிரத்து 792 சரக்குப் பெட்டகங்கள் மற்றும் 201 வாகனங்கள் ஆகியவை கையாளப்பட்டு சுமார் 65.28 கோடி ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) கடலூர் துறைமுகம் ஆழ்கடல், அனைத்து பருவகால கப்பலணையும் துறைமுகமாக மைய அரசின் நிதியுதவியுடன் சுமார் 135 கோடி ரூபாயில் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

பிற்பகல் 2–55

கன்னியாகுமரி துறைமுகத்தில் விவேகானந்தர் பாறையில் அமைந்துள்ள படகுத் துறையினை சுற்றுலாப் பயணிகளின் வசதிகளுக்காக 100 மீட்டர் அளவிற்கு நீட்டிப்புச் செய்வதற்கு 20 கோடி ரூபாய் செலவில் மைய அரசின் நிதியுதவியுடன் மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணி– நீர் ஆதாரம். உயிர்கள் நீரில் தோன்றின. அதனால்தான் நம் குருதியும், வியர்வையும், கண்ணீரும் நீர்மையாக இருக்கின்றன. உலகில் உள்ள நில அளவைவிட மூன்று மடங்கு கடல் பெரியது, கடல் வளம் மகத்தானது, அவ்வளத்தைக் கொடுப்பது கூட மழைதான். "தானும் உணவாகி, உணவை ஆக்குவதும் தண்ணீர்– மழைதான்". மழையின்றி மனிதன் இல்லை, இந்த உலகத்தையும், மனித இனத்தையும், ஏனைய உயிரினங்களையும் அழியாமல் காப்பது மழைதான். பழந்தமிழர்கள் நீரை மிகவும் நேர்த்தியாகப் பராமரித்தார்கள். நீர் நிலைகளுக்கு அவர்கள் அளித்த பெயர்களே அதற்குச் சான்றாக விளங்குகின்றன. அகழி, அருவி, ஆறு, ஏரி, கடல் போன்றவை நமக்குப் பழக்கமான பெயர்கள். கடலருகே தோண்டிக் கட்டிய கிணறுக்கு 'ஆழிக்கிணறு' என்று பெயர். பலவகைகளில் பயன்படும் நீர்த்தேக்கம் 'இலஞ்சி'. மக்கள் பருகும் நீர் உள்ள நீர்நிலைக்கு 'ஊருணி' என்று பெயர். அடியிலிருந்து நீர் வருவது 'ஊற்று'. எப்போதும் பொசிந்து வாய்க்காலில் ஓடும் நீர்நிலை 'ஓடை'. சரளை நிலத்தில் அகச்சுவர் கட்டிய கிணறு 'கட்டுக்கிணறு'. பாண்டி மண்டலத்தில் ஏரிக்கு வழங்கும் பெயர் 'கம்வாய்'. இதுவே பின்னாளில் 'கண்மாய்' என்று திரிந்தது. பாசன நீர்த்தேக்கம் உடைப்பெடுக்காமல் உறுதியாக கட்டப்படும் அமைப்பு 'கலிங்கு'. நீர் ஓடும் வழி 'கால்வாய்'. பெருங்குட்டைக்கு 'குட்டம்', சிறிய குட்டம் 'குட்டை', குளிக்கும் சிறிய நீர்நிலை 'குண்டம்', குளிப்பதற்கேற்ற சிறு குளம் 'குண்டு'. குடைக்கிணறுக்குப் பெயர் 'குமிழி', ஆர்ட்டீசியன் கிணற்றுக்குப் பெயர் 'குமிழி ஊற்று'. ஓர் ஒழுங்கில் அமையாத கிணறு 'கூவம்'. ஆழமற்ற கிணறு 'கூவல்', பெருங்கிணறு 'கேணி'. தேக்கப்பட்ட பெரிய நீர்நிலை 'சிறை', மலையில் இயற்கையாய் அமைந்த நீர்நிலை 'சுனை'. 'பாசிக்கொடி' மண்டிய குளம் 'சேங்கை'. தொண்டை மண்டலத்தை ஒட்டிய பகுதியில் ஏரிக்குப் பெயர் 'தாங்கல்'.

கோயில் அருகே உள்ள நீராடும் குளம் 'திருக்குளம்'. தெப்பம் சுற்றிவரும் குளம் 'தெப்பக்குளம்'. மையமண்டபத்துடன் கூடிய பெருங்குளம் 'நீராவி'. தாமரை முதலிய நீர்த் தாவரங்கள் மண்டிக் கிடக்கும் இயற்கை நீர்நிலை 'பொய்கை'. ஆற்றிடையே உள்ள அபாயமான பள்ளம் 'மடு'. ஒரு கண்ணே உள்ள சிறு மதகு 'மடை'. ஆற்று நீர் அல்லது ஊற்று நீர் நிரம்பி மிகை நீர் வெளிச்செல்லும் அமைப்பு 'வாவி'. இப்படி ஐம்பதுக்கும் மேற்பட்ட பெயர்களை நீர்நிலைக்கு தமிழர்கள் சூட்டியிருந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது அக்காலத்தில் மழை நீரை எவ்வளவு நுட்பமாக சேமித்து வறண்ட காலங்களுக்கும் பயன்படுத்தினார்கள் என்பதை நாம் உணர வழிவகுக்கிறது.

மழையை வரவேற்று நீரை சேமித்து, குளங்கள், நீர்நிலைகள், கிணறுகள் போன்ற அமைப்புகளில் நீர் மட்டத்தை உயர்த்துவதே இன்றைய தலையாயக் கடமை என்பதை உணரச் செய்து நீர் மேலாண்மைக்காக பெரிதும் பாடுபடுவதற்கு முனைந்துள்ளது, பொதுப் பணி நீர் ஆதாரத் துறை.

"சோழ வளநாடு சோறுடைத்து"

"சோற்றால் மடையடைக்கும் சோழ வள நாடு"

இச்சோழ நாட்டின் வளத்திற்கு முழுமுதற் காரணம் காவேரி. இன்று தாய் காவேரியின் முகம், சில காலம் காணாமல் சேய்கள் வாடும் நிலை, வருந்தும் நிலை ஏற்பட்டிருந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 50 ஆண்டு கால சட்டப் போராட்டத்திற்குப் பின், சத்தியத் தாய் மாண்புமிகு அம்மா அவர்களின் அரும்பாட்டுக்குப்பின் விடிவு பிறந்தது. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி தமிழ்நாட்டிற்கு உரிய நீரை கர்நாடக அரசு வழங்கிட வழி வகுத்தது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3–00

தமிழ்நாட்டில் பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 89 அணைகளில் 229.485 டி.எம்.சி. கொள்ளளவு கொண்ட 85 அணைகள் பாசனத்திற்காகவும் மற்றும் 11.057 டி.எம்.சி. கொள்ளளவு கொண்ட 4 நீர்த்தேக்கங்கள்/ஏரிகள் சென்னை மாநகர் குடிநீர்த் தேவைக்கும் பயன்படுத்தப்படுகின்றன. மேலும், 38 அணைகள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. தமிழ்நாட்டிலுள்ள 39 ஆயிரத்து

202 ஏரிகளில், 14 ஆயிரத்து 98 ஏரிகள் நீர்வள ஆதாரத் துறையின் பராமரிப்பிலுள்ளன. இவற்றில், 7,138 ஏரிகள் பாசன முறையைச் சார்ந்தவை. 6,938 ஏரிகள் பாசன முறை சாராத மானாவாரி ஏரிகளாகும். மொத்தமுள்ள 106 பாசன அமைப்புகள்மூலம் 14,44,181 ஹெக்டேர் நிலப்பரப்பு பயன்படுகிறது. மானாவாரி ஏரிகளினால் 5,77,461 ஹெக்டேர் நிலம் பயன்படுகின்றது. ஆக மொத்தம், 20,21,642 ஹெக்டேர் நிலப்பரப்பு பாசன வசதி பெறுகின்றது. கிடைக்கப்பெறும் நீர்வளத்தினை நீர்நிலைகளில் பாதுகாத்து உரிய முறையில் பயன்படுத்தி தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டு பின்வரும் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது:

குடிமராமத்துப் பணிகள். பழங்காலம் முதல் நம் நாட்டில் நீர் மேலாண்மை சிறப்பாக நடந்துள்ளது. நீர்நிலைகளை அமைத்தல், மழைநீரைச் சேகரித்தல், நிலத்தடி நீரை அதிகப்படுத்துதல், தடுப்பணைகள் அமைத்தல், ஒவ்வொரு சொட்டு நீரையும் முறையாகப் பயன்படுத்துதல் போன்ற கூறுகளை தமிழ் இலக்கியங்கள் பதிவு செய்திருக்கின்றன. பிட்டுக்கு மண் சுமந்த கதை குடிமராமத்து முறை தொன்றுதொட்டு இருந்ததை உணர்த்துகிறது. நீர்நிலைகளை மீட்டெடுத்து பயனீட்டாளர்களின் பங்களிப்புடன் நீர்நிலைகளைப் புனரமைக்கும்பொருட்டு பண்டைய குடிமராமத்துப் பணிகளுக்கு புத்துயிர் அளிக்க மாண்புமிகு அம்மாவின் அரசு தீர்மானித்தது.

குடிமராமத்துத் திட்டம். 2016–2017–ல் துவக்கப்பட்டு 30 மாவட்டங்களில் இதுவரை 1,513 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 2017–2018 ஆம் ஆண்டில் 29 மாவட்டங்களில் 1,511 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 1,406 பணிகள் முடிவுற்று, மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) 2019–2020 ஆம் ஆண்டு குடிமராமத்துப் பணிகளை மேற்கொள்ள 29 மாவட்டங்களில் 499 கோடியே 69 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 1,829 பணிகளை மேற்கொள்ள நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் துவங்குவதற்கு பாசன சங்கங்களுடன் ஆலோசனைக் கூட்டங்கள் தற்போது நடத்தப்பட்டு வருகின்றன.

அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம். அணைகளைப் பலப்படுத்தி பராமரிப்பதற்காக உலக வங்கி நிதியுதவியுடன் ரூ.803 கோடி திருத்திய மதிப்பீட்டுடன் அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் செயலாக்கத்தில்

உள்ளது. இத்திட்டத்தின்கீழ் மொத்தமுள்ள 69 அணைகளுக்கும் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளுக்காக நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் 67 அணைகளில் கண்காணிப்பு உபகரணங்கள் பொருத்தும் பணிகள் தவிர மற்ற பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. பேச்சிப்பாறை மற்றும் மணிமுத்தாறு அணைகளில் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. அணைகளில் படிந்துள்ள மண் அளவுகளின் ஆய்வுகளை மேற்கொள்ளும்பொருட்டு 56 அணைகளுக்கு 3.08 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதில், 42 அணைகளில் ஆய்வு முடிக்கப்பட்டு ஆய்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள அணைகளில் ஆய்வுகள் முடிக்கப்பட்டு ஆய்வறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகின்றது. இத்திட்டத்தில் நீர்வள ஆதாரத் துறை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் வேளாண் பொறியியல் துறை பங்கேற்கின்றன.

கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே தலை மதகுடன்கூடிய புதிய கதவணை. கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் ஆதனூர் மற்றும் குமாரமங்கலம் கிராமங்களின் அருகிலே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே 428 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கதவணை அமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. இத்திட்டத்தினால் 26,810 ஹெக்டேர் நிலங்களுக்கு பாசன வசதி உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், 4,411 ஏக்கர் நிலங்கள் நிலத்தடி நீர் செறிவூட்டுதல்மூலம் பயன்பெறும். ஒரு வருடத்திற்கு 4 நிரப்புதலின் அடிப்படையில் 1.336 டி.எம்.சி. அடி நீர் உபயோகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக்கதவணையினால் சேமிக்கப்படும் நீரின்மூலம் கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள 31,221 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி உறுதிபெறும். இத்திட்டத்தினால் சேமிக்கப்படும் நீர் வீராணம் ஏரிக்குக் கொண்டு செல்லப்பட்டு சென்னை மாநகரக் குடிநீர்த் தேவைக்குப் பயன்படுத்தப்படும். இத்திட்டத்தில் அமைக்கப்படும் பாலம் கொள்ளிடம் ஆற்றின் கதவணையின் இருபுறங்களிலுள்ள கிராமங்களுக்கு போக்குவரத்து இணைப்பை ஏற்படுத்தும். 84.72 ஹெக்டேர் பட்டா நிலங்கள் மற்றும் 12.89 ஹெக்டேர் புறம்போக்கு நிலங்களைக் கையகப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்திக்கடவு–அவிநாசி திட்டம். கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் உள்ள விவசாயிகளினுடைய நீண்டகால கனவுத் திட்டமான அத்திக்கடவு–அவிநாசி திட்டத்தினை (மேசையைத் தட்டும் ஒலி) நீர்ப்பாசனம், நிலத்தடிநீர் செறிவூட்டுதல் மற்றும் குடிநீர் வழங்கல் திட்டமாக 1,652 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாநில நிதியைக் கொண்டு, DBOT அடிப்படையில் செயல்படுத்த அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் என்னால் துவக்கி வைக்கப்பட்டுள்ளன என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தில் கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் உள்ள வறண்ட பகுதிகளுக்கும், நிலத்தடி நீர் குறைவாக உள்ள பகுதிகளுக்கும், பாசன வசதி அளிப்பதுடன், 32 பொதுப் பணித் துறை ஏரிகள், 42 ஊராட்சி ஒன்றியக் குளங்கள் மற்றும் 971 கசிவுநீர்க் குட்டைகள் ஆகியவற்றின்மூலம் 24,468 ஏக்கர் பாசனப் பரப்பு பயன்பெறும். மேலும், இத்திட்டத்தில் மின்சாரப் பயனீட்டின் செலவை எதிர்கொள்ள 132 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 30 மெகாவாட் சூரிய ஒளி மின்திட்டத்தின் கருத்துருவிற்கு நபார்டு நிதியுதவி பெற திட்டமிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3–05

திருச்சி மாவட்டம், முக்கொம்பு–புதிய நீரொழுங்கியை அமைத்தல் மற்றும் தற்போதைய நீரொழுங்கியைப் பலப்படுத்துதல். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி மாவட்டம், வாத்தலை மற்றும் எலமனூர் கிராமங்களுக்கு இடையில் உள்ள முக்கொம்பு என்றழைக்கப்படுகின்ற மேலணை, காவேரி ஆற்றினை இரண்டாகப் பிரித்து தண்ணீரை பாசனத்திற்காக காவேரி ஆற்றிலும், வெள்ளநீரை கொள்ளிடம் வழியாகவும் வெளியேற்றுவதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு கட்டுமானமாகும். கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கதவணையானது சர் ஆர்தர் தாமஸ் காட்டன் அவர்களால் 1836 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. வெள்ளத்தினை திறம்பட கையாளும்பொருட்டு, 1902 ஆம் ஆண்டில் மேலணை அணைக்கட்டு நீரொழுங்கியாக மாற்றப்பட்டது.

2018 ஆம் ஆண்டு, தென்மேற்குப் பருவமழை காரணமாக கேரளா மற்றும் கர்நாடகா மாநிலங்களில் கடுமையான மழை பெய்ததன் காரணமாக மேட்டூர் அணை 23–7–2018 அன்று முழுமையான

கொள்ளளவை எட்டியது. மேலும் அதிகளவில் பெறப்பட்ட நீர்வரத்து காரணமாக உபரிநீர் 23–7–2018 முதல் 1–8–2018 வரை மற்றும் 11–8–2018 முதல் 25–8–2018 வரை தொடர்ச்சியாக திறந்து விடப்பட்டது. இது வரலாற்றில் மிக நீண்ட வெள்ளப்பெருக்கு காலமாகும். 22–8–2018 அன்று மேலணையின் தெற்கு கொள்ளிடம் பகுதியில் அமைந்திருந்த மதகு எண் 6 முதல் 14 வரை உள்ள கட்டுமானங்கள் ஒவ்வொன்றாக தொடர்ச்சியாக கீழே விழுந்தன. பின்னர் தற்காலிகச் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு காவேரி டெல்டா மாவட்டங்களின் பாசனத்திற்குக் கிடைக்க வேண்டிய தண்ணீர் உறுதி செய்யப்பட்டது.

தற்போதைய நீரொழுங்கியைப் பலப்படுத்துதல். புதிய கதவணையின் கட்டுமானத்திற்கு 18 முதல் 24 மாதங்கள் தேவைப்படும் என்பதால், புதிய கதவணை முழு செயலாக்கத்திற்கு வரும்வரை, அடுத்து வெள்ளம் ஏற்படுமேயானால் அதனை எதிர்கொள்ள மேலணையில் உள்ள தெற்கு கொள்ளிடம் கதவணையின் கீழ்ப்புறம் கூடுதல் கசிவில்லா தடுப்புச் சுவர் (Cutoff wall) மற்றும் காப்பணை (Cofferdam) அமைத்து பலப்படுத்தும்பொருட்டு அரசால் 38.85 கோடி ரூபாய் மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டு, பணி நடைபெற்று வருகிறது. மேலும், கீழ்ப்பகுதியில் கொள்ளிடம் ஆற்றின் வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் ஒரு புதிய நீரொழுங்கியை 387.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டுவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டு பணி துவங்கப்பட்டுள்ளது.

புதிய நீரொழுங்கி கட்டுவதன்மூலம் நான்கு முக்கிய டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களிலுள்ள 12,01,507 ஏக்கர் பாசனப் பரப்பு பயனடையும். இதனுடன் புள்ளம்பாடி, பெருவளை மற்றும் அய்யன் வாய்க்கால்கள் மூலமாக திருச்சிராப்பள்ளி மற்றும் அரியலூர் மாவட்டங்களிலுள்ள 56,953 ஏக்கர் பாசனப் பரப்பு பயனடையும். மொத்தம் 12,58,460 ஏக்கர் பாசனப் பரப்பு பயனடையும். இந்த நீரொழுங்கி வெள்ளத் தணிப்பானாகவும் செயல்படுகிறது. திருச்சிராப்பள்ளி மற்றும் ஸ்ரீரங்கம் ஆகிய இரண்டு முக்கியமான நகரங்களை வெள்ள அபாயங்களிலிருந்து பாதுகாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீர் நதியாக ஓடுகிறது; அருவியாகக் குதிக்கிறது; பனியாகப் பெய்கிறது; குளமாகத் தேங்குகிறது; மழையாக விழுகிறது; கடலாக

சங்கமமாகிறது; (மேசையைத் தட்டும் ஒலி) அரசு திட்டங்களும், ஆடுதாண்டும் காவேரியாகத் தொடங்கி மக்களை அடையும்போது ஆழ்கடலைப்போல பரந்து விரிந்து நன்மை பயக்க வேண்டும் என்பதே புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் நடைபெறும் இந்த ஆட்சியின் நோக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

அந்த வகையில் மக்கள் நலனுக்காக, 1. பாசன வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம்மூலம் 4,778 ஏரிகள் மற்றும் 477 அணைக்கட்டுகளைப் புனரமைத்தல், தடுப்பணைகள் கட்டுதல், ஏரியின் நீர் பரப்புப் பகுதியில் செயற்கை முறை நீர் செறிவூட்டும் கிணறுகளை அமைத்தல், காவேரி கழிமுகப் பகுதி மற்றும் உப வடிநிலங்களில் அமைந்துள்ள வடிகால்கள் மற்றும் பாசன வாய்க்கால்களை மேம்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

2. பெரம்பலூர் மாவட்டம், மருதையாற்றின் குறுக்கே 4,194 ஏக்கர் புன்செய் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில், புதிய நீர்த்தேக்கம் அமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

3. சென்னை மாநகரத்திற்குக் குடிநீர் வழங்க திருவள்ளூர் மாவட்டம், கண்ணன்கோட்டை கிராமத்தில் தேர்வாய்கண்டிகை ஏரி கட்டுமானப் பணி விரைவில் நிறைவு பெற உள்ளது. இந்த ஆண்டு பருவமழை நீரைத் தேக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பிற்பகல் 3–10

4. பல்வேறு மாவட்டங்களில் புதிய தடுப்பணைகள், படுகை அணைகள், தள மட்டச் சுவர்கள், அணைக்கட்டு மற்றும் தடுப்பணைகள் புனரமைத்தல் மற்றும் கடலோரப் பாதுகாப்புப் பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு, அவை துரிதமாக நடைபெறுவதற்கான வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

காவேரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு அமைப்புகள். வரலாற்றுச் சிறப்புமிக்க காவேரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு அமைப்புகள் மத்திய அரசிதழில் 1–6–2018 அன்று வெளியிடப்பட்டன. காவேரி நீர் மேலாண்மை

ஆணையம் இதுவரை 4 கூட்டங்களை நடத்தியுள்ளது. காவேரி நீர் முறைப்படுத்தும் குழு 9 முறை கூடியுள்ளது. இக்கூட்டங்களில் தமிழ்நாட்டின் கருத்துகள் வலிமையாக எடுத்துவைக்கப்பட்டன.

முல்லைப் பெரியாறு அணை. முல்லைப் பெரியாற்றின் நீர் மட்டத்தை முழு கொள்ளளவான 152 அடி வரை உயர்த்துவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய பிரதான பணிகள் நடைபெற்று வருகின்றன. துண்டிக்கப்பட்ட மின்சாரம் வழங்குதல் போன்ற பணிகளில் கேரள அரசு தாமதிப்பதாலும், முல்லைப் பெரியாறு அணையின் நீர்பரப்புப் பகுதியில் மேற்கொள்ளப்படும் பெரும் வாகன நிறுத்தத்திற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளதாலும் இதுகுறித்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டு, வழக்கு நிலுவையில் உள்ளது.

ஆந்திரப்பிரதேச மாநிலத்தில் பாலாற்றின் குறுக்கே புதிய தடுப்பணை மற்றும் கட்டப்பட்ட தடுப்பணையின் உயரத்தை உயர்த்தியதற்கும் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, உரிய நீதி கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீர், நமக்குக் கற்றுத் தருகின்ற ஆசான். நீருக்கென்று வடிவம் இல்லை. அது பாத்திரத்திற்கேற்ப வடிவமைத்துக்கொள்கிறது. மக்களின் தேவைக்கேற்ப திட்டங்களைத் தீட்டி, பாத்திரத்திற்கேற்ப வடிவெடுக்கும் நீர் போன்றவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவரது திறமை இன்றும் நிலைத்து நிற்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அவரிடத்தில் பாடம் பயின்றதால், (1) மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணாறு, பாலாறு, காவேரி, வைகை, குண்டாறு மற்றும் பம்பா–அச்சன்கோவில்–வைப்பாறு நதிகளை இணைக்கும் திட்டங்களைச் செயல்படுத்த மத்திய அரசை நம்முடைய அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

இரண்டாவதாக, மத்திய அரசு கோதாவரி(ஈச்சம்பள்ளி/ ஜனப்பேட்)–காவேரி (கல்லணை) நதிகள் இணைப்பிற்கான விரிவான வரைவு திட்ட அறிக்கையை தமிழ்நாடு அரசுக்கு அனுப்பி வைத்து, அதன்மீது கருத்துகளைக் கேட்டுள்ளது. இந்த வரைவு திட்ட அறிக்கை குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாநிலத்திற்குள் பாயும் நதிகளை இணைக்கும் திட்டங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நேரு அவர்கள், இந்த அரசு என்னென்ன திட்டங்களை நிறைவேற்றப்போகிறது என்பதைப் பற்றியெல்லாம் கேட்டார். சில திட்டங்களைப் பற்றி இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

(1) தாமிரபரணி ஆறு–கருமேனியாறு–நம்பியாறு இணைப்புத் திட்டம். இதில் நில எடுப்புப் பணியினால்தான் காலதாமதம் ஏற்பட்டதே தவிர அரசினால் அல்ல. நிலம் எடுக்கின்ற பணிகள் உரிய காலத்தில் முடிவுற்ற பிறகு, அனைத்து வகைகளிலும் அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

(2) காவேரி–அக்னியாறு–தெற்குவெள்ளாறு–மணிமுத்தாறு–வைகை–குண்டாறு இணைப்புக் கால்வாய்த் திட்டம்,

(3) பெண்ணையாறு (சாத்தனூர் அணை)–செய்யாறு இணைப்புத் திட்டம்,

(4) பெண்ணையாறு (நெடுங்கல் அணைக்கட்டு)–பாலாறு இணைப்புத் திட்டம்,

(5) காவேரி (மேட்டூர் அணை)–சரபங்கா–திருமணிமுத்தாறு–அய்யாறு இணைப்புக்கான நில எடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுபோன்ற திட்டங்களுக்கு விரிவான நில அளவைகள், மட்ட அளவுகள் எடுக்கும் பணிகள், மத்திய அரசின் ஒப்புதல் மற்றும் நிலம் கையகப்படுத்துதல் போன்ற பணிகளுக்கு முன்னுரிமை அளிக்க இந்த அரசு முனைந்துள்ளது.

பொதுப் பணித் துறை (கட்டடம்). பொதுப் பணி (கட்டடங்கள்) துறைமூலம் பல்வேறு துறைகளின் தேவைக்கேற்ப இன்றைய தொழில்நுட்பத்துடன் கலைநயம் மிக்க கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பழமையான, புராதனக் கட்டடங்களைப் பாதுகாக்கும் விதமாக, அதன் தன்மை மாறாவண்ணம் புனரமைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அந்த வகையில் பொதுப் பணி (கட்டடங்கள்) துறையின்மூலம் சென்னை மாநகரில், சேப்பாக்கத்தில் அமைந்துள்ள ஹுமாயூன் மஹால், சென்னை உயர் நீதிமன்றம் போன்ற கட்டடங்கள் புனரமைக்கப்படுகின்றன.

மேலும், மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு நினைவு வளைவு குறுகிய காலத்தில் கட்டி முடிக்கப்பட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நினைவிடத்தை மிகப் பிரம்மாண்டமாக, அனைவரும் வியக்கும் வண்ணம் (மேசையைத் தட்டும் ஒலி) சிறப்புமிக்க

வடிவமைப்புடன் கட்டும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இது வருகிற டிசம்பர், 2019-க்குள் கட்டி முடிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

கரூர் மருத்துவக் கல்லூரி மற்றும் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா கட்டடம் சென்னையிலுள்ள டி.பி.ஐ. வளாகத்தினுள் கட்டும் பணிகள் ஆகியவை சிறப்பான முறையில் கட்டப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டு முதல் நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கையினையும், 2016 முதல் பொதுப் பணித் துறையின் மானியக் கோரிக்கையினையும், இந்த அவையில் நான் அமைச்சராகவும், முதலமைச்சராகவும் தொடர்ந்து தாக்கல் செய்து வருவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இரு துறைகளிலும் மக்கள் நலப் பணிகளில், நல்ல திட்டங்களைச் செயல்படுத்துவது பொறியாளர்கள் மற்றும் அவர்களுக்கு உறுதுணையாக இருப்பது ஏனைய பணியாளர்கள்.

பிற்பகல் 3—15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழைத்துளி குளத்தில் விழுந்தால் குடிநீராகிறது; கடலில் விழுந்தால் உப்பாகிறது; கழிவறையில் விழுந்தால் சாக்கடையாகிறது; சேருகின்ற இடமாய் சிறப்பளிக்கிறது என்கின்ற தத்துவத்தை தண்ணீர் உணர்த்துகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) பானையை நிரப்பிய தண்ணீரில் எந்தத் துளி பானையை நிரப்பியது எனக் கூற முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல நிருவாகத்தில் அனைத்து ஊழியர்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டால்தான் கருவூலம் நிரம்பும், திட்டங்கள் தீட்டப்படும், செயலாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தருணத்தில் இந்த அவையின் வாயிலாக நெடுஞ்சாலைத் துறை மற்றும் பொதுப் பணித் துறை மட்டுமல்லாது, ஏனைய துறை அதிகாரிகளும் பானையை நிரப்பும் தண்ணீரைப்போல ஒருங்கிணைந்து செயலாற்றிடவும், அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மகத்தான பணியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ள வேண்டுமென்றும் அன்போடு

இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, புதிய அறிவிப்புகளை வெளியிடுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

புதிய அறிவிப்புகளின் தலைப்பை மட்டும் நான் வாசிக்கின்றேன். மற்றவற்றை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ள வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

1. சென்னை பெருநகரப் பகுதியில் 9 இடங்களில் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கு, பாலங்கள் கட்டவும் மற்றும் ஒரு இணைப்புச் சாலை அமைக்கவும், ஆய்வு மற்றும் விரிவான திட்ட அறிக்கை ரூபாய் 2.35 கோடி மதிப்பில் தயாரிக்கப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், சென்னை பெருநகரப் பகுதியில் (i) ஹால்டா சந்திப்பு முதல் அடையார், பசுமை வழிச்சாலை மற்றும் சாந்தோம் நெடுஞ்சாலை வழியாக கலங்கரைவிளக்கம் வரை (ii) வடபழனியிலிருந்து போரூர் வரை (iii) சின்னமலை முதல் வேளச்சேரி புறவழிச்சாலை வரை, (iv) அம்பத்தூர் டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் சந்திப்பு, (v) வால்டாக்ஸ் சாலையில் பேசின் பால சந்திப்பு, (vi) அம்பேத்கர் கல்லூரி அருகில் வியாசர்பாடி சந்திப்பு ஆகிய இடங்களில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கும் மற்றும் அடையாரில் உள்ள திரு.வி.க. பாலம் முதல் மறைமலை அடிகள் பாலம் வரை அடையாற்றை ஒட்டி புதிய இணைப்புச் சாலை அமைக்கவும், விரிவான சாத்தியக்கூறு அறிக்கை ரூ.1.70 கோடியில் தயாரிக்கப்படும்.

திருமங்கலம்–முகப்பேர் சாலையில் உள்ள DAV பள்ளி மற்றும் வேலம்மாள் பள்ளி அருகில் நடை மேம்பாலம் அமைக்கவும், அம்பத்தூர் தொழிற்பேட்டை பேருந்து பணிமனை அருகில் சாலை மேம்பாலம் அமைக்கவும் விரிவான திட்ட அறிக்கை ரூ.65 இலட்சத்தில் தயாரிக்கப்படும்.

2. ஒன்பது மாவட்டங்களில் 32 இடங்களில் ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலங்கள் கட்டுவதற்கு ரூ.3.50 கோடி செலவில் திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், திருவண்ணாமலை மாவட்டத்தில் சித்தாத்தூர், விழுப்புரம்

மாவட்டத்தில் மரக்காணம் மற்றும் தாயனூர், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பாலக்கொல்லை மற்றும் கு.கள்ளக்குறிச்சி, பெரம்பலூர் மாவட்டத்தில் கீழ்பெரம்பலூர், ஈரோடு மாவட்டத்தில் பவானி மற்றும் கீழ் பவானி வாய்க்கால் பகுதியில் 9 பழமையான பாலங்களுக்குப் பதிலாக புதிய பாலங்கள், கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியில் 9 தரைப் பாலங்களுக்கு பதிலாக புதிய பாலங்கள், சேலம் மாவட்டத்தில் தெடாவூர், கோயம்புத்தூர் மாவட்டத்தில் காளியப்ப கவுண்டன்புதூர், திருச்சி மாவட்டத்தில் இ.புதூர், ஓமந்தூர் மற்றும் எடையாத்துமங்கலம், கிளிக்கூடு கிராமங்களை இணைக்கும் வகையில் பாலம், புதுக்கோட்டை மாவட்டத்தில் கீழ்குடி மற்றும் பெருமருதூர் கிராமங்களை இணைக்கும் வகையில், பாலம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தில் தென்பெரம்பூர் ஆகிய ஒன்பது மாவட்டங்களில் உள்ள 32 ஆற்றுப் பாலங்களைப் புதுப்பித்துக் கட்ட விரிவான திட்ட அறிக்கை ரூ.3.50 கோடியில் தயாரிக்கப்படும்.

3. இரயில்வே மேம்பாலங்கள் 3 இடங்களில் கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை ரூ.1.08 கோடி மதிப்பில் தயாரிக்கப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மதுரை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களில் 3 இரயில்வே மேம்பாலங்கள் புதிதாக கட்ட விரிவான திட்ட அறிக்கை ரூ.1.08 கோடியில் தயாரிக்கப்படும்.

4. சாலை மேம்பாலங்கள் 7 இடங்களில் கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் காஞ்சிபுரம் மாவட்டத்தில் படப்பை, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஓசூர் உள்வட்ட சாலை, ஈரோடு மாவட்டத்தில் எஸ்.எஸ்.வி.என். பள்ளி முதல் சுவஸ்திக்கார்னர் வரை, தேனி மாவட்டத்தில் நேரு சிலை, திருப்பூர் மாவட்டத்தில் சந்தைப்பேட்டை, மதுரை மாநகரில் மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் மற்றும் அண்ணா பேருந்து நிலையம் ஆகிய 7 இடங்களில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க சாலை மேம்பாலங்கள் கட்ட விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

5. புறவழிச் சாலைகள் 10 நகரங்களில் அமைப்பதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் விழுப்புரம் மாவட்டத்தில் அவலூர்பேட்டை, கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி, கடலூர் மாவட்டத்தில் விருத்தாசலம், தருமபுரி மாவட்டத்தில் பாப்பாரப்பட்டி, சேலம் மாவட்டத்தில் ஜலகண்டாபுரம், திருப்பூர் மாவட்டத்தில் அவிநாசி, நீலகிரி மாவட்டத்தில் கூடலூர், திருச்சி மாவட்டத்தில் துறையூர் (பகுதி–3) தேனி மாவட்டத்தில் தேனி மற்றும் போடிநாயக்கனூர் ஆகிய 10 நகரங்களுக்கு புறவழிச் சாலை அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

6. ரூ.155.80 கோடி மதிப்பில் 17 மாவட்டங்களில் 42 ஆற்றுப் பாலங்கள் கட்டப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், 17 மாவட்டங்களில் உள்ள 379 கிராமங்களில் வசிக்கும் 9,59,356 மக்கள் பயனடையும் வகையில், ரூ.155.80 கோடி மதிப்பீட்டில் அரசு மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் 42 ஆற்றுப் பாலங்கள் கட்டப்படும்.

7. 1456 கி.மீ. நீள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்தப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் 1456 கி.மீ. நீள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்பாடு செய்து மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்தப்படும்.

8. சென்னை பெருநகரப் பகுதியில் 2 சாலைப் பணிகள் மற்றும் 2 மேம்பாலங்கள் ரூ.409 கோடி மதிப்பில் கட்டப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் கிழக்குக் கடற்கரைச் சாலை மற்றும் திருவான்மியூர் லேட்டிஸ் பால சாலை சந்திக்கும் இடத்தில் மேம்பாலம் கட்டும் பணி, கிழக்குக் கடற்கரைச் சாலையை நான்கு வழித் தடத்திலிருந்து ஆறு வழித்தடமாக அகலப்படுத்தும் பணி மற்றும் தாம்பரம் கிழக்கு புறவழிச் சாலை பணி ஆகிய பணிகள் ரூ.299 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படும். மேலும், சென்னை இராஜீவ் காந்தி சாலையில் டைடல் பார்க் சந்திப்பில் இரண்டு “U” வடிவ மேம்பாலங்கள் ரூ.110 கோடி மதிப்பில் கட்டப்படும்.

9. சென்னை பெருநகரப் பகுதியில் 13 மேம்பாலங்கள், 2 இரயில்வே பாலங்கள், 2 நடை மேம்பாலங்கள் மற்றும் 1 ஆற்றுப் பாலம் ஆகிய 18 பணிகளை மேற்கொள்ள முதற்கட்டமாக நிலம் கையகப்படுத்தும் பணிகள் ரூ.1,122 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், சென்னை பெருநகர பகுதியில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில், காட்டுப்பாக்கம், அக்கரை, அம்பத்தூர், ஆவடி, மாதவரம், இராமாபுரம், குன்றத்தூர், கைவேலி, சேலையூர், கொரட்டூர், வடபழனி–P.T. ராஜன் சாலை சந்திப்பு, மத்திய கைலாஷ் மற்றும் மடிப்பாக்கம் ஆகிய 13 இடங்களில் சாலை மேம்பாலம், பாடிக்குப்பத்தில் ஒரு உயர்மட்ட பாலம் கேந்திரிய வித்யாலயா (FOB) மற்றும் தாம்பரத்தில் உயர்மட்ட நடைபாதை (Sky walk), கொரட்டூரில் ஒரு இரயில்வே மேம்பாலத்தை அகலப்படுத்துதல் மற்றும் அம்பத்தூரில் இரயில்வே மேம்பாலம் ஆகிய பணிகள் சென்னை போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் திட்டத்தில் (Chennai City Traffic Decongestion Project) (CCTDP) புதிய வளர்ச்சி வங்கியின் (NDB) நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்திற்குத் தேவைப்படும் நிலங்களைக் கையகப்படுத்தும் பணிகள் முதற்கட்டமாக ரூ.1,122 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

10. செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தம் (PBMC) மூலம் தஞ்சாவூர் மாவட்டத்தில் சாலைகள் பராமரிக்கப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், சாலைகளை நல்லமுறையில் பராமரிப்பதற்காக செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தம் (PBMC) மூலம் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்ட முக்கிய சாலைகள் பராமரிக்கப்படும்.

11. பழநியில் அமைந்துள்ள அருள்மிகு தண்டாயுதபாணி கோயிலுக்குச் செல்லும் சாலைகளில் ரூ.58.50 கோடி மதிப்பில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், திண்டுக்கல் மாவட்டத்தில் பழநியில் அமைந்துள்ள அருள்மிகு தண்டாயுதபாணி கோயிலுக்கு வரும் பக்தர்களுக்குப் பயன்படும் வகையில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும்பொருட்டு,

இக்கோயிலுக்கு செல்லும் சாலைகளில் மேம்பாட்டுப் பணிகள் ரூ.58.50 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

12. சாலைப் பாதுகாப்புப் பணிகள் ரூ.300 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், நடப்பாண்டில் ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டு (CRIDP) திட்டத்தில் ரூ.200 கோடி மதிப்பிலும், சாலை பாதுகாப்பு நிதியில் இருந்து ரூ.100 கோடி மதிப்பிலும் ஆக மொத்தம் ரூ.300 கோடி மதிப்பிலான சாலைப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

13. அலுவலகக் கட்டடங்கள் மற்றும் அலுவலகக் குடியிருப்புகள் ரூ.26.50 கோடி மதிப்பில் கட்டப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், நெடுஞ்சாலைத் துறையின் பயன்பாட்டிற்காக திருவாரூர் கோட்ட அலுவலகம், திருத்துறைப்பூண்டி, குடவாசல், முசிறி, லால்குடி, அரியலூர், பாபநாசம், திருவிடைமருதூர், சீர்காழி, நம்பியூர், மடத்துக்குளம், திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு ஆகிய இடங்களில் 12 உட்கோட்ட அலுவலகக் கட்டடங்கள் தரங்கம்பட்டியில் பிரிவு அலுவலகம் மற்றும் சேலம் நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் அலகுக்கு வட்டம் மற்றும் கோட்ட அலுவலகம் ஆகிய 16 கட்டடப் பணிகள் ரூ.4.60 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

சென்னை–கன்னியாகுமரி தொழிற்தட சாலை திட்டம், தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டம், தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டு கழகம் மற்றும் தமிழ்நாடு சாலை மேம்பாட்டு கழகம் ஆகிய அலுவலகங்களுக்கு சென்னையில் ரூ.13 கோடி மதிப்பில் அலுவலகக் கட்டடம் மற்றும் ரூ.8.90 கோடி மதிப்பில் தலைமைப் பொறியாளர் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர்களுக்கு சென்னையில் 14 எண்ணிக்கையிலான குடியிருப்புக் கட்டடங்கள் கட்டப்படும். மேலும், மழைநீர் வடிகால் சேகரிப்பு மற்றும் கழிவு நீரை மறுசுழற்சி முறையில் பயன்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்படும்.

14. தரக்கட்டுப்பாட்டு உட்கோட்டங்களுக்கு 42 வாகனங்கள் ரூ.3.90 கோடியில் வாங்கப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், சாலை மற்றும் பாலப் பணிகளின் தரத்தை ஆய்வு செய்வதற்காக 42 தரக்கட்டுப்பாட்டு உட்கோட்டங்களுக்கு ஈப்புகள் ரூ.3.90 கோடியில் வாங்கப்படும்.

15. நெடுஞ்சாலைத் துறை அலுவலர்களுக்கு பயிற்சிகள் அளிப்பதற்கு 68 புதிய பணியிடங்கள் உருவாக்கப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய பயிற்சி நிலையத்தில் நெடுஞ் சாலைத் துறை அலுவலர்களுக்கு தொடர்ச்சியாக பயிற்சிகள் அளிப்பதற்கு 26 பதவிகளில் 68 புதிய பணியிடங்கள் உருவாக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை சார்பாக புதிய அறிவிப்புகள். தலைப்பை மட்டும் வாசிக்கின்றேன். மற்றவற்றை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுப் பணித் துறை

1. 3 மாவட்டங்களில் புதிதாக நீர்த்தேக்கம், ஏரி மற்றும் கசிவுநீர்க் குட்டை அமைக்கும் பணிகள் ரூ.137 கோடியே 42 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், தெற்கு கல்லிடைக்குறிச்சி கிராமத்தில் எலுமிச்சையாறு ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்க கட்டுமானப் பணிகள் ரூ.110 கோடி மதிப்பீட்டிலும், சேலம் மாவட்டம், கெங்கவல்லி வட்டம், சொக்கனூர் அக்ரஹாரம் கிராமத்தில் பொன்னி ஓடையின் குறுக்கே ஒரு புதிய ஏரி அமைக்கும் பணி ரூ.27 கோடி மதிப்பீட்டிலும், விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், சேந்தமங்கலம் கிராமத்தில் ஒரு கசிவுநீர்க் குட்டை அமைக்கும் பணி ரூ.42 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

2. 2 மாவட்டங்களில் புதிதாக கடைமடை நீரொழுங்கி மற்றும் கதவணை அமைக்கும் பணிகள் ரூ.505 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், தென்னம்பட்டினம் கிராமத்தில் திருவாலி ஏரியின் உபரி நீர் வழிந்தோடியான நாட்டுக்கண்ணி மண்ணியாற்றின் குறுக்கே கடைமடை நீரொழுங்கி அமைக்கும் பணி ரூ.10 கோடி மதிப்பீட்டிலும், கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், நஞ்சை புகலூர் கிராமத்தில்

காவேரி ஆற்றின் குறுக்கே கதவணை அமைக்கும் பணி ரூ.495 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

3. 8 மாவட்டங்களில் 12 தடுப்பணைகள் ரூ.105.90 கோடி மதிப்பீட்டிலும், 2 மாவட்டங்களில் 2 அணைக்கட்டுகள் ரூ.8.94 கோடி மதிப்பீட்டிலும் 2 மாவட்டங்களில் 2 படுகை அணைகள் ரூ.13.50 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், நாமக்கல் மாவட்டம் மற்றும் வட்டம், பொடங்கம் கிராமத்தில் புல எண் 31–ல் வரட்டாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.1 கோடியே 80 இலட்சம் மதிப்பீட்டிலும்,

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், செவ்வூர் கிராமத்தில் வைகை ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.8 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், சூடியூர் கிராமத்தில் வைகை ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.8 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், வி. களத்தூர் கிராமத்தின் அருகே கல்லாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.6 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், பாண்டகப்பாடி கிராமத்தில் கல்லாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.6 கோடியே 70 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், வெங்களத்தூர் கிராமம் அருகே பாலாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.27 கோடி மதிப்பீட்டிலும்,

ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், ஜம்பை ‘அ’ கிராமம் க.ச. எண் 962/1–ல் பவானி ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.18 கோடி மதிப்பீட்டிலும்,

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கோட்டைமேடு கிராமத்தில் உள்ள ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.1 கோடியே 20 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கடலூர் மாவட்டம், வேப்பூர் வட்டம், கொளப்பாக்கம் மற்றும் சேப்பாக்கம் கிராமங்களுக்கு அருகே கோமுகி ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.6 கோடியே 20 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டம், பூதாமூர் அருகே மணிமுக்தா ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.16 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், சாத்தன்குடி கிராமத்தில் தெற்காற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.2 கோடியே 60 இலட்சம் மதிப்பீட்டிலும்,

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், திரளி கிராமத்தில் கவுண்டாநதியின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.2 கோடியே 40 இலட்சம் மதிப்பீட்டிலும்,

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை வட்டம், மதயானைப்பட்டி கிராமத்தில் பேராம்பூர் வாரியின் குறுக்கே அணைக்கட்டு அமைத்து ஆவூர் கண்மாய்க்கு நீர் வழங்கும் பணி ரூ.2 கோடியே 94 இலட்சம் மதிப்பீட்டிலும்,

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், சின்னாற்றின் குறுக்கே அமைந்துள்ள பழுதடைந்த அணைக்கட்டினை மறுகட்டுமானம் செய்து, வடக்கலூர் அக்ரஹாரம் ஏரிக்கு நீர் வழங்கும் பணி ரூ.6 கோடி மதிப்பீட்டிலும்,

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், மருதேரி கிராமம், அகரம்–மருதேரி பாலத்தின் அருகே பெண்ணையாற்றின் குறுக்கே படுகை அணை அமைக்கும் பணி ரூ.10 கோடி மதிப்பீட்டிலும்,

காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், ஒட்டியம்பாக்கம் கிராமத்தில், மதுரப்பாக்கம் ஓடையின் குறுக்கே வெள்ளக் கட்டுப்பாட்டு மதகு மற்றும் படுகை அணை கட்டும் பணி ரூபாய் 3 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

4. 5 மாவட்டங்களில் 5 இடங்களில் வெள்ள உபரி நீரினை திருப்பும் பணிகள் ரூ.632.87 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், கேசர்குலிஅல்லா அணையிலிருந்து வெள்ளக் காலங்களில் வெளியேறும் உபரி நீரை அணையின் இடதுபுறக் கால்வாயின் நெடுகை 5.275 கி.மீ.–ல் புதிய பிரிவுக் கால்வாய் அமைத்து கோட்டூர் ஜெர்தலாவ் ஏரி, திருமல்வாடி ஏரி மற்றும் தாசன் ஏரி ஆகிய 3 ஏரிகளுக்கு வழங்கும் பணி ரூ.30 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், தெற்கு நாடு கிராமம் கைகாண்வளவு காட்டாற்றிலிருந்து உபரி நீரை சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், கரியகோயில் நீர்த்தேக்கத்திற்குத் திருப்பும் பணி ரூ.7 கோடியே 30 இலட்சம் மதிப்பீட்டிலும்,

மேட்டூர் அணையின் மழைக்கால வெள்ள உபரிநீரை சேலம் மாவட்டத்தில் சரபங்கா வடிநிலத்தில் உள்ள வறண்ட ஏரிகளுக்கு நீரேற்றம்மூலம் நீர் வழங்கும் பணி ரூ.565 கோடி மதிப்பீட்டிலும்,

ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், வரட்டுப்பள்ளம் அணைக்கு மணியாச்சிப்பள்ளத்தின் வெள்ள நீரைக் கொண்டு செல்லும் திட்டத்திற்கு தொழில்நுட்ப திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி ரூ.27 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், ஆயக்குடி கிராமம் வரதமாநதி அணை வெள்ள நீரினை ஒட்டன்சத்திரம் வட்டம், சத்திரப்பட்டி கருங்குளத்திற்குக் கொண்டு சேர்க்கும் பணி ரூ.60 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

பிற்பகல் 3–20

5. 5 மாவட்டங்களில் 8 இடங்களில் புதிய கால்வாய் அமைக்கும் பணிகள் ரூபாய் 32.20 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், கிருஷ்ணகிரி அணையின் வலதுபுறக் கால்வாய் நீட்டிப்பு திட்டத்தில் நெடுகை 7.100 மீட்டரில் புதிய பிரிவுக் கால்வாய் அமைத்து காட்டூர் கிராமத்தில் உள்ள எலங்குட்டை ஏரிக்கு நீர் வழங்கும் பணி ரூபாய் 30 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருநெல்வேலி மாவட்டம், கடனா ஆற்றில், காங்கேயன் அணைக்கட்டின் கீழுள்ள மாறன் குளத்திலிருந்து கல்லூர் குளம் வரை புதிய கால்வாய் அமைக்கும் பணி ரூபாய் 1 கோடி மதிப்பீட்டிலும்,

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், ஊர்மேலழகியான் கிராமம் வண்ணான்குளம் வழங்கு கால்வாயிலிருந்து கருங்குளத்திற்கு புதிய கால்வாய் அமைக்கும் பணி ரூபாய் 2 கோடி மதிப்பீட்டிலும்,

திருநெல்வேலி மாவட்டம், வடக்கு பச்சையாறு நீர்த்தேக்கத் திட்டத்தின்கீழ் 7 குளங்களைச் சேர்ப்பதற்கு புதிய கால்வாய் அமைக்கும் பணி ரூபாய் 2 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், கூடலூர் கிராமத்தில் 18 ஆம் கால்வாயில் நெடுகை 0 மீ. முதல் 1250 மீ. வரை கட் & கவர் (Cut & Cover) தளம் அமைக்கும் பணி ரூபாய் 21 கோடி மதிப்பீட்டிலும்,

தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரம் வட்டம், மலட்டார் ஓடையிலிருந்து அத்திக்கிணறு குளம் வரை புதிய கால்வாய் அமைக்கும் பணி ரூபாய் 2 கோடியே 10 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் வட்டம், சாஸ்தாவிநல்லூர் கிராமம் புத்தன் தருவை குளத்திற்கு செல்லும் கால்வாயிலிருந்து சாஸ்தாவிநல்லூர் குளத்திற்கு புதிய கால்வாய் வெட்டி தண்ணீர் வழங்கும் பணி ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

மதுரை மாவட்டம், நிலையூர் நீட்டிப்பு திட்டத்தில் சோழங்குருணி கண்மாயிலிருந்து நெடுங்குளம் நெடுஞ்சாலையினை ஒட்டி சிறிய வாய்க்கால் அமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 80 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

6. 3 மாவட்டங்களில் 4 இடங்களில் புதிய பாலம் அமைக்கும் பணிகள் ரூபாய் 3.75 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், கிராம மக்கள் மற்றும் மாணவர்கள் பயனடையும் வகையில், நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் வட்டம், ஆனங்கூர் கிராமத்தில்

இராஜா வாய்க்கால் மைல் 2/3 குறுக்கே பாலம் அமைக்கும் பணி ரூபாய் 75 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேட்டூர் மேற்கு கரை கால்வாயின் குறுக்கே சரகம் 11.390 கி.மீ.–ல் பாலம் அமைக்கும் பணி ரூபாய் 1 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

ஈரோடு மாவட்டம் மற்றும் வட்டம், காளிங்கராயன் வாய்க்கால் மைல் 16–ல் அமைந்துள்ள பாலத்தினை மறுகட்டுமானம் செய்யும் பணி ரூபாய் 1 கோடி மதிப்பீட்டிலும்,

ஈரோடு மாவட்டம் மற்றும் வட்டம், வேட்டை பெரியாம்பாளையம் கிராமம் பவானி பகிர்மான வாய்க்கால் மைல் 1–5–300–ன் குறுக்கே பாலம் அமைக்கும் பணி ரூபாய் 1 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

7 தஞ்சாவூர் மாவட்டத்தில் 2 இடங்களில் தடுப்பணைகளும், ஓர் இடத்தில் விவசாயிகள் இயக்கமும், பராமரிப்பும் செய்யும் வகையில் தடுப்பணையுடன்கூடிய நீரேற்று திட்டமும் ரூபாய் 32 கோடியில் அமைக்கப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டத்தில், இராஜாமடம் கிராமத்தில் அக்னியாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணையும், பொன்னவராயன் கோட்டை கிராமத்தில் நசுவினி ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணையும், ஏனாதி கிராமத்தில் மகாராஜசமுத்திரம் ஆற்றின் குறுக்கே விவசாயிகள் இயக்கமும், பராமரிப்பும் செய்யும் வகையில் தடுப்பணையுடன்கூடிய ஒரு நவீன நீரேற்று பாசனத் திட்டமும் ரூபாய் 32 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

8. இராமநாதபுரம் மாவட்டத்தில் சாத்தக்கோன்வலசை கிராமத்தில், கடல் அரிப்பு தடுப்பு சுவர் கட்டும் பணி ரூபாய் 12 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், கடலரிப்பைத் தடுக்கும்பொருட்டு இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஒன்றியம், இராமேஸ்வரம் வட்டம், சாத்தக்கோன்வலசை கிராமத்தில் சீனியப்பா தர்கா அருகில் கடல் அரிப்பு தடுப்புச் சுவர் கட்டும் பணி ரூபாய் 12 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

9. காஞ்சிபுரம் மாவட்டத்தில் செங்கல்பட்டில் குளவாய் ஏரியினை மீட்டெடுத்து, குடிநீர் ஆதாரம் மேம்படுத்தும் திட்டம் ரூபாய் 90 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், காஞ்சிபுரம் மாவட்டத்தில், செங்கல்பட்டில் குளவாய் ஏரியினை மீட்டெடுத்து, சென்னையின் நீட்டிக்கப்பட்ட புறநகர் மற்றும் செங்கல்பட்டு பகுதிகளுக்கு குடிநீர் ஆதாரம் மேம்படுத்தும் திட்டம் ரூபாய் 90 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

10. தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டும் திட்டம் ரூபாய் 61 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், திருவாரூர் மாவட்டத்தில், காவேரி மற்றும் வெண்ணாறு ஆற்றில் நிலத்தடி நீர் செறிவூட்டும் 155 ஆழ்துளை கிணறுகள் மற்றும் ஏரிகளில் 26 நிலத்தடி நீர் செறிவூட்டும் கட்டுமானங்கள் அமைக்கும் திட்டம் ரூபாய் 12 கோடி மதிப்பீட்டிலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் காவேரி, வெண்ணாறு மற்றும் அக்னியாறு ஆகிய ஆறுகளில் நிலத்தடி நீர் செறிவூட்டும் 605 ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் ஏரிகளில் 99 நிலத்தடி நீர் செறிவூட்டும் கட்டுமானங்கள் அமைக்கும் திட்டம் ரூபாய் 49 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

11. 9 மாவட்டங்களில் 9 பாசனக் கட்டுமானங்கள் ரூபாய் 30.80 கோடி மதிப்பீட்டிலும், 10 மாவட்டங்களில் 13 கால்வாய்கள் ரூபாய் 156.28 கோடி மதிப்பீட்டிலும், 4 மாவட்டங்களில் 4 பாசன ஏரிகள் ரூபாய் 185.50 கோடி மதிப்பீட்டிலும் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், குமரம்பட்டி கிராமத்தில், குமரம்பட்டி அணைக்கட்டினைப் புனரமைக்கும் பணி ரூபாய் 4 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

விழுப்புரம் மாவட்டம் மற்றும் வட்டம், வடக்கு மலட்டாற்றின் குறுக்கே அமைந்துள்ள பூவரசன்குப்பம் அணைக்கட்டினைப் புனரமைத்தல் மற்றும் தளவானூர் அணைக்கட்டில் தலைமதகு அமைக்கும் பணி ரூபாய் 5 கோடி மதிப்பீட்டிலும்,

திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், திருத்தலையூர் கிராமம் திருத்தலையூர் பெரிய ஏரி மற்றும் சின்ன ஏரியினைச் சீரமைத்து சாலை பாலம் மற்றும் நீரொழுங்கியினைப் புனரமைக்கும் பணி ரூபாய் 1 கோடி மதிப்பீட்டிலும்,

திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு வட்டம், தானிப்பாடி கிராமத்தில் பாம்பனாறு ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள மண்கொரம்பினை நிரந்தர கட்டுமானமாக மாற்றி அமைக்கும் பணி, சின்னையம்பேட்டை அணைக்கட்டின் வழங்குக் கால்வாயினைப் புனரமைக்கும் பணி மற்றும் தானிப்பாடி அணைக்கட்டின் வழங்கு கால்வாயினை மேம்படுத்தும் பணி ரூபாய் 5 கோடி மதிப்பீட்டிலும்,

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், வாலிகண்டாபுரம் கிராமத்திலுள்ள வாலிகண்டாபுரம் அணைக்கட்டினைப் புனரமைக்கும் பணி ரூபாய் 80 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், ராஜகிரி கிராமத்தில் குடமுருட்டி ஆற்றில் மைல் 47/6–ல் திருமலைராஜன், குடமுருட்டி நீரொழுங்கியினைப் புனரமைக்கும் பணி ரூபாய் 2 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், ஊத்துக்கடவு கிராமத்தில் வெண்ணாறு மைல் 53/3–4–ல் ஊத்துக்கடவு நீரொழுங்கியினைப் புனரமைக்கும் பணி ரூபாய் 3 கோடி மதிப்பீட்டிலும்,

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், போடிநாயக்கனூர் கிராமம் அணை பிள்ளையார் கோவில் அருகில் உள்ள ராஜவாய்க்கால் அணைக்கட்டை புனரமைக்கும் பணி ரூபாய் 5 கோடி மதிப்பீட்டிலும்,

திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம், தாமரைப்பாக்கம் அணைக்கட்டின் மேல்புறத்தில் குறுக்குச் சுவர் அமைக்கும் பணி மற்றும் கீழ்ப்புறத்தில் உள்ள தண்ணீர் வேகத்தைக் கட்டுப்படுத்தும் கட்டுமானப் பணி ரூபாய் 4 கோடி மதிப்பீட்டிலும்,

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், எடப்பாடி நகரத்திலுள்ள சரபங்கா நதி நெடுகை 42.80 கி.மீ. முதல் நெடுகை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

43.30 கி.மீ. வரை புனரமைத்து மேம்படுத்தும் பணி ரூபாய் 4 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், எடப்பாடி நகரத்திலுள்ள சரபங்கா நதி நெடுகை 43.30 கி.மீ. முதல் நெடுகை 43.80 கி.மீ. வரை புனரமைத்து மேம்படுத்தும் பணி ரூபாய் 4 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவண்ணாமலை மாவட்டம் மற்றும் வட்டம், நந்தன் கால்வாய் நெடுகை 0 கி.மீ. முதல் 12.40 கி.மீ. வரை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தும் பணி ரூபாய் 12 கோடியே 25 இலட்சம் மதிப்பீட்டிலும்,

ஈரோடு மாவட்டம், பவானி வட்டம் மற்றும் கோபிசெட்டிபாளையம் வட்டம், கீழ்பவானித் திட்ட பிரதான வாய்க்காலின் கூகலூர் பகிர்மான வாய்க்காலின் மைல் 0/0 முதல் கடைமடை வரை புனரமைக்கும் பணி ரூபாய் 5 கோடியே 83 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், பல்லடம் விரிவாக்கக் கால்வாயின் நெடுகை 0 கி.மீ. முதல் 2 கி.மீ. வரை உள்ள பகுதிகளைப் புனரமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 80 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், உடுமலைக் கால்வாயினை நெடுகை 16.600 கி.மீ. முதல் 23.170 கி.மீ. வரை மற்றும் அதன் பகிர்மானக் கால்வாய்களில் விடுபட்டுள்ள புனரமைக்கும் பணி ரூபாய் 3 கோடி மதிப்பீட்டிலும்,

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், பரம்பிக்குளம் பிரதான கால்வாயின் நெடுகை 36.000 கி.மீ. முதல் 39.500 கி.மீ. வரை புனரமைக்கும் பணி ரூபாய் 2 கோடியே 40 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவாரூர் மாவட்டம் மற்றும் வட்டம், திருக்கண்ணமங்கை வாய்க்காலினைப் புனரமைக்கும் பணி ரூபாய் 3 கோடி மதிப்பீட்டிலும்,

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், திருமங்கலம் பிரதான கால்வாயின் 1–வது கிளை வாய்க்கால் புனரமைக்கும் பணி ரூபாய் 7 கோடி மதிப்பீட்டிலும்,

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், நாரணதேரன்பட்டி கிராமத்தில் கேசவபுரம் கண்மாய் வழங்கு கால்வாயினை நெடுகை 1900 மீ. முதல் 2820 மீ. வரை நவீனப்படுத்தும் பணி ரூபாய் 5 கோடி மதிப்பீட்டிலும்,

தேனி மாவட்டத்தில் உள்ள பி.டி. ராஜன் கால்வாய் மற்றும் பாலகிருஷ்ணாபுரம் கிளைக் கால்வாயினைப் புனரமைக்கும் பணி ரூபாய் 20 கோடி மதிப்பீட்டிலும்,

சிவகங்கை மாவட்டம் மற்றும் வட்டம், கள்ளரதிணிபட்டி, திருமலை, நாமனூர், மேலபூங்குடி, சாளூர், சோழபுரம், நாலுக்கோட்டை கிராமங்களில் உள்ள சீல்டுகால் கால்வாய் மற்றும் கண்மாய்களைப் புனரமைக்கும் மற்றும் சீரமைக்கும் பணி ரூபாய் 22 கோடி மதிப்பீட்டிலும்,

ஈரோடு மாவட்டம், அந்தியூர் மற்றும் பவானி வட்டங்களுக்குட்பட்ட மேட்டூர் மேற்கு கரை கால்வாய் நெடுகை 19.685 கி.மீ. முதல் 43.200 கி.மீ. வரை புனரமைக்கும் பணி (நெருஞ்சிப்பேட்டை முதல் பவானி வரை) ரூபாய் 65 கோடி மதிப்பீட்டிலும்,

திருச்சி மாவட்டம், துறையூர் மற்றும் முசிறி வட்டம், ரெட்டியாப்பட்டி ஏரி, கரிகாலி ஏரி மற்றும் உத்தாண்டம்பட்டி ஏரிகளைப் புனரமைக்கும் பணி ரூபாய் 2 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், பாளையம் கிராமத்தில், விராலிப்பட்டி குக்கிராமத்தில் உள்ள கசிவு நீர்க் குட்டையைப் புனரமைக்கும் பணி ரூபாய் 3 கோடி மதிப்பீட்டிலும்,

இராமநாதபுரம் மாவட்டம், ஆர்.எஸ். மங்கலம் வட்டம், ஆர்.எஸ். மங்கலம் பெரிய கண்மாயினை நவீனப்படுத்தும் பணி ரூபாய் 19 கோடி மதிப்பீட்டிலும்,

விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டம், கழுவேலி ஏரியில் கட்டமைப்பு அமைத்து கழுவேலி ஏரியினை மீட்டெடுத்து, 2 டி.எம்.சி. அடி நீரினை தேக்குதல் மற்றும் கடல் நீர் உட்புகுதலைத் தடுக்கும் பணி ரூபாய் 161 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

12. 2 மாவட்டங்களில் 2 பாலங்கள் ரூபாய் 2.50 கோடி மதிப்பீட்டிலும், கடலூர் மாவட்டத்தில் 2 பாசன கட்டுமானங்களின் அடைப்புக் கதவுகள் ரூபாய் 20.71 கோடி மதிப்பீட்டிலும், 2 மாவட்டங்களில் தடுப்புச் சுவர் கட்டும் பணி ரூபாய் 16.20 கோடி மதிப்பீட்டிலும் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேட்டூர் மேற்கு கரை கால்வாய் 0/0–ல் பாலம் மற்றும் தலைமதகினைப் புனரமைக்கும் பணி ரூபாய் 1 கோடி மதிப்பீட்டிலும்,

கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு வட்டம், வடசித்தூர் கிளைக் கால்வாயின் நெடுகை 14.350 கி.மீ., 14.540 கி.மீ., 15.372 கி.மீ. மற்றும் 16.106 கி.மீ.–ல் உள்ள பாலங்களை மறுசீரமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், வெள்ளாற்றின் குறுக்கே அமைந்துள்ள பெலாந்துறை அணைக்கட்டின் அடைப்புக் கதவுகள் மற்றும் அதன் உபகரணங்களைப் புனரமைக்கும் பணி ரூபாய் 10 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், வெள்ளாற்றின் குறுக்கே அமைந்துள்ள தொழுதூர் நீரொழுங்கியின் அடைப்புக் கதவுகள் மற்றும் அதன் உபகரணங்களைப் புனரமைக்கும் பணி ரூபாய் 10 கோடியே 21 இலட்சம் மதிப்பீட்டிலும்,

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், மின்னாத்தூர் பெரியகுளம் உபரிநீர் வாய்க்காலினைத் தூர்வாரி, மின்னாத்தூர் கிராமம் முதல் கந்தர்வகோட்டை கிராமம் வரை தடுப்புச் சுவர் கட்டும் பணி ரூபாய் 1 கோடியே 20 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், அக்கரை ஜெயங்கொண்டபட்டினம் கிராமம் அருகே கொள்ளிடம் ஆற்றின் இடது கரையில் தடுப்புச் சுவர் அமைக்கும் பணி ரூபாய் 15 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

13. திண்டுக்கல் மாவட்டத்தில் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலைச் சுற்றியுள்ள வையாபுரி மற்றும் சிறுநாயக்கன் குளங்களைப் புனரமைத்தல் மற்றும் 2 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் பணி ரூபாய் 51.85 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், திண்டுக்கல் மாவட்டம், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலைச்

சுற்றியுள்ள வையாபுரி மற்றும் சிறுநாயக்கன் குளங்களைப் புனரமைத்து, நீர்நிலைகளுக்கு வந்து சேரும் கழிவுநீர்க் கால்வாய்களைப் புனரமைத்து, 2 சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் பணி ரூபாய் 51 கோடியே 85 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

14. 8 மாவட்டங்களில் 14 இடங்களில் புதிய பாசனத் திட்டங்கள் குறித்த ஆய்வுப் பணிகள் மற்றும் மட்டளவு எடுக்கும் பணிகள் ரூபாய் 5.86 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் கீழ்க்கண்ட புதிய பாசனத் திட்டங்களுக்கு விரிவான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

விழுப்புரம் மாவட்டம், சின்னசேலம் வட்டம், கோமுகி அணையின் மேல்புறத்தில் கல்படை ஆற்றின் குறுக்கே ஒரு சிறிய அணையும், பொட்டியம் ஆற்றின் குறுக்கே ஒரு சிறிய அணையும் அமைத்து கூடுதல் நீர்த்தேக்கம் ஏற்படுத்தும் திட்டத்திற்கு ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், அன்றாயநல்லூர் கிராமம் அருகே பெண்ணையாற்றில் வெள்ளக் காலங்களில் வரும் வெள்ள மிகை நீரைப் பயன்படுத்தி கோரையாறு மற்றும் மலட்டாறு பகுதிகளில் நிலத்தடி நீரை செறிவூட்டும் திட்டத்திற்கு ரூபாய் 8 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

நாகப்பட்டினம் மற்றும் கடலூர் மாவட்டம், சீர்காழி மற்றும் சிதம்பரம் வட்டம், அளக்குடி மற்றும் திருக்கழிப்பாலை கிராமங்களுக்கு இடையே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கடல் நீர் உட்புகுவதைத் தடுக்கும்பொருட்டு ஒரு தடுப்புச் சுவர் அமைக்கும் பணிக்கு ரூபாய் 1 கோடி மதிப்பீட்டில் நில அளவைப் பணிகள், மண் பரிசோதனைப் பணிகள் மற்றும் மாதிரி ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

நாகப்பட்டினம் மற்றும் கடலூர் மாவட்டம், கருப்பூர் மற்றும் மாதிரிவேளூர் கிராமங்களுக்கு இடையே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கதவணை அமைக்கும் திட்டத்திற்கு ரூபாய் 43 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

அரியலூர் மாவட்டம் மற்றும் வட்டம், தூத்தூர் கிராமம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், வாழ்க்கை கிராமங்களுக்கு இடையே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கதவணை அமைக்கும் திட்டத்திற்கு ரூபாய் 23 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், நெரூர் கிராமம் மற்றும் நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டம், ஒருவந்தூர் கிராமங்களுக்கு இடையே காவேரி ஆற்றின் குறுக்கே நெடுகை 122.24 கி.மீ.–ல் கதவணை அமைக்கும் திட்டத்திற்கு ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், குளித்தலை கிராமம் மற்றும் திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், முசிறி கிராமங்களுக்கு இடையே காவேரி ஆற்றின் குறுக்கே நெடுகை 161.54 கி.மீ.-ல் கதவணை அமைக்கும் திட்டத்திற்கு ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், தாமரைகுளம் கிராமத்தில் பழையாற்று நீரை நீரேற்று திட்டம்மூலம் ராதாபுரம் கால்வாய்க்குக் கொண்டு செல்லும் திட்டத்திற்கு ரூபாய் 2.5 கோடி மதிப்பீட்டில் ஆய்வுப் பணிகள் மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், ஞாலம் கிராமத்தில் தடவையாற்றின் குறுக்கே சிறிய நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டத்திற்கு மட்ட அளவு மற்றும் மண்தன்மை ஆய்வுப் பணி ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், நம்பியாற்றின் குறுக்கே புதிய அணைக்கட்டு கட்டி புதிய கால்வாய் அமைத்து, வெள்ளநீரை குட்டம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு வழங்கும் திட்டத்திற்கு மட்ட அளவு மற்றும் மண்தன்மை ஆய்வுப் பணி ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

திருநெல்வேலி மாவட்டம், வீரகேரளம்புதூர் வட்டம், இரட்டை குளத்திலிருந்து ஊத்துமலை வரை கால்வாய் அமைக்கும் திட்டத்திற்கு மட்ட அளவு மற்றும் மண்தன்மை ஆய்வுப் பணி ரூபாய் 7 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள வறண்ட ஒட்டப்பிடாரம் மற்றும் எட்டையபுரம் பகுதிகளுக்கு திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தாமிரபரணி, கடனாநதி, சிற்றாறு மற்றும் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள உப்போடை மற்றும் கல்லாறு ஆகியவற்றை இணைத்து வெள்ளநீர் கால்வாய்மூலம் நீர் வழங்கும் திட்டத்திற்கு மட்ட அளவு மற்றும் மண் தன்மை ஆய்வுப் பணி ரூபாய் 30 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் வட்டம், மருதூர் கீழக்கால்வாய் மற்றும் பேரூர் புறவழிக் கால்வாயினை அகலப்படுத்தி புதிய வெள்ளநீர் கால்வாய் அமைத்து, கோரம்பள்ளம் குளம் மற்றும் சாயர்புரம் தேரிப் பகுதிகளுக்கு தண்ணீர் கொண்டு செல்லும் திட்டத்திற்கு மட்ட அளவு மற்றும் மண்தன்மை ஆய்வு ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், தென்பெண்ணையாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள ஈச்சம்பாடி அணைக்கட்டின் மழைக்கால வெள்ள உபரி நீரை நீரேற்று திட்டத்தின்மூலம் அரூர், பாப்பிரெட்டிபட்டி மற்றும் மொரப்பூர் வட்டங்களில் உள்ள ஏரிகள், குளங்கள் மற்றும் குட்டைகளுக்கு நீர் வழங்கும் திட்டத்திற்கு ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

15. ஹோல்ட்ஸ்வர்த் அணைக்கட்டின் பூங்காவினை மேம்படுத்துதல், மண்தன்மை மற்றும் ஆராய்ச்சி கோட்டத்தின் ஆய்வகங்களுக்கு நவீன பரிசோதனை கருவிகள் வழங்குதல் மற்றும் திருச்சி, திட்ட உருவாக்க வட்ட அலுவலகம் சீரமைக்கும் பணி ஆகியவை ரூபாய் 1.91 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் பொதுப் பணித் துறையில் பின்வரும் உள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்:—

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், கடயக்குடி கிராமத்தில் ஹோல்ட்ஸ்வர்த் அணைக்கட்டின் பூங்காவினை மேம்படுத்தி இணைப்புக் கட்டடம் கட்டும் பணி ரூபாய் 90 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

சென்னை, பொதுப் பணித் துறையின் மண்தன்மை மற்றும் ஆராய்ச்சி கோட்டத்தின் கீழுள்ள மண் பரிசோதனை

ஆய்வகங்களுக்கு உரிய நவீன பரிசோதனைக் கருவிகள் ரூபாய் 26 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

திருச்சி மாவட்டம் மற்றும் வட்டம், திட்ட உருவாக்க வட்ட அலுவலகத்தினைச் சீரமைக்கும் பணி ரூபாய் 75 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

16. 2 மாவட்டங்களில் தரக்கட்டுப்பாட்டுக் கோட்ட அலுவலகங்களுக்கு கட்டடம் கட்டும் பணி மற்றும் 3 மாவட்டங்களில் ஆய்வகத்திற்கு உபகரணங்கள் வாங்கும் பணி ரூபாய் 11 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் தரக்கட்டுப்பாட்டு அலுவலகங்களுக்கு ஆய்வகத்துடன்கூடிய கோட்ட அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணி மொத்தம் ரூபாய் 8 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

சென்னை, திருச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் உள்ள தரக்கட்டுப்பாட்டுக் கோட்டங்கள் மற்றும் உபகோட்டங்களின் ஆய்வகத்திற்காக உபகரணங்கள் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

17. மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் மாண்புமிகு நீதிபதிகள் குடியிருப்புகளில் மேம்பாட்டுப் பணிகள் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் சென்னை, அடையாறு, பசுமைவழிச் சாலையில் உள்ள மாண்புமிகு அமைச்சர்கள் குடியிருப்பு மற்றும் மாண்புமிகு நீதிபதிகள் குடியிருப்பு வளாகங்களில் சுகாதார வசதி, உட்புறச் சாலை மற்றும் தெருவிளக்கு அமைத்தல் ஆகிய மேம்பாட்டுப் பணிகள் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

18. சென்னை, சைதாப்பேட்டை அரசு குடியிருப்பில் கழிவுநீர் மறுசுழற்சி அமைப்பு, மழைநீர் சேகரிப்பு மற்றும் வடிகால் அமைப்பு ரூபாய் 3.70 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் சென்னை, சைதாப்பேட்டை, தாடண்டர் நகரில் உள்ள அரசு ஊழியர் குடியிருப்பு வளாகத்தில் கழிவுநீர் மறுசுழற்சி மற்றும் மறு

உபயோகத்திற்கான அமைப்பு ரூபாய் 3 கோடி மதிப்பீட்டிலும், சென்னை, சைதாப்பேட்டை, தாடண்டர் நகரில் உள்ள அரசு ஊழியர் குடியிருப்பு வளாகத்தில் மழைநீர் வடிகால், சேகரிப்பு மற்றும் மேற்பரப்பு வடிகால் அமைப்பு ரூபாய் 70 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

19. மதுரையில் பொதுப் பணிப் பணியாளர் பயிற்சி நிலையக் கட்டடம் மற்றும் 3 மாவட்டங்களில் உபகோட்ட அலுவலகக் கட்டடங்கள் புதியதாக ரூபாய் 5.40 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மதுரையில் உள்ள பொதுப் பணி பணியாளர் பயிற்சி நிலைய துணை இயக்குநர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் ரூபாய் 3.50 கோடி மதிப்பீட்டிலும், திருநெல்வேலியில் உள்ள மின் கோட்டம் மற்றும் மின் உபகோட்ட அலுவலகத்திற்கு புதிய கட்டடம் ரூபாய் 1.20 கோடி மதிப்பீட்டிலும், திண்டுக்கல்லில் கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உபகோட்ட அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் ரூபாய் 35 இலட்சம் மதிப்பீட்டிலும், பழனியில் கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உபகோட்ட அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் ரூபாய் 35 இலட்சம் மதிப்பீட்டிலும் கட்டப்படும்.

20. 3 மாவட்டங்களில் செயற்பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் குடியிருப்புகள் ரூபாய் 2.60 கோடி மதிப்பீட்டில் புதியதாகக் கட்டப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் செயற்பொறியாளர் குடியிருப்பு புதிய கட்டடம் ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டிலும், நாகப்பட்டினத்தில் செயற்பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் புதிய குடியிருப்புகள் ரூபாய் 1 கோடி மதிப்பீட்டிலும், திருவாரூரில் செயற்பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் புதிய குடியிருப்புகள் ரூபாய் 1 கோடி மதிப்பீட்டிலும் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை மற்றும் பொதுத் பணித் துறை குறித்த மானியக் கோரிக்கைகள்மீதான விவாதத்திற்கு நான் அளித்த பதிலுரையில், மாண்புமிகு உறுப்பினர்களின் பல்வேறு கேள்விகளுக்கு பதில் கிடைத்திருக்கும் என்று நம்புகிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள், தாங்கள் கொடுத்துள்ள

வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வருடமோ, அதற்கு முந்தைய வருடமோ, என்னுடைய தொகுதியில் காங்கேயநல்லூர்–Collector Office க்கு ஒரு சின்ன பாலம் அறிவிக்கப்பட்டது. அதில் land acquisition எதுவும் தேவைப்படவில்லை. ஒருபுறம் காங்கேயநல்லூர், மறுபுறம் Collector Office, நடுவிலே பாலாறு. திட்டம் அறிவிக்கப்பட்டு மூன்றாண்டுகளுக்குப் பிறகு, தற்போதுதான் project report தயார் செய்யப்படுவதாகச் சொல்கிறார்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர்களை நான் குறை சொல்லமாட்டேன். அதற்கு என்ன காரணமென்றால், Department–ல் மூன்று Secretaries post vacant ஆக இருக்கிறது. Highways Department–க்கு தனியாக Secretary இருக்க வேண்டும். Public Works Department Secretary–தான் Highways Department–க்கு additional charge/incharge ஆக இருக்கிறார். அவ்வாறு இருக்கும்போது எப்படிப் பணிகள் நடைபெறும்? அதேபோல் இன்னொன்றும் சொல்கிறேன். Department–க்கு Chief Engineer (General) இருக்கிறார். நியாயமாக அவர், இங்கு வந்து அமர்ந்திருக்க வேண்டும். அவரும் 3 பொறுப்புகளுக்கு incharge. இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால். . . (குறுக்கீடு) அங்கே உட்கார்ந்திருந்தால் நான் கணக்கில் எடுத்துக்கொள்ளமாட்டேன்.

பிற்பகல் 3–25

நியாயமாகப் பார்த்தால் C.E. (General) இங்குதான் உட்கார்ந்திருக்க வேண்டும். சும்மா இருப்பவர்கள் எல்லாம் இங்கே உட்காரக் கூடாது. அதனால் ஏற்பட்ட விளைவு என்னவென்றால் போட்ட திட்டங்கள் செயல்பாட்டிற்கு வரவில்லை. 2018–2019–ல் திட்டப் பணிகளுக்கு நீங்கள் ஒதுக்கியுள்ள பணம் 9 ஆயிரத்து 241 கோடி ரூபாய். பக்கம் 30–ல் உள்ளபடி, இதில் செலவு செய்யப்பட்டது 7 ஆயிரத்து 363 கோடி ரூபாய். அப்படியென்றால் ஆயிரத்து 878 கோடி ரூபாய் surrender செய்திருக்கிறீர்கள். ஏன் surrender செய்திருக்கிறீர்கள்? வேலை நடக்கவில்லை. C.E. (General) போன்று அந்தந்தப் பணியிடங்களில் அதிகாரிகள் இருக்க

வேண்டும். 3 அதிகாரிகள் கிடையாது. ஆகையினாலே முதலில் நீங்கள் posting போடுங்கள். C.E. (General) post–ஐ ஏன் vacant ஆக வைத்திருக்கிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் இப்பொழுது posting–ல் இருக்கிறார்கள். தவறான செய்தி. இப்போது posting–ல் இருக்கிறார்கள், இல்லை என்று சொல்லவில்லை. ஏனென்றால், குறிப்பிட்ட காலத்தில் பணி ஓய்வு பெற்று விடுகிறார்கள். நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, அவர்களுக்கு ஒரு வருடம்தான் இருக்கிறது. நீங்கள் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தீர்கள், உங்களுக்கு நன்றாகத் தெரியும். 15 தினங்களுக்கு முன்பு கிட்டத்தட்ட 19 கண்காணிப்புப் பொறியாளர்கள் பணி ஓய்வு பெற்றிருக்கின்றார்கள். ஆகவே, promotion போட்டுக்கொண்டுதான் இருக்கிறோம். அதிலும், சுமார் 39 பணியிடங்கள் காலியாக இருந்தன என்று நினைக்கிறேன். அதில் 19 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. 2 பொறியாளர்கள் பணி உயர்வு பெற இருக்கிறார்கள். வேலூர் நாடாளுமன்றத் தேர்தல் வந்த காரணத்தினால், அந்த இரண்டு செயற்பொறியாளர்களும் அங்கு பணிபுரிகின்ற காரணத்தால், பதவி உயர்வு கொடுக்க முடியவில்லை. அந்தக் காரணத்தால், அவர்களுக்குப் பின்னால் இருப்பவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்க முடியவில்லை.

அதுமட்டுமல்ல, இவ்வளவு நிதி surrender செய்திருக்கிறீர்கள் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அதுவல்ல, ஒரு திட்டத்தைக் கொண்டு வரும்போது, நிலம் எடுக்கின்ற பணி இருக்கிறது, நான் ஏற்கெனவே கருமேனியாறு–நம்பியாறு திட்டத்தில் தெளிவாகச் சொன்னேன். ஆக, நிதி ஒதுக்குகிறோம். ஆனால் நிதி ஒதுக்கீடு செய்து முழுவதையும் ஒரே ஆண்டில் நிறைவேற்ற முடியாது. உங்களுடைய ஆட்சியிலும் நடைபெற்றது கிடையாது, பல ஆண்டுகள் ஆகிவிடுகின்றன. அதில் பல்வேறு பிரச்சினைகள் வந்து விடுகின்றன. நிலம் எடுக்கின்றபொழுது நீதிமன்றத்திற்குச் சென்று விடுகிறார்கள். நீதிமன்றத்திற்குச் சென்றுவிட்டதால் பல ஆண்டுகாலம் அந்த வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வழக்கு முடிந்த பிறகுதான் அந்தத் திட்டத்தை எடுத்து நிறைவேற்ற

முடியும். ஆகவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்ன செய்தி உங்களுடைய ஆட்சியிலும் இருந்தது, எங்களுடைய ஆட்சியிலும் இருந்து கொண்டிருக்கின்றது. ஆகவே, நிலம் எடுக்கின்ற பிரச்சினையில் அந்தத் துறையின் சார்பாக பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றபொழுது சில இடர்பாடுகள், பிரச்சினைகள் ஏற்படுகின்ற காரணமாகத்தான் காலதாமதம் ஆகின்றதேயொழிய, அதிகாரிகளால் அல்ல. இப்பொழுதுகூட, இரண்டு மாதங்களாகத்தான் நெடுஞ்சாலைத் துறையினுடைய செயலாளர் அவர்கள் incharge–ல் இருக்கிறார், அதற்கு முன்பு இல்லை. இரண்டு மாதங்களாகத்தான் நெடுஞ்சாலைத் துறைக்கு, பொதுப் பணித் துறையினுடைய செயலாளர் கூடுதல் பொறுப்பாகப் பணியமர்த்தப்பட்டிருக்கிறார். விரைவாக அனைத்துத் துறைகளுக்குமே செயலாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஒரு இடத்தைச் சுட்டிக்காட்டி, நீண்ட காலமாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றவில்லை என்று சொன்னார்கள். என்ன காரணத்திற்காக அது தடைபட்டிருக்கிறது என்பதையெல்லாம் ஆய்வு செய்து, அதை விரைவாக முடிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில எடுப்பிலே பிரச்சினை இருக்கும், நான் இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், நில எடுப்புப் பிரச்சினை இல்லாத என் தொகுதியிலேயே திட்டங்கள் தேங்கிக் கிடக்கின்றன என்று நான் சொன்னேன். Secretary நியமிக்கப்படுவதைப் பற்றிச் சொன்னீர்கள், C.E. (General) promotion போடும்போது பிரச்சினைகள் வரும், இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் Secretary posting போடுவதில் என்ன இருக்கிறது? என்னைக் கேட்டீர்களென்றால், இப்பொழுது எல்லாத் துறைகளையும் பார்த்தவர், நீண்ட நெடுங்காலம் அனுபவம் பெற்றவர், அவர் பார்க்காத துறையே இல்லை, அப்படிப்பட்டவர் Chief Secretary ஆக வந்திருக்கிறார். அவருடைய காலத்திலாவது துறைகள்தோறும் vacant இல்லாமல், அனைத்து Secretary பணியிடங்களையும் நிரப்புவார் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

மூன்றாவதாக, 10 வருடங்களாகிவிட்டன. NMR ஆக பணிபுரிபவர்களை permanent செய்ய மாட்டேன் என்கிறீர்கள். நான் permanent செய்துவிட்டுச் சென்றேன். அதற்குப் பின்னர் permanent செய்யவே முடியவில்லை. NMR ஆகப் பணிபுரிபவர்கள் பாவம், அவர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 23 ஆண்டு காலம், 12 ஆண்டு காலம் பணியாற்றிய NMR–களை எல்லாம் இப்பொழுது பணி நிரந்தரம் செய்வதற்கான கோப்பு பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கின்றது. விரைவாக அவர்கள் எல்லாம் பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி வருமானால் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னொன்று, இந்த State Support Agreement போடுவதில் நீங்கள் மிகவும் delay செய்கிறீர்கள். இப்போது இராணிப்பேட்டை–பூந்தமல்லிக்கு எப்படியோ கொடுத்திருக்கிறீர்கள். இவ்வளவு நாளாக எதற்கும் இல்லாமல் அதற்கு ஏன் கொடுத்தீர்கள் என்பது தெரியும். அவர் நல்ல contractor, நன்றாகப் போட்டுக்கொண்டிருக்கிறார். திண்டிவனம்–கிருஷ்ணகிரிக்கு State Support Agreement கொடுக்கவில்லை. திண்டிவனம்–கிருஷ்ணகிரியைப் பொறுத்தவரை இங்கிருக்கும் நமது உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள் டெல்லிக்குச் சென்று Minister–ஐப் பார்த்துக் கேட்டால், உங்களிடமிருந்து State Support Agreement வரவில்லை என்று சொல்கிறார்கள். ஆகையினாலே இந்தத் திட்டங்களையெல்லாம் விரைவாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீண்ட நெடுங்காலமாக உங்கள் எல்லோருக்கும் தெரியும். ஆற்றில் கம்பம் போட்டால் தடங்கல் வந்துவிடாது. அதற்காக Harbour to Maduravoyal திட்டத்தை நிறுத்தி

வைப்பது நல்லதல்ல. Harbour to Maduravoyal திட்டம் மக்களுக்கான திட்டம். பூந்தமல்லி ரோட்டில் அந்தத் திட்டம் அப்படியே நின்று கொண்டிருக்கிறது. ஆகையினால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் இம்மாதிரியான திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 3–30

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, State Support Agreement பற்றிச் சொன்னார்கள். உங்களுடைய ஆட்சிக் காலத்திலே மத்திய அரசால் தகவல் அனுப்பப்பட்டது. ஆனால், நீங்கள் அதை நிறைவேற்றவில்லை. மீண்டும் அந்தக் கூட்டம் கூடுகின்றபோது தேர்தல் வந்த காரணத்தால் அப்படியே தள்ளிப்போய்விட்டது. அதற்குப் பிறகு, மாண்புமிகு அம்மா அவர்களை அங்கிருக்கின்ற லாரி அதிபர்கள், பேருந்து அதிபர்களை எல்லாம் நேரில் சந்தித்து இந்த tollgate பிரச்சினை பற்றிச் சொன்னார்கள். அந்தப் பிரச்சினை சம்பந்தமாக, மத்திய அரசுக்குக் கடிதம் அனுப்பினோம், எந்தப் பதிலும் வரவில்லை. இதைத் தெளிவாகச் சொல்லிவிடுகிறேன். உங்களுடைய ஆட்சிக்காலத்திலே 2009–ல் மத்திய அரசு வரைவு ஒப்பந்த உடன்படிக்கையை தமிழ்நாடு அரசுக்கு அனுப்பியது. முந்தைய ஆட்சியாளர்கள் ஆய்வு செய்வதில் காலந்தாழ்த்தியதால் அப்போது மத்திய அமைச்சர் திரு. கமல்நாத் அவர்கள் முதலமைச்சருக்கு 3–7–2009–ல் கடிதம் எழுதியுள்ளார். 30–3–2010–ல் கையெழுத்து போட வேண்டிய ஒப்பந்தம் பலமுறை தள்ளிப்போனது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, உங்களுடைய ஆட்சிக் காலத்திலே. மீண்டும் பல நாட்கள் இப்பிரச்சினை சம்பந்தமாக மத்திய அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசை கலந்தாய்வுக் கூட்டத்திற்கு அழைத்தும், உங்களுடைய தரப்பிலிருந்து எவரும் அந்தக் கூட்டத்திலே கலந்துகொள்ளவில்லை. 9–3–2011–ல் மேற்படி ஒப்பந்தத்தில் கையெழுத்திட நாள் குறிக்கப்பட்டும், தேர்தல் நடைமுறையினால் மத்திய அரசு இதனைத் தள்ளி வைத்தது. ஒப்பந்தம் குறித்து உங்களை அழைத்தபோது, தேர்தலை அறிவித்து

விட்டார்கள், அதோடு முடிந்துவிட்டது. இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் எடுத்துக்கொள்ளப்பட்ட இன்னும் முடிவடையாமல் உள்ள 7 BOT திட்டப் பணிகள் மற்றும் ஒரு OMT பணிக்கு தனித்தனியே ஒத்துழைப்பு ஒப்பந்தம் (SSA) கையெழுத்திடுவது தொடர்பாக 22–12–2017 அன்று மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தில் நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில் மாநில அரசு பதிந்துள்ள திருத்தங்களின் அடிப்படையில் இசைவு தெரிவிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் நடந்த விவரங்கள். இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்படும் சாலைப் பணிகளுக்கு ஒத்துழைப்பு தருவதற்கு ஒப்பந்தம் செய்யப்படுவதுதான் மாநில அரசு ஒத்துழைப்பு ஒப்பந்தம். இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டால் சாலையைப் பயன்படுத்தும் பொது மக்களுக்கு சில இடங்களில் அசௌகரியங்கள் ஏற்பட வாய்ப்பிருப்பதால் ஒப்பந்தம் தீவிரமாக ஆராயப்பட்டது. தனியார் பேருந்து லாரி உரிமையாளர்கள் சங்கப் பிரதிநிதிகள் மாண்புமிகு அம்மா அவர்களிடத்தில் சுங்கச் சாவடிக் கட்டணம் குறித்து கோரிக்கை வைத்ததன் அடிப்படையில் மக்களின் நன்மைக்காக மத்திய அரசிடம் சில கோரிக்கைகள் பரிசீலிக்கக் கேட்டுக்கொள்ளப்பட்டன. அவை, அந்த மாநிலம் முழுவதும் ஒரே சீரான கட்டணம், அனைத்து tollgate–லும் ஒரே சீரான கட்டணம். சுங்கச் சாவடியில் குறிப்பிட்ட வாகனங்களுக்கு மாதக் கட்டணம் செலுத்தி, பின் பலமுறை சென்றுவர அனுமதித்தல். ஏனென்றால், 1997, 2008 சட்டம் என்று மாறி மாறி இருக்கிறது. அதை ஒரேமாதிரியாகக் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் சுங்கக் கட்டணம் உயர்த்தப்படுவதால், 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை சுங்கக் கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக்கொண்டது. இதை அவர்கள் ஏற்கவில்லை. தற்போதைய நிலை தற்போது மாநில அரசின் ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை ஒட்டுமொத்தமாக மேற்கொள்ளாமல் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் செயல்படுத்த உத்தேசிக்கும் ஒவ்வொரு திட்டத்திற்கும் தனித்தனியே ஒப்பந்தம் செய்யப்படலாம் என மாநில அரசால் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசிடமிருந்து இதுவரையிலும் எந்தப் பதிலும் வரவில்லை.

திண்டிவனம்–கிருஷ்ணகிரி சாலையைப்பற்றிச் சொன்னார்கள். அது இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால்

மேற்கொள்ளப்படுகின்ற பணி. இப்போது அந்தப் பணியைச் செய்தவர்கள் அப்படியே விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். இப்போது மீண்டும் tender விடப்பட்டு அந்தப் பணி துவங்க இருக்கிறது. திண்டிவனம்–கிருஷ்ணகிரி சாலைக்கு இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் மறு ஒப்பந்தம் கோரப்பட்டு, இன்றைக்கு அந்த ஒப்பந்தம் விடப்பட்டிருக்கின்றது. விரைவாக அந்தப் பணி மேற்கொள்ளப்படும்.

அதேபோல, மதுரவாயல் பிரச்சினையைப் பற்றிச் சொல்லியிருக்கிறீர்கள். அது நேர்ப்பாடு. ஏற்கெனவே, உங்கள் ஆட்சிக்காலத்திலே நேர்ப்பாடு சரியில்லாத காரணத்தால்தான் கூவம் ஆற்றின் நடுவிலே தூண் அமைக்கப்பட்டது. அதன்காரணமாக வெள்ளம் வருகிற காலத்திலே, தண்ணீர் ஊருக்குள் புகுமென்ற காரணத்தினாலே, நகரத்திற்குள் புகுமென்ற அடிப்படையிலே, அது அப்போது நிறுத்தி வைக்கப்பட்டு மீண்டும் மத்திய அரசு தரைவழிப் போக்குவரத்து அமைச்சர் மற்றும் அதிகாரிகளும், நம்முடைய மாநில நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகளும் கலந்துபேசி, இப்போது இந்தப் பணியைத் துவங்குவதற்குண்டான நடவடிக்கை அரசால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்.

பிற்பகல் 3–35

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவழியாக Harbour to Maduravoyal–க்கு ஒருவழி பிறக்குமென்று முதலமைச்சர் அவர்கள் சொன்னதற்காக மிகவும் நன்றி. மாண்புமிகு முதல்வர் அவர்கள் எப்பொழுதும் defence–ஐ எடுக்கிறார்கள்; எதைச் சொன்னாலும், 'அது உங்கள் ஆட்சியில் நடந்தது, உங்கள் ஆட்சியில் நடந்தது' என்று சொல்கிறார். 'உங்கள் ஆட்சியில் நடந்தது' என்று சொல்லியதால்தான் நாங்கள் இங்கே வந்துவிட்டோம். அங்கே உட்கார்ந்து கொண்டு இதையே சொல்லிக் கொண்டிருந்தால் நீங்கள் எதற்கு? நாங்களே உட்கார்ந்திருப்போமே! ஜெயித்துதானே நீங்கள் வந்திருக்கிறீர்கள். 'உங்கள் ஆட்சியில் நடந்தது, உங்கள் ஆட்சியில் நடந்தது'

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

என்கிறீர்கள். எங்கள் ஆட்சியில் நடந்ததால்தான் நாங்கள் இங்கே வந்துவிட்டோம். நாங்கள் குறை சொல்லாதவிதமாக நீங்கள் நடந்துகொள்ள வேண்டுமே தவிர, உங்கள் ஆட்சியில் நடந்தது என்று சொல்லக் கூடாது; Defence எடுக்கக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சுட்டிக்காட்டினீர்கள். இதை நீங்கள் செய்யவில்லை, அது தவறு என்பதுபோல சுட்டிக்காட்டிய காரணத்தினால்தான் இதைச் சொல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டது. நாங்கள் எப்பொழுதுமே யாரையும் குறை சொன்னதே கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், குறை சொல்கின்றபொழுது, அதற்குத் தேவையான பதிலளிக்க வேண்டியது எங்களுடைய கடமை என்ற அடிப்படையிலே இதைத் தெரிவித்தேன் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் இப்பொழுது Harbour to Maduravoyal வரையுள்ள சாலைப் பணியை எடுத்துக் கொண்டுவிட்டோம் என்று சொன்னீர்கள், அதற்கு நன்றி சொல்கிறேன். குறை ஒன்றும் சொல்லவில்லை. எதிர்க்கட்சிகள் இதுபோன்று குறைகளைச் சொல்வார்கள்; எதிர்க்கட்சியினர் ஒன்றுமே சொல்லாமல் இருக்க முடியாது. குற்றங்குறைகளைக் கண்டுபிடித்து சொல்வதுதான் எதிர்க்கட்சியினுடைய இலக்கணம். அதை எங்களால் முடிந்த அளவுக்குச் செய்கிறோம், அவ்வளவுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொல்கின்ற கருத்துகள் முழுவதும் அவைக் குறிப்பிலே பதிவாகியிருக்கின்றன. நான் மட்டுமல்ல, இங்கேயிருக்கின்ற அமைச்சர் பெருமக்கள்

அனைவருமே, பல்வேறு துறைகள் சார்பாக நீங்கள் சொல்கிற கருத்துகளைப் படித்துப் பார்த்து, அதை நிவர்த்தி செய்கிற வகையில் இருந்து கொண்டிருக்கிறோம் என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே ஆக்கபூர்வமான கருத்துகளைச் சொல்லியிருக்கிறீர்கள். சில பிரச்சினைகள் பற்றியும் சொல்லியிருக்கின்றீர்கள். அவற்றையெல்லாம் ஆய்வு செய்து, அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக முதலமைச்சர் மாண்புமிகு திரு. குமாரசாமி அவர்கள், கர்நாடகாவிலிருந்து காவேரியில் தண்ணீர் திறந்துவிட்டதாகக் கூறியுள்ளார்கள். அந்தத் தண்ணீர் மேட்டூர் அணைக்கு வந்துவிட்டதா? அப்படி வந்துவிட்டதென்றால் எத்தனை டி.எம்.சி. தண்ணீர் வந்திருக்கின்றது? விவசாயத்திற்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் எப்பொழுது திறந்துவிடப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

பக்கத்திலிருக்கின்ற போரூர் ஏரியில் encroachment எல்லாம் எடுக்கப்பட்டு, உரியவர்களுக்கு வீடுகளை எல்லாம் கொடுத்துவிட்டார்கள். இன்றைக்கு பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. மீண்டும் encroachment அதிகமாகிக் கொண்டிருக்கிறது. சிட்லப்பாக்கம், பீர்க்கன்கரணை பகுதிகளில், குடிசை வீடுகளையெல்லாம் எடுக்கப் போகிறார்கள் என்ற பயத்தில் இருக்கிறார்கள். ஏற்கெனவே நீதிமன்றத்திலிருந்து இதுகுறித்து ஓர் உத்தரவு வந்திருக்கிறது. அந்த உத்தரவு என்னிடம் உள்ளது. 2006–2011–ல் நான் அந்த கமிட்டியில் இருந்தேன். நிறைய வீடுகள் இருந்தால் எடுக்கக் கூடாது என்று உள்ளது. அங்கு 50 வருடங்கள், 60 வருடங்கள், 70 வருடங்கள் என இருந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு தனி கமிட்டி போட்டு, எங்கெல்லாம் ஏரிகள் வேலை நடைபெறுகிறதோ அங்கே பொதுமக்களுக்கு பயமில்லாத வகையில், பாதிப்பு இல்லாத வகையில், பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். நான் 1996–ல் நகர மன்றத் தலைவராக இருந்தபோது, ‘போனது போகட்டும், மீதியைப் பார்த்துக்கொள்ளுங்கள்’

என்று சொன்னேன். நான் ஏரிக்கு வரப்போவதில்லை என்று சொன்னேன். இன்றுவரை தாம்பரத்தில் encroachment இல்லை. எல்லா ஊர்களிலும் மக்கள் பயப்படுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் போதும், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட நேசமணி பாலம் பழுதடைந்த நிலையிலுள்ளது. என்னுடைய கோரிக்கையை ஏற்று, அதற்கு 40 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, டெண்டர் விடக்கூடிய நிலை உள்ளது. அந்தப் பணிகள் விரைந்து நடைபெற வேண்டும். வாகனப் போக்குவரத்து நிறைய இருப்பதால் அந்தப் பணிகளை நிறைவேற்ற வேண்டும். பொதுப் பணித் துறை–கட்டடங்கள்; என்னுடைய கோரிக்கையை ஏற்று, குறிப்பாக மாவட்ட நீதிமன்றம் கட்டுவதற்கு 1 கோடியே 8 இலட்சம் ரூபாயை மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். அந்தப் பணிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும், வட்டாட்சியர் அலுவலகம், பழைய கூரைக் கட்டடத்தில் உள்ளது. அதைப் புதிய கட்டடத்தில் அமைக்க வேண்டும். புதிதாக உருவாக்கப்பட்ட திருவட்டாறு, கிள்ளியூர் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கும் பொதுப் பணித் துறை மூலமாக புதிய கட்டடங்களை ஓராண்டிற்குள் கட்டி முடித்து திறப்பு விழாவிற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், காவேரியிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டதா என்ற கேள்வியைக் கேட்டுள்ளார்கள். மாண்புமிகு கர்நாடக முதலமைச்சர் திரு. குமாரசாமி அவர்கள் தண்ணீர் திறந்துவிடுவதாகத் தெரிவித்தார் என்று சொன்னார். அவர் சொன்னாரேயொழிய இதுவரைக்கும் தண்ணீர் திறந்துவிடப்படவில்லை. அதனால் மேட்டூர் அணைக்கு தண்ணீர் வரவில்லை. ஏற்கெனவே வருகின்ற நீர்தான் வந்துகொண்டிருக்கிறதேயொழிய, அதிகப்படியான

நீர் கர்நாடக அணையிலிருந்து திறந்துவிடப்பட்டு நம்முடைய அணைக்கு வரவில்லை என்ற செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆக்கிரமிப்பு குறித்துச் சொன்னார்கள். நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில்தான் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கின்றார்கள். அவற்றையெல்லாம் நிறைவேற்றுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 3–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. (குறுக்கீடு) மானியக் கோரிக்கை எண் . . .(குறுக்கீடு) காலையில் வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) காலையில் வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள், திரு. டி.ஆர்.பி. ராஜா. (குறுக்கீடு) இன்றைய மானியக் கோரிக்கைகள்மீதான விவாதத்தில் நீங்கள் பேசவில்லை. அதனால், உங்களைப் பேச அழைக்கவில்லை. (குறுக்கீடு) காலையில் வாய்ப்புக் கேட்டால், அதுபற்றி பரிசீலிக்கப்படும். (குறுக்கீடு) அப்படித்தான். அதற்கு என்ன செய்வது? உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, வாய்ப்பு கிடைக்கும்போது அனுமதியளிக்கிறேன். விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 21–நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 21– நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

“நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,564,77,17,000/–, மூலதனக் கணக்கில் ரூ.12,040,42,14,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்” என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி.)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(ஆ) கோரிக்கை எண் 39–கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 39–கட்டடங்கள் (பொதுப் பணித் துறை), வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

“கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.281,58,17,000/–, மூலதனக் கணக்கில் ரூ.1,004,65,06,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்” என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(இ) கோரிக்கை எண் 40–பாசனம் (பொதுப் பணித் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 40–பாசனம் (பொதுப் பணித் துறை), வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,092,26,83,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.3,830,54,83,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் ஏற்கெனவே அறிவித்தவாறு பிற்பகல் 4–30 மணிக்குக் கூடுவதற்குப் பதிலாக பிற்பகல் 5–00 மணிக்குக் கூடும் என்பதைப் பேரவையின் அனுமதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். பேரவை மீண்டும் பிற்பகல் 5–00 மணிக்குக் கூடும். வணக்கம்

பின்னர், பேரவை பிற்பகல் 3–43 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பிற்பகல் 5–00

மாண்புமிகு பேரவைத் பிற்பகல் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் பிற்பகல் 5–00 மணியளவில் பேரவை மீண்டும் கூடியது.

5. மானியக் கோரிக்கைகள், 2019–2020, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(ஈ) கோரிக்கை எண் 29–சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

(உ) கோரிக்கை எண் 47–இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

(ஈ) கோரிக்கை எண் 29–சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2019–2020 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 29–சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை). மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.112,00,59,000/–, மூலதனக் கணக்கில் ரூ.161,95,10,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 29, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன்.*

முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,00,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,95,10,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 83, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 137, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன்.

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,00,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,95,10,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 191, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 245, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி.

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக்

கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,00,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,95,10,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 285, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 437, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ப. சரவணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 541, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சு. சரவணக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1379, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1517, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2203, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2352, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3711, மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர்.

திரு. வாகை சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,00,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,95,10,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3827, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4143, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4561, மாண்புமிகு உறுப்பினர் திரு. R.D. சேகர்.

திரு. R.D. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,00,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,95,10,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4614, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4725, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5021, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன்.

திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,00,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,95,10,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2019 ஜூலை 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5058, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5149, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன்.

திரு. எம். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,00,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,95,10,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5280, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக்.

திரு. நா. கார்த்திக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,00,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,95,10,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6128, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6447, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6539, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி.

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,00,59,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,95,10,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6750, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. மகாராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6861, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7162, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன்.

திரு. ப. ஆடலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,00,59,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,95,10,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7476, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன்.

திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக்

கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,00,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,95,10,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7782, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8268, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 329, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து.

திரு. வி.எஸ். காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கொள்கை பற்றி'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,00,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,95,10,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 726, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 780, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4807, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பாண்டி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2037, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி.

திரு. பி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''மதுரை கிழக்கு தொகுதி, வண்டியூர் பெரியகுளத்தைத் தூர்வாரி, மேம்படுத்தி படகுக் குழாம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,00,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,95,10,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2682, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3857, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3931, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4279, மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்.

திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “நத்தம் தொகுதி, சிறுமலையை சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,00,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,95,10,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4335, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு.

டாக்டர் ஆர்.டி. அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “செய்யூர் தொகுதி, இலத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட திருப்பாதகிரி முருகன் கோயில் கிரிவலப் பாதையில் மின் விளக்குகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,00,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,95,10,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4520, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டன்சத்திரம் தொகுதி, விருப்பாட்சி ஊராட்சியில் தளையூற்று மற்றும் சின்ன தளையூற்று ஆகிய நீர்வீழ்ச்சிப் பகுதிகளை சுற்றுலாத் தலமாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,00,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,95,10,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5167, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5409, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5537, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5615, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5703, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5727, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5771, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5898, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5977, மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6094, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6167, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6191, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின்.

திரு. எஸ். ஆஸ்டின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரியில் உள்ள திருவள்ளுவர் சிலைக்குக் கூடுதலாக மின் விளக்கு அமைக்கவும், கன்னியாகுமரியில் கேபிள் கார் அமைக்கவும், சொத்தவிளை கடற்கரைப் பகுதியை சுற்றுலாத் தலமாக மேம்படுத்தவும் மற்றும் வட்டக்கோட்டை பகுதியில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளவும் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,00,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,95,10,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6284, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6403, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6622, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6645, மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கி. கலைவாணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6870, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6897, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6978, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7208, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சண்முகையா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7249, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.கே.ஜி. நீலமேகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7622, மாண்புமிகு உறுப்பினர் திரு. V. செந்தில் பாலாஜி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7699, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7743, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.செ. வில்வநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8196, மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌ. தங்கப்பாண்டியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8512, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8716, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி, இருக்கையில் இல்லை.

(உ) கோரிக்கை எண் 47–இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 47–இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை). மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.278,86,41,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 5–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 47, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன்.*

முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,86,41,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 101, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 155, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன்.

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,86,41,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 209, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 438, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ப. சரவணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 565, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சு. சரவணக்குமார்.

திரு. க.சு. சரவணக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,86,41,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1378, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2204, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2370, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3828, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4144, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4538, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,86,41,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4576, மாண்புமிகு உறுப்பினர் திரு. R.D. சேகர்.

திரு. R.D. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,86,41,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4605, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4685, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5048, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி.

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,86,41,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5147, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன்.

திரு. எம். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,86,41,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5281, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக்.

திரு. நா. கார்த்திக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,86,41,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5616, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5702, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5734, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6123, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார்.

திரு. ஐ.பி. செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,86,41,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6448, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6537, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி.

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,86,41,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6766, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. மகாராஜன்.

திரு. ஆ. மகாராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,86,41,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6832, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7161, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன்.

திரு. ப. ஆடலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,86,41,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7484, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன்.

திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,86,41,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8269, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8368, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. மோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8441, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8593, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன் அரசு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 330, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து.

திரு. வி.எஸ். காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,86,41,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 727, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 781, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4806, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பாண்டி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1518, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1675, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1946, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2036, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி.

திரு. பி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை கிழக்கு தொகுதி, வண்டியூர், வீரராகவ பெருமாள் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,86,41,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2438, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2532, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3549, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3689, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ராமர், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3714, மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர்.

திரு. வாகை சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவான்மியூர் மருந்தீஸ்வரர் கோயில் நிலங்களைப் பராமரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,86,41,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4280, மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்.

திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நத்தம் தொகுதி, நத்தம் கோவில்பட்டியில் உள்ள ஸ்ரீ கைலாசநாதர் திருக்கோயிலில் திருமண மண்டபம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,86,41,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4338, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு.

டாக்டர் ஆர்.டி. அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செய்யூர் தொகுதி, சித்தாமூர் ஒன்றியத்தில் வெடால் பகுதியிலுள்ள பழமைவாய்ந்த ஈஸ்வரன் திருக்கோயிலைப் புனரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,86,41,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4583, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.க. செல்வம்.

திரு. கு.க. செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆயிரம் விளக்கு தொகுதி, மண்டலம்–9, 109–வது வார்டு, சூளைமேடு பகுதி, கங்கையம்மன் கோயில் தெருவில் இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான காலி இடத்தில் குடிநீர், கால்வாய், கழிப்பிட வசதி உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து புதிய காரிய மண்டபம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,86,41,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5168, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5261, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5373, மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5441, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன்.

திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவையாறு தொகுதி, பெரும்புலியூர் சிவன் கோயிலைப் புனரமைத்து, திருப்பணி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,86,41,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5561, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5726, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5897, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5931, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5980, மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6093, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6190, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின்.

திரு. எஸ். ஆஸ்டின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சுசீந்திரம் கோயில் தெப்பக்குளத்தைத் தூர்வார வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,86,41,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6285, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6397, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான்.

திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “அறநிலையத் துறையின்கீழ் செயல்படும் திருநெல்வேலி காந்திமதி உயர்நிலைப் பள்ளிக்கு அடிப்படை வசதிகள் மற்றும் புதிய வகுப்பறைகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,86,41,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6601, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கடையநல்லூர் தொகுதியில் உள்ள பழமையான கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.278,86,41,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6629, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6687, மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கி. கலைவாணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6803, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6869, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6921, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7000, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7030, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7187, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7216, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.கே.ஜி. நீலமேகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7331, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7604, மாண்புமிகு உறுப்பினர் திரு. V. செந்தில் பாலாஜி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7914, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அம்பேத்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8197, மாண்புமிகு உறுப்பினர் திரு. செள. தங்கப்பாண்டியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8349, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8509, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ், இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளது. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று

@ 1047 **முதல் 1080 மற்றும் 1176 முதல் 1244 வரையிலான பக்கங்களில் இணைப்பு** IV **ஆக அச்சிடப்பட்டுள்ளது.**

பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளது. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 5–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று இரண்டு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி அவர்கள்.

திரு. பி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15–வது சட்டமன்றப் பேரவை கூட்டத் தொடரில் பல்வேறு அறிஞர்கள் உரையாற்றிய சிறப்புமிக்க இப்பேரவையில் விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை இன்று சுற்றுலா, கலை

@ 1081 முதல் 1175 வரையிலான பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மற்றும் பண்பாடு மற்றும் இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை குறித்த மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தமிழும், தமிழ் மக்களும் உள்ளவரை இந்த மண்ணில் தலைவர் கலைஞர் அவர்களுடைய புகழ் நிலைத்திருப்பதோடு, (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணாவின் இதயத்தை இரவலாகப் பெற்றுச் சென்று, அண்ணாவின் அருகிலே நீங்காத் துயில் கொண்டிருக்கும் தலைவர் கலைஞர் அவர்களின் நினைவோடும், எனக்குப் பேச வாய்ப்பளித்த, உழைப்பால் உயர்ந்து, தியாகத்தால் வளர்ந்த எங்கள் கழகத்தின் தலைவர் தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) கழகத்தின் மூத்த முன்னோடிகளின் ஆசியோடு இளைஞர்களின் இதயத் துடிப்பாய் செயல்படும் கழக இளைஞரணிச் செயலாளர் மரியாதைக்குரிய உதயநிதி அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1952–ல் நீதிக் கட்சி ஆட்சியிலே இருந்தபோதுதான் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சகம் உருவாக்கப்பட்டது. தமிழகத்தில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ், 38,652 திருக்கோயில்கள் உள்ளன. இந்தத் திருக்கோயில்களில் கடந்தகால கழக ஆட்சியில், 2006 முதல் 2011 வரை சுமார் 5,000–க்கும் மேற்பட்ட திருக்கோயில்களில் குடமுழுக்கு விழா சிறப்பாக நடைபெற்றது. தமிழக மக்களுடைய கோயில் திருவிழாக்களில் மதுரை சித்திரைத் திருவிழா பிரசித்தி பெற்றது. மதுரை மீனாட்சியம்மன் சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணத்திற்கு, மலையிலிருந்து கள்ளழகர் புறப்படும் திருவிழா மதுரையிலே 7 நாட்களுக்குக் கோலாகலமாக இருக்கும். அதிலே மூன்றாம் நாள் திருவிழாவாக, மதுரை கிழக்கு தொகுதி வண்டியூரிலுள்ள அருள்மிகு வீரராகவப் பெருமாள் திருக்கோயிலிலே ஒரு நாள் அத்திருவிழா நடைபெறும். அந்த வீரராகவப் பெருமாள் கோயிலுக்கு கடந்த 21 ஆண்டு காலமாக குடமுழுக்கு நடைபெறாமல் உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே குடமுழுக்கு விழாவிற்காக நிதியை ஒதுக்கி, உடனடியாக பணி தொடங்கப்பட்டு குடமுழுக்கு விழா நடைபெறும் என்று அறிவித்திருந்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பேசும்போது அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அதிகப்படியான திருக்கோயில்களில் குடமுழுக்கு நடைபெற்றது என்று கூறினார். 2006–2011 ஆம் ஆண்டுகளில் 4,020 திருக்கோயில்களில் மட்டும் குடமுழுக்கு நடத்தப்பட்டது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசில், 2011–2019 ஆம் ஆண்டு வரை 11,029 திருக்கோயில்களில் திருப்பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே பேசும்போது, இந்தத் திருக்கோயில் அவருடைய குலதெய்வக் கோயில் என்றும், விரைவாக கும்பாபிஷேகம் நடத்தித் தர வேண்டுமென்றும் கோரிக்கை வைத்தார். மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், அழகர் கோயிலின் உப கோயிலான அருள்மிகு வீரராகவப் பெருமாள் திருக்கோயில் சுமார் 400 வருடங்கள் தொன்மையான, பழமையான திருக்கோயிலாகும். அந்தக் கோரிக்கையின் அடிப்படையில் இக்கோயிலுக்குத் திருப்பணி செய்திட தொல்லியல் துறையின் வல்லுநர் கருத்து 2–4–2019 அன்று பெறப்பட்டுள்ளது. தொல்லியல் துறையின் கருத்துருவின் அடிப்படையில் power point தயாரிக்கப்பட்டு வருகிறது. இப்பணிகள் முடிவுற்று, மண்டல அளவிலான Heritage Committee மற்றும் மாநில உயர் நீதிமன்றக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னர், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான ஆணையைப் பெற்று, திருப்பணிகள் முடிக்கப்பட்டு, குடமுழுக்கு நடத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 5–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி அவர்கள்.

திரு. பி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறையில் குற்றச்சாட்டு ஒன்றும் இல்லாமல், செய்திகளை மட்டும்தான் சொல்லப் போகிறேன். எனவே,

இந்த ஆண்டாவது குடமுழுக்கு விழா நடத்துவதற்கு ஏதுவாக பணியை விரைவுபடுத்த வேண்டுகிறேன். அதேபோல் அழகர் கோயில் முன்பாக உள்ள தெப்பக்குளம் சீரமைக்கப்பட்டு அங்கே முழுமையாக தண்ணீர் இறைத்து நிரப்ப வேண்டும் என்ற பொது மக்களின் கோரிக்கையினை நிறைவு செய்ய வேண்டுகிறேன். அதோடு தொடர்புடையது, மதுரை கிழக்கு தொகுதி பொய்கைக்கரைப்பட்டியில் அமைந்திருக்கும் அழகர் தெப்பம்; மாமன்னர் திருமலை நாயக்கர் காலத்தில் உருவாக்கப்பட்ட அந்தத் தெப்பக்குளம் சேதமடைந்துள்ளது. வருடாவருடம் மாசி மாதம் பௌர்ணமி திங்களன்று மதுரைக்குப் புகழ் சேர்க்கும் கள்ளழகர் தெப்பத் திருவிழா நிகழ்ச்சி தொடர்ந்து நடைபெற்று வந்தது. ஆனால், தற்போது தெப்பத்தில் தண்ணீர் இல்லாத காரணத்தினால் கள்ளழகர் அத்தெப்பத்தைச் சுற்றிவிட்டு அழகர் மலை சென்று விடுகிறார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இக்குறையினை நிவர்த்தி செய்ய வேண்டுகிறேன். மதுரை கிழக்கு தொகுதி யானைமலை அடிவாரம் கொடிக்குளம் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு வேதநாதப் பெருமாள் திருக்கோயில் தீர்த்தம் விஷக்கடிக்கு மருந்தாகப் பயன்படுகிறது. இதனால் பொது மக்கள் சிலர் பயனடைந்துள்ளனர். எனவே, அந்தக் கோயிலைச் சீரமைத்து, குடமுழுக்கு விழா நடத்திட ஆவன செய்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மதுரை, வண்டியூர் மாரியம்மன் தெப்பக்குளத் திருவிழா தைத் திங்கள் பௌர்ணமியில் நடைபெறும். அத்தெப்பத்திற்கு வைகை ஆற்றிலிருந்து நேரடியாக தண்ணீர் சென்று கொண்டிருந்தது. இப்போது தண்ணீர் சென்று கொண்டிருந்த வாய்க்கால் தூர்ந்துவிட்டது. அதனைச் சரி செய்து, எப்போதும்போல் வைகை ஆற்றிலிருந்து நேரடியாக வண்டியூர் தெப்பத்திற்குத் தண்ணீர் கொண்டுசெல்ல அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், வைகை ஆற்றில் ஒரு check dam கட்டுகிறார்கள். தெப்பத் திருவிழா மட்டுமல்ல, சுற்றுலாத் தலமாகவும் அந்த வண்டியூர் தெப்பக்குளம் இருக்கிறது. அதன்மீதும் அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் ஒன்றான திருப்பரங்குன்றத்தில் சரவணப்பொய்கை தெப்பக்குளம் உள்ளது. இந்தக் குளத்தில் பொது மக்கள் குளித்தும், துணிகளைத் துவைத்தும் சுகாதாரச் சீர்கேடுகளை விளைவிக்கின்றனர். பொது மக்கள் குளித்திடவும், துணிகளைத் துவைப்பதற்கும் மாற்று ஏற்பாடு

செய்துவிட்டு அருகில் இருக்கக்கூடிய தென்கால் கால்வாய், கண்மாய் கால்வாயிலிருந்து நேரடியாக சரவணப்பொய்கைக்கு தண்ணீர் கொண்டு செல்ல ஆவன செய்ய வேண்டுகிறேன்.

அதேபோல், சோழவந்தான் குடிநீர் துறையில் அருள்மிகு சித்திர வல்லவப் பெருமாள் திருக்கோயிலுடன் குருபகவான் ஸ்தலமும் உள்ளது. அத்திருக்கோயில்களில் பக்தர்கள் அதிகமான அளவில் வந்து சாமி தரிசனம் செய்து கொண்டிருக்கின்றார்கள். அத்திருக்கோயிலில் தற்போது இரண்டுகால பூஜை நடைபெற்று வருகிறது. அங்கே மூன்றுகால பூஜை நடைபெறுவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் 11–2–2018 அன்று விபத்து நடைபெற்றது. அதனால் கோயிலுக்குள் பல சேதங்கள் ஏற்பட்டு, அந்த சேதாரத்தைச் சரி செய்யும் பணி இப்போது நடந்து கொண்டிருக்கிறது. அந்தப் பணியை விரைவாக முடிப்பதோடு அங்கே இருக்கக்கூடிய ஆயிரங்கால் மண்டப சிற்பக் கலைநயத்தை பொது மக்கள் பார்வையிட உடனடியாக அரசு ஆவன செய்ய வேண்டும். அதுமட்டுமின்றி, மீனாட்சி அம்மன் திருக்கோயிலில் அனைத்துத் தரப்பு பொது மக்களும் எளிதில் சாமி தரிசனம் செய்ய அரசு ஆவன செய்திட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறன்.

மதுரை மீனாட்சி அம்மன் கோயில் மிகவும் பிரசித்தி பெற்ற கோயில். கிராமப்புறங்கள் அதிகமாக இருக்கக்கூடிய மதுரையைச் சுற்றியுள்ள பகுதியினுடைய மக்கள் வெகுநேரம் சாமி தரிசனத்திற்காக காத்திருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. இப்போது கட்டண வசூல் செய்து கொண்டிருக்கின்றார்கள். அப்படியில்லாமல் காலதாமதம் இல்லாமல் சாமி தரிசனத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவிலில் அமைந்திருக்கும் அருள்மிகு சங்கர நாராயணன்–கோமதி அம்மன் திருக்கோயில் விழாக்காலமான ஆடி தபசு திருவிழா நடைபெறும் காலத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடுவதால் கூட்ட நெரிசல் அதிகமாக உள்ளது. எனவே, அம்மன் சன்னதிக்கு எதிரே திருக்கோயில் குளத்தின் பக்கவாட்டில் உயர்மட்ட நடைமேடை அமைத்து கூட்ட நெரிசலைத் தவிர்த்திட வேண்டுகிறேன்.

மதுரை மாவட்டம், சாட்டூர் ஊராட்சி, சதுரகிரி மலையின்மேல் அருள்மிகு சுந்தர மகாலிங்க சாமி திருக்கோயில்

அமைந்திருக்கிறது. கோயிலுக்கு வரக்கூடிய பக்தர்களால் நடத்தப்படும் அன்னதானம் கடந்த 10 மாதங்களாக நடைபெறாமல் உள்ளது. அந்த அன்னதானம் தொடர்ந்து நடைபெற அரசு ஆவன செய்வதோடு, அங்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருவதால் சுகாதார வசதியை ஏற்படுத்தவும், குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்கிடவும் அரசு நடவடிக்கை எடுத்திட வேண்டும். அந்தக் கோயிலுக்கு கீழேயிருந்து மேலே செல்வதற்கான 7 கிலோ மீட்டர் பாதை கரடுமுரடாக இருக்கிறது. எனவே, அந்த 7 கிலோ மீட்டரிலுள்ள மலைப் பாதையைச் சரிசெய்து, பக்தர்கள் எளிதில் செல்வதற்கு ஏதுவாக அதை அமைத்துத் தருவதோடு, சாலைகளின் இரு மருங்கிலும் மின்விளக்கு வசதி ஏற்படுத்தித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், இவ்வளவு பிரசித்தி பெற்ற அருள்மிகு சுந்தர மகாலிங்கம் திருக்கோயிலில், இணை ஆணையாளராக பணி செய்யக்கூடிய ஒருவர், அங்கு பணிபுரிந்த பெண் அலுவலர் ஒருவரிடம் பாலியல் துன்புறுத்தலில் ஈடுபட்டதால், உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இதைத்தான், ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்கு முன்பாக, 1952 ஆம் ஆண்டு எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் பராசக்தி படத்தின் மூலமாக, "கோவில் கூடாது என்பதல்ல, கொடியவர்களின் கூடாரமாக ஆகிவிடக் கூடாது" என்ற கருத்தைக் கூறியுள்ளார்கள். எனவே, அதைப்போல தமிழகம். . .

பிற்பகல் 5–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சதுரகிரியிலே இணை ஆணையாளர் திரு. இரா. பச்சையப்பன், 28–5–2019 முதல் பணியாற்றி வந்தார். திரு. பச்சையப்பன்மீது இத்துறை பெண் அலுவலர் அளித்த புகாரின் அடிப்படையில், அம்மாவின் அரசு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் துரித நடவடிக்கையால் அவர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டு அங்கு வேறோர் அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, மாண்புமிகு அம்மாவின் அரசு யார் தவறு செய்தாலும் உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினருக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி அவர்கள்.*

திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திற்கு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சதுரகிரியில் அன்னதானம் ஏற்கெனவே நடைமுறையில் இருந்து வந்தது. அங்கு வரும் பக்தர்கள் அன்னதானத்தை உண்ணும்போது, சுற்றுப்புறச் சூழலுக்குப் பங்கம் விளைவிக்கின்ற வகையில் மலையில் அசுத்தம் செய்கின்ற காரணத்தால், திருக்கோயில் சுத்தமாக இருக்க வேண்டும் என்ற உயரிய எண்ணத்தில் தற்போது அன்னதானத் திட்டம் தற்காலிகமாகத் தடை செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து அன்னதானம் வழங்க ஆணையிட்டுள்ளதன் அடிப்படையில், விரைவாக இத்திருக்கோயிலில் அன்னதானம் நடைபெறும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி அவர்கள்.*

திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளா, கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட மாநிலங்களில் கோயில்களுக்கு வரக்கூடிய பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதைப்போல தமிழகத்திலே திருச்சி ஸ்ரீரங்கம் திருக்கோயிலில் மட்டும் அன்னதானம் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். இதைப்போல பிரசித்திபெற்ற எல்லா கோயில்களிலும் அன்னதானம் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மாண்புமிகு அம்மா அவர்களால் திருச்சி ஸ்ரீரங்கத்திலும், பழனி அருள்மிகு*

தண்டாயுதபாணி திருக்கோயிலிலும் நாள் முழுவதும் அன்னதானத் திட்டம் நடைபெறும் வகையில் தொடங்கி வைக்கப்பட்டது. அந்த வகையிலே தினமும் இந்த இரண்டு திருக்கோயில்களில் மட்டும் 8,000 பக்தர்கள் உணவு உண்கிறார்கள். மேலும், தமிழகத்தில் 754 திருக்கோயில்களில் தினமும் 64,962 பக்தர்களுக்குமேல் உணவு உட்கொள்ள மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி அவர்கள்.

திரு. பி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்தர்களுக்கு முழுமையாக அன்னதானம் வழங்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன். ஏற்கெனவே 50, 100 பேர்களுக்குத்தான் அந்தந்தக் கோயில்களுக்குத் தகுந்தவாறு அன்னதானம் வழங்குகிறார்களேயொழிய, வரக்கூடிய அனைத்து பக்தர்களுக்கும் வழங்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன். தமிழகத்திலே சென்னைக்கு அடுத்தபடியாக இரண்டாவது பெரிய நகரமாக இருக்கக்கூடிய கோயில் மாநகர் மதுரையில் மக்கள்தொகை பெருக்கத்தினுடைய காரணமாக போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதைப் போக்கும் வண்ணம் மதுரை புறநகர்ப் பகுதியில், ஏறத்தாழ மதுரை மையப் பகுதியிலிருந்து 15 கிலோ மீட்டர் சுற்றளவில் உள்ளூர் திட்டக் குழுமத்தின் மூலமாக முழுமைத் திட்டம் (Master Plan) தயார் செய்யப்பட்டு 15 ஆண்டுகளாகியும், இன்னும் முழுமையாக அப்பகுதி மக்கள் பயன்படுத்தக்கூடிய வகையில் வளர்ச்சியடையவில்லை. குடியிருப்புகள் கட்டுவதற்கு ஏதுவாக இல்லாமலும், விவசாயம் செய்வதற்கு ஏற்ற வகையில் இல்லாமலும் உள்ளது. அப்பகுதி முழுமைத் திட்டம், Master Plan–ல் விவசாய நிலமாக, agricultural zone ஆக இருந்து வருகிறது. அப்பகுதி நில உரிமையாளர்கள் விரும்பும்வண்ணம் குடியிருப்புப் பகுதிகளாகவோ, தொழிற்சாலைப் பகுதிகளாகவோ மாற்றம் செய்திட எளிமையான முறையில் உள்ளூர் திட்டக் குழுமம் அனுமதியளித்திட அரசு ஆவன செய்திட வேண்டும்.

பிற்பகல் 5–25

மேலும், இந்த முழுமைத் திட்டம், Master Plan தயார் செய்தபோது, அப்பகுதி கிராம ஊராட்சியாகச் செயல்பட்டுக்

கொண்டிருந்தது. அப்போது அந்தப் பகுதி அங்கீகாரம் இல்லாத மனைப் பிரிவாக இருந்தபோது, குடியிருப்புகளாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அப்போதுதான், முழுமைத் திட்டம், Master Plan தயார் செய்யப்பட்டு, திட்டச் சாலை-scheme road உருவானது. கிராமப் பகுதிகளில் 3 ஆண்டுகளுக்குமேல் பயன்படுத்தப்படாமல் இருக்கும்பட்சத்தில், நகர் ஊரமைப்புச் சட்டம், 1971 பிரிவு 36 மற்றும் 37–ன்படி, நகர் ஊரமைப்புத் திட்டச் சாலை அமைப்பதற்கு நிலம் தேர்வு செய்யப்பட்டால், கையகப்படுத்தப்பட வேண்டுமென்று உள்ளது. ஒரு வேளை மூன்றாண்டுகளில் தேர்வு செய்யப்பட்ட நிலத்தைக் கையகப்படுத்தாவிட்டால், நகர் ஊரமைப்புச் சட்டம், 1971, பிரிவு 38–ன்படி நிலத்தைத் திரும்ப ஒப்படைப்பு செய்ய வேண்டும் என்று விதி உள்ளது. அதனடிப்படையில், நிலத்தின் உரிமையாளர்கள் சிலர் நீதிமன்றம் சென்று நிலத்தைத் திரும்பப் பெற்றுள்ளனர். ஒரு சிலர் கிராம ஊராட்சியாகச் செயல்பட்டபோது, அங்கீகாரமற்ற மனைப் பிரிவின் அடிப்படையில் சில குடியிருப்புகளை ஏற்படுத்தியுள்ளனர். இது இவ்வாறிருக்க, இதற்கு இணையாக இந்தப் பகுதியில் குடியிருக்கும் மக்கள் பயன்பாட்டிற்காக மாநகராட்சியே 40 அடி சாலை அமைத்து, அது பயன்பாட்டில் உள்ளது. எனவே, எஞ்சியுள்ள பகுதிகளை அந்தந்த உரிமையாளருக்குத் திரும்ப எளிதில் கிடைப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, வண்டியூர் பெரிய குளத்தினை ஆழப்படுத்தி, தூர் வாரி, முட்புதர்களை அகற்றி, தண்ணீரைப் பெருக்கி, படகுக் குழாம் அமைத்து, சுற்றுலாத் தலமாக்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டும். வண்டியூர் கண்மாய் என்பது மதுரையின் மையப் பகுதியில் இருக்கக்கூடிய மிகப் பெரிய கண்மாய். மதுரையைப் பொறுத்தளவில் அங்கு சுற்றுலாத் தலமோ, மக்கள் பொழுதுபோக்குவதற்கு வசதியாக எந்தவொரு இடமோ இல்லாத காரணத்தினால், இதனை மக்களுடைய பயன்பாட்டிற்குக் கொண்டுவர நிச்சயமாக அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுகுறித்து, இந்த அவையில் பலமுறை மதுரை வடக்கு தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். வண்டியூரின் first bit, கிழக்கு தொகுதியுடன் சேர்ந்திருக்கிறது. எனவே, மதுரை வண்டியூர் கண்மாயை சுற்றுலாத் தலமாக்கித் தர வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வண்டியூர் கண்மாய் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் தூர் வாரப்பட்டு, ஒரு பொழுதுபோக்குத் தலமாக அமைக்கப்படவுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி அவர்கள்.*

திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனையூர் பகுதி வார்டு எண்கள் 2, 3 மற்றும் 4–ல் ஏறத்தாழ 1 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள்தொகை கொண்ட அந்தப் பகுதியின் மக்களுக்குப் பயன்படக்கூடிய அளவில், வைகை இரண்டாம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், 2010 ஆம் ஆண்டு மேல்நிலைத் தொட்டி அமைக்கும் பணிகளில் எல்லா பணிகளும் முடிந்தும் ஒன்பது ஆண்டுகாலமாக இன்னும் பயன்பாட்டுக்கு வரவில்லை. வைகை இரண்டாம் கூட்டுக் குடிநீர்த் திட்டம், ஆனையூர் பகுதிக்காக உருவாக்கப்பட்ட திட்டம். ஆனால், இப்போது அந்தத் தண்ணீர் மாநகர் பகுதிக்குச் சென்று கொண்டிருக்கிறது. இதைத் தொடர்ந்து நான் வலியுறுத்திக் கேட்டு வருகிறேன். ஏனென்றால், இந்தத் திட்டம் குறித்து கேள்வி எழுந்தபோது, நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்தில் இதுபற்றி நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். அந்தப் பகுதியிலுள்ள 11 வார்டுகளுக்கும் பாதாள சாக்கடைத் திட்டமும் இத்திட்டத்தோடு சேர்ந்துதான் செயல்படுத்த வேண்டுமென்று ஏற்கெனவே கேட்டிருக்கிறேன். இந்த முறை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்காக நிதியொதுக்கி நிச்சயமாக அதனைச் செய்து தருகிறேன் என்ற உத்தரவாதத்தைத் தந்திருக்கிறார்கள். எனவே, இந்த ஆண்டு பாதாள சாக்கடைத் திட்டத்தையும், 10 ஆண்டுகளுக்குமேல் நிலுவையில் இருக்கக்கூடிய இந்த ஆனையூர் குடிநீர்த் திட்டத்தையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.*

பிற்பகல் 5–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

*__மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனையூர் நகராட்சி குடிநீர்த் திட்டத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இத்திட்டத்தைப் பொறுத்தவரையில், 9–5–2007 அன்று 788 இலட்சம் ரூபாய் அளவில் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் நிதி, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் (JnNURM) ரூ.431 இலட்சங்களும், கடனாக ரூ.118 இலட்சங்களும், உள்ளாட்சி அமைப்பின் பங்காக ரூ.236 இலட்சங்களும் ஆகும். 3–12–2008 அன்று பணியாணை வழங்கப்பட்டு, 2010 ஆம் ஆண்டில் பணிகள் முடிக்கப்பட்டு, சோதனை ஓட்டம் தொடங்கப்பட்டது. சோதனை ஓட்டத்தின்போது, குழாய்களில் ஏற்பட்ட வெடிப்புகளால், தொடர்ந்து சோதனை ஓட்டத்தை மேற்கொள்ள முடியவில்லை. ஆதலால், பொது மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படவில்லை. அம்மா அவர்களுடைய அரசு அமைந்த பின்னால், அம்மா அரசின் ஆணையின்படி, திட்டத்தினை பொது மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவரும்பொருட்டு, புதிதாகக் குழாய்களை மாற்றுவதற்கு அரசின் மானியமாக ரூ.897 இலட்சத்திற்கு 28–1–2016 அன்று அரசாணை வழங்கப்பட்டுள்ளது. 21–12–2016 அன்று வாரியக் கூட்டத்தில் ஒப்புதலுக்கு வைக்கப்பெற்று, இந்தத் திட்டத்தின் பணியாணை 2–1–2017 அன்று வழங்கப்பட்டிருக்கிறது. இதுவரை 52 விழுக்காடு பணிகள் முடிவடைந்திருக்கின்றன. இத்திட்டத்தை 10–10–2019–ல் முடித்து மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர இலக்கிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மதுரை மாநகராட்சியில் இத்திட்டம் நிறைவடையும்போது, 72,000 மக்கள் பயன்பெறும்வகையில், நபர் ஒருவருக்கு 135 லிட்டர் குடிநீர் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வெகு நாட்களாகக் கேட்கக்கூடிய பாதாள சாக்கடைத் திட்டமும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, இந்த வருடம் 529 கோடி ரூபாய் மதிப்பீட்டில் Smart City திட்டத்தில் எடுத்துக்கொள்ள முடிவு செய்யப்பட்டு, கூடிய விரைவில் ஒப்பந்தம் கோரப்பட உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

__மாண்புமிகு பேரவைத் தலைவர்:__ மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி அவர்கள்.

திரு. பி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மதுரையுடன் புதிதாக இணைக்கப்பட்டிருக்கக்கூடிய 28 வார்டுகள், மாநகராட்சியோடு இணைக்கப்பட்டபோது அடிப்படைத் தேவைகளை முழுமையாக நிறைவேற்றியதற்குப் பின்னால், ஏற்கெனவே இருக்கக்கூடிய மாநகராட்சிக்கு இணையாக வரி வசூல் செய்யப்படும் என்று சொல்லியிருந்தார்கள். ஆனால், எங்களுடைய 28 வார்டுகளில் அந்த அடிப்படைத் தேவைகள் இன்னும் சரிவர நிறைவேற்றப்படவில்லை. சாலைகளும் சரிவர இல்லை. பாதாள சாக்கடைத் திட்டமும் இந்த ஆண்டுதான் தருவேன் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அதேபோன்று குடிநீரும் இல்லாத பகுதிகளாக இருக்கின்ற காரணத்தினால், ஏற்கெனவே மதுரை மாநகராட்சியோடு இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு விதிவிலக்கு தந்து, பணிகளை முழுமையாக முடித்ததற்குப் பின்னால், மாநகராட்சிகளில் ஏற்கெனவே இருந்த 72 வார்டுகளுக்கேற்ப வரி வசூல் செய்வதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, மழைக்காலங்களில் மீனவர்களுக்கு உதவித் தொகை அளிப்பதுபோன்று கைத்தறி நெசவாளர்களுக்கும் அளிக்க வேண்டும். மழைக்காலங்களில் அவர்களின் கைத்தறி கட்டும் திறன், பாவு உற்பத்தி பாதிக்கப்படுவதால், மீனவர்களுக்கு வழங்குவதுபோல் நெசவாளர்களுக்கும் நிவாரணத் தொகையை வழங்கிட அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) நான் பேசும்போது ஆளில்லாமல் போய்விடுகிறார். தமிழ்நாட்டில் 385 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. அந்த ஊராட்சி ஒன்றியங்களில் 3 அல்லது 4 ஒன்றிய மேற்பார்வையாளர்கள் இருக்கிறார்கள். 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டமாக இருந்தாலும் சரி, DRDA பணியாக இருந்தாலும் சரி, பல்வேறு பணிகள் இன்றைக்கு தேக்க நிலையில் இருப்பதற்குக் காரணம், அங்கிருக்கக்கூடிய ஒன்றிய மேற்பார்வையாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள estimate cost என்பது, ஒரு தொகுதிக்கு 2 இலட்சம் ரூபாய்க்குள் இருக்கிறது. 2 இலட்சம் ரூபாய்க்குமேல் அது Engineer level–லேயும், அதேபோன்று E.E. level–க்கும் சென்று, estimate sanction ஆகி வந்து, ஒப்பந்ததாரர்கள் அந்தப் பணிகளைத் துவங்குவதற்கு சில மாதங்கள் ஆகின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஒன்றிய மேற்பார்வையாளர்களுக்கான estimate cost ஆன 2 இலட்சம் ரூபாய் என்பதனை 5 இலட்சம்

ரூபாயாக உயர்த்தித் தந்தால், பணிகள் வேகமாக, விரைவாக நடப்பதற்கு உதவிகரமாக இருக்கும் என்பதைத் தங்களிடத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 5–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி, சீக்கிரம் உரையை முடியுங்கள்.*

திரு. பி. மூர்த்தி: *அவ்வளவுதான், உரையை முடித்துவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கோரிக்கைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளலாம். இருந்தாலும்கூட, அங்கு நடைபெறும் பணிகளில் தேக்க நிலை இருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. இன்றைக்கு ஊரக வளர்ச்சித் துறையைப் பொறுத்தவரையில், மற்ற துறைகளைவிட, விதி 110–ன்கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளாக இருந்தாலும், உடனடியாக அரசாணை போடப்பட்டு, பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, முழுமையாக முடிக்கக்கூடிய ஒரு துறையாக உள்ளது. அதுமட்டுமல்ல, இந்தக் குடிநீர்ப் பணிகளைப் பொறுத்தவரையில், இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட பணிகளைச் செய்திருக்கிறோம். ஆகவே, பணிகளைப் பொறுத்தவரையில் தொய்வு கிடையாது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. பி. மூர்த்தி, சீக்கிரம் உரையை முடியுங்கள்.*

திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நிமிடங்களில் உரையை முடித்துவிடுகிறேன். இன்றைக்கு கிராமப்புறங்களில் மாண்புமிகு முதல்வர் அவர்களால்*

நடைமுறையில் உள்ள குடிமராமத்துப் பணிகள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தாலும், விவசாயத்திற்கு பெரியார் கால்வாயிலிருந்து தண்ணீர் வருகின்றபோது, எங்களுடைய கள்ளந்திரி மடை மேட்டுமடையாக இருக்கின்ற காரணத்தினால், அங்கு விவசாயத்திற்கு என்று தனியாக ஒரு மடையைக் கட்டித் தர வேண்டும். அதைப்போல, இப்போது இருக்கக்கூடிய வெள்ளியங்குன்றம் கடைமடைப் பகுதிக்கு தண்ணீர் செல்ல முடியாததால், விவசாயம் செய்வதில் பாதிப்பு ஏற்படக்கூடிய நிலைமை இருக்கிறது. எனவே, அங்கும் ஆய்வு செய்து அதற்குத் தனியாக மடை கட்டித் தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று மதுரை கிழக்கு தொகுதி, மேற்கு ஒன்றியத்தில் உள்ள காஞ்சரம்பேட்டை என்ற கிராமத்தைச் சுற்றி ஏறத்தாழ 50–க்கும் மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்றன. அங்கிருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருடைய நெருங்கிய உறவினர்கூட அங்கே இருக்கிறார். அவரும் இதுகுறித்துச் சொல்லியிருக்கிறார். அங்கே சுமார் 20 கிராமங்கள் இருக்கின்றன. எனவே, அந்தக் காஞ்சரம்பேட்டை மருத்துவமனையை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) அவ்வளவுதான், ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லிவிடுகிறேன்.

என்னுடைய மதுரை கிழக்கு தொகுதியில் ஏற்கெனவே மதுரை வடக்கு வட்டமாக இருந்ததை கிழக்கு வட்டமாகவும்— ஏற்கெனவே கிழக்கு தொகுதியில் இரண்டு தாலுகாக்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இப்போது புதிதாக அலங்காநல்லூர் தாலுகாவை உருவாக்குகின்றபோது, சோழவந்தான் தொகுதியில் வடக்குத் தாலுகாவில் இருக்கின்ற அந்தப் பகுதியை மட்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சேர்க்க வேண்டும் என்றும், ஏற்கெனவே இருக்கின்ற இரண்டு தாலுகாக்களில் ஒரு பிர்க்காவை மட்டும் அந்த அலங்காநல்லூர் தாலுகாவில் சேர்க்க வேண்டாமென்றும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன். நிச்சயமாக மக்களுடைய பயன்பாட்டிற்கு, மக்களுடைய வசதிக்கு ஏற்ப இதைச் செய்து தர வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி சார்ந்த கோரிக்கைகளையெல்லாம் நான் சட்டமன்றத்திலே உரையாற்றியதாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பைத் தந்த தங்களுக்கும் நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்

மதுரை கிழக்கு தொகுதியில் உள்ள பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான பழுதடைந்துள்ள மடைகளை சரி செய்தும், முட்புதர்களை அகற்றியும், கண்மாய்களை ஆழப்படுத்தியும் விவசாய, நிலத்தடி நீர் ஆதாரத்தைப் பெருக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை கிழக்கு தொகுதியில், மதுரை மேற்கு ஒன்றியத்தில் உள்ள பெரிய ஊராட்சியான குலமங்கலத்திலும், மதுரை கிழக்கு ஒன்றியத்தில் உள்ள களிமங்களத்திலும் தலா ஒரு மின்மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மதுரை கிழக்கு தொகுதி, ஒத்தக்கடையில் ஆண்–பெண் இருபாலர் பயிலும் அரசுக் கலைக் கல்லூரி தொடங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை வடக்கு வட்டம், செட்டிகுளம் ஊராட்சியில் தாலுகா நீதிமன்றம் அமைக்க வேண்டும். மதுரை கிழக்கு வட்டம், ஒத்தக்கடையில் தாலுகா நீதிமன்றம் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை மேற்கு ஒன்றியம், செட்டிகுளம் ஊராட்சி, மதுரை–நத்தம் சாலையில் 24 மணி நேரமும் இயங்கும் முதலுதவி சிகிச்சை மையம் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சிட்டம்பட்டி ஊராட்சி, காயாம்பட்டி அல்லது காயாம்பட்டிமேடு பகுதி மற்றும் ஆனையூர் இந்திரா நகர் பகுதியில் பகுதிநேர ரேஷன் கடை அமைக்க வேண்டும்.

மதுரை மேற்கு ஒன்றியம், ஆலாத்தூர் ஊராட்சி, மாரணிவாரியேந்தல் கிராமத்தில் உள்ள கண்மாய்க்கு மறுகால் தடுப்பு அணை கட்ட வேண்டும். மதுரை மேற்கு ஒன்றியம், பூதகுடி–லெட்சுமிபுரத்தில் காவல் நிலையம் அமைக்க வேண்டும்.

தேசிய நெடுஞ்சாலை NH–45 B–யிலிருந்து சிட்டம்பட்டி–சின்னமாங்குளம்–பொய்கைகரைப்பட்டி–சத்திரப்பட்டி–

வாவிடை மருதூர்–அலங்காநல்லூர் வழியாக தனிச்சியம் வரை நான்கு வழிப்பாதை அமைத்து NH–7–ல் இணைக்க வேண்டும். கருப்பாயூரணி முதல் சக்கிமங்கலம் வரை உள்ள சாலையை அகலப்படுத்துதல், உறுதிப்படுத்துதல் பணியினை செய்ய வேண்டும். வரிச்சியூர் முதல் இடையபட்டி வரை உள்ள சாலையை (Police Battalion Camp வழியாக) (Border force) single line to Double line இரண்டு வழிச் சாலையாக மாற்றம் செய்ய வேண்டும்.

கடச்சனேந்தல் முதல் ஒத்தக்கடை வரை உள்ள சாலையை 7 மீட்டரிலிருந்து 10.5 மீட்டராகவும், கடச்சனேந்தல் முதல் புதுப்பட்டி வரை உள்ள சாலையை 3.75 மீட்டர் முதல் 7 மீட்டர் வரையும் அகலப்படுத்த வேண்டும். சக்குடி முதல் பூவந்தி வரை உள்ள சாலையை 7 மீட்டர் இருவழிச் சாலையாக மாற்றம் செய்ய வேண்டும். வண்டியூர் முதல் காளிகாப்பான் வரை உள்ள சாலையை உறுதிப்படுத்திடவும், கள்ளந்திரி முதல் பனைக்குளம் வரை உள்ள 13 கி.மீ. சாலையை அகலப்படுத்தவும் வேண்டும்.

மயிலங்குண்டு முதல் புதுத்தாமரைப்பட்டி வரை உள்ள சாலை, கடச்சனேந்தல் முதல் ஒத்தக்கடை வரை உள்ள சாலையை அகலப்படுத்துதல் மற்றும் உறுதிப்படுத்துதல் செய்ய வேண்டும். கள்ளந்திரி–லெட்சமிபுரம் சாலையை சிட்டம்பட்டி தேசிய நெடுஞ்சாலையுடன் இணைக்க வேண்டும்.

தேசிய நெடுஞ்சாலையிலிருந்து பூலாம்பட்டி வழியாக பனைக்குளம் வரை, கருப்பாயூரணி–ஆண்டார்கொட்டாரம் வழி சக்கிமங்கலம்–கார்சேரி வழி சக்குடி வரை உள்ள சாலையைப் புதுப்பிக்க வேண்டும்.

செல்லூர் மீனாட்சிபுரம் முதல் குலமங்கலம் வரையுள்ள சாலை, ஒத்தக்கடை–திருமோகூர்–தாமரைப்பட்டி–இடையபட்டி –திருவாதாவூர் வரை உள்ள சாலை, ஒத்தக்கடை–நரசிங்கம்–கடச்சனேந்தல்–ஊமச்சிகுளம்–அலங்காநல்லூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை உள்ள சாலை, அலங்காநல்லூர் வாவிடைமருதூர்–வெளிச்சநத்தம் விலக்கு–தொண்டைமான்பட்டி நத்தம் சாலை வரை புதுப்பிக்க வேண்டும்.

நத்தம் சாலை–சீகுபட்டி வழியாக அழகர்கோவில் வரை செல்லும் சாலையைப் புதுப்பிக்க வேண்டும். மதுரை கிழக்கு தொகுதி, மதுரை மேற்கு ஒன்றியம், சத்திரப்பட்டியில் தேங்காய் கொப்பரை கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும்.

விவசாயம் சார்ந்த தொழில்கள், மா, கொய்யா, தென்னை ஆகியவற்றிலிருந்து மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் செய்திட தொழிற்சாலை அமைக்க வேண்டும்.

மதுரை மாநகராட்சியோடு புதிதாக இணைக்கப்பட்ட மதுரை கிழக்கு தொகுதியில் 11 வார்டுகளான ஆனையூர், 2, 3, 4, திருப்பாலை 24, கண்ணனேந்தல் 25, பரசுராம்பட்டி 26, ஆத்திகுளம் 48, நாகனாகுளம் 49, உத்தங்குடி 28 மற்றும் வண்டியூர் 29, 32 ஆகிய வார்டுகளுக்கும், மதுரை வடக்கு தொகுதியில் உள்ள 2 வார்டுகளுக்கும், திருப்பரங்குன்றம் தொகுதியில் உள்ள 13 வார்டுகளுக்கும் பாதாள சாக்கடைத் திட்டம் கொண்டுவர வேண்டும்.

மதுரை கிழக்கு தொகுதியில் மாநகராட்சியின் 11 வார்டுகளில் உள்ள தெருக்கள் சுமார் 50 கிலோ மீட்டருக்குமேல் மண் சாலையாக உள்ளது. எனவே அங்கு பாதாள சாக்கடைத் திட்டம் கொண்டுவர வேண்டும்.

மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம்—யா.ஒத்தக்கடை—நீலமேகம் நகர்வாழ் மக்களின் குடிநீர் ஆதாரமான இராஜகம்பீரம் கண்மாய் தூர் வாரப்பட வேண்டும். அழகர்கோவில் மெயின் ரோட்டிலிருந்து புதுக்கண்மாய்கரை ரோட்டின் வழியாக சேதமடைந்த சாலையை சரி செய்ய வேண்டும்.

பேராக்கூர் காலனியில் வீட்டுமனை இல்லாதவர்களுக்கு வீட்டுமனை வழங்க வேண்டும். இலங்கியேந்தல் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி வளாகத்தில் பேவர் பிளாக் அமைத்து சுற்றுச்சுவர் அமைக்க வேண்டும். மங்களபுரம் பகுதியில் உள்ள அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு சமுதாய நலக்கூடம் அமைக்க வேண்டும்.

புதுத்தாமரைப்பட்டி மெயின் ரோடு முதல் காயம்பட்டி புறவழிச்சாலை வரை மராமத்து செய்ய வேண்டும். சக்குடி ஊராட்சியில் உள்ள தொடக்கப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் அமைக்க வேண்டும்.

சக்கிமங்கலம் ரேஷன் கடையைப் பிரித்து இளமனூர் கிராமத்தில் தனியாக நியாய விலைக் கடை அமைக்க வேண்டும். 1980—ல் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோர் பட்டியல்மூலம் இளமனூர்—கோழிக்குடி பகுதியில் வாழ்ந்துவரும் மக்களுக்கு இலவச நிலப்பட்டா வழங்க வேண்டும்.

வைகை அணையிலிருந்து சக்கிமங்கலம் வழியாக வரும் பாசனக் கால்வாய் தூர் வாரப்பட வேண்டும். பூலாம்பட்டி–சிட்டாம்பட்டி மற்றும் இலங்கியேந்தல்–பேராக்கூர் காலனியில் வசிக்கும் ஆதி திராவிட மக்களின் வீடுகளை மராமத்து செய்ய உதவிட வேண்டும்.

பனைகுளம் ஊராட்சி, காட்டுகுளம் புதூர் பகுதியில் தார்ச் சாலை வசதி செய்ய வேண்டும். இடையப்பட்டி–ராஜீவ் நகர், இந்திரா காலனி, தெற்காமூர் பகுதியில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும்.

யா. புதுப்பட்டி கிராமத்தில் கபடி மைதானம் அமைக்க வேண்டும். மதுரை கிழக்கு ஒன்றியம், ஆமந்தூர்பட்டி கிராமத்தில் நியாய விலைக் கடையும், அரும்பனூர்–தேத்தான்குளம் பகுதிகளில் குடியிருந்துவரும் மக்களுக்கு இலவச மனைப் பட்டா கிடைக்க உதவ வேண்டும்.

அரும்பனூர்–யானைமலை குவாரி பகுதியில் உள்ள அங்கன்வாடி மையத்தினைப் புதுப்பிக்க வேண்டும். அரும்பனூர்–யானைமலை குவாரி–சுப்பிரமணியபுரம் பகுதியில் வசிக்கும் இடமில்லாத மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும்.

கருப்பாயூரணி ஊராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டும். பூலாங்குளம்–கருப்பாயூரணி முதல் சக்கிமங்கலம் வரையுள்ள நெடுஞ்சாலையை அகலப்படுத்த வேண்டும். பாண்டியன் கோட்டையிலிருந்து வண்டியூர் செல்லும் சாலையைச் செப்பனிடவும், கணபதி நகரில் சிமென்ட் சாலை அமைக்கவும், மாங்குளம் பகுதியில் மண்பாண்டத் தொழில் செய்பவர்களுக்கு புதிய கூடம் அமைக்கவும் வேண்டும்.

பொருசுப்பட்டி, ஆதி திராவிடர் காலனியில் குடியிருக்கும் மக்களுக்கு இலவச பட்டா வழங்க வேண்டும். அயிலாங்குடி–ஆண்டியப்பன்பட்டி ஆரம்பப் பள்ளிக்கு ஒரு வகுப்பறைக் கட்டடம் கட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அயிலாங்குடியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

3. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஆ) சட்டமன்ற பத்திரிகையாளர்களுக்கு பேனா, குறிப்பேடுகள் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் செய்தியாளர்கள் மாட அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ள செய்தியாளர்கள் சட்டமன்றப் பேரவைச் செயலகத்தால் வழங்கப்பெறும் பேனா மற்றும் குறிப்பேடுகளை சட்டமுன்வடிவு பிரிவு 2–லிருந்து பெற்றுக்கொள்ளலாம்.*

5. மானியக் கோரிக்கைகள், 2019–2020, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(ஈ) கோரிக்கை எண் 29–சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

(உ) கோரிக்கை எண் 47–இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

தொடர்ச்சி

———

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், திருக்கோயில்களில் தினந்தோறும், நாள் முழுவதும் அன்னதானம் அளிக்க வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்தார். தமிழகத்தில் இருக்கின்ற 754 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. அந்தத் திருக்கோயில்களுக்கு வருகைதரும் பக்தர்களின் எண்ணிக்கையும், ஆகம விதிகளின்படி அந்தத் திருக்கோயில்களின் நடை திறக்கப்படும் நேரமும் கணக்கிடப்பட்டு, வரும் பக்தர்கள் அனைவருக்கும் வாழை இலை போட்டு, வடை பாயாசத்துடன் அறுசுவை உணவு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இந்த 754 திருக்கோயில்களில்,*

முக்கிய திருவிழாக் காலங்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்குவதற்கு ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு, நாள் முழுவதும் அன்னதானம் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம் அவர்கள்.

பிற்பகல் 5–40

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

***திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னை அரசியலுக்கு ஈர்த்த பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் பாரத ரத்னா எம்.ஜி.ஆர். அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சந்தனப் பேழையில் கண்ணுறங்கும் சரித்திரப் பொன்னேடே! சங்கத் தமிழ் முழங்க, வங்கக் கடல் அலைகள் தாலாட்டிடும் எங்கள் அம்மா! ஆயிரம் கோடி நிலவாய், அரசியல் வானில் ஒளி மிளிர்ந்திட்ட எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) சுட்டுவிரல் காட்டி நின்றால் சுழலும் சூரியனும், திசை மாறிடும்; சுட்டுவிரல் காட்டி நின்றால் சுழலும் சூரியனும், திசை மாறிடும், எதிர்ப்பவர் இமயம் எனினும் தகர்த்திடும் ஆற்றலே எங்கள் அம்மா! ஆயிரம் சிங்கங்களின் கர்ச்சனையாய், அழகு தமிழ் வார்த்தெடுத்து, இதயங்களை அள்ளி வைத்த அன்புப் பெட்டகமே எங்கள் அம்மா! புதிய விடியல்களை மட்டுமே பூக்க வைத்த வீரத்தின் விளைநிலமே, புவியெல்லாம் புகழ் மணக்கும், புதிய புறநானூற்றுக் காவியமே எங்கள் அம்மா! கங்கைவரை சென்று, வென்று, தங்கக் குடங்களில் கங்கைநீர் கொண்டுவந்து, பொன்னேரியில் பாய்ச்சிய புரட்சி வீரன், ராஜேந்திர சோழன் தந்த ஜெயங்கொண்டம் சீமையில், அடிமட்டத் தொண்டன் என்னை சட்டமன்ற உறுப்பினராக்கி, ஆலயமாய் விளங்குகின்ற இம்மாமன்றத்தில் உரையாற்றுகின்ற வாய்ப்பளித்த இதய தெய்வமே, எங்கள் அம்மா திருவடியில் பக்தி மலர் தூவி வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் நெஞ்சுக்குள், எந்நாளும் முழு நிலவாய் பூத்திருக்கும் புன்னகையைக் கொட்டி வைத்து அம்மாவின் அடிச்சுவட்டில், தமிழகத்தை ஆளுகின்ற எங்கள் மாண்புமிகு முதல்வரே

எடப்பாடியாரே, (மேசையைத் தட்டும் ஒலி) கானல் நீரில், கலம், கலமாய் மீன் பிடிப்போம் என்றவர்களின் கதையை எல்லாம் தகர்த்துவிட்டு; (மேசையைத் தட்டும் ஒலி) நவரத்தின தொகுதிகளை நமதாக்கி, அம்மாவின் நல்லாட்சி நூற்றாண்டுகள் தொடர்ந்து, மலர்ந்து மணம் வீசிட அயராது தொண்டாற்றும் அமைதிப் பூங்காற்றே எங்கள் அண்ணன், தமிழக மன்னன் மாண்புமிகு தமிழக முதல்வர் எடப்பாடியார் அவர்களின் பொன்னடியில் மலர் தூவி வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) விசுவாசத்தின் விளைநிலமாய், நல்லாட்சிக்குத் துணையாய் நின்று கோலோச்சி வரும் ஜல்லிக்கட்டு நாயகர் தேனியாரை வணங்குகின்றேன். என்னை ஒன்றிய செயலாளராக்கி, அரசியலில் எனக்கு அங்கீகாரம் வாங்கித் தந்த பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களிடம் என்னைப் பரிந்துரை செய்ததோடு, எனது வெற்றிக்கு எல்லா வகைகளிலும் பாடுபட்ட, மாநிலங்களவை உறுப்பினர் கழகத்தின் துணை ஒருங்கிணைப்பாளர், முன்னாள் வீட்டு வசதித் துறை அமைச்சர் அண்ணன் திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்களை வணங்குகிறேன். அரியலூர் மாவட்ட கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினரும், மாண்புமிகு அம்மா அவர்களால் தமிழக அரசின் தலைமை அரசுக் கொறடாவாக நியமனம் செய்யப்பட்டவருமான தாமரை திரு. எஸ். ராஜேந்திரன் அவர்களையும் வணங்குகிறேன். நடுநிலை தவறாமல் இந்தப் பேரவையை வலிவோடு வழிநடத்திச் செல்கின்ற மாண்புமிகு பேரவைத் தலைவர், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அனைவரையும் வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2016 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் திரு. காடுவெட்டி குருவைவிட நான் அதிகம் பெற்றதோ 23,000 வாக்குகள். நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் கழக வேட்பாளர் திரு. சந்திரசேகர் அவர்கள் அதிகம் பெற்ற வாக்குகள் 25,136. சட்டமன்றத் தேர்தலைவிட மக்களவைத் தேர்தலில் அதிகமாக வாக்களித்த ஜெயங்கொண்டம் தொகுதி மக்களுக்கு எனது கோடானுகோடி நன்றியை இத்தருணத்தில் காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நடந்து முடிந்த தேர்தலில் அ.இ.அ.தி.மு.க. தோற்கவில்லை; தர்மம் தோற்றது; தமிழக மக்கள் தோற்றார்கள். தமிழக மக்கள்

ஏமாந்துவிட்டார்கள். ஆனால், தமிழகத்தை ஆளுகின்ற தகுதி அ.இ.அ.தி.மு.க–விற்கு மட்டுமே உள்ளது, (மேசையைத் தட்டும் ஒலி) மற்ற கட்சிகளுக்கு இல்லை என்பதைத் தீர்ப்பாகக் கூறிவிட்டார்கள். 2021 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலிலும் மாண்புமிகு முதலமைச்சர் திரு. எடப்பாடியார் தலைமையில்தான் அம்மாவின் அரசு மலரும் என்பதை தமிழக மக்கள் வாக்களித்ததன்மூலம் தெள்ளத்தெளிவாக உணர்த்திவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1980–ல் மத்தியில் இருந்த காங்கிரஸ் அரசு ஆணவத்தோடு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அரசைக் கலைத்தது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். 'என்ன தவறு செய்தேன்' என்ற ஒரு கேள்வியைத்தான் கேட்டார். மக்கள் எம்.ஜி.ஆர். அவர்களே ஆள வாக்களித்தார்கள். இதுபோன்றுதான் 2021 ஆம் ஆண்டிலும் நடக்கும் என்பதில் சந்தேகத்திற்கு இடமில்லை. ** (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உட்காருங்கள், பிறகு பேசிக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்) அவர் பேசி முடித்ததும் பேசலாம், உட்காருங்கள்.

திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்) ஏழைகள், பணக்காரர்கள், சிறியவர்கள், பெரியவர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் என பலதரப்பட்ட மக்களாலும். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் கூறிய அந்த ஒரு வரி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் பேசுங்கள்.

பிற்பகல் 5–45

திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏழைகள், பணக்காரர்கள், சிறியவர்கள், பெரியவர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் என பலதரப்பட்ட மக்களாலும் விரும்பப்படும் ஒன்று சுற்றுலாவாகும்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இப்படி தமிழ்நாட்டில் கோயில், கட்டடக் கலைகள், உயிரோட்டமுள்ள பாரம்பரிய இசை, நடனம், கிராமியக்கலை மற்றும் கவின்கலை ஆகியவை மிகவும் போற்றத்தக்க வகையில் உள்ளன. இதன்படி தமிழ்நாட்டில், நினைவுச் சின்னங்கள், நீர்வீழ்ச்சிகள், கோட்டைகள், கடற்கரைகள், பூங்காக்கள், கோயில்கள் சுற்றுலாத்தலமாக உள்ளன. உலகப் பாரம்பரிய சின்னங்களான மாமல்லபுரம் கடற்கரைக் கோயில், தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் ஆலயம், தாராசுரம் ஐராவதீஸ்வரர் திருக்கோயில், கங்கைகொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் ஆலயம் மற்றும் நீலகிரி மலை இரயில் ஆகியவை தமிழ்நாட்டின் சுற்றுலாத் தலங்களாக UNESCO–வால் அறிவிக்கப்பட்டன. தமிழ்நாட்டின் சுற்றுலாத் தலங்களைக் காண உள்நாடு மற்றும் வெளிநாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, ஆஸ்திரேலியா, ரஷ்யா, ஜெர்மனி, சீனா, மலேசியா, சிங்கப்பூர், ஜப்பான், இத்தாலி, பிரான்ஸ், இலங்கை, ஓமன், வங்கதேசம் மற்றும் பல்வேறு நாடுகளிலிருந்து அதிக எண்ணிக்கையில் சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். இந்த வகையில் 60 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் 2018 ஆம் ஆண்டில் வந்துள்ளனர். அதேபோல கோடைக்காலங்களில் உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு, ஏலகிரி போன்ற இடங்களுக்கு மக்கள் சுற்றுலா செல்கின்றனர். அங்கு கோடை விழாவும் நடத்தப்படுகிறது. இந்தியாவிலேயே வெளிநாட்டுப் பயணிகளின் வருகையைப் பொறுத்தவரை, தமிழ்நாடு முதன்மை மாநிலமாக உள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் திட்டங்களை பொது மக்களிடையே காட்சிப்படுத்த பல மாவட்டங்களில் நடந்த பொருட்காட்சிகளில் சுற்றுலாத் துறை பங்கேற்றது வரவேற்கத்தக்கது. அதேபோல சுற்றுலாத் தலங்களை விளம்பரப்படுத்த சர்வதேச சந்தைகளில் பங்கேற்றது வரவேற்கத்தக்கது. சுற்றுலா செல்வதற்கு அமைதியான, பாதுகாப்பான சூழ்நிலை தேவை. அதற்கான திட்டங்களை அம்மாவின் அரசு சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் பயன்பெறும் வகையில் ஓய்வுக் கூடங்கள், கழிப்பறைகள், உடை மாற்றும் அறைகள், வாகன வசதிகள், குடிநீர் வசதி, மின் விளக்கு வசதி, வழிகாட்டிப் பலகைகள் போன்றவற்றை அம்மாவின் அரசு சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''சிறந்த பாரம்பரிய சுற்றுலா மாநிலம்'' என்ற சர்வதேச பயண விருது, பட்வா,

2019 ஆம் ஆண்டு மார்ச் 7–ல் ஜெர்மனி நாட்டில் பெர்லின் நகரில் தமிழ்நாடு மாநிலத்திற்கு வழங்கப்பட்டது. சுற்றுலாத் துறையில் சிறந்த செயல்திறன்மிக்க மாநிலம் என்ற விருதை இந்தியா டுடே குழுமம் 2018–ல் தமிழ்நாட்டிற்கு வழங்கியது. அதனை தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடியார் பெற்றுக்கொண்டார்கள். சுற்றுலாவில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்குகின்றது. அதனால், மத்திய அரசின் விருதினைப் பெற்றுள்ளது. பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மன் நினைவுக் கோட்டையை ரூ.60.20 இலட்சத்திற்குப் புனரமைக்க நிதி ஒப்பளித்திருப்பது வரவேற்கத்தக்கது. தமிழ்நாடு சுற்றுலாக் கழகம், முட்டுக்காடு, முதலியார்குப்பம், உதகமண்டலம், பைக்காரா, கொடைக்கானல், ஏற்காடு, பிச்சாவரம் மற்றும் குற்றாலம் ஆகிய இடங்களில் படகுக் குழுமங்களை இயக்கி வருவது பெருமைக்குரியதாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இசை, நாடகம், நாட்டியம், ஓவியம், சிற்பம் ஆகிய கலைகளை வளர்த்திடவும், எதிர்கால சந்ததியினருக்குக் கொண்டு செல்லும் வகையிலும், கலைக் கல்வி நிறுவனங்களையும், கலை அமைப்புகளையும் ஒரு குடையின்கீழ் கொண்டு வந்து கலை பண்பாட்டுத் துறை என்ற தனித் துறையை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1991 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் உருவாக்கினார்கள். கலைஞர்களையும், கலைக் குழுக்களையும் ஊக்கப்படுத்தும்விதமாக, அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திடவும், கலை விழாக்கள் நடத்தி அனைத்துக் கலைகளையும் மக்களிடையே கொண்டு செல்வதை நோக்கங்களாகக் கொண்டு கலை பண்பாட்டுத் துறை செயல்பட்டு வருகிறது. கலைஞர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதையும், கலை பண்பாட்டுத் துறை நோக்கமாகக் கொண்டுள்ளது. தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தினை மாண்புமிகு அம்மா அவர்கள் விதி–110–ன்கீழ் அறிவித்து தோற்றுவித்தார்கள்.

2014–2015 முதல் குரலிசை, வீணை, வயலின், நாதசுரம், மிருதங்கம், பரதநாட்டியம் ஆகிய பிரிவுகளில் முதுகலைப் பட்டப் படிப்புகள் துவங்கப்பட்டுள்ளன. 2016–2017–ல் Ph.D. படிப்பும், 2018–2019–ல் M.Phil. படிப்பும் தொடங்கப்பட்டுள்ளது. இளைய தலைமுறையினருக்கு இசைக் கல்வியை வழங்க தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகம், நான்கு அரசு இசைக் கல்லூரிகள், பதினேழு மாவட்ட அரசு இசைப் பள்ளிகள், அரசு உதவி பெறும் கலைக் காவேரி நுண்கலைக் கல்லூரி

ஆகியவை செயல்பட்டு வருகின்றன. அதேபோல, கலைஞர்களை ஊக்கப்படுத்திடவும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளை நடத்திடவும், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் செயல்பட்டு வருகின்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும், திறமையின் அடிப்படையில் விருதுகள் வழங்கும் திட்டத்தை 2002–2003 ஆம் ஆண்டில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயல்படுத்தினார்கள். 2017–2018 முதல் கலைஞர்களுக்கு வழங்கப்படும் விருதுக்கான தொகை உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. அதேபோல கலைஞர்களுக்கு 2002–2003 முதல் அடையாள அட்டை வழங்குவதை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயல்படுத்தினார்கள். நாட்டுப்புறக் கலைஞர்கள் சமூகப் பாதுகாப்பிற்காகவும், நலத் திட்ட உதவிகள் வழங்குவதற்காகவும், நாட்டுப்புறக் கலைஞர் நல வாரியம் செயல்பட்டு வருகிறது. இதில் 31–3–2019 வரை 33,575 கலைஞர்கள் உறுப்பினர்களாகப் பதிவு செய்துள்ளனர். 7,603 கலைஞர்களுக்கு ரூ.134.95 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கவின்கலை மற்றும் கட்டடக் கல்வி நிறுவனங்கள் தலைசிறந்த சிற்பிகளையும், ஓவியங்களையும் உருவாக்கியதுடன், குறிப்பிடத்தக்க வகையில் வரலாறு படைத்துள்ளன. அதேபோல் அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி மாமல்லபுரத்தில் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. பல்வேறு பட்டப் படிப்புகள் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம்மூலம் கலைத் துறையில் மதிப்புமிகு சேவை புரிந்தவர்களுக்கு கலைமாமணி விருது வழங்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் மறைந்த கலைஞர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட நிதியுதவியை 2014–2015 ஆம் ஆண்டு முதல் ரூ.10,000/– ஆக உயர்த்தி அம்மா அவர்கள் அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். 2018–2019 ஆம் ஆண்டில் 18 கலைஞர்கள் இந்நிதியுதவியைப் பெறுவதற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதன்மூலம் இளம் கலைஞர்களுக்கு, மேடையேற்றம் செய்திட ரூ.5000/– முதல் ரூ.10,000/– வரை உதவி வழங்கி வருகிறது. அதற்கு ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையை 2017–2018 ஆம் ஆண்டு முதல் ரூபாய் ஒரு இலட்சத்திலிருந்து ரூபாய் பத்து இலட்சமாக உயர்த்தி வழங்கி அம்மாவின் அரசு அரசாணையை வெளியிட்டுள்ளது.

2019 ஜூலை 15] [திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்]

பிற்பகல் 5–50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு, கலைக் குழுக்களுக்கு இசைச் கருவிகள், ஆடை அணிகலன்கள் வாங்க நிதி வழங்குவதும், புதிய நாடகங்கள், நாட்டிய நாடகங்கள் தயாரிக்க நிதி உதவி வழங்குவதும் பாராட்டுக்குரியதாகும். கலைச் செம்மல் விருது வழங்குவது பாராட்டுக்குரியது. 2018–2019–ல் மாவட்ட அளவில் கலை விருதுகள் வழங்கி சாதனை படைத்துள்ளது.

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. வெல்லமண்டி ந. நடராஜன் அவர்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறார்கள். முதலாம் இராஜேந்திர சோழன், கங்கை, கடாரம், இலங்கை, தாய்லாந்து போன்ற இடங்களுக்குச் சென்று, வென்று வந்தான். அவன் நிறுவிய தலைநகரம்தான் கங்கை கொண்ட சோழபுரம். இது 300 ஆண்டுகள் சோழர்களின் தலைநகரமாக இருந்தது. அங்குள்ள யுனெஸ்கோ விருது பெற்ற கோயிலை மேம்பாடு செய்யும்பொருட்டு, நவீன கழிப்பறை வசதிகள், மின் வசதிகள் செய்துதரப்பட வேண்டும். மேலும், மோட்டல் ஒன்று கட்டி முடிக்கப்பட்டு, பயன்படுத்தப்படாமல் உள்ளது. வெளிநாட்டினர் தினசரி நூற்றுக்கணக்கில் அங்கே வருகை புரிகின்றனர். அருகிலுள்ள பொன்னேரியில் படகுக் குழாம் அமைக்கலாம். இராஜேந்திர சோழன் பிறந்த தினமான திருவாதிரை நாளை அரசு விழாவாகக் கொண்டாட வேண்டும். அதேபோல், அரியலூர் மாவட்டம், கரைவெட்டி ஏரி பறவைகள் சரணாலயமாக உள்ளது. அதனை அனைத்து வசதிகளோடு மேம்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆலயங்கள், சமுதாயத்தின் பொதுச் சொத்துக்களாகவும், சமூகப் பொருளாதார வேறுபாடுகளால் பிளவுபடாமல் அனைவரும் சமம் என்ற உணர்வை வளர்க்கும் புனிதத் தலங்களாகவும் திகழ்ந்து வருகின்றன என மாண்புமிகு அம்மா அவர்கள் கூறியுள்ளார்கள்.

இப்படி, பல்லவர், பாண்டியன், சோழன், சேரன் ஆகிய அரசர்களின் காலங்களில் கட்டடக் கலையும், கோயில்களும் மேலோங்கி நின்றன. தஞ்சாவூர் அருள்மிகு பிரகதீஸ்வரர் திருக்கோயில், கங்கை கொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் திருக்கோயில், தாராசுரம் அருள்மிகு ஐராவதீஸ்வரர் திருக்கோயில்

மற்றும் திருப்புவனம் கம்பு கரேஸ்வரர் திருக்கோயில் ஆகியவை சோழர்கள் காலத்தில் கட்டப்பட்ட பெருமைப்படத்தக்க கோயில்களாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2002 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ஆம் நாள் சென்னை, மயிலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலில் அன்னதானத் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் துவக்கி வைத்தார்கள். அதன்பிறகு, அன்னதானத் திட்டம் 360 கோயில்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. ஆனால், தி.மு.க. ஆட்சியில் 2006 முதல் 2010 வரை இரண்டு கோயில்களுக்கு மட்டுமே இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. அதுபோல், நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தை 13—9—2012—ல் ஸ்ரீரங்கம் கோயிலில் மாண்புமிகு அம்மா அவர்கள் துவக்கி வைத்தார்கள். ஆண்டுதோறும், அண்ணா நினைவு நாள், சுதந்திர நாள் மற்றும் திருநாட்களில் முக்கிய கோயில்களில் ஏற்றத்தாழ்வின்றி அனைவரும் பங்குபெறும் வழிபாடும் மற்றும் பொது விருந்தும் நடத்தப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு வசதியில்லா ஏழையெளியவர்களுக்கு வசதிமிக்க கோயில்களில் திருமணம் செய்து வைக்கும் திட்டத்தை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் துவக்கி வைத்தார்கள். அவர் வழிவந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2002 ஆம் ஆண்டு 1,008 திருமணங்களையும், 2003 ஆம் ஆண்டு 1,503 திருமணங்களையும் நடத்தி வைத்தார்கள். இத்திட்டம், தி.மு.க. ஆட்சியில் 2006—2011 வரை கைவிடப்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்கள் மீண்டும் பதவியேற்றபின் இத்திருமணங்களை நடத்தி வைத்தார்கள். ஒருகால பூஜைத் திட்டத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறப்பாக நடத்தினார்கள். கிராமப்புறக் கோயில்களின் புனரமைப்புக்காக "கிராமப்புற திருக்கோயில் திருப்பணி திட்டம்" ஏற்படுத்தப்பட்டது. அத்திட்டத்திற்கு ரூ.50,000/— ஆக உயர்த்தி வழங்கி ஆணையிட்டதும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். 2016—2017—ல் அதனை ரூபாய் ஒரு இலட்சமாக உயர்த்தி வழங்கி ஆணையிட்டதும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். இத்திட்டத்திற்காக 2018—2019 ஆம் ஆண்டிற்கு 634 திருக்கோயில்களுக்கு 6.34 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது, வரவேற்கத்தக்கது. இப்படி அறநிலையத் துறையை வளர்ச்சிப் பாதையில் கொண்டு சென்றது மாண்புமிகு அம்மாவும், அம்மாவின் அரசும்தான்.

பல கோயில்களின் கட்டுப்பாட்டில் உள்ள நிலங்களுக்கு சரியாக குத்தகைத் தொகை கொடுப்பதில்லை. அதனை உயர்த்தி வசூல் செய்ய வேண்டும். கோயில் நிலங்களை, அரசுக் கட்டடங்கள், அதாவது கல்லூரிகள், நீதிமன்றங்கள், அரசு அலுவலகங்கள் கட்டுவதற்கு நிலத்தை விற்பனை செய்ய சந்தை மதிப்பைவிட பல மடங்கு அதிகமாகக் கேட்பது சரியாக இல்லை. அதனை சந்தை மதிப்பிற்கே தர வேண்டும். கோயில்களின் அறங்காவலர்கள் நியமனம் சம்பந்தப்பட்ட வழக்குகள் விசாரிக்கப்படாமலேயே உள்ளன. நீண்டகாலமாக உள்ள வழக்குகளை விசாரித்து தீர்வு காண வேண்டும். கோயில்களுக்கு அறங்காவலர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும். 2004–2006–ல் நான், பெரம்பலூர் மாவட்ட அறங்காவலர்கள் நியமனக் குழுவின் தலைவராக இருந்து, 3,000 பக்தர்களை அறங்காவலர்களாக நியமனம் செய்தேன். எனவே, மீண்டும் அறங்காவலர்களை நியமனம் செய்தால் பல பக்தர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் உரையாற்ற ஆரம்பித்து 15 நிமிடங்கள் ஆகிவிட்டன.*

திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்: *இரண்டே இரண்டு கோரிக்கைகளை மட்டும் நான் சொல்லிவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *சரி, மற்றவற்றைக் கொடுங்கள், அவற்றை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளலாம்.*

திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டத்தில் பழுப்பு நிலக்கரி எடுக்க 1997–ல், 9,000 ஏக்கருக்கும் அதிகமான நிலம் டிட்கோவால் கையகப்படுத்தப்பட்டது. அப்போது ஏக்கருக்கு ரூ.9,000/– முதல் ரூ.45,000/– வரை இழப்பீடு வழங்கப்பட்டது. நிலம் கொடுத்த விவசாயிகள் ஆட்சேபணையோடு அத்தொகையைப் பெற்றுக்கொண்டார்கள். அதற்கு, இரண்டு சார்பு நீதிமன்றங்கள் நிறுவப்பட்டன. விவசாயிகள் வழக்குத் தொடுத்தார்கள். சில வழக்குகள் முடிவுற்றன. தீர்ப்பின்படி ஏக்கர் ஒன்றுக்கு வட்டியுடன் சேர்த்து 15 இலட்சத்துக்கும் மேல் கிடைக்க வேண்டும். ஆனால், எந்தத் தொகையும் இதுவரை கொடுக்கப்படவில்லை. விவசாயிகள் நிலங்களில் பயிர் செய்கிறார்கள்; ஆனால், உரிமை இல்லை. எனவே, நிலத்தை மேம்பாடு செய்ய முடியவில்லை; பிள்ளைகளின் படிப்பிற்குக் கடன் பெற முடியவில்லை. இப்படிப்பட்ட*

அவல நிலையில் விவசாயிகள் உள்ளனர். அதேபோல் வீட்டில் குடியிருக்கிறார்கள். ஆனால் உரிமை இல்லை. புதிய வீடு கட்ட முடியவில்லை. இப்படி நிலம் கொடுத்த விவசாயிகளின் வாழ்வாதாரமே பாதிக்கப்பட்டுள்ளது. இப்போது விவசாயிகள் ஏக்கர் ஒன்றுக்கு ரூ.25 இலட்சம் கேட்கிறார்கள். அந்த அளவுக்குக் கொடுக்க முடியவில்லை என்றாலும், நியாயமான விலை கொடுத்து இப்பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டும்.

பிற்பகல் 5–55

ஜெயங்கொண்டத்தில் உள்ள தரத்துடன்கூடிய நிலக்கரியை எடுத்து அனல்மின் நிலையம் அமைக்க வேண்டும். அதனால், ஆயிரக்கணக்கான பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இந்தப் பிரச்சினையால் 13 கிராமங்கள் மக்களவைத் தேர்தலைப் புறக்கணித்தன. குறிப்பாக, தண்டலை மற்றும் மேலூர் ஊராட்சி மக்கள் தேர்தலை முழுமையாகப் புறக்கணித்தார்கள். அந்த இரண்டு ஊராட்சிகளின் மக்கள் வாக்களித்திருந்தால், சிதம்பரம் தொகுதியில் கழக வேட்பாளர் திரு. சந்திரசேகர் அவர்கள் வெற்றி பெற்று டெல்லிக்குச் சென்றிருப்பார். எதிர்க்கட்சி வேட்பாளர் வீட்டுக்குச் சென்றிருப்பார். எனவே, இதில் அரசு உடனடி கவனம் செலுத்தி, மாண்புமிகு தமிழக முதல்வரும், மாண்புமிகு தொழில் துறை அமைச்சரும் தீர்வு காண வேண்டுமாய் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. தொழிற்சாலை ஒன்றுகூட கிடையாது. கல்லூரி எதுவும் கிடையாது. வேலைவாய்ப்புக்கு எந்த நிறுவனமும் இல்லை. இப்படி அவல நிலையில் உள்ள ஜெயங்கொண்டத்தில் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் துவங்க வேண்டும். நான் நான்காவது ஆண்டாக இந்தக் கோரிக்கையை வைக்கிறேன். அரியலூர் மாவட்டத்தில் 62 அரசு மேல்நிலைப் பள்ளிகளும், 72 தனியார் மேல்நிலைப் பள்ளிகளும் உள்ளன. இதன்மூலம் 10,000–க்கும் மேற்பட்ட மாணவர்கள் 12 ஆம் வகுப்பில் படிக்கிறார்கள். இருப்பதோ ஒரே ஒரு கல்லூரி; அரியலூரில் மட்டுமே உள்ளது. எனவே, கருணை உள்ளமும், தாயுள்ளமும் கொண்ட முதல்வர் அவர்களும், உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களும் இந்த ஆண்டாவது ஜெயங்கொண்டத்தில் கல்லூரியை அறிவிக்க வேண்டும் என்று மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மற்றவற்றைப் பதிவு செய்துகொள்ளலாமா?

திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் இரண்டு, மூன்று கோரிக்கைகள்தான் உள்ளன. ஒரே ஒரு பக்கம்தான். படித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். ஜெயங்கொண்டம் அருகில், கங்கைகொண்ட சோழபுரம் அருகில் சோழகங்கம் என்னும் பொன்னேரி உள்ளது. இராஜேந்திர சோழன் கங்கைவரை சென்று, வென்று கங்கை நீரைக் கொண்டு வந்து பாய்ச்சிய ஏரிதான் பொன்னேரி. இது 773 ஏக்கர் பரப்பளவு கொண்டது. 1,124 ஏக்கர் பாசனம் செய்ய உகந்தது. ஆனால், ஆழம் இல்லை. மழைக் காலங்களில் கடல்போல் காட்சி அளிக்கும். ஆனால், ஒரு அடி ஆழம்தான் தண்ணீர் நிற்கும். இங்கு ஆக்கிரமிப்புகளை அகற்றி ஆழப்படுத்தினால் படகே விடலாம். 20 கிராம மக்கள் ஆயிரக்கணக்கான ஏக்கரில் பாசனம் செய்து விவசாயம் செய்வார்கள். இதற்கு ஒரு வல்லுநர் கமிட்டி அமைத்து, ஆய்வு செய்து, நல்வழி காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் தொகுதி, ஆண்டிமடம் தாலுகாவாக அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு, முதல்வர் எடப்பாடியார் அவர்களின் திருக்கரங்களால் துவக்கி வைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. எனவே, ஆண்டிமடம் ஊராட்சியோடு விளந்தை, கவரப்பாளையம் ஆகிய ஊராட்சிகளைச் சேர்த்து, ஆண்டிமடத்தை பேரூராட்சியாக அறிவிக்க வேண்டும். அதேபோல் ஆண்டிமடத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டும். ஜெயங்கொண்டம் நகருக்கு வெளியில் இப்போது அரைவட்ட புறவழிச்சாலை அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அதனை முழு வட்ட புறவழிச்சாலையாக அமைத்துத்தர வேண்டும். மேலும், ஜெயங்கொண்டம் நாலு ரோட்டில் ரவுண்டானா அமைக்க வேண்டும். ஜெயங்கொண்டம் யூனியனின் தீர்மானப்படி ஜெயங்கொண்டத்தில் உள்ள ஆவேரியைச் சுற்றிலும் நடைபாதை அமைத்துத்தர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாபெரும் அவையில் என்னைப் பேச அழைத்த தங்களுக்கும், என்னைப் பேச அனுமதித்த தமிழக முதல்வர், துணை முதல்வர், அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு பேரவைத் தலைவர், பேரவைத் துணைத் தலைவர், அரசு தலைமைக் கொறடா மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கு பேசிய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், கோயில் நிலங்களில் குடியிருப்போரிடம் வசூலிக்கப்படும் அடிமனைத் தொகையைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரினார்கள். இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான மனைகள் மற்றும் கட்டடங்களுக்கு நியாய வாடகை நிர்ணயிப்பது சம்பந்தமாக இந்து சமய மற்றும் அறநிலையக் கொடைகள் சட்டப் பிரிவு 34(a)–ன்கீழ் வழிவகை செய்யப்பட்டுள்ளது. வாடகை நிர்ணயம் செய்வது தொடர்பாக அரசாணையில் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில், அறநிலையங்களுக்குச் சொந்தமான கட்டடங்கள் மற்றும் மனைகள் கொடுப்பதற்கு இடத்தின் நடைமுறையிலுள்ள சந்தை வாடகை, வழிகாட்டுதல் மதிப்பு ஆகியவற்றைக் கழித்துக்கொண்டு, காலிமனை குடியிருப்போருக்கு 0.1 சதவிகிதமும், காலிமனை வணிகத்திற்கு 0.3 சதவிகிதமும், கட்டடக் குடியிருப்புகளுக்கு 0.1 சதவிகிதமும், கட்டட வணிகத்திற்கு 0.6 சதவிகிதமும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஏற்கெனவே உள்ள வாடகையினைவிட தற்போது நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வாடகை, 4 முதல் 5 மடங்காக உயரும் என்றாலும், நிர்ணயம் செய்யப்பட்ட வாடகையானது, அப்பகுதியில் நிலவும் சந்தை மதிப்பு வாடகையினைவிடக் குறைவானதாகும். இவ்வாடகை தொடர்பான ஆட்சேபணை இருப்பின், மேல்முறையீடு செய்வதற்கு சட்டப் பிரிவு 34(a)–ன்கீழ் வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், அறநிலையங்களுக்கு அறங்காவலர் குழு நியமிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார்கள். ஆண்டு வருமானம்

ரூ.10 இலட்சத்திற்கு மேல் அதிக வருமானம் பெறும் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள கோயில்களுக்கு பரம்பரை முறைசாரா அறங்காவலர்களை நியமனம் செய்ய மாண்புமிகு அம்மா அரசின் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 6–00

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி அவர்கள்.

திருமதி பொன். சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாழும் தலைமுறைக்கும், வாழப்போகும் தலைமுறைக்கும் வளர்ச்சித் திட்டங்களைத் தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) 8 கோடி தமிழ் மக்களின் இல்லங்களிலும், உள்ளங்களிலும் வாழ்ந்துகொண்டிருக்கின்ற எங்களின் தாய், நானும் எங்கள் குடும்பமும் அன்றாடம் போற்றி வணங்கும் அன்புத் தாய், இருந்தும் மறைந்தும் நம்மையெல்லாம் வாழ வைத்துக்கொண்டிருக்கும் வாழ்ந்த மனித தெய்வம், கல்லுக்குள் இருக்கும் தெய்வத்தைவிட, (மேசையைத் தட்டும் ஒலி) கருவில் சுமக்கும் அன்னையைவிட, ஒன்றரை கோடி தொண்டர்களைச் சுமந்த காவல் தெய்வம், காவியத் தலைவி அம்மா அவர்களின் திசை நோக்கி, தெய்வத் திருவடிகளைத் தாழ்ந்து பணிந்து வணங்குகிறேன்.

அன்னபூரணி அம்மா அவர்கள் காட்டிய இரு விரலுக்கு அர்த்தம் EPS–OPS என்பதை மெய்ப்பிக்கும் வகையில் (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் அம்மா அவர்களின் எண்ணங்களை ஈடேற்றுவதில் தங்களை அர்ப்பணித்துள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் இதயமார்ந்த நன்றியினை இனிதே உரித்தாக்குகிறேன்.

ஆட்சிக்கு நாள் குறித்தவர்களின் தலைக்கனத்தை வென்று, (மேசையைத் தட்டும் ஒலி) நாள்தான் சென்றுவிட்டது நான்தான் முதல்வராக இருக்கிறேன், வாருங்கள் தமிழகத்தின் தலையாய பிரச்சினைகளைக் குறித்து பேசிவிடலாம் என அழைத்து இந்த மாபெரும் சபையில் பேசிக்கொண்டிருக்கும் பெருமைக்குச் சொந்தக்காரார் நம் தமிழக முதல்வர் அவர்கள்.

இன்றையதினம் 2019–2020 ஆம் ஆண்டிற்கான சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அனைவருக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தைப் பதிவு செய்கிறேன்.

தீய சக்திகளிடமிருந்து எங்களை வழி நடத்த, (மேசையைத் தட்டும் ஒலி) அன்னையில்லா காலத்தில் அண்ணன்களாக EPS–OPS ஆகியோர் சிறப்பாக வழி நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என ஆன்றோர்களாலும், சான்றோர்களாலும் பாராட்டப்படுகிறார்களென்றால், இது மிகையில்லை. குடிமராமத்து நாயகன், கடைக்கோடி எடப்பாடியில் கழகத்தின் அடிமட்டத் தொண்டராய், உழைப்பு ஒன்றே குறிக்கோளாய்க் கொண்டு களைத்திடாது கட்சிப் பணியாற்றி, உழைப்பால் உயர்ந்திடும் உன்னதத்தை உலகறியச் செய்திடும் வகையில் தமிழக முதல்வராய் தலைமையேற்று, ஏழைகளின் நலம் காத்திட ஏற்றமிகு நலத் திட்டங்கள் பல வகுத்து, தமிழகத்தை கம்பீரமாய் வழிநடத்தி, மக்கள் இதயமெல்லாம் நிறைந்து நிற்கும் கொங்கு நாடு கண்ட பொங்கு தமிழ் புதல்வர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) தென்பாண்டிச் சீமை கண்ட தமிழர் பண்பாட்டின் அடையாளம்; எளிமையும், அமைதியும் குடிகொண்ட புன்னகைத் தோற்றம், ஒளிபடைத்த விழியோடும், உறுதிகொண்ட நெஞ்சோடும், கழகத் தொண்டர்கள் படையையும், ஆட்சியையும் மாண்புமிகு முதல்வர் அவர்களோடு துணை நின்று வழி நடத்திடும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும், கழகக் கோட்டையைக் காக்கும் போர் மறவர்களாய் காவியத்தாய் அம்மாவின் பெயர் போற்றும் புதல்வர்களாய்த் திகழும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அவையில் நிறைந்திருக்கும் அனைவருக்கும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தைப் பதிவு செய்கிறேன்.

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ‘மக்களால் நான் மக்களுக்காகவே நான்’ என தமிழ் மக்களை

தன் மக்களாய் நினைத்து (மேசையைத் தட்டும் ஒலி) தாயன்போடு தந்த திட்டங்கள் அனைத்தும், மக்கள் அனைவருக்கும் கிடைக்கும் வகையில் நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை, சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த சாமானியன்தானே வீழ்த்திவிடலாம் என வீணர்கள் திட்டமிட்டு, கூட இருந்தே குழி பறிக்கும் குள்ளநரிக் கூட்ட துரோகத்தின் துணையோடு (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு போராட்டங்களைத் தூண்டிவிட்டு, அவதூறுகளின்மூலம் அம்மாவின் ஆட்சியைக் கவிழ்த்துவிட்டு குறுக்கு வழியில் அரியணை ஏறிவிடலாம் என மனப்பால் குடித்தவரின் எண்ணங்களைச் சிதறடித்து, 'பல வேடிக்கை மனிதரைப்போல நான் வீழ்வேன் என்று நினைத்தாயோ, வீழ்ந்தாலும் அருவியாய் விழுந்து, நதியாய் எழுந்து ஓடுவேன்' என இன்று ஆட்சியின் செங்கோலை உயர்த்திப் பிடித்து, உயர்ந்து நிற்கிறார் நம் தமிழக முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'எதிர்ப்புகள் கோடி எதிர்வரினும், எள்ளளவும் தடம் மாறாமல் மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றுவதுதான் தமது மாபெரும் கடமை' என்று இதய தெய்வம் அம்மா அவர்கள் தந்த தாரக மந்திரத்தை நெஞ்சில் தாங்கி, ஜீவநதியாய் தமிழகத்தை வளப்படுத்தி வரும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் தலைமைத் தொண்டனாய் நின்று மக்களுக்காக ஆட்சி புரிந்து வரும் நம் தமிழக முதல்வர் அவர்கள், அண்ணா வழியில் வந்த புரட்சித் தலைவரின் பாதையில், புரட்சித் தலைவரின்வழி வந்த அம்மா அவர்கள் காட்டிய திசையில் நம்மையெல்லாம் நல்வழி நடத்திட நல்லதொரு தலைவராய் நமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று தமிழகத்தில் இலட்சியப் படை வீரர்களாய் அணி வகுத்து நிற்கும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோடானுகோடி தொண்டர்களில் நானும் உள்ளேன் என்பதில் பெருமைகொண்டு, 'வானம் உள்ளவரை வையகம் உள்ளவரை, கழக ஆட்சி என்றும் ராஜநடை போட்டு தொடரும் தொடரும்' என்ற உறுதியினை இந்த மாமன்றத்தில் பதிவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சரித்திரத் தலைவியின் திருவுருவப் படத்தினை தத்ரூபமாக வடிவமைத்து

சட்டமன்றப் பேரவையில் திறந்து வைத்து, இன்று எங்கள் அம்மா எங்களை வழிநடத்துகிறார் என்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், சிங்காரச் சிரிப்புக்குச் சொந்தக்காரர் மாண்புமிகு முதல்வர் எடப்பாடியார் அவர்களுக்கும், புன்னகைக்குச் சொந்தக்காரர் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதல்வர் அவர்களுக்கும் கோடானுகோடி நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாடு நலம் பெறவும், நாட்டு மக்கள் வளம் பெறவும் நல்ல பல திட்டங்களைச் செயலாக்கிய மகராசி அம்மாவின் ஆட்சியில் மனநிறைவோடு வாழ்கிறோம் என மகிழ்ந்து போற்றினோம். அப்படிப்பட்ட மாபெரும் மக்கள் தலைவி அம்மா அவர்களின் கழக ஆட்சியில் சாதனைகள் தொடரட்டும், சரித்திரம் படைக்கட்டும் என வேண்டுகிறேன்.

பிற்பகல் 6–05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓடைகள் கூடி ஒப்பாரி வைப்பதால் கங்கை நதி காய்ந்துவிடாது என்பதற்கிணங்க, இன்னும் ஆயிரம் இயக்கங்கள் அன்றாடம் முளைத்தாலும், காவியத் தலைவன் கட்டி எழுப்பிய இயக்கத்தை கரையான்கள் அரிப்பது கனவிலும் இயலாது. மன்னாதி மன்னனும், மகராசி அம்மாவும் கண்ணாகக் காத்திட்ட கழகத்தை, 1½ கோடி தொண்டர்கள் கூட்டம் உயிராகப் போற்றி நிற்கையில், மனக் கணக்கெல்லாம் மண்குடமாக உடைந்து, மண்ணோடு மண்ணாகும் என்பதுடன், வீர வரலாற்றின் வெற்றித் தாய் அம்மா அவர்கள், எனக்குப் பின்னாலும் இந்த இயக்கம் நூறு ஆண்டு காலம் வாழும், வளர்ந்தோங்கும் எனக் கூறியதற்கிணங்க, (மேசையைத் தட்டும் ஒலி) இம்மாமன்றத்திலே 9 நவரத்தினங்களாகத் திகழும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நூற்றாண்டு மட்டுமல்ல, இனிவரும் நூற்றாண்டுகளிலும் என் அன்னையின் ஆட்சியே மலரும், அதுவே என்றும் தொடரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிரில் நிற்க எதிரிகள் இல்லா சமர்களத்து சிங்கம்போல், இந்த

மாமன்றத்தில் கம்பீரமாய் நின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இலட்சிய தீபத்தைக் கையில் ஏந்தி, அனைத்துத் துறைகளிலும் ஒருங்கிணைந்து வளர்ச்சி பெற்று, தன்னிகரில்லா மாநிலமாகத் திகழ்ந்திடும் வகையில், ஆட்சிச் சக்கரத்தை அமைதி, வளம், வளர்ச்சி என்ற பாதையில் சுழலச் செய்துவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், மாண்புமிகு தமிழக துணை முதல்வர் அவர்கள் ஆளுமைத் திறன் ஓங்கிய அமைச்சர் பெருமக்கள் அனைவரையும் மக்கள் மனதாரப் பாராட்டுகிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாகப் பதிவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சாரத்தை வைத்து அரசியல் பிழைப்பு நடத்த முயற்சித்த எதிரிகளின் முகத்தில், தமிழகத்தை மின் மிகை மாநிலமாக மாற்றிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆளுமைத் திறனையும், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களின் செயல்திறனையும் தமிழகமே வியந்து பாராட்டுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மரத்தடி வகுப்புகளை மடிக்கணினி வகுப்புகளாக்கி, காலுக்கு மிதியடி, தூரம் கடக்க மிதிவண்டி, தேகம் மறைக்க சீருடை என தமிழகம் கல்வித் துறையில் பிற மாநிலங்களுக்கு முன்னோடி மாநிலமாகத் திகழ வேண்டுமென்று புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீர்மிகு சிந்தனைகளுக்கு செயல் வடிவம் கொடுக்கும் வகையில் முத்தான திட்டங்கள் பல செயல்படுத்தி, மாபெரும் கல்விப் புரட்சியை நிகழ்த்திவரும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் என் பணிவான நன்றிகளையும், வணக்கத்தையும், வாழ்த்துக்களையும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும் இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்"

என்ற பாரதியாரின் கனவினை நனவாக்கிட, 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்ற மணிமேகலையின் வரிகளுக்கு

உதாரணமாய் நின்ற மானுட தெய்வம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயல்படுத்திய அன்னதானத் திட்டம், கழக ஆட்சியின் உன்னதச் சிறப்பாய், பக்தர்களின் மனமெல்லாம் பால் வார்த்தது, பாராட்டப்பெற்றது. இத்திட்டம் 2006–2011 ஆம் ஆண்டுகளில், தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இரண்டு கோயில்களுக்கு மட்டுமே விரிவுபடுத்தப்பட்டது. இந்த அற்புதத் திட்டத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு, 2011–2012 ஆம் ஆண்டு 106 திருக்கோயில்களுக்கும், 2012–2013 ஆம் ஆண்டு 50 திருக்கோயில்களுக்கும், 2013–2014 ஆம் ஆண்டு 100 திருக்கோயில்களுக்கும், 2014–2015 ஆம் ஆண்டு 106 திருக்கோயில்களுக்கும், 2016–2017 ஆம் ஆண்டு 30 திருக்கோயில்களுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. தெய்வத் தாயின் பாசத் தடம் பற்றி ஆட்சிச் சக்கரத்தைச் சுழலச் செய்துவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் மற்றும் துணை முதல்வர் அண்ணன் ஆகியோர் தலைமையிலான தமிழக அரசு மக்களுக்கான அரசு என்பதற்கு இதுவே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்ட திட்டமாகும்.

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அருளாசி பெற்ற கழக அரசு, வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் மனம் வாடிய வள்ளலாரின் வாரிசு இதய தெய்வம் அம்மா அவர்களின், யானைகள் சிறப்பு நல்வாழ்வு முகாம்களை சிறப்புற நடத்திவருவது சிந்தை குளிரும் திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் 2003 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரை திருக்கோயில்கள் மற்றும் தனியாரால் பேணப்பட்ட யானைகளுக்கு சிறப்பு நல்வாழ்வு முகாம் குளிர்ந்த இயற்கைச் சூழ்நிலையில் உள்ள முதுமலையில் நடத்தப்பட்டது. இத்திட்டம் 2006 ஆம் ஆண்டு முதல் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கைவிடப்பட்டது. இச்சிறப்பான திட்டம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 2011–2012 ஆம் நிதியாண்டில் 14–12–2011 அன்று முதல் 48 நாட்களுக்கு சிறப்பாக நடத்தப்பட்டது. இத்திட்டம் தற்போதுவரை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களால் மிகவும் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு 2017–2018 ஆம் ஆண்டு அரசு மானியமாக ரூ.1.50 கோடி வழங்கப்பட்டு, சிறப்பாக நடைபெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ‘அச்சம் என்பது மடமையடா, அஞ்சாமை திராவிடர் உடமையடா’

என்ற பாட்டுக்குப் பொருளாய், கொள்கைக்குக் கூர் வாளாய், இலட்சியத்திற்கு போர் வாளாய் நின்று, தீய சக்திகளைத் தலையெடுக்காமல் அடக்கி, வரலாற்றைத் தன்வசமாக்கிய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 'திருக்கோயில் பாதுகாப்புப் படை' என்ற தனிப் பிரிவை ஏற்படுத்தினார்கள். இதில், 1,000 இரண்டாம் நிலைக் காவலர்களையும், 3,000 முன்னாள் படை வீரர்களையும் நியமித்தார்கள். கடந்த 2006–2011 ஆம் ஆண்டுகளில் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் திருக்கோயில் பாதுகாப்பில் போதிய ஆர்வம் காட்டாததாலும், போதிய அக்கறை இல்லாததாலும் இந்தப் பிரிவில் எண்ணிக்கைகள் குறைந்துவந்தன. அதனைத் தடுக்கும் வகையில், பணியாளர்களுக்கு 9–1–2012 முதல் தொகுப்பூதியத்தை ரூ.1,500/–லிருந்து ரூ.5,000/– ஆக மாண்புமிகு அம்மாவின் அரசு உயர்த்தியது.

பிற்பகல் 6–10

7–வது ஊதியக் குழு பரிந்துரையின்படி, அரசுப் பணியாளர்களுக்கு இணையாக கோயில் திருப்பணியாளர்களுக்கும் ஊதிய உயர்வு மாண்புமிகு அம்மாவின் அரசின்கீழ் இயங்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களால் வழங்கப்பட்டது. இத்திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள், பட்டாச்சாரியர்கள் மற்றும் ஓதுவார்கள் ஆகியோர் தங்கள் பணிகளைச் சிறப்பாக செய்திட 1991 ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் புத்தொளிப் பயிற்சித் திட்டம் தொடங்கப்பட்டது. ஆனால், 2006 முதல் 2011 ஆம் ஆண்டு வரை தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மேற்கண்ட பயிற்சி முற்றிலும் நிறுத்தப்பட்டது. எனவே, மேற்காணும் பணியாளர்களின் முக்கியத்துவத்தை அறிந்து, மாண்புமிகு அம்மாவின் அரசு, மீண்டும் அர்ச்சகர்கள், பட்டாச்சாரியர்கள் மற்றும் ஓதுவார்கள் பயன்பெறும் வகையில், ஆறு வார காலம் மீண்டும் புத்தொளிப் பயிற்சித் திட்டத்தைத் தொடங்கியது. இதன்மூலம் 2011–2016 ஆம் ஆண்டில் 8,436 ஊழியர்கள் பயனடைந்தார்கள். 2016–2017 ஆம் ஆண்டில் 1,524 ஊழியர்களும், 2017–2018 ஆம் ஆண்டில் 2,090 பணியாளர்களும் பயனடைந்தனர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோடி மலர்கள் கூடி உருவான முகத்திற்குச் சொந்தக்காரர் பொன்மனச் செம்மல், சரித்திர நாயகன் பாரத ரத்னா புரட்சித் தலைவர் அவர்களால் 1981 ஆம் ஆண்டு இந்து சமயத்தைச்

சார்ந்த ஏழையெளிய மக்களுக்கு நிதி வசதி மிக்க திருக்கோயில் உபரி நிதியிலிருந்து திருமணம் செய்து வைக்க திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இதில் ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பயனடைந்தனர். திருக்கோயில் உபரி நிதியிலிருந்து தொடங்கி வைக்கப்பட்ட இத்திட்டம் ஏழையெளியோர்களுக்கான திருமணத் திட்டம் ஆகும். இடையில் சில காலம் சுயநலத்தின் சுவடு கொண்டவர்களால், சூனியமாக்கப்பட்ட வேளையில் சுடரொளி பரப்பி மீண்டும் ஏழையெளிய மக்களின் வாழ்வில் இருள் விலகி, இதயம் இனிக்கச் செய்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையேற்று, 2002 ஆம் ஆண்டு 1,008 இணைகளுக்கும், 2003 ஆம் ஆண்டு 1,050 இணைகளுக்கும் திருவேற்காட்டில் திருமணங்களை நடத்தி வைத்தார்கள். 2006–2011 ஆம் ஆண்டில் தி.மு.க. ஆட்சியில் இத்திட்டம் முற்றிலும் முடக்கப்பட்டது. இத்திட்டம் முழுமையாகக் கைவிடப்பட்ட நிலையில், மீண்டும் இந்த உயரிய திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, 2012–2013 ஆம் ஆண்டில் ஓர் இணைக்கு 4 கிராம் தங்கம் திருமாங்கல்யம் மற்றும் ரூ.10 ஆயிரம் செலவில் சீர்வரிசை பொருட்கள் என்ற விகிதத்தில் 1,006 இணைகளுக்கு திருமணம் 18–6–2012 அன்று திருவேற்காடு திருக்கோயில் அருகில் ரூ.1.51 கோடி செலவில் சிறப்பாக நடைபெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுற்றுலா ஒரு நாட்டின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியில் இன்றியமையாத பங்கினை அளிக்கிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 2017–2018 ஆம் ஆண்டில் இணையதள முன்பதிவுமூலம் ஈட்டிய வருவாய் ரூ.12.80 கோடி ஆகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி, நீங்கள் நன்றி சொல்லி உரையை முடியுங்கள். மற்றதையெல்லாம் பதிவு செய்துகொள்ளலாம்.

திருமதி பொன். சரஸ்வதி: எனது தொகுதி சார்ந்த கோரிக்கைகளில் இரண்டினை மட்டும் பதிவு செய்துகொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இரண்டு தொகுதி கோரிக்கைகளை மட்டும் பதிவு செய்துகொள்ளலாம்.

திருமதி பொன். சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மல்லசமுத்திரம் பேரூராட்சியில் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார மையம் செயல்பட்டு வருகிறது. மேலும், நாமக்கல் மாவட்டத்தில் நிலை 2 மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தைகள் நிலையமாகவும் இருந்து வருகிறது. இங்கு தினமும் சுமார் 400 புறநோயாளிகள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மாதம் சுமார் 30 அறுவை சிகிச்சையுடன்கூடிய பிரசவங்கள் நடைபெற்று வருகின்றன. மேற்படி மருத்துவமனை 1969–ல் கட்டிய பழைய கட்டடத்திலேயே செயல்பட்டு வருகிறது. ஆதலால், புறநோயாளிகள் பிரிவிற்குப் புதிய கட்டடமும், கூடுதலாக மகப்பேறு கட்டடமும் அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டுமாய் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாமக்கல் சாலையில் இருந்து ஈரோடு சாலைக்கு புறவழிச் சாலை பணியை விரைந்து தொடங்க ஆவன செய்ய வேண்டுமாய் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மல்லசமுத்திரம் ஒன்றியம், வையப்ப மலையில் 550 அடி உயரம் கொண்ட மலைமீது அருள்மிகு சுப்ரமணியர் திருக்கோயில் அமைந்துள்ளது. மேற்படி கோயிலுக்கு பக்தர்கள் செல்ல 500 படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. பக்தர்களின் நெஞ்சமெல்லாம் பால்வார்க்கும் பாசத் தலைவி இதய தெய்வம் அம்மாவின் அரசின் உதவியுடன் ராஜகோபுரப் பணி நடைபெற்று சிறப்படைந்துள்ளது. மேற்கண்ட கோயிலில் வருடந்தோறும் நடைபெறும் பங்குனி உத்திர விழாவில் இலட்சக்கணக்கான பக்தர்கள் கலந்துகொள்வார்கள். மேலும், மாதா மாதம் சிறப்பு நாட்களிலும், பூஜை காலங்களிலும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொள்கிறார்கள். இதனால் பக்தர்கள் சிரமம் பல தாங்கித்தான், மலையேறி இறைவனை தரிசிக்க முடிகிறது. இந்த நிலை மாற வையப்பமலை சுப்ரமணியர் மலைக் கோயிலுக்கு பக்தர்கள் வாகனம்மூலம் எளிதில் சென்றுவர

மலைப்பாதை அமைத்துத் தர வேண்டுமாய் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், துணை முதலமைச்சர் அவர்களையும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி, நீங்கள் நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திருமதி பொன். சரஸ்வதி: மீதமுள்ள கோரிக்கைகளையெல்லாம் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு வாரிசு இல்லையென்று சொன்னபோது, அவரது வாரிசாக இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வித்திட்டார். தற்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு வாரிசே இல்லையென்று சொன்னார்களே, இனி இந்த மாபெரும் கழகத்தை யார் ஆளப்போகிறார்களோ என்று கூவினார்களே, அதற்கு விடையாக தெய்வத்தாய் மாண்புமிகு அம்மா அவர்கள் தன் தொண்டர்களையே தன் வாரிசாக நினைத்து நம்மையெல்லாம் நல்வழியில் நடத்தி வருகிறார் எனப் பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக இம்மாமன்றத்தில் பதிவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ** தலைவிதியை தடைகோடி வந்தாலும் தகர்த்து வீசி, தளராத உறுதியோடு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எனும் ஒளி தீபம் காத்திடும் விடையான அரசியலை வியக்க வைக்கும் விஞ்ஞான அரசியலின் வித்தகர்களான நம் தர்ம தேவதை புரட்சித் தலைவி அம்மாவின் பேரருளால் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதல்வர் ஆகியோரின் தலைமையின்கீழ் எண்ணற்ற திட்டங்கள்மூலம் பட்டை தீட்டப்பட்ட வைரமாய் ஜொலிக்கும். அம்மாவின் போர்ப்படைதான் என்றும் ஜெயிக்கும், ஜெயிக்கும் நிச்சயம் என்று கூறி அமர்கிறேன். நன்றி. (குறுக்கீடுகள்)

பிற்பகல் 6–15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி அவர்கள். (குறுக்கீடுகள்) அவர் ஒன்றும் தவறாகப் பேசவில்லை.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திருமதி எஸ். தேன்மொழி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அலை மகளின் அன்புருவாய், கலைமகளின் கருணை வடிவாய், மலைமகளின் மறுபிறவியாய் வாழ்ந்திட்ட எங்கள் இதய தெய்வமே, வாகையின் வசிப்பிடமாய், வல்லமையின் பிறப்பிடமாய் வரலாறும் வாழ்த்திட வாழ்ந்திட்ட எங்கள் வசந்தத்தின் இருப்பிடமே! (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

திருமதி எஸ். தேன்மொழி: அன்னைத் தமிழ் பூமிக்கு ஆண்டவன் அருளிய எங்களின் அன்னலட்சுமியே, புகழ் மணக்கும் பூமிக்கு பொன்மனத் தாயாகி வந்த எங்கள் பொக்கிஷமே, எங்கள் ஊனில், உயிரில், உணர்வில் கலந்திட்ட எங்களின் குடும்ப தெய்வமே, குல தெய்வமே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களே! நீங்கள் துயில்கொள்ளும் திசை நோக்கி என் கண்ணீர் மலர்களைக் காணிக்கையாக்கி வணங்குகிறேன் தாயே! (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வகுத்துத் தந்த பாதையில் கொஞ்சமும் அடி பிறழாமல் ஆட்சியையும், கட்சியையும் நடத்திச் செல்கின்ற ஆற்றலாளர். . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: என்ன சொன்னார்கள்? (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள், அமைதியாக அமருங்கள். (குறுக்கீடுகள்) அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) அதே வார்த்தைகள்தான். நானும் சொன்னால் மீண்டும் பதிவாகும். நீக்கப்படும். (குறுக்கீடுகள்) மற்றவர்களையும் உட்காரச் சொல்லுங்கள். நீங்கள் சொன்னால் கேட்கிறார்களா என்று பார்க்கலாம், உட்காருங்கள். அவரும் சொல்கிறார், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள். என்னவென்று சொல்லுங்கள்.

***திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புவது, பண்பாட்டினுடைய அடையாளமாகத் திகழ்வது கலை என்பது அனைவரும் அறிந்தது. அந்தக் கலையை வளர்ப்பதற்கு இன்றைக்கு. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்தத் துறை சம்பந்தப்பட்டதா? (குறுக்கீடு) என்ன சொல்லுங்கள்?

திரு. எ.வ. வேலு: அந்தக் கலையை வளர்க்கும் நாடகக் கலைஞர்கள், தெருக்கூத்துக் கலைஞர்கள் பேருந்தில் பயணம் செய்கிறபோது, அவர்கள் எடுத்துச் செல்கிற மத்தளம், ஹார்மோனியப் பெட்டிகள், கலைப் பொருட்கள், முடி உள்ளிட்ட அலங்காரப் பொருட்களெல்லாம் பெரிதாக இருக்கின்றன என்கிற காரணத்தினால், பேருந்தில் அவர்களை ஏற்றுவதற்கே மறுக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் பேச்சை முடியுங்கள்.

திரு. எ.வ. வேலு: எனவே, கலை, பண்பாட்டினை வளர்க்கிற தெருக்கூத்துக் கலைஞர்கள், நாடகக் கலைஞர்களுக்கு இலவச பேருந்து பயண அட்டை வழங்க வேண்டும் என்பது மட்டுமல்ல, அவர்களுக்கு முன்னுரிமை அளித்து, அரசுப் பேருந்துகளில் அவர்களை அனுமதிக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சரி. மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போது எந்த விதியின்கீழ் பேசுகிறார்? (குறுக்கீடு) **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி தேன்மொழி, பேசுங்கள். (குறுக்கீடுகள்) எதற்கு எழுந்து நிற்கிறார்கள்? (குறுக்கீடுகள்) அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும், அவ்வளவுதானே! நீக்கப்படுகிறது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உணர்ச்சிவசப்படக் கூடாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) கோபப்படக்கூடாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர், பேசுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திருமதி எஸ். தேன்மொழி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனைத்துத் தரப்பு மக்களின் நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் ஒருசேர பெற்ற சாதனையாளர், ஆட்சி இப்போது போகும், அப்போது போகும் என்று ஆரூடம் கணித்தவர்களை எல்லாம் தனது சாதுர்யத்தால் வீழ்த்திவிட்டு, அம்மாவின் நல்லரசை வெற்றிப்பாதையில் அழைத்துச் செல்லும் மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சிக்கும், கட்சிக்கும் துணை நிற்கும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும், எங்கள் மண்ணின் மைந்தன் மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும் பணிந்து வணங்குகிறேன்.

இரண்டாவது முறையாக என்னை இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பேரவைக்குத் தேர்ந்தெடுத்து அனுப்பிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுக்கும், முன்னாள் அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாவட்டச் செயலாளர்களுக்கும், ஒன்றியக் கழகச் செயலாளர்களுக்கும், கழக நிருவாகிகளுக்கும், நிலக்கோட்டை தொகுதி மக்களுக்கும் என் வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 6—20

சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை), இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் என் கருத்துகளைக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஒரு முறை பேசும்போது, தமிழக அரசு மக்கள் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு அதற்குண்டான திட்டங்களைத் தீட்டி மக்கள் வாழ்வு வளம் பெறவும், அவர்கள் நலன் பேணிப் பாதுகாக்கவும், பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகின்றது. அதன் காரணமாக தாம் முதலமைச்சராகப் பதவி ஏற்றுக்கொண்ட அன்றே மக்கள் பயன்பெறத்தக்க திட்டங்களில் கையெழுத்திட்டேன் என்று குறிப்பிட்டிருந்தார்கள். அப்படி

அம்மா அவர்கள் கையெழுத்திட்டதிலேயே முதல் கையெழுத்தே சிறு, குறு விவசாயிகளின் துயர் போக்குவதற்காக அவர்கள் கூட்டுறவு வங்கிகளிடமிருந்து பெற்ற கடன்களைத் தள்ளுபடி செய்ததுதான்.

அடுத்ததாக, 100 யூனிட் வரை மின்சாரக் கட்டணத்தை இரத்து செய்தது. அதைத் தொடர்ந்து ஏழையெளிய பட்டதாரி பெண்களுக்கு திருமண உதவித் தொகையாக 50 ஆயிரம் ரூபாய் மற்றும் படித்த பெண்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் ரொக்கத்துடன் தாலிக்கு 4 கிராம் தங்கம் வழங்கி வந்ததை 8 கிராம் தங்கமாக உயர்த்தியது, கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்பட்ட கட்டணமில்லா மின்சாரத்தை 700 யூனிட் வரை உயர்த்தியது ஆகிய மக்கள் நலன் சார்ந்த கோப்புகளில் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் கையெழுத்திட்டு, இது மக்களுக்கான அரசு என்பதை நிரூபித்தார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் நடைபோடும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மக்கள் நலனுக்காக பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறார். குறிப்பாக தமிழகத்திலுள்ள சுமார் 1 கோடியே 99 இலட்சம் குடும்பங்களுக்கு பொங்கல் பண்டிகையின்போது பொங்கல் பரிசுப் பெட்டகத்துடன் 1,000 ரூபாய் ரொக்கத் தொகை வழங்கி மக்களின் மனதில் இடம் பிடித்தார். அதேபோல் தமிழகம் முழுவதும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள 60 இலட்சம் குடும்பங்களுக்கு சிறப்பு நிதியாக தலா இரண்டு இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்து, அது விரைவில் செயல்பாட்டிற்கு வர இருக்கிறது. இதுவும் ஏழை எளிய மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கிறது.

அதேபோல, சுற்றுச்சூழலுக்குக் கேடு விளைவிக்கும் ஒரு முறை பயன்படுத்தித் தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்களுக்குத் தடை விதித்து அரியதொரு சாதனையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிகழ்த்தியிருக்கிறார்கள்.

எந்தவொரு அரசு மக்கள் பக்கம் இருக்கிறதோ, அந்த அரசின் பக்கம் மக்களும் இருப்பார்கள் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு விழாவில் பேசும்போது குறிப்பிட்டார்கள். அதன்படி மக்களின் நலன் காக்கும் இந்த அரசின் பக்கம் மக்கள் உறுதியோடு நிற்கிறார்கள் என்பதை நாம் அனைவரும் அறிவோம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை சார்பாக பல ஆயிரக்கணக்கான திருக்கோயில்கள் சீரமைக்கப்பட்டு, குடமுழுக்கு நடைபெற்று வருவதை மக்கள் அனைவரும் அறிவார்கள். அந்த வகையில் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் கடந்த 2015 ஆம் ஆண்டு வரையிலும் 8,500 திருக்கோயில்களில் திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்தப்பட்டது. மேலும், தற்போது கூடுதலாக அம்மாவின் அரசு சுமார் 3,000 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தி இருக்கிறது.

தமிழகம் முழுவதும் உள்ள சிறிய கோயில்களில்கூட ஒரு கால பூஜை நடைபெற வேண்டும் என்ற எண்ணத்தோடு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் 12,504 திருக்கோயில்களுக்கு சுமார் 125 கோடி ரூபாய் செலவில் ஒரு கால பூஜை நடத்த ஏற்பாடு செய்தார்கள்.

திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்கள் மட்டுமல்ல, அருகிலுள்ள ஏழை எளிய மக்களும் பசியாற வேண்டும் என்று அன்னதானத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டம் ஆண்டுக்காண்டு விரிவுபடுத்தப்பட்டு இன்று சுமார் 724 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் நடைபெற்று வருகிறது.

மாநிலம் முழுவதும் பல்வேறு பகுதிகளில் உள்ள 694 திருக்கோயில்களுக்குச் சொந்தமான சுமார் 4 ஆயிரத்து 186 ஏக்கர் நிலங்கள் தனியார் ஆக்கிரமிப்பில் இருந்ததை மீட்டு, மீண்டும் அந்தத் திருக்கோயில்கள் பெயரிலேயே பட்டா மாற்றம் செய்து மிகப் பெரிய சாதனை படைத்தவர் நம் அம்மா அவர்கள். மாண்புமிகு அம்மாவின் ஆட்சியில் 143 திருத்தேர்கள் சீரமைக்கப்பட்டன. 600–க்கும் மேற்பட்ட கோயில் திருக்குளங்கள் சீரமைக்கப்பட்டுள்ளன.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் குடியிருப்புப் பகுதிகளில் அமைந்துள்ள சிறிய திருக்கோயில்களில் திருப்பணிக்காக வழங்கப்பட்ட நிதியுதவியை 25 ஆயிரம் ரூபாயிலிருந்து மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கினார்கள். இதன்மூலம் கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் இதுவரையிலும் 6,159 திருக்கோயில்களில் திருப்பணிக்காக 43 கோடியே 39 இலட்சம் ரூபாயை மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு வழங்கியிருக்கிறது. இந்தத் திட்டம்

மற்றும் கிராமப்புற கோயில்களுக்கான நிதியுதவித் திட்டம் மற்றும் ஒரு கால பூஜைத் திட்டம் ஆகிய திட்டங்களையெல்லாம் அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருவது பாராட்டத்தக்கது.

இதுபோன்ற பல்வேறு நலப் பணிகள் நடைபெறுவதற்காக நடப்பு நிதியாண்டில் இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறைக்கு 281 கோடியே 86 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

பிற்பகல் 6–25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுற்றுலா–கலை மற்றும் பண்பாட்டுத் துறை ஆண்டுக்கு ஆண்டு பல்வேறு புதிய திட்டங்களை உருவாக்கி முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருப்பதை நாம் அனைவரும் அறிவோம். இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் தமிழகம் முதலிடத்திலும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையில் தமிழகம் இரண்டாம் இடத்திலும் இருந்து வருகிறது. சுமார் 450 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆசிய வளர்ச்சி வங்கிக் கடனுதவியுடன் தமிழ்நாட்டில் சுற்றுலாத் தலங்களில் உள்கட்டமைப்பினை மேம்படுத்தும் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. மாநிலத்திலுள்ள பல்வேறு சுற்றுலாத் தலங்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்தது நம்முடைய அம்மாவின் அரசு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோயில்களுக்குச் சென்று வருவதையும், இறைவழிபாட்டில் ஈடுபட்டு வருவதையும் மனதிற்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய ஆன்மிக பயிற்சியாக நமது முன்னோர்கள் கருதி வந்தார்கள் என்றும், ஆலயங்கள் சமுதாயத்தின் பொது சொத்துக்களாகவும் சமூக, பொருளாதார, வேறுபாடுகளால் பிரிவுபடாமல் அனைவரும் சமம் என்ற உணர்வை வளர்க்கும் புனிதத் தலங்களாகவும் ஆலயங்கள் திகழ்ந்து வருகின்றன என்றும், நாங்கள் நித்தம் நித்தம் வணங்கும் எங்களின் குல தெய்வம், குடும்ப தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் தெரிவித்திருந்தார்கள். அத்தகைய சிறப்பு வாய்ந்த துறையின்கீழ் பேச வாய்ப்பு கிடைத்ததற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

என்னுடைய நிலக்கோட்டை தொகுதி மக்களின் கோரிக்கைகள் சிலவற்றை மாண்புமிகு முதல்வர் அவர்கள் மற்றும் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

திண்டுக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் அளித்த வாக்குறுதியின்படி நிலக்கோட்டை ஒன்றியம், அனைப்பட்டி வீர ஆஞ்சநேயர் கோயில் பகுதியில் வைகை ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுவதற்காக 12 கோடியே 30 இலட்சம் ரூபாயை ஒதுக்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுக்கும், என் சார்பிலும், என் தொகுதி மக்களின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இத்திட்டத்தை நிறைவேற்றினால் நிலக்கோட்டை ஒன்றியத்திலுள்ள மேட்டுப்பட்டி, பிள்ளையார் நத்தம், கோட்டூர், முசுவனூத்து, சித்தர் நத்தம், சிலுக்குவார்ப்பட்டி, குல்லலக்குண்டு, பள்ளப்பட்டி, விளாம்பட்டி, ராமராஜபுரம், மட்டப்பாறை, நிலக்கோட்டை பேரூராட்சி மற்றும் அம்மயநாயக்கனூர் பேரூராட்சி உள்ளிட்ட பல்வேறு பகுதி மக்களுக்கு குடிநீர் தங்குதடையின்றி கிடைக்கும். இதற்கு வழிவகை செய்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் மீண்டும் ஒருமுறை நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிலக்கோட்டை தொகுதியில் விடுபட்ட கிராமங்கள் அனைத்திற்கும் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்க வேண்டுமாய் மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும் கேட்டுக்கொள்கிறேன். நிலக்கோட்டை பேரூராட்சியில் அமைந்துள்ள பழமை வாய்ந்த பேருந்து நிலையத்தை நவீன பேருந்து நிலையமாக மாற்றித் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நிலக்கோட்டை தொகுதியில் ஆண்கள் கலைக் கல்லூரி ஒன்றையும், விருவீடு பகுதியில் முருங்கைக்காய் பவுடர் தொழிற்சாலை ஒன்றையும் அமைக்க வேண்டுமென்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நிலக்கோட்டை தொகுதிக்குட்பட்ட பட்டிவீரன்பட்டி பகுதியில் தேங்காய் அதிகம் விளைவதால் அங்கு தேங்காய் நார் மற்றும் பதநீர் பதப்படுத்தும் தொழிற்சாலையை அமைத்திட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பெரியார் வைகை பிரதானக் கால்வாயில் குல்லிசெட்டிப்பட்டி பகுதியில் உள்ள 11 ஆம் மடை கால்வாய் மதகுகளை மாற்றி அமைத்தும், வரத்து வாய்க்கால்களில் சிமெண்ட் தளம் அமைத்தும் கொடுத்தால் இந்தப் பகுதியிலுள்ள ஏராளமான விவசாயிகள் பலனடைவதுடன் நிலத்தடி நீர் மட்டமும் உயரும், குடிநீர்ப் பிரச்சினையும் தீர்க்கப்படும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிமெண்ட் கால்வாய் அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், மற்ற தொகுதிக் கோரிக்கைகளை எல்லாம் எழுதிக் கொடுங்கள். அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளலாம்.

திருமதி எஸ். தேன்மொழி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டே இரண்டு கோரிக்கைகள்தான், சொல்லிவிடுகிறேன். வைகை நீர்ப்பாசன கால்வாயிலிருந்து விராலிப்பட்டி வழியாக பழைய வத்தலகுண்டுக்குச் செல்லும் பழைய கண்மாய்க்கு சிறுபாசன வாய்க்கால் அமைத்துத் தரும்படியும், இதேபோல, விராலிப்பட்டி ஊராட்சி வழியாக வைகை பாசனக் கால்வாயிலிருந்து சிறுபாசனக் கால்வாய் ஒன்றையும் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், மற்ற தொகுதிக் கோரிக்கைகளை எல்லாம் எழுதிக் கொடுத்து விடுங்கள். அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளலாம்.

திருமதி எஸ். தேன்மொழி: இரண்டே இரண்டு கோரிக்கைகள்தான். (குறுக்கீடு) சிவஞானபுரம், ஆலங்குளம் கண்மாயிலிருந்து தனிக் கால்வாய் அமைத்து சிறுகுளம் கண்மாய் உபரி நீர் வெளியேறும் இடம்வரை புதிய கால்வாய் அமைத்தால் சிறுகுளம் மற்றும் ஆலங்குளம் உள்ளிட்ட அனைத்து கண்மாய்களும் நிரம்புவதற்கும், மேலும், இந்த வரத்துக் கால்வாய் அனைத்தையும் சிமெண்ட் கால்வாய்களாக அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொண்டு, வர இருக்கின்ற சட்டமன்றத் தேர்தலில் இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசுதான் மீண்டும் ஆட்சியை அமைக்கும்; இது உறுதி, உறுதி என்று சொல்லி, எனக்கு

வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 6–30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சண்முகையா அவர்கள். திரு. சண்முகையா 15 நிமிடங்களில் பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) அதனால்தான் முதலிலே சொல்லிவிட்டேன்.

***திரு. செ. சண்முகையா:** மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராம் முத்தமிழ் அறிஞர், டாக்டர் கலைஞர் அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வருங்கால தமிழ்ச் சமூகம் வாசலில் வண்ணப் பூக்களைத் தூவி வரவேற்கக் காத்திருக்கும் காலத்தின் அருங்கொடை எங்கள் கழகத் தலைவர் மாண்புமிகு தளபதியார் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, அயிரவன்பட்டி கிராமத்தில் பிறந்த என்னை ஊராட்சிச் செயலாளராக்கி, ஒட்டப்பிடாரம் ஒன்றிய கழகச் செயலாளராக்கி, கழகத்தின் சார்பில் ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியின் இடைத்தேர்தலில் போட்டியிட வாய்ப்பளித்து என்னுடைய வெற்றிக்காக இரவு பகல் பாராது தொகுதி மக்களையெல்லாம் நேரிலே சந்தித்து வாக்குகளைச் சேகரித்த கழகத் தலைவர் தளபதியார் அவர்களுக்கும், என்னுடைய வெற்றிக்காக உழைத்திட்ட இளைஞர்களின் எதிர்காலம், கழக இளைஞர் அணிச் செயலாளர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) கழக மகளிரணி செயலாளரும், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான திருமதி கனிமொழி அவர்களுக்கும், தேர்தல் பொறுப்பாளரும், திருச்சி மாவட்டச் செயலாளரும், முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற உறுப்பினருமான அண்ணாச்சி திரு. கே.என். நேரு அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) தூத்துக்குடி தெற்கு மாவட்ட பொறுப்பாளரும், தொண்டர்களின் பாதுகாவலரும், நலத் திட்ட நாயகரும்,

திருச்செந்தூர் சட்டமன்ற உறுப்பினருமான அண்ணாச்சி திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்களுக்கும், கழகத்தினுடைய கொறடா அண்ணாச்சி திரு. அர. சக்கரபாணி அவர்களுக்கும், என்னுடைய வெற்றிக்காக உழைத்த மாவட்டச் செயலாளர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றியச் செயலாளர்கள், ஊராட்சி கழகச் செயலாளர்கள், கழக நிருவாகிகள் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சித் தலைவர்களுக்கும், நிர்வாகிகளுக்கும், எங்கள் கழகத் தலைவர் தளபதியார் அவர்களுக்கும், அவர்கள்மீது நம்பிக்கை வைத்து 30 ஆண்டுகளுக்குப் பிறகு ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் 19,657 வாக்குகள் வித்தியாசத்தில் உதயசூரியனை உதிக்க வைத்து என்னை வெற்றிபெற வைத்த ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி வாக்காள வள்ளல் பெருமக்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தற்போது நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் 37 தொகுதிகளிலும், சட்டமன்ற இடைத் தேர்தலில் 13 தொகுதிகளிலும் ஓய்வின்றி உழைத்து, வெற்றி வாகை சூடிய கழகத் தலைவர் தளபதியார் அவர்களை வணங்கி என் உரையைத் துவங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் தொகுதி, சுதந்திரத்திற்காக போராடிய கப்பலோட்டிய தமிழன், செக்கிழுத்தச் செம்மல் வ.உ. சிதம்பரனார், வீரபாண்டிய கட்டபொம்மன், வீரன் சுந்தரலிங்கம், வெள்ளையத்தேவன் வாழ்ந்த வீரம் மிகுந்த பூமியாகும். ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி மிகவும் வறட்சியான தொகுதியாகும். தொகுதியிலுள்ள மக்கள் விவசாயத்தை வாழ்வாதாரமாக நம்பி வாழ்ந்து வருகிறார்கள். இத்தொகுதி மக்களின் நலன் கருதி அவர்களின் தேவைகளை இந்த அவையிலே பதிவு செய்கிறேன்.

ஒட்டப்பிடாரம் தொகுதியில் 76 ஊராட்சிகளும், தூத்துக்குடி மாநகராட்சியில் 8 வார்டுகளும் அமைந்துள்ளன. கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் சீராகக் குடிதண்ணீர் கிடைக்கவில்லை. குறிப்பாக, மாப்பிள்ளையூரணி ஊராட்சி, தருவைக்குளம் ஊராட்சி, கீழ அரசடி ஊராட்சி, மாநகராட்சியின் 8 வார்டுகளுக்கும் 10 நாட்களுக்கு ஒருமுறைதான் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிதண்ணீர் கிடைக்கிறது. அது கடலோரப் பகுதி என்பதால்

மாப்பிள்ளையூரணி ஊராட்சியில் மேற்கு காமராஜர் நகரில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்கவும், சவேரியாபுரத்தில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்கவும், டேவிஸ்புரத்தில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்கவும் கேட்டுக்கொள்கிறேன். இத்திட்டத்தின்மூலம் தினசரி குடிதண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

ஒட்டப்பிடாரம் தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான கொம்பாடி ஓடையில் மழைநேரங்களில் தண்ணீர் அதிகமாக வந்து வீணாகக் கடலுக்குச் செல்கிறது. ஒட்டப்பிடாரம் ஒன்றியத்தின் மலைப்பட்டி கிராமத்தின் வடக்குப் பக்கம் உள்ள உப்பாற்று ஓடையின் குறுக்கே தடுப்பணை கட்டி, புதிய வரத்துக் கால்வாயை சில்லாங்குளம்வரை அமைத்துக் கொடுத்தால், கீழமங்கலம் ஊராட்சி, ஆரைக்குளம் ஊராட்சி, குலசேகரநல்லூர் ஊராட்சி, ஒட்டப்பிடாரம்–பெரியகுளம், புதியம்புத்தூர்–மலர்குளம் போன்ற குளங்கள் நிரம்பி, 40–க்கும் மேற்பட்ட குளங்கள் குடிதண்ணீர் வசதியும், பாசன வசதியும் பெற்று நிலத்தடி நீர்மட்டமும் உயரும். எனவே, இத்திட்டத்தினை பொதுப் பணித் துறையின்மூலம் நிறைவேற்றிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒட்டப்பிடாரம் தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான திருநெல்வேலி மாவட்டம், விக்கிரமசிங்கபுரம் கிராமத்தில் தாமிரபரணி ஆற்றில் கோடைமேல் அழகியான் 1–வது அணைக்கட்டோடு, புதிய வெள்ளநீர் வரத்துக் கால்வாயை இணைப்பதன்மூலமும், தாமிரபரணி ஆறு, கடானாநதி, சிற்றாறு, உப்போடை, கல்லாறு ஆகியவற்றை இணைப்பதன்மூலமும் திருநெல்வேலி தொகுதி, ஒட்டப்பிடாரம் தொகுதி, தூத்துக்குடி தொகுதி, விளாத்திகுளம் தொகுதிகளிலுள்ள அனைத்துக் குளங்களிலும் நீர்வரத்து அதிகரித்து குடிநீர் வசதி, பாசன வசதி பெறுவதோடு நிலத்தடி நீர்மட்டமும் உயர்வடையும். பொதுப் பணித் துறையின்மூலம் இத்திட்டத்தை நிறைவேற்றினால் 4 தொகுதிகளின் விவசாய மக்கள் பயன்பெறுவார்கள்; குடிநீர்ப் பிரச்சினையும் தீர்க்கப்படும் என்பதால் இத்திட்டத்தைச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 6–35

ஒட்டப்பிடாரம் தொகுதிக்குட்பட்ட தூத்துக்குடி ஒன்றியத்திலுள்ள குலையன்கரிசல் பொட்டைக்குளம், கோரம்பள்ளம்–பெரியகுளம் 1,300 ஏக்கர் பரப்பளவு கொண்டதாகும். சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு தூர்வாரப்பட்டதாகச் சொல்கின்றார்கள். அங்கே முட்செடிகளும், மேடுகளுமாக உள்ளன. அதனையும் பொதுப் பணித் துறையின்மூலம் தூர்வாரி குடிநீர் வசதி செய்து கொடுத்தால், கிட்டத்தட்ட 50 கிராமங்கள் பயனடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒட்டப்பிடாரம் ஒன்றியம், கீழக்கோட்டை ஊராட்சியில் சுமார் 1,500 ஏக்கர் நிலப்பரப்பில் பரக்கிரபாண்டிகுளம் உள்ளது. அதை பொதுப் பணித் துறைமூலம் தூர்வாரினால் அந்தப் பகுதியிலுள்ள மக்கள் பயனடைவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒட்டப்பிடாரம் ஒன்றியத்திற்குட்பட்ட ஒட்டநத்தம் கிராமத்தில் இயங்கிவரும் வட்டார அரசு ஆரம்ப சுகாதார மையம் மேம்படுத்தப்பட்ட சுகாதார மையமாக இருக்கிறது. அங்கு பகல் நேரத்தில் ஒரு மருத்துவர் மட்டுமே பணிபுரிந்து வருகிறார். இரவு நேரத்தில் மருத்துவர் இல்லை. குழந்தைகள் நல மருத்துவர், மகப்பேறு மருத்துவர் ஆகியோர் 24 மணி நேரமும் பணிபுரிய தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒட்டநத்தம் வட்டார சுகாதார மையத்தைச் சுற்றியுள்ள 30–க்கும் மேற்பட்ட கிராம மக்களின் அவசர சிகிச்சைக்குப் பயன்பெறும் வகையில் 108 ஆம்புலன்ஸ் சேவையை ஏற்படுத்தித் தரவும் கேட்டுக்கொள்கிறேன்.

ஒட்டப்பிடாரம் அரசு மருத்துவமனை வட்டார தலைமை மருத்துவமனையாகும். இம்மருத்துவமனையில் பகல் நேரத்தில் மட்டுமே மருத்துவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இரவு நேரங்களில் மருத்துவர்கள் இல்லை. 24 மணி நேரமும் பணிபுரிய மருத்துவர்களையும், போதுமான செவிலியர்களையும், ஆய்வக உதவியாளர்களையும் பணியமர்த்திட கேட்டுக்கொள்கிறேன்.

ஒட்டப்பிடாரம் தொகுதியில் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை அளிக்கும் வகையில் சுற்றுச்சூழலுக்குக் கேடு விளைவிக்காத தொழிற்சாலையினைப் புதியதாக ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒட்டப்பிடாரம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி உருவாக்கிட வலியுறுத்துகிறேன். ஒட்டப்பிடாரம் அரசு போக்குவரத்துக் கழக பணிமனை உருவாக்கிட கேட்டுக்கொள்கிறேன். ஒட்டப்பிடாரத்தில் குற்றவியல் நீதித் துறை நடுவர் நீதிமன்றம், மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஆகியவற்றை விரைவில் துவங்க வேண்டும் எனவும், கட்டடம் அமைத்துத் தர வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன். ஒட்டப்பிடாரத்தில் தீயணைப்பு நிலையத்திற்குக் கட்டடம் கட்டித் தர அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஒட்டப்பிடாரத்தில் இயங்கி வரும் சார்–பதிவாளர் அலுவலகம் பழுதடைந்துள்ளதால், புதிய கட்டடம் கட்டித் தர அரசை வலியுறுத்துகிறேன். ஒட்டப்பிடாரம் தொகுதியில் இயங்கி வரும் தொழிற்சாலையில் ஒட்டப்பிடாரம் தொகுதிக்குட்பட்ட படித்த இளைஞர்களையே பணியமர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒட்டப்பிடாரம் ஊராட்சி, மேலசுப்பிரமணியபுரம் கிராமத்தில் அரசு துவக்கப் பள்ளி 3–7–2017 அன்று அரசின் வாய்மொழி உத்தரவின்படி துவங்கப்பட்டு, மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இப்பள்ளிக்கு அரசு அங்கீகாரம் வழங்கவும், பள்ளிக் கட்டடம் கட்டித் தரவும் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு முழுவதும் 3 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் ஆதி திராவிடர் மாணவிகளுக்கு வழங்கப்படும் கல்வி ஊக்கத் தொகையைப் பெறுவதற்கு கிராம நிருவாக அலுவலர், வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் ஆகியோரிடமிருந்துதான் வருமானச் சான்றிதழும், சாதிச் சான்றிதழும் பெற வேண்டியுள்ளது. இதனால், மாணவியரின் பெற்றோர்கள் கல்வி ஊக்கத் தொகையைப் பெற மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆனால், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைமூலம் ஊக்கத் தொகை பெறும் மாணவிகளுக்கு கிராம நிருவாக அலுவலரிடம் மட்டுமே வருமானச் சான்றிதழும் சாதிச் சான்றிதழும் பெறப்படுகிறது. ஆகவே, அந்தத் துறையின் செயல்பாடு எவ்வாறு உள்ளதோ, அதேபோன்று ஆதி திராவிடர் மாணவிகளுக்கும், கிராம நிருவாக அலுவலரிடம் மட்டுமே வருமானச் சான்றிதழும், சாதிச் சான்றிதழும் பெற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒட்டப்பிடாரம் தொகுதிக்குட்பட்ட தூத்துக்குடி தாலுகாவில் சர்வே எண்கள் 306/1–லும், 306/3–லும் உள்ள அரசு நத்தம் புறம்போக்கு இடத்தில் குடியிருந்து வரும் கூட்டுடன்காடு ஊராட்சி, கீழக்கூட்டுடன்காடு அய்யனார் காலனியில் 25 வருடங்களாகக் குடியிருந்துவரும் 200 குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வலியுறுத்துகிறேன்.

தூத்துக்குடி தாலுகா, மாப்பிள்ளையூரணி ஊராட்சியில் அரசு நத்தம் புறம்போக்கு இடத்தில் குடியிருந்து வரும் 3,000–க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கக் கேட்டுக்கொள்கிறேன். ஒட்டப்பிடாரம் தாலுகா, தருவைக்குளம் ஊராட்சி, சமத்துவபுரத்தில் சர்வே எண் 302–ல் குடியிருந்து வரும் 200 குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க கேட்டுக்கொள்கிறேன். ஒட்டப்பிடாரம் தொகுதிக்குட்பட்ட வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள ஏழை, எளிய, முதியோர், விதவைகள், மாற்றுத் திறனாளிகள் உதவித் தொகை உரிய பயனாளிகளுக்கு சரியான வகையில் சென்று சேர்ந்திட வலியுறுத்துகிறேன்.

பிற்பகல் 6–40

எனது தொகுதிக்குட்பட்ட மாப்பிள்ளையூரணி ஊராட்சியில் மாநகராட்சியில் அமைந்துள்ள 1, 2, 5, 55, 56, 57, 58, 59 ஆகிய 8 வார்டுகளிலும் சரியான முறையில் சாலை வசதி இல்லை; குடிநீர் வசதியும் இல்லை. ஆனால், அந்த 8 வார்டுகளிலும் வீட்டுத் தீர்வை உயர்த்தப்பட்டுள்ளது. அந்த வீட்டுத் தீர்வையைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள கால்நடைகளில் 38 சதவிகிதம் ஒட்டப்பிடாரம் தொகுதியில்தான் வளர்க்கப்பட்டு வருகின்றன. இந்தத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் கால்நடை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் அமைக்க வலியுறுத்துகிறேன்.

ஒட்டப்பிடாரம் ஒன்றியம், தருவைக்குளம் ஊராட்சியில் மீனவர்கள் பயன்பெறும் வகையில் ஒரு தூண்டில் பாலம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மற்ற கோரிக்கைகளையெல்லாம் என்னிடம் கொடுங்கள். அவற்றைப் பதிவு செய்துகொள்ளலாம்.

திரு. செ. சண்முகையா: வழித் தடம் எண் 158, கோவில்பட்டி–திருநெல்வேலி பேருந்து தினசரி வரவில்லை. அதை தினசரி இயக்குவதற்கு அரசை வலியுறுத்துகிறேன். வழித் தடம் எண் 153, தூத்துக்குடி–திருநெல்வேலி (வழி) புளியம்பட்டி பேருந்து தினசரி வரவில்லை. இந்தப் பேருந்தை தினசரி இயக்குவதற்கு அரசை வலியுறுத்துகிறேன். கோவில்பட்டி முதல் கயத்தார், கடம்பூர்–புளியம்பட்டி–தெய்வசெயல்புரம் வழித்தடத்தில் தூத்துக்குடி வரை ஒரு புதிய பேருந்து வழித்தடத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கோவில்பட்டி–பசுவந்தனை–ஓசனூத்து–கைலாசபுரம்–உமரிக்கோட்டை–புதுக்கோட்டை–கூட்டாம்புளி வழித்தடத்தில் ஏரல் வழியாக ஒரு புதிய வழித்தடத்தை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி ஸ்டெர்லைட் நச்சு ஆலையைச் சுற்றி ஒட்டப்பிடாரம் தொகுதி மக்கள்தான் வாழ்ந்து வருகிறார்கள். ஒட்டப்பிடாரம் தொகுதி மக்களால்தான், குறிப்பாக குமரரெட்டியாபுரம் கிராமத்தில்தான் முதலாவதாக போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதற்குப் பிறகுதான் பல்வேறு பகுதிகளில் போராட்டம் நடைபெற்றது. **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இது உங்கள் கன்னிப் பேச்சு. நீங்கள் நன்றி சொல்லி உரையை முடியுங்கள். நீங்கள் உரையாற்றியது போதும். நீங்கள் பேசிய இந்தப் பேச்சு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. செ. சண்முகையா: இன்னும் 10 நிமிடங்கள் கொடுங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீக்கியாயிற்று. அதெல்லாம் ஆணையத்திற்கு அனுப்பியாகிவிட்டது. அது ஆணையத்தினுடைய விசாரணைக்கு உட்பட்ட பகுதி. (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நன்றாகப் பேசிக்கொண்டிருந்தீர்கள். பக்கத்தில் வேறு யாரோ உங்களை. . . (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. செ. சண்முகையா: இன்னும் 10 நிமிடங்கள் கொடுங்கள். (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, இல்லை. ஒரு நிமிடம் கூட இல்லை. நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. செ. சண்முகையா: நச்சு ஆலைக்கு எதிராக. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இதற்கு முன்னால் பேசிய ஆளுங்கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் எவ்வளவு நேரம் எடுத்துக் கொண்டார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். இன்னும் 3 அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். நீங்கள் நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) இன்னும் 2 நிமிடங்களில் உங்கள் உரையை முடிக்கிறீர்களா? (குறுக்கீடுகள்) சரி, நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர், கன்னிப் பேச்சாகப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர், 2 நிமிடங்களில் பேசி முடியுங்கள்.

திரு. செ. சண்முகையா: இன்னும் 10 நிமிடங்கள் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சரை நான் பதிலுரைக்கு அழைத்துவிடுவேன். நீங்கள் இப்படியெல்லாம் பேச முடியாது. இரண்டு நிமிடங்களில் நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நன்றாகத்தானே பேசிக்கொண்டிருந்தீர்கள். நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. செ. சண்முகையா: தமிழை ஆட்சி மொழியாக்க வேண்டும் என்பதிலே திராவிட இயக்கம் என்றும் முன்னிலையில் இருக்கிறது. இந்தியைத் திணிக்கக் கூடாது, தாய்மொழி தமிழில்தான் அனைத்தும் இருக்க வேண்டும் என்று போராடியது திராவிட இயக்கம். உலகத்திலேயே தாய்மொழிக்காக, தமிழுக்காக பலர் உயிர் நீத்த வரலாறு தமிழனுக்கு உண்டு. அத்தகைய தமிழுக்கு ஆபத்து வந்துவிடுமோ என்ற அச்சம் இன்று நிலவுகிறது. தமிழக அலுவலகங்களில் இந்தியைத் திணிக்க மத்திய அரசு முயற்சிக்கிறது. நாம் உஷாராக இருக்க வேண்டும்.

உயர் நீதிமன்றத்தில் தமிழ் வழக்காடும் மொழியாக இருக்க வேண்டும். உயர் நீதிமன்றத் தீர்ப்புகள் தமிழில் இருக்க வலியுறுத்த வேண்டும். தமிழ்நாட்டில் இருக்கும் மத்திய அரசு அலுவலகங்களில் சுற்றறிக்கை, தேர்வுகள் அனைத்தும் தமிழில் இருக்க வேண்டும். தமிழர்களின் நாகரீகம் 10 ஆயிரம் ஆண்டுகள் பழமையானது.

இந்தியாவில் கிடைத்த கல்வெட்டுகளில் 55 சதவிகிதம் தமிழ் மொழியிலேயே உள்ளது. தமிழுக்கு தனித்தமிழ் செம்மொழி என்ற சிறப்புண்டு. செம்மொழியாக்கித் தந்தவர் எங்களுடைய தலைவர் கலைஞர். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

திரு. செ. சண்முகையா: ஒரே நிமிடம். இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை குறித்து மட்டும் பேசிவிட்டு உட்கார்ந்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் நன்றி சொல்லி உங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) ஆளுங்கட்சி எம்.எல்.ஏ.–க்கள் எவ்வளவு நேரம் பேசினார்கள் என்று பார்த்தீர்களல்லவா!

திரு. செ. சண்முகையா: 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்ற திருமூலர் வாக்குப்படி பேரறிஞர் அண்ணா அவர்களும், 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்றார். அதன் வழி வந்த தலைவர் கலைஞர் அவர்களும் இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையில் முத்திரை பதிக்கும் பல்வேறு சாதனைகளை நிறைவேற்றியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 724 கோயில்களில் அடிப்படை வசதிகளை கூடுதலாகச் செய்து கொடுக்க வேண்டுமென அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 6–45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. செ. சண்முகையா: இன்னும் ஒரேயொரு நிமிடத்தில் எனது உரையை முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் point–க்கு வாருங்கள். (குறுக்கீடு) இன்னொரு சந்தர்ப்பத்தில் பேசிக்கொள்ளலாம். (குறுக்கீடு) இல்லை, அவர் நன்றாகப் பேசுகிறார். (குறுக்கீடு) உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

திரு. செ. சண்முகையா: ** இதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதைத் தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இதுபோன்ற ** நீங்கள் ஆதாரமில்லாமல் பேசக் கூடாது. (குறுக்கீடு) நன்றி சொல்லுங்கள். (குறுக்கீடு) இல்லை, மாண்புமிகு உறுப்பினர் நன்றி சொல்கிறீர்களா? முதல் கன்னிப்பேச்சில் நன்றி சொல்கிறீர்களா? வேறு எதுவும் பேசக் கூடாது. (குறுக்கீடு) நன்றி மட்டும் சொல்கிறீர்களா? (குறுக்கீடு) பதிலுரை. (குறுக்கீடு) இல்லை, நீங்கள் நன்றி சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி, முதல் கன்னிப்பேச்சை நிறைவு செய்யுங்கள். (குறுக்கீடு) நான் மிரட்டவில்லை. நீங்கள் விடுங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லுங்கள். (குறுக்கீடு) பதிலுரை. (குறுக்கீடு)

திரு. செ. சண்முகையா: எங்கள் தலைவர் முத்தமிழறிஞர் ஐயா கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் தமிழகம் அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்கி, இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக இருந்தது. அதுபோல, விரைவில் எங்கள் கழகத் தளபதியார் அவர்கள் தமிழக மக்களின் எண்ணங்களை நிறைவேற்றி, தமிழக மக்களைக் காப்பாற்றுவார், காப்பாற்றுவார் என்று சொல்லி, என் உரையை முடிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பதிலுரை. மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தூண்டில் வளைவு குறித்து இங்கே ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். தூண்டில் வளைவு அமைப்பது குறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழகக் கடற்கரை முழுவதும் ஓர் ஆய்வு மேற்கொள்ளச் சொன்னார்கள். கடலின் வெப்பம், தட்பவெட்பச் சூழ்நிலை மாறும்போது, பொதுவாகவே, கடற்சீற்றம் அதிகமாக இருக்கும் நிலையில், அப்போது கடலரிப்பு ஏற்படும் நிலை வரும். அந்தச்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது/

சூழ்நிலையில், நாம் தூண்டில் வளைவுகளை எந்தெந்த இடங்களில் போட வேண்டுமென்று consultant அமைத்து இப்போது அந்த ஆய்வு மேற்கொள்ளப்படவிருக்கின்றது. அந்த ஆய்வின்மூலம் கிடைக்கும் அறிக்கையின் அடிப்படையிலே, அரசு முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கிடையில், Green Climate Fund–'பசுமை பருவகால நிதி' என்ற ஒரு நிதியை நாம் முழுமையாகப் பெறுவதற்கு கடற்கரை மாவட்டங்கள் முழுவதற்கும் 1,076 கி.மீ.–க்கு, கடற்சீற்றம் காரணமாக ஏற்படும் கடலரிப்பைத் தடுக்கும் வகையில் தூண்டில் வளைவு, சிறிய துறைமுகங்கள், மீன்பிடித் துறைமுகங்கள் போன்றவற்றை அமைப்பதற்கு ஒரு கருத்துரு அரசினுடைய பரிசீலனையில் இருந்து, கிட்டத்தட்ட ஆயிரம் கோடி ரூபாய்க்கு Green Climate Fund–ஐ பெறுவதற்காக அனுப்பப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காலையிலேயே அவர்களுடைய பொதுப் பணித் துறையின் 14–வது எண் அறிவிப்பிலே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். உறுப்பினர் பேசிவிட்டு போய்விட்டாரா? அறிவிப்பு எண் 14–ல், தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள வறண்ட ஒட்டப்பிடாரம் மற்றும் எட்டையபுரம் பகுதிகளுக்கு திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தாமிரபரணி, கடனாநதி, சிற்றாறு மற்றும் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள உப்போடை மற்றும் கல்லாறு ஆகியவற்றை இணைத்து வெள்ளநீர் கால்வாய்மூலம் நீர் வழங்கும் திட்டத்திற்கு மட்ட அளவு மற்றும் மண் தன்மை ஆய்வுப் பணிக்காக மட்டும் 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். அந்த அறிவிப்பை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று காலையிலே அறிவித்துள்ளார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னிப்பேச்சு என்பதால் நான் குறுக்கிடவில்லை. ஒட்டப்பிடாரத்தில் நான்கு மருத்துவர்கள். அந்த நான்கு பேருமே பணியில் இருக்கின்றார்கள். 6 செவிலியர்களும் பணியில் இருக்கின்றார்கள். இரவு நேரங்களில் மருத்துவர்கள் இல்லையென்று சொன்னார்கள். அதேபோல, ஒட்டநத்தம்,

புதுக்கோட்டை இரண்டிலுமே தலா 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று, விரைவிலே மக்களின் பயன்பாட்டுக்கு வரும். மேலும், என்னென்ன வசதிகள் தேவையோ, அவற்றை அரசு செய்து கொடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுரை.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தன் தோளில் தமிழகத்தைக் காத்து நிற்கும் இமயம்; தன் திறத்தால் தமிழகத்தை தலை நிமிர்த்தும் சிகரம்; கடவுள் அனுப்பிய மனிதத் தேவர்; தமிழினமே வணங்கும் புனிதத் தூதர்; எங்கள் அம்மாவே, தங்களின் திருவடியை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மலைபோல பிரச்சினை வந்தாலும், தூசு போல பறந்து போகும் முகராசி; மகராசி வகுத்த திட்டங்களை மாற்று குறையாத பொன்னைப்போல அரசைக் காத்துவரும் அண்ணன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களின் ஆட்சியில் அமைச்சராக இருப்பதில் நான் பெருமைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கழகத்தையும், ஆட்சியையும் தன் தோளில் சுமந்து, எத்தனை இடர்பாடுகள் வந்தாலும், மலைபோல் துன்பம் வந்தாலும் பனிபோல் விலக்கி, பனித்துளியைவிட பரிசுத்தமாக இவ்வாட்சியை நடத்திச் செல்கின்ற நாடு போற்றும் நல்லவர், எளியவர், இனியவர் எங்கள் அன்பு அண்ணன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைப் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 6–50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தென்பாண்டி சிங்கமாய், வீர மரபில் தோன்றி, இயக்கத்தை தன் தோளில் சுமந்து, தர்மமே தனது வழி என்பதை உறுதி செய்து, அம்மா அவர்களின் வழித் துணை கொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களின் கரத்திற்கு வலு சேர்க்கும் மாண்புமிகு துணை

முதல்வர் அவர்களைப் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பேரவையை நடுநிலையோடு வழிநடத்திச் செல்லும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், ஆரணி சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் மற்றும் சுற்றுலா, கலை மற்றும் பண்பாடு மற்றும் இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களுக்கும், முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையர், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அவர்களுக்கும் மற்றும் துறை சார்ந்த அனைத்து அலுவலர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்பிக்கைக்குரிய பாத்திரமாய் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வகுத்த வழியில் செல்வதால் வான தேவதையாய் நின்று அவர்கள் வாழ்த்த, திருக்கோயில்களில் முறையாக திருப்பணிகள், வழிபாடுகள், புனரமைப்புகள், திருவிழாக்கள் என முறை செய்து காக்கப்படுகிறன்றன. அஞ்சாமல் வஞ்சகம் செய்து ஆளுமை செய்தவர்களுக்குப் பாடம் புகட்டியதை பக்கத்திலிருந்து பார்த்துள்ளோம். கத்துக்குட்டிகளிடம் களம் காணுவது பெரிய பாரமல்ல. வித்தை காட்டுகிற வீணர்கள் மத்தியில் வெற்றி அரசாக வலம் வருவதில் அண்ணன் எடப்பாடியார் அவர்களும், அண்ணன் O.P.S. அவர்களும் சளைத்தவர்கள் இல்லை என்பதை நிரூபித்துவிட்டனர். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையின் அமைச்சராக, நான்காவது முறையாக துறையின் மானியக் கோரிக்கையை சமர்ப்பிக்க எனக்கு வாய்ப்பளித்து என்னை என்றும் காக்கும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில், அடிபிறழாமல் ஆட்சி செலுத்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர்

அவர்களுக்கும் என் நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குச் செல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையின் கட்டுப்பாட்டின்கீழ், சமய நிறுவனங்கள் உட்பட, 38,652 திருக்கோயில்கள் உள்ளன. இவற்றில் பல திருத்தலங்கள், தமிழகத்தின் வரலாறு மற்றும் கலைப் பண்பாட்டிற்கு சான்றுகளாகவும், வரலாற்றுக்கு ஆய்வுக் களமாகவும் மரபை பறைசாற்றி வாழும் கலையாகவும் நிற்கின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் எண்ண ஓட்டத்தை நிறைவேற்றும்விதமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களால் கடந்த 2 ஆண்டுகளில் 1,274 திருக்கோயில்களில் ரூ.79.33 கோடி செலவில் திருப்பணிகள் முடிவுற்று, குடமுழுக்கு நடைபெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 2 ஆண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 66 திருக்கோயில்களில் ரூ.79.43 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 2 ஆண்டுகளில் திருப்பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கும் கிராமப்புற திருக்கோயில்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் 1,615 திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு ரூ.16.15 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த 2 ஆண்டுகளில் இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் அமைந்துள்ள 2,019 திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு திருக்கோயில் ஒன்றுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் ரூ.20.19 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பக்தர்களின் பசிமுகம் நோக்கி, உணவே உயிர் மருந்து என்னும் மணிமேகலை காப்பியம் காட்டும் வழியில் ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதர் மற்றும் பழனி அருள்மிகு பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் தொடங்கப்பட்ட இத்திட்டம், தமிழ்நாட்டில் மொத்தம் 754 திருக்கோயில்களில் மதியவேளை அன்னதானத் திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் மேலும் 30 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதனால், 50,000–க்கும் மேற்பட்ட பக்தர்கள் நாள்தோறும் பயன்பெற்று வருகின்றனர். மேலும், 10 திருக்கோயில்களில் அன்னதானக் கூடங்கள் ரூ.5.07 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன.

பிற்பகல் 6–55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

“வரப்புயர நீருயரும்,
நீருயர நெல்லுயரும்,
நெல்லுயரக் குடியுயரும்,
குடியுயரக் கோலுயரும்
கோலுயரக் கோனுயர்வான்”

என்றார் அவ்வை. அக்காலத்தில் குளம் தொட்டு, வளம் பெருக்கி, அதனை வெட்டுவதற்கும் பாதுகாப்பதற்கும் சட்டங்கள் இயற்றி பராமரித்துள்ளனர். அதனடிப்படையில் திருக்கோயில்களை ஒட்டியே திருக்குளங்கள் அமைத்து குடிநீருக்காகவும், தீர்த்தத்திற்காகவும் பயன்படுத்தியுள்ளனர். தீர்த்தமாகப் பயன்படுத்தியதால் சுத்தமாகவும் பராமரிக்கப்பட்டுள்ளன. அதன் தொன்மை கருதி இன்றும் மழைநீர் சேகரிப்பை ஏற்படுத்தி திருக்கோயில் திருக்குளங்கள் அனைத்தும் படிப்படியாகத் தொடர்ந்து ஒவ்வொரு பருவக் காலங்களிலும் சீரமைக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் தலைமையில் 129 திருக்குளங்கள் ரூ.96 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டுள்ளன என்பதை இம்மன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பரமனைத் தேடி பக்தன் போனது அந்தக் காலம், பக்தனைத் தேடி பரமனே திருவீதி உலாவில் தினமும் போவது இந்தக் காலம். கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 25 திருத்தேர்கள் ரூ.13.68 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டுள்ளன என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோயில் சொத்து கோயிலுக்கே என்கின்ற கொள்கையின் அடிப்படையில் இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையின் வரலாற்றில் எவரும் செய்யாத ஏற்றமிகு சாதனைகளைச் செய்த பெருமை மாண்புமிகு அம்மாவையே சாரும். திருக்கோயில் சொத்துகளின் தேவையுணர்ந்து கடந்த இரண்டு ஆண்டுகளில் 216 திருக்கோயில்களுக்குச் சொந்தமான 1023.73 ஏக்கர் நிலங்கள் தனியார் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டதைக் கண்டறிந்து மீட்டு, திருக்கோயில் பெயரில் மீண்டும் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆக்கிரமிப்பிலிருந்து மட்டும் 539.39 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்கள் 87 கிரவுண்டு 3671 சதுர அடி பரப்பளவுள்ள மனைகள் 70.20 கிரவுண்டு 539 சதுர அடி பரப்பளவுள்ள கட்டடங்கள் மீட்கப்பட்டுள்ளன. இதன் மதிப்பு மட்டும் ரூ.321.20 கோடியாகும். இதைப்போல பல திருக்கோயில்களில் ஆக்கிரமிப்புகள் கண்டறியப்பட்டு வருகின்றன. அதனால் வரும் நேரடி மற்றும் மறைமுக எதிர்ப்புகளையும் தாண்டி அனைத்துச் சொத்துகளும் விரைவில் மீட்கப்படும் என்பதை இம்மாமன்றத்திற்குப் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல திருக்கோயில்களுக்குக் கூரையாய் கோபுரம் அமைத்த பெருமை அண்ணன் எடப்பாடியாரையே சாரும். எத்தனை கட்டுமான முன்னேற்றங்கள் இருந்தும் அக்கால மன்னர்களின் உள்ளக்கிடக்கையைக் கருத்தில்கொண்டு அதன் கலையைப் பேணிக் காக்கும் முயற்சியில் தொன்மை மாறாமல் இன்றளவும் பராமரிக்கப்படுவது பெருமைகொள்ள வேண்டிய ஒன்றாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டுகளில் 20 ஆயிரம் சிறு திருக்கோயில்களுக்கு சிறப்பான முறையில் பூஜைகள் செய்திட பித்தளை தாம்பாளம், தூபக்கால், மணி, கார்த்திகை விளக்கு மற்றும் தொங்கும் விளக்கு ஆகிய பூஜை உபகரணங்களை நிதி வசதிமிக்க

திருக்கோயில்களிலிருந்து நிதி மாற்றம்மூலம் ரூ.4.94 கோடி மதிப்பில் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஒரு கால பூஜை திட்டத்தில் இதுவரை நிதி வசதியற்ற 12,745 திருக்கோயில்களுக்கு ரூ.127.45 கோடி முதலீடு வழங்கப்பட்டு இத்திட்டம் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், 182 திருக்கோயில்களிலிருந்து வரப்பெற்றுள்ள விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்க ஏற்பாடு நடைபெற்று வருகிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவாரம், திருவாசகம் ஓதுவதைக் கண்காணித்து வருவதற்காகவே தேவாரநாயகம் என்ற உயர்நிலை அலுவலர் ஒருவரை நியமித்து, தேவார திருவாசகங்கள் மற்றும் திவ்யப் பிரபந்தங்கள் திருக்கோயில்களில் தேனிசையாய் ஒலித்தது என்பதை கல்வெட்டுச் செய்தி பகர்கிறது. நாளும் சாத்திரங்களாலும், தோத்திரங்களாலும் புகழ்ந்து பாடி உலகம் உய்ய வேண்டப்பட்டு வருகிறது. வைணவக் கோயில்களில் திருவாய்மொழி, திருமங்கையாழ்வாரின் பாசுரங்களையும், குலசேகர ஆழ்வாரின் பாசுரங்களையும் சாற்றுமுறை செய்துவரப் பல நிவந்தங்கள் அளிக்கப்பட்டுள்ளன. இதன் அருமையைப் போற்றும் விதமாக திருமுறைப் பயிற்சிகளும், திவ்யப் பிரபந்த வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன. அதோடு நாதஸ்வர இசைப் பயிற்சி, திருக்கோயில்களுக்குத் தேவையான கைவினைப் பொருள் உற்பத்தி செய்யும் கைவினைஞர்களுக்கான சிறப்புப் பயிற்சி, திருக்கோயில்கள் பணியாளர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி போன்ற பல்வேறு சிறப்புப் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன என்பதையும் இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதர்கள் மட்டுமல்லாமல், ஏனைய உயிரினங்களும் நம் அன்புக்கு உரியவைதான் என்ற உயர்ந்த உன்னதக் கருத்தின் அடிப்படையில் பிற உயிரினங்களிடத்தும் அன்பும் கருணையும் கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திருக்கோயிலிலுள்ள யானைகளுக்கும் மன நலமும் உடல் நலமும் பேணிப் பாதுகாத்திட இயற்கை வளமும் நீர் வசதியும் உடைய இயற்கைச் சூழ்நிலையில் உயிர்ச்சத்தான உணவும் புரதச் சத்து

மிகுந்த கலவை உணவும் வழங்கி, யானைகளுக்கு நலவாழ்வு முகாம் நடத்தி அன்பு காட்டி வந்தார்கள். அதன் தொடர்ச்சியாக 2003–ல் யானைகள் நலவாழ்வு முகாம் திட்டம் ஏற்படுத்தப்பட்டு, ஆண்டுதோறும் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. 2003, 2004, 2005 ஆம் ஆண்டுகளில் முதுமலை, தெப்பக்காடு பகுதியில் இம்முகாம் நடத்தப்பட்டு வந்தது. 2011 முதல் தற்போது வரை ஆண்டுதோறும் மேட்டுப்பாளையம் வட்டம், தேக்கம்பட்டியில் யானைகள் முகாம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இரவு 7–00

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018–2019 ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் ஆணைக்கிணங்க ரூ.1 கோடியே 41 இலட்சம் மதிப்பீட்டில் தமிழகத் திருக்கோயில்கள் மற்றும் திருமடங்களுக்குச் சொந்தமான 27 யானைகளும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தைச் சேர்ந்த 2 யானைகளும் ஆக மொத்தம் 29 யானைகள் 48 நாட்கள் நடைபெற்ற முகாமில் பங்கேற்று புத்துணர்வு பெற்றுள்ளன என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்தர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு சிரமப் பரிகாரத்திற்கான திருப்பணிகளில், கடந்த இரண்டு ஆண்டுகளில் 6 திருக்கோயில்களில் நவீன தங்கும் கூடங்கள், துயில் கூடங்கள் கட்ட ரூ.2.42 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், ஆசிய வளர்ச்சி வங்கி நிதியில் ஆலங்குடி, அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில், வேதாரண்யம், அருள்மிகு வேதாரண்யேஸ்வரர் திருக்கோயில், காஞ்சிபுரம், அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் புதிதாக ஓய்வுக் கூடங்கள், குடில்கள், அலுவலகம், தகவல் மையம், உணவருந்தும் கூடம் உள்ளடக்கிய யாத்ரி நிவாஸ் கட்டும் பணிகள் ரூ.33.22 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளில் 11 திருக்கோயில்களில் ரூ.4.61 கோடி மதிப்பீட்டில் நவீன கழிப்பிடக் கூடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தலப் புத்துணர்வு மற்றும் ஆன்மிக வளர்ச்சித் திட்டமான மத்திய

அரசின் 'பிரசாத்' திட்டத்தின்கீழ் ரூ.8.87 கோடி மதிப்பீட்டில் 10 திருக்கோயில்களின் ஒளிரூட்டுதல் போன்ற பொதுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இராமேஸ்வரம், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலில் ரூ.29.00 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் திருவண்ணாமலை, அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலில் ரூ.28.00 கோடி மதிப்பீட்டிலும் பக்தர்கள் தங்குவதற்கு யாத்ரி நிவாஸ் பொதுப் பணித் துறைமூலம் கட்டப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணத்தில் மகாமகம் கொண்டாடப்பட்ட செய்தியைப் பதினான்காம் நூற்றாண்டு கல்வெட்டு ஒன்றினால் அறிகின்றோம். ஒரு மாமாங்கத்திற்கு ஒருமுறை வரும் மகாமகம் 2016 ஆம் ஆண்டு சிறப்பாகக் கொண்டாடப்பட்டதை நாடே அறியும். அதைப்போல இராமானுஜரின் 1000–வது அவதாரத் திருவிழா 2017 ஆம் ஆண்டு ஸ்ரீபெரும்புதூரிலும், தமிழ்நாட்டில் இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள இதர வைணவத் திருத்தலங்களிலும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இந்த ஆண்டு காஞ்சிபுரத்தில் 40 ஆண்டுகளுக்கு ஒருமுறை அரிய சேவை தரும் தேவராஜ சுவாமி திருக்கோயிலின் அத்திகிரி வரதர், அனந்தசரஸ் எனும் திருக்குள நீருக்கடியில் இருந்து எழுந்தருளியுள்ளார். 48 நாட்கள் அத்திவரதப் பெருமாளின் அரிய சேவைக் காட்சியை இதற்கு முன்பு 1854, 1892, 1937 மற்றும் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் ஆட்சியான 1979 ஆம் ஆண்டில் பக்தர்கள் தரிசனம் செய்துள்ளார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் நல்லாட்சியில் 01–07–2019 முதல் 17–08–2019 வரை திருக்குளத்திலிருந்து வெளியே எழுந்தருளச் செய்துள்ள அத்திவரதப் பெருமாளின் அரிய சேவைத் திருவிழாவில் நாமும் இணைந்துள்ளோம் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோயில்களின் திருப்பணிகள், குடமுழுக்குகள், திருவிழாக்கள் எனத் தொடர்ந்து ஆகம விதிகள் மற்றும் மரபார்ந்த நிவந்தங்களின் அடிப்படையில், திருக்கோயில்கள் முறையாக நிருவகிக்கப்பட்டு முறை செய்து வருவதால், அதன் பெருமையினைக் கருதி விருதுகளும் பெற்றுள்ளன. சிறந்த நிருவாகத்தை உறுதிப்படுத்தும் தரமான சேவை மேம்பாட்டுக்கான "சிறந்த நடைமுறைகள் விருது"

மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 15–08–2015 அன்று திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலுக்கு வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலை "தூய்மையான புனிதத் தலமாக" தேர்வு செய்து, 'தூய்மை இந்தியா' விருது இந்திய அரசால் 2–10–2017 அன்று வழங்கப்பட்டது. ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயிலுக்கு, பழமை மாறாமல் திருப்பணி மேற்கொண்டதற்கான 2017 ஆம் ஆண்டு, UNESCO Asia–Pacific Heritage Award of Merit for Cultural Heritage Conservation விருது 1–11–2017 அன்று வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இணையதள வழி வருடாந்திர வாக்களிப்பு செயல்முறைகளின் அடிப்படையில், சிறந்த தொன்மையான தலம் பிரிவில், இந்தியா டுடே சுற்றுலா ஆய்வு விருது–2019–ன் இரண்டாம் பரிசு, ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயிலுக்கு வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு சுற்றுலாத் துறைமூலம் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வரும் அகில இந்திய சுற்றுலா மற்றும் வர்த்தகப் பொருட்காட்சியில் அமைக்கப்படும் அறநிலையத் துறை அரங்கிற்கு ஆண்டுதோறும் முதல் இடம்/சிறப்பு அந்தஸ்திற்கான விருது பெறப்பட்டு வருகிறது.

இரவு 7–05

2018 ஆம் ஆண்டில் நடைபெற்ற 44–வது அகில இந்திய சுற்றுலா மற்றும் வர்த்தகப் பொருட்காட்சியில் சிறந்த அரங்கிற்கான விருதும், 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற 45–வது அகில இந்திய சுற்றுலா மற்றும் வர்த்தகப் பொருட்காட்சியில் மாநில அரசுத் துறைப் பிரிவில் முதல் பரிசும் இத்துறைக்கு வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மரபு மாறா அறப்பணிகளால் நான் மட்டுமல்ல, திருக்கோயில்களும், அறநிலையங்களும், அண்ணன் எடப்பாடியார் அவர்களை நன்றிக் கண்களோடு நோக்குகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புறநானூற்றுத் தாயாய் புது உலகம் தந்து, மக்கள் நலன் காக்கும் மாதரசியாய் எங்கள் வாழ்க்கைக்கு முகவரி தந்திட்ட முழுமதியின் பாத மலர்களில் மீண்டும் ஒரு முறை என் நன்றிகளை காணிக்கையாய்ச் செலுத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையின் மானியக் கோரிக்கையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2019–2020 ஆம் ஆண்டுக்கான இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையின் அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் வெளியிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை சார்பில் வெளியிடப்படும் அறிவிப்புகளின் தலைப்புகளை மட்டும் நான் இம்மாமன்றத்தில் வெளியிடுகிறேன். மற்றதை நான் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பேரவை பதிவேட்டில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அறிவிப்புகள்

1. இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை ஆளுகையின்கீழ் உள்ள எட்டு திருக்கோயில்களில் ரூபாய் நான்கு கோடியே ஐம்பத்து எட்டு இலட்சத்து ஐம்பத்தைந்தாயிரம் மதிப்பீட்டில் திருக்கோயில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சேலம் மாவட்டம் மற்றும் நகர், அருள்மிகு கோட்டை அழகிரிநாதர் சுவாமி திருக்கோயிலில் ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டிலும், தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், நெருப்பூர், அருள்மிகு முத்தத்ராயசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 12 இலட்சம் மதிப்பீட்டிலும், திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், அய்யம்பாளையம், அருள்மிகு உத்தமராயர் திருக்கோயிலில் ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆரணி நகர், புதுக்காமூர், அருள்மிகு புத்திரகாமேஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் 95 இலட்சம் மதிப்பீட்டிலும், செய்யாறு வட்டம், முனுகப்பட்டு, அருள்மிகு பச்சையம்மன் சமேத மன்னார்சாமி திருக்கோயிலில் ரூபாய் 47.25 இலட்சம் மதிப்பீட்டிலும், திருவத்திபுரம், அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் 95 இலட்சம் மதிப்பீட்டிலும், கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், பெரிய நெகமம், அருள்மிகு நித்தீஸ்வரசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 63.70 இலட்சம் மதிப்பீட்டிலும், கிணத்துக்கடவு வட்டம், சென்றாம்பாளையம், அருள்மிகு சென்றாயசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 45.60 இலட்சம் மதிப்பீட்டிலும் திருக்கோயில் திருப்பணிகள், திருக்கோயில் நிதி/பிற திருக்கோயில் நிதி/துறை நிதி/பொதுமக்கள் பங்களிப்பு/உபயதாரர் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

2. திருப்புகழ் அருளிய அருளாளர் அருணகிரிநாதர் புகழைப் போற்றும் வகையில் திருவண்ணாமலையில் மணிமண்டபம் மற்றும் விழுப்புரம் மாவட்டம், இராவுத்தநல்லூர் திருக்கோயிலில் முன்மண்டபம் ஆகியவை ரூபாய் ஒரு கோடியே முப்பத்து ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருவண்ணாமலை மாவட்டம் மற்றும் நகர், அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் ரூபாய் 75 இலட்சம் மதிப்பீட்டில் 'அருளாளர் அருணகிரிநாதர் மணிமண்டபம்' மற்றும் விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், இராவுத்தநல்லூர், அருள்மிகு சஞ்சீவராயர் திருக்கோயிலில் ரூபாய் 62.50 இலட்சம் மதிப்பீட்டில் முன் மண்டபம் ஆகியவை, திருக்கோயில் நிதி/துறை நிதி/பொதுமக்கள் பங்களிப்பு/உபயதாரர் நிதியிலிருந்து கட்டப்படும்.

3. திருக்கோயில்களில் சுவாமிக்கு நெய்வேத்தியம் படைத்திடவும், சேவார்த்திகளுக்கு பிரசாதம் வழங்கிடவும் இரண்டு திருக்கோயில்களில் ரூபாய் ஐம்பத்து ஏழு இலட்சத்து எழுபதாயிரம் மதிப்பீட்டில் மடப்பள்ளிகள் கட்டப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், அடையகருங்குளம், அருள்மிகு நாராயணசாமி திருக்கோயிலில் ரூபாய் 7.20 இலட்சம் மதிப்பீட்டில் புதிய மடப்பள்ளி கட்டுதல் மற்றும் விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், திருவரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 50.50 இலட்சம் மதிப்பீட்டில் மடப்பள்ளி புனரமைக்கும் பணி, துறை நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

4. திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்களின் உடைமைகள் பாதுகாப்பிற்காக தேக்கம்பட்டி, அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயிலில் பொருட்கள் வைப்பறை ரூபாய் இருபத்து இரண்டு இலட்சத்து பத்தாயிரம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம்

வட்டம், தேக்கம்பட்டி, அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயிலில் பக்தர்கள் வசதிக்காக ரூபாய் 22.10 இலட்சம் மதிப்பீட்டில் பொருட்கள் வைப்பறை, திருக்கோயில் நிதியிலிருந்து கட்டப்படும்.

5. திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் நான்கு திருக்கோயில்களில் ரூபாய் தொண்ணூற்று ஆறு இலட்சத்து தொண்ணூற்று மூன்றாயிரம் மதிப்பீட்டில் குளியலறை மற்றும் கழிவறைகள் கட்டப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம், முனுகப்பட்டு, அருள்மிகு பச்சையம்மன் சமேத மன்னார்சாமி திருக்கோயிலில் ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டிலும், செங்கம்பூண்டி, அருள்மிகு சித்தாத்தூர் மாரியம்மன் திருக்கோயிலில் ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டிலும், சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், மடப்புரம், அருள்மிகு அடைக்கலம் காத்த அய்யனார் மற்றும் பத்ரகாளியம்மன் திருக்கோயிலில் ரூபாய் 29.20 இலட்சம் மதிப்பீட்டிலும், கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், நாகர்கோவில், அருள்மிகு நாகராஜா திருக்கோயிலில் ரூபாய் 17.73 இலட்சம் மதிப்பீட்டிலும் பக்தர்கள் வசதிக்காக புதிய குளியலறை மற்றும் கழிவறைகள், திருக்கோயில் நிதி மற்றும் துறை நிதியிலிருந்து கட்டப்படும்.

6. திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்கள் நலன் கருதி அவர்கள் இளைப்பாறுவதற்கு வசதியாக ஆவணியாபுரம், அருள்மிகு இலட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயிலில் ரூபாய் நாற்பத்து ஐந்து இலட்சம் மதிப்பீட்டில் ஓய்வுக்கூடம் கட்டப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு வட்டம், ஆவணியாபுரம், அருள்மிகு இலட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 45 இலட்சம் மதிப்பீட்டில் பக்தர்கள் ஓய்வுக்கூடம், திருக்கோயில் நிதி மற்றும் துறை நிதியிலிருந்து கட்டப்படும்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

7. திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களின் குடிநீர் தேவைகளைப் பூர்த்தி செய்யும்பொருட்டு, ரூபாய் முப்பத்து நான்கு இலட்சத்து எண்பதாயிரம் மதிப்பீட்டில், இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் வட்டம் மற்றும் நகர், அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயிலில் ரூ.18 இலட்சம் மதிப்பீட்டிலும், கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், தேக்கம்பட்டி, அருள்மிகு வன பத்ரகாளியம்மன் திருக்கோயிலில் ரூ.16.80 இலட்சம் மதிப்பீட்டிலும் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் திருக்கோயில் நிதியிலிருந்து கட்டப்படும்.

8. திருக்கோயில்களின் பாதுகாப்பு கருதி, இரண்டு திருக்கோயில்களில் ரூபாய் எழுபத்தாறு இலட்சத்து ஐம்பதாயிரம் மதிப்பீட்டில் திருமதிற்சுவர் கட்டப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம், முனுகப்பட்டு, அருள்மிகு பச்சையம்மன் சமேத மன்னார்சாமி திருக்கோயிலில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டிலும், கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு வட்டம் மற்றும் நகர், அருள்மிகு பொன்மலை வேலாயுதசுவாமி திருக்கோயிலில் ரூ.26.50 இலட்சம் மதிப்பீட்டிலும் புதிய மதிற்சுவர் திருக்கோயில் நிதி மற்றும் துறை நிதியிலிருந்து கட்டப்படும்.

9. காவேரிக் கரையோரம் அமைந்துள்ள பவானி அருள்மிகு சங்கமேஸ்வரர் திருக்கோயிலின் பாதுகாப்பு கருதி கரை தடுப்புச் சுவர் ரூபாய் எழுபத்து இரண்டு இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ஈரோடு மாவட்டம், பவானி வட்டம் மற்றும் நகர், அருள்மிகு சங்கமேஸ்வரர் திருக்கோயிலின் அருகே சேதமுற்ற காவேரிக் கரை தடுப்புச் சுவர் ரூ.72 இலட்சம் மதிப்பீட்டில் திருக்கோயில் நிதியிலிருந்து சீரமைக்கப்படும்.

10. திருக்கோயில் திருக்குளங்கள் ரூபாய் எழுபது இலட்சம் மதிப்பீட்டில் தூர் வாரி செப்பனிடப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், கொளத்தூர், அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயிலின் திருக்குளத்தினை ரூ.20 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆரணி நகர், அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலின் திருக்குளத்தினை ரூ.50 இலட்சம் மதிப்பீட்டிலும் துறை நிதியிலிருந்து செப்பனிடப்படும்.

11. ஏழு திருக்கோயில்களில் புதிய திருத்தேர்கள் மற்றும் சப்பரங்கள் ரூபாய் ஒரு கோடியே எழுபத்து ஆறு இலட்சம் மதிப்பீட்டில் செய்யப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், வெடால், அருள்மிகு நீலகண்டேஸ்வரர் திருக்கோயிலில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டிலும், விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், தையூர், அருள்மிகு தடுத்தாண்டீஸ்வரர் திருக்கோயிலில் ரூ.37 இலட்சம் மதிப்பீட்டிலும், தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், சுவாமிமலை, அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயிலில் ரூ.33 இலட்சம் மதிப்பீட்டிலும், திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம் மற்றும் நகர், அருள்மிகு கோணேஸ்வரசுவாமி திருக்கோயிலில் ரூ.37 இலட்சம் மதிப்பீட்டிலும், ஈரோடு மாவட்டம், கோபி செட்டிப்பாளையம் வட்டம், குள்ளம்பாளையம், அருள்மிகு மாரியம்மன் கருப்பராயன் திருக்கோயிலில் ரூ.19 இலட்சம் மதிப்பீட்டிலும் புதிய திருத்தேர்கள் மற்றும் திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், சேவூர், அருள்மிகு விருப்பாட்சீஸ்வரர் திருக்கோயிலில் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆரணி வட்டம், மேல்நகர், அருள்மிகு பூந்தேவி மாரியம்மன் திருக்கோயிலில் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டிலும் புதிய சப்பரங்கள், திருக்கோயில் நிதி மற்றும் துறை நிதியிலிருந்து செய்யப்படும்.

12. திருத்தேர்களின் பாதுகாப்பின் அவசியத்தைக் கருதி பேரூர், அருள்மிகு பட்டீஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் அறுபத்து நான்கு இலட்சம் மதிப்பீட்டில் திருத்தேர் பாதுகாப்புக் கொட்டகை அமைக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்

ஆணையின்படி, கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் வட்டம் மற்றும் நகர், அருள்மிகு பட்டீஸ்வரர் திருக்கோயிலின் திருத்தேர்களுக்கென ரூ.64 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக திருத்தேர் கொட்டகை திருக்கோயில் நிதியிலிருந்து அமைக்கப்படும்.

13. இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை ஆளுகையின்கீழ் உள்ள மூன்று திருக்கோயில்களில் ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்து மூன்று இலட்சத்து அறுபத்து ஒன்பதாயிரம் மதிப்பீட்டில் வணிக வளாகங்கள் கட்டப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மதுரை மாவட்டம், அழகர்கோயில், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலின் உபகோயிலான சோழவந்தான் அருள்மிகு பதினெட்டாம்படி கருப்பண்ணசுவாமி திருக்கோயிலில் ரூ.13.50 இலட்சம் மதிப்பீட்டிலும், கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், வடசேரி, அருள்மிகு பூதம்வணங்கும் கண்டன் சாஸ்தா திருக்கோயிலில் ரூ.68.79 இலட்சம் மதிப்பீட்டிலும், திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் வட்டம், தென்மாதிமங்கலம், அருள்மிகு கரைகண்டீஸ்வரர் மற்றும் மல்லிகார்ஜுனசுவாமி திருக்கோயிலில் ரூ.71.40 இலட்சம் மதிப்பீட்டிலும் புதிய வணிக வளாகங்கள் திருக்கோயில் நிதி/பிற திருக்கோயில் நிதி மற்றும் துறை நிதியிலிருந்து கட்டப்படும்.

14. திருக்கோயிலுக்குச் சொந்தமான இடங்களில் நான்கு திருமண மண்டபங்கள் ரூபாய் ஏழு கோடியே பதினாறு இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மதுரை மாவட்டம் மற்றும் நகர், அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் ரூ.96 இலட்சம் மதிப்பீட்டிலும், நாகப்பட்டினம் மாவட்டம், சிக்கல், அருள்மிகு நவநீதேஸ்வரசுவாமி திருக்கோயிலில் ரூ.2 கோடி மதிப்பீட்டிலும், நாகப்பட்டினம் நகர், வெளிப்பாளையம், அருள்மிகு அகஸ்தீஸ்வரசுவாமி திருக்கோயிலில் ரூ.3 கோடியே 40 இலட்சம் மதிப்பீட்டிலும், திருவண்ணாமலை மாவட்டம், கீழ்ப்பெண்ணாத்தூர் வட்டம், பூதமங்கலம், அருள்மிகு ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயிலில் ரூ.80 இலட்சம் மதிப்பீட்டிலும் புதிய திருமண மண்டபங்கள் திருக்கோயில் நிதி/பிற திருக்கோயில் நிதியிலிருந்து கட்டப்படும்.

15. அன்னதானத் திட்டம் நடைபெறும் திருக்கோயில்களில் சேவார்த்திகளின் பயன்பாட்டிற்கென ஏழு திருக்கோயில்களில் ரூபாய் மூன்று கோடியே எண்பத்து எட்டு இலட்சம் மதிப்பீட்டில் அன்னதானக் கூடங்கள் கட்டப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திண்டுக்கல் மாவட்டம், பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு பெரியநாயகி அம்மன் திருக்கோயிலில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டிலும், திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், அம்மன்கோவில்படைவீடு, அருள்மிகு ரேணுகாம்பாள் திருக்கோயிலில் ரூ.53 இலட்சம் மதிப்பீட்டிலும், விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், பரிக்கல், அருள்மிகு இலட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயிலில் ரூ.53 இலட்சம் மதிப்பீட்டிலும், தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், சுவாமி மலை அருள்மிகு சுவாமி நாதசுவாமி திருக்கோயிலின் உபகோயிலான இன்னம்பூர், அருள்மிகு எழுத்தறிநாதர் திருக்கோயிலில் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டிலும், பாபநாசம் வட்டம் மற்றும் நகர், 108 சிவாலயம், அருள்மிகு இராமலிங்கசுவாமி திருக்கோயிலில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டிலும், திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், ஆலங்குடி, அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரசுவாமி திருக்கோயிலில் ரூ.62 இலட்சம் மதிப்பீட்டிலும், திருத்துறைப்பூண்டி வட்டம், கோவிலூர், அருள்மிகு மந்திரபுரீஸ்வரர் திருக்கோயிலில் ரூ.45 இலட்சம் மதிப்பீட்டிலும் புதிய அன்னதானக் கூடங்கள் திருக்கோயில் நிதி மற்றும் துறை நிதியிலிருந்து கட்டப்படும்.

இரவு 7–10

16. திருக்கோயில் அர்ச்சகர்களுக்காக ரூபாய் அறுபத்தோரு இலட்சத்து இருபத்து ஏழாயிரம் மதிப்பீட்டில் குடியிருப்புகள் கட்டப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், வடசேரி, அருள்மிகு கிருஷ்ணசுவாமி திருக்கோயில் சார்பில் ரூபாய் 61.27 இலட்சம் மதிப்பீட்டில் அர்ச்சகர் குடியிருப்பு திருக்கோயில் நிதியிலிருந்து கட்டப்படும்.

17. இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை நிருவகிக்கும் இரண்டு கல்லூரிகள் மற்றும் இரண்டு பள்ளிகளில் ரூபாய் ஏழு கோடியே பதினெட்டு இலட்சத்து எண்பத்து நான்காயிரம் மதிப்பீட்டில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் மகளிர் மேல்நிலைப் பள்ளியின் முதல் தளத்தில் ரூபாய் 45.30 இலட்சம் மதிப்பீட்டில் மூன்று புதிய வகுப்பறைகள், பழநி, அருள்மிகு பழநியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரியில் ரூபாய் 5 கோடியே 65 இலட்சம் மதிப்பீட்டில் வகுப்பறைகள், நூலகம் மற்றும் ஆய்வகம், கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், குழித்துறை, ஸ்ரீதேவி குமரி மகளிர் கல்லூரி வளாகத்தில் ரூபாய் 88.54 இலட்சம் மதிப்பீட்டில் ஆராய்ச்சிக் கூடம், திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், பாளைமேட்டுத்திடல், ஸ்ரீ காந்திமதி அம்பாள் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் ஆகிய பணிகள், திருக்கோயில் நிதி/கல்லூரி மேம்பாட்டு நிதி/ பள்ளி மேம்பாட்டு நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

18. மலை மேல் அமைந்துள்ள இரண்டு திருக்கோயில்களுக்கு பக்தர்கள் எளிதாகச் சென்றுவரும் பொருட்டு ரூபாய் ஒரு கோடியே நாற்பத்து நான்கு இலட்சம் மதிப்பீட்டில் மலைப்பாதை சீரமைக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம் மற்றும் நகர், அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில் மலைப்பாதை ரூபாய் 90 இலட்சம் மதிப்பீட்டில் அகலப்படுத்துதல், சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், வட சென்னிமலை, அருள்மிகு பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயில் மலைப்பாதை ரூபாய் 54 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைத்தல் ஆகிய பணிகள், திருக்கோயில் நிதி/துறை நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

19. தருமபுரி மாவட்டம், அதியமான்கோட்டை, அருள்மிகு காலபைரவர் திருக்கோயிலில் பக்தர்களின் வசதிக்காக ரூபாய் ஐம்பது இலட்சம் மதிப்பீட்டில் இரும்புத் தள நடைபாதை அமைக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்

ஆணையின்படி, தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், அதியமான்கோட்டை, அருள்மிகு சென்றாயசுவாமி சோமேஸ்வரர் வகையறா காலபைரவர் திருக்கோயிலில் பக்தர்கள் வசதிக்காக ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் இரும்புத் தள நடைபாதை திருக்கோயில் நிதியிலிருந்து அமைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் ஆகியோரின் வழிகாட்டுதலுடனும், நான் இந்த மாமன்றத்தில் வைத்துள்ள கருத்துகள் அனைத்தும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மனநிறைவை அளித்திருக்கும் என நம்புகிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் அளித்துள்ள வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தையும் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிலுரை. மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணிலடங்கா வெற்றிகளை என் தமிழ்நாட்டினிலே அண்ணாவின் வழி நின்று ஈட்டிய அன்புத் தலைவர் முதல்வரென்றும், தமிழ்நாட்டுப் புதல்வரென்றும் பெயர்பெற்ற பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போயஸ் கார்டனிலிருந்து புறப்பட்ட மாண்புமிகு அம்மா அவர்களை வழிநெடுக வணங்கி, வரவேற்ற மக்கள் கூட்டம், இன்றைக்கும் நினைவில் வரும். அவர், சட்டமன்ற வளாகம் வரும்வரை வழிநெடுக அணி வகுத்து, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களை இருகரமும் கூப்பிநின்று வரவேற்கக் காத்திருப்பர். அந்நேரம், மாண்புமிகு அம்மா அவர்களின் பார்வை தம்மீது விழுமா என்று ஏங்கிக் காத்திருந்த காலமும் உண்டு. அவற்றையெல்லாம் நினைக்குங்கால், இதயம் அழுகின்றது. இருவிழிகளிலும் கண்ணீர் வழிகின்றது. எம்.ஜி.ஆர். கண்ட ஏற்றமிகு இயக்கத்திற்கு தன் இமை துஞ்சா உழைப்பால், இணையற்ற ஆற்றலினால்,

ஈடில்லா வெற்றிகளைப் பெற்றுத்தந்த ஒப்பிலாத் தாயே! தமிழக மக்களின் நெஞ்சமதில் நீக்கமற நிறைந்திருக்கும் தெய்வத் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) ஆறாம் முறையாக, தமிழ்நாடு முதலமைச்சர் அரியணையில் அமர்ந்து சாதனைகள் பல படைத்த சரித்திரத் தாயே! உழைப்போரைத் தேடித் தேடி உயர்வளித்த உன்னதத் தாயே! காஞ்சியில் 40 ஆண்டுகளுக்கு ஒருமுறை அத்திவரதர் திருமுகம் காட்டுவார். ஆயிரம் ஆண்டுகள் தவம் இருந்தாலும், தாயே! அம்மா, இனி உங்கள் ஒளி முகத்தை என்று காண்போம்? மாண்புமிகு அம்மா அவர்களே, தொண்டனாய்ப் பலகாலம் இருந்த என் தொண்டினை ஆய்ந்தறிந்து, அன்றைக்கு தொலைநோக்குப் பார்வையாலே அளந்தறிந்து, அமைச்சராய் ஆக்கிய அன்புத் தெய்வமே! குடமுள் விளக்காய் இருந்த என்னை, திருச்சியிலிருந்து தேர்வு செய்து புடம்போட்ட தங்கமாய் பல்வேறு தடந்தோறும் புரட்டிப் புரட்டிப் பயிற்றுவித்து ஆளாக்கி, மனுவாக்கி, அமைச்சரும் ஆக்கி வைத்தப் பெருமை உம்மையே சாரும். எத்துணைச் செயல் செய்தால் இத்துணை உயர்வுரலாம் என்பதற்கு எனையிங்கு எடுத்துக்காட்டாய் விட்டுவிட்டு, மறைந்திட்டாயே, தாயே! உம் காலைத் தொட்டு வணங்குவதற்கு தினந்தோறும் தொடர்ந்து அவை வந்தும், எனக்கு உம் தரிசனம் கிட்டவில்லை, என்றாலும், உம் கரிசனம் என்மீது இருந்ததனை எண்ணிக் கலங்குகின்றேன். மாண்புமிகு அம்மா அவர்களே, உமை நினைந்து பணிந்து வணங்குகிறேன். வானிருந்து ஆசியை நீங்கள் எனக்கு வழங்குவதைப் பார்த்தவனாய், நான் நின்று என் உரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாய் மறைந்த பின்னாலே தமிழகத்தைத் தாங்கிப் பிடித்தவர்தாம், மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் மற்றும் மாண்புமிகு அண்ணன் ஓ.பி.எஸ். ஆகியோர். (மேசையைத் தட்டும் ஒலி) கண்ணிரண்டாய்க் கட்சிக்கும், ஆட்சிக்கும், இருவரும் இருக்கின்றார்கள். ஒட்டிப் பிறவா இரட்டையர்கள் இவர்கள், ஒரு கொடியில் பூத்த இரு மலர்கள். ஒற்றை வாத்தியத்தின் இரு நாதம். ஏற்றதொரு ஆட்சியினை, ஏற்றமுடன் இருவருமாய் நல்குகின்றார்கள். அம்மாவின் பாதையிலே, இவர் தடத்தைப் பதித்தவாறு இரட்டைக்குழல் துப்பாக்கியாய் ஆட்சிக்கும், கட்சிக்குமாய் இயங்குகின்றார்கள். என் இதயம் போற்றும் இருவரையும் வணங்கி மகிழ்கின்றேன்.

இரவு 7–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்நாளும் இல்லாத இடையூறை இந்நாளில் சந்தித்து, எதிர்கொள்ளும் இன்னலுக்கு ஆளானபொழுதும்கூட, சின்னதொரு சிக்கலும் வாராமல், ஆளும் கட்சியென்றும், எதிர் அணியாய்ச் சூழும் கட்சியென்றும் எண்ணிப் பாராமல், அம்மா காட்டிய வழிநின்று சமநீதி, சமத்துவம் எனும் முறையில் சபையை சமமாக நடத்திவரும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! தங்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தங்களுடன் தோளோடு தோள் நின்று துணை நிற்கும் மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றியுள்ள மாநிலங்கள் தம் கண்ணால், வியந்து சுற்றிச் சுற்றிப் பார்க்கும் வண்ணம் சுற்றுலாத் துறை வளர்ந்து நிற்கின்றது. சுற்றுலாத் துறை வெற்றிச் சூட்சுமத்தை எமக்குக் கற்றுத் தந்தவர், நம் அம்மா அவர்கள். சுற்றுலாத் துறையின் வெற்றிச் சரித்திரத்தை வீறுடன் நான் உரையாற்றுகையில், இங்கு மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார், மாண்புமிகு அண்ணன் ஓ.பி.எஸ். ஆகியோரை எங்களுக்குத் தந்து, வானிருந்து நோக்கும் தாயே, சற்றெமக்கு நேரில் வந்து ஆசி தந்து மற்றெதையும் வென்றெடுக்கும் மந்திரத்தையும் சொல்லும் தாயே, மனம் மகிழ்வோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய வரலாற்றிலேயே சுற்றுலாப் பயணிகளை அமைதி, வளம், வளர்ச்சி என்ற மந்திரச் சொற்களால் தமிழகம் பக்கம் கொண்டு வந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தமிழக சுற்றுலாத் துறை பல்வேறு வளர்ச்சிகளைப் பெற்று மின்னி மிளிர்கிறது என்பதை இங்கே மகிழ்வோடு பதிவு செய்கின்றேன். இன்று இறுக்கமான வாழ்க்கை முறையால் மனிதர்கள் புதிய இடங்களைக் காண வேண்டும் என்கிற ஆவல் சுற்றுலாவிற்கான தேவையை அதிகரித்துள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிய கண்டத்திலேயே சுற்றுலாவிற்கு ஏற்ற நாடு இந்தியா. இந்தியாவிலேயே, சுற்றுலாவிற்கு உகந்த மாநிலம் தமிழகம். கலைக்கும், கலாச்சாரத்திற்கும் பெயர் பெற்ற தமிழ்நாட்டில், கோயில் கட்டடக் கலைகள், பாரம்பரிய இசை, நாடகம்,

கிராமியக்கலை மற்றும் நுண்கலை ஆகியன போற்றத்தக்க வகையில் உள்ளன. மேலும், தமிழ்நாட்டிலுள்ள கோயில் நகரங்கள் மற்றும் பாரம்பரியத் தலங்கள், புராதனச் சின்னங்கள், நினைவிடங்கள், கோட்டைகள், மலை வாழிடங்கள், அருவிகள், தேசிய வனவிலங்குப் பூங்காக்கள், கடற்கரைகள், உள்ளூர் உணவு வகைகள், இயற்கைச் சூழல், உலகத்தரம் வாய்ந்த மருத்துவம், சாகசங்கள், மத நல்லிணக்கம், சீரான சட்டம்–ஒழுங்கு மற்றும் வன உயிரினங்கள் ஆகியன சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவர்வனவாக உள்ளன.

யுனெஸ்கோவால் அறிவிக்கப்பட்ட ஐந்து உலக பாரம்பரியச் சின்னங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய பெருநகரங்களில் உள்ள பன்னாட்டு விமான முனையங்களும், சென்னை மற்றும் தூத்துக்குடி ஆகிய பெருநகரங்களில் அமைந்துள்ள பெரும் துறைமுகங்களும், தமிழ்நாட்டினை, நாட்டின் பிற பகுதிகளுடனும், உலகின் அனைத்துப் பகுதிகளுடனும் இலகுவாக இணைக்கின்றன.

தவிரவும், தமிழ்நாட்டில் அமைந்துள்ள சிறப்பான சாலை வசதிகள், போக்குவரத்து வாகன வசதிகள், தங்கும் இடங்கள், உணவகங்கள் ஆகியன சுற்றுலாப் பயணிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். இத்தகைய வசதிகள் தமிழ்நாட்டை, இந்தியாவிலேயே மிகவும் விரும்பத்தக்க சுற்றுலாத் தலமாக உருவாக்கியுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்ந்த இலக்கும், குறிக்கோளும் கொண்டு தமிழக சுற்றுலாத் துறையில் மாற்றங்களையும், புதுமைகளையும் செய்த பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கே உண்டு. தமிழ்நாட்டினை, தேசிய மற்றும் உலகளவில் சிறப்பும், முன்னுரிமையும் பெற்ற ஒரு சுற்றுலாச் செல்லுமிடமாக மேம்படுத்துதல், தமிழ்நாட்டில் புதிய சுற்றுலா கட்டமைப்பு வசதிகள் உருவாக்குதல் மற்றும் ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டுள்ள சுற்றுலா உள்கட்டமைப்பினை மேம்படுத்தி வலுப்படுத்துதல், தொன்று தொட்டு விளங்கும் வளமான மற்றும் கலாச்சார பாரம்பரியம், நினைவுச் சின்னங்களிலுள்ள கட்டடக் கலையின் சிறப்புகளை காட்சிப்படுத்தி பிரபலப்படுத்துதல், அதிகம் அறியப்படாத சுற்றுலாத் தலங்களைக் கண்டறிந்து, சுற்றுலாவினை மேம்படுத்துதல், நாட்டின் அந்நியச் செலாவணியைப் பெருக்குதல், சுற்றுலாத் தொழில் துறையினரை ஊக்குவித்தல் மற்றும் உள்ளூர் மக்களை சுற்றுலா வளர்ச்சியில் பங்குகொள்ளச் செய்தல்,

உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் நடைபெறும் சுற்றுலாச் சந்தைகள், விளம்பர முகாம்கள் மற்றும் கண்காட்சிகளில் பங்குகொள்ளுதல். சுற்றுலாத்தல மேலாண்மைக்கு திறன் வளர்ப்பு மற்றும் மனித வள மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்குதல்; இத்தகைய யுத்திகள் கையாளப்படுவதன்மூலம் தமிழ்நாட்டிற்குப் பெருமளவில் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வருகை புரிகின்றனர்.

இரவு 7–20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2014, 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் உள்நாடு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வருகையில் தமிழ்நாடு முதலிடத்தைப் பெற்றுள்ளது என்பது நாம் பெருமைப்படத்தக்க ஒன்றாகும். (மேசையைத் தட்டும் ஒலி) சிறப்பான விளம்பர யுத்திகளைக் கையாண்டதாலும், உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் நடைபெற்ற சுற்றுலாச் சந்தைகளில் சுற்றுலா தொழில்முனைவோரைப் பங்குபெறச் செய்ததன் பயனாகவும், 2018 ஆம் ஆண்டில் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை 3,859.09 இலட்சம் அளவிற்கும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 60.73 இலட்சம் அளவிற்கும் அதிகரித்துள்ளது. 1992 ஆம் ஆண்டு முதல் மாமல்லபுரத்தில் ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர், ஜனவரி மாதங்களில் இந்திய நாட்டிய விழா நடத்தப்பட்டு வருகின்றது. 2018–2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற இந்திய நாட்டிய விழாவை சுமார் 1,30,000 உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளும், 19 ஆயிரம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் கண்டு மகிழ்ந்துள்ளனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத்தரம் வாய்ந்த சுற்றுலாத்தலமாக தமிழ்நாட்டை முன்னிலைப்படுத்தும் நோக்குடன் தமிழ்நாடு சுற்றுலாத் துறை உள்நாட்டுப் பயணச் சந்தைகளிலும், சர்வதேச சுற்றுலாச் சந்தைகளிலும் பங்கேற்று வருகின்றது. அம்மாவின் ஆசியினாலும், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். ஆகியோரின் வழிகாட்டுதலுடன் தமிழக சுற்றுலாத் துறை, தமிழ்நாட்டில் சுற்றுலாவை மேம்படுத்த பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. குறிப்பாக, சுற்றுலா மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை உருவாக்கும் நோக்கத்துடன், தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் உலகச் சுற்றுலா தினம் ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் திங்கள் 27 ஆம் நாளன்று கொண்டாடப்பட்டு வருகிறது. அதனையொட்டி

தூய்மைப் பிரச்சாரம், சுற்றுலா விழிப்புணர்வு பேரணி, கலாச்சார நிகழ்ச்சிகள் மற்றும் கருத்தரங்குகள் ஆகியன நடத்தப்படுகின்றன.

தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலா வளங்களை சரியான முறையில் பிரபலப்படுத்த, சுற்றுலா சார்ந்த முக்கிய இதழ்கள், வெளிநாட்டு இதழ்கள் மற்றும் வெளிநாட்டு விமானங்களில் வழங்கப்படும் இதழ்கள், உள்நாட்டு விமான இதழ்கள் மற்றும் பயண இதழ்கள் ஆகியவற்றில் தமிழக சுற்றுலாத் தலங்கள் பற்றிய தகவல்கள்/ விவரங்கள் விளம்பரப்படுத்தப்படுகின்றன. விமான நிலையங்கள் மற்றும் இரயில் நிலையங்களில் புதிய விளம்பர உத்தியான மின்னணு விளம்பரத்தையும் இத்துறை முயற்சித்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி மாவட்டம், துவாக்குடியில் 1–10–1981 அன்று நிறுவப்பட்ட உணவு கைவினைத்தொழில் நிறுவனம், மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்நுட்பவியல் நிறுவனமாக 15–12–1998 அன்று தரம் உயர்த்தப்பட்டு, உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்நுட்பம் குறித்த மூன்றாண்டுப் பட்டப்படிப்பும், உணவுத் தயாரிப்பு, உணவு மற்றும் பானங்கள் பரிமாறுதல், தங்குமிடம் பராமரிப்பு, அடுமனைப்பொருட்கள் மற்றும் இனிப்பு வகைகள் செய்தல் ஆகியவற்றில் ஒன்றரை ஆண்டு பட்டயப்படிப்பும், சான்றிதழ் படிப்பும் மற்றும் Hunar Se Rozgar திட்டத்தின்கீழ் குறுகியகாலப் பயிற்சிகளும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ், சுற்றுலாப் பயணிகளுக்கு இக்கட்டான காலங்களில் உதவவும், பாதுகாப்பு வழங்கவும், சுற்றுலா பாதுகாப்பு அமைப்பு துவக்கப்பட்டு, மாமல்லபுரம், உதகமண்டலம், கொடைக்கானல், இராமேஸ்வரம், கன்னியாகுமரி ஆகிய சுற்றுலாத் தலங்களில் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு அம்மா காட்டிய வழியைப் பின்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். ஆகியோர் தந்த முழு ஒத்துழைப்பால், தமிழகத்தின் முக்கிய சுற்றுலாத் தலங்களில் சுற்றுலா அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. 2018–2019 ஆம் ஆண்டில் உள்கட்டமைப்பு வசதிகளுக்காக ரூ.628.03 இலட்சமும், சுற்றுலாத் தலங்களுக்குச் செல்லும் சாலைகள் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு

ரூ.1,063.99 இலட்சமும் ஒப்பளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

இரவு 7–25

இந்திய அரசின் சுற்றுலா அமைச்சகம் புனித யாத்திரை புத்தாக்கம் மற்றும் ஆன்மிக பெருக்கத் திட்டத்தின்கீழ் காஞ்சிபுரம் மேம்பாட்டிற்காக ரூ.1,647.67 இலட்சமும், வேளாங்கண்ணி மேம்பாட்டிற்காக ரூ.560.08 இலட்சமும் ஒப்பளிப்புச் செய்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் பல்வேறு அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு முடிவடையும் தருவாயில் உள்ளன.

மத்திய அரசின் சுற்றுலா அமைச்சகம் அறிமுகப்படுத்திய "சுதேஷ் தர்ஷன்" திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் உள்ள எட்டு முக்கிய கடற்கரைச் சுற்றுலாத் தலங்களை மேம்படுத்த ரூ.99.91 கோடி ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் நிலச் சீரமைப்பு, மின் விளக்கு வசதி, பொதுக் கழிப்பிடங்கள், சாலையோர வசதிகள், கண்காணிப்புக் கோபுரங்கள், நடைபாதை மேம்பாடு, கடற்கரை மேம்பாடு, கண்காணிப்பு கேமரா பொருத்துதல், தகவல் பலகைகள், முதலுதவி வசதி ஏற்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுறும் நிலையில் உள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்ற குறளுக்கு இலக்கணமாய் வாழ்ந்த நம் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் வகுத்துத் தந்த பாதையில், (மேசையைத் தட்டும் ஒலி) நமது வெற்றியை நாளைய சரித்திரம் சொல்லும் என்ற திண்மையுடனும், தீரத்துடனும், மாண்புமிகு முதலமைச்சர் அன்பு அண்ணன் எடப்பாடியார் தலைமையில், மாண்புமிகு துணை முதலமைச்சர் அன்பு அண்ணன் ஓ.பி.எஸ். அவர்கள் தோன்றா துணையாய் விளங்க செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசு, 2018–2019 ஆம் ஆண்டு இரண்டு விருதுகளைப் பெற்றுள்ளது என்பதனை பெரும் மகிழ்ச்சியுடன் இப்பேரவையில் பதிவு செய்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"இந்தியா டுடே" குழுமம், 2018 ஆம் ஆண்டில் "சுற்றுலாவில் சிறந்த செயல் திறன் மிக்க மாநிலமாக" தமிழ்நாட்டைத் தெரிவு

செய்து, விருது வழங்கியது. இவ்விருதினை மேதகு இந்திய துணைக் குடியரசுத் தலைவர் அவர்களிடமிருந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அன்பு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் 22–11–2018 அன்று புது தில்லியில் பெற்றார்கள். அதேபோன்று பட்வா "சிறந்த பாரம்பரிய சுற்றுலா மாநிலம்" என்ற சர்வதேச பயண விருதை 7–3–2019 அன்று ஜெர்மனி நாட்டின் பெர்லின் நகரில் நடைபெற்ற பன்னாட்டு சுற்றுலாச் சந்தையில் வழங்கியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக சுற்றுலாத் துறை மேற்கொண்டு வரும் பணிகள் சிலவற்றை இப்பேரவைக்குத் தெரியப்படுத்த கடமைப்பட்டிருக்கிறேன். அந்தவகையில், ரூ.288 கோடி மதிப்பீட்டில் பொருட்கள் மற்றும் பணிகளை உள்ளடக்கிய 14 துணைத் திட்டப் பணிகளுக்கான தமிழ்நாட்டிற்கான சுற்றுலா உள்கட்டமைப்பு மேம்பாட்டு மூலதனத் திட்டம் தொகுதி–4 ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் தயாரிக்கப்பட்டு, 10 தொகுப்புகளுக்கான ஒப்பந்தங்கள் முடிவு செய்யப்பட்டு, பணிகள் துவக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 4 தொகுப்புகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன.

தமிழ்நாட்டிலுள்ள 32 மாவட்டங்களிலும் உள்ள பள்ளி மாணவ, மாணவியருக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க உள்ளூர் சுற்றுலா மையங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த ரூ.64 இலட்சம் செலவில் பயிற்சிகள் நடத்தப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் உள்ள அனைத்து முக்கிய சுற்றுலாத் தலங்களில் ஓட்டல்கள் நிறுவுதல், பல்வகையான சுற்றுலாக்களை நடத்துதல், படகுக் குழாம்கள் நடத்துதல், சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை நடத்துதல் போன்ற சுற்றுலா சேவைகளை வழங்கிடும் நோக்கத்துடன், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தொடங்கப்பட்டது. இக்கழகத்தின்கீழ், தற்சமயம் 53 தொடர் தங்கும் விடுதிகளும், 12 சொகுசுப் பேருந்துகளும் உள்ளன. இக்கழகம், உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் ஏற்காடு போன்ற மலைவாழ் சுற்றுலாத் தலங்களில், மாணவர்கள் மற்றும் குறைந்த வருவாய் உள்ள சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை நிறைவு செய்திட, இளைஞர்கள் தங்கும் விடுதிகளையும் நடத்துகிறது.

சுற்றுலாப் பயணிகள்/விருந்தினர்களின் எதிர்பார்ப்புகள் மற்றும் தேவைகளை நிறைவேற்றுவதற்காக, தமிழ்நாடு சுற்றுலா

வளர்ச்சிக் கழகம், தனது நிருவாகத்தின் கீழுள்ள அனைத்து ஓட்டல்களின் தரத்தையும் மேம்படுத்துவதற்கான முயற்சிகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், முட்டுக்காடு, முதலியார்குப்பம், உதகமண்டலம், பைக்காரா, கொடைக்கானல், ஏற்காடு, பிச்சாவரம் மற்றும் குற்றாலம் ஆகிய இடங்களில் படகுக் குழாம்களை இயக்கி வருகிறது.

சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்கும் வகையில், அனைத்து படகுக் குழாம்களிலும் படகு சவாரியின்போது சுற்றுலாப் பயணிகள் உயிர்க் கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இரவு 7–30

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், 12 சொகுசுப் பேருந்துகளைக் கொண்டு அரை நாள் முதல் 14 நாட்கள் வரையிலான 38 சுற்றுலாக்களை நடத்தி வருகிறது. இந்த சுற்றுலாக்களில் திருப்பதி சுற்றுலா, 3 நாட்கள் நவக்கிரக சுற்றுலா, 8 நாட்கள் தமிழ்நாடு சுற்றுலா மற்றும் 8 நாட்கள் கிழக்கு–மேற்கு கடற்கரைச் சுற்றுலா ஆகியவை சுற்றுலாப் பயணிகளிடையே மிகவும் பிரபலமானதாகும். இச்சுற்றுலாக்களைத் தவிர, குழுவாகச் செல்ல தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அவர்களுக்கேற்ற ஆயத்தச் சுற்றுலாக்களையும், அரசு ஊழியர்களுக்கான விடுப்புப் பயணச் சலுகை சுற்றுலாக்களையும் ஏற்பாடு செய்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்களில் விடுமுறை இல்ல வசதி" திட்டத்தின்கீழ் ஏர் இந்தியா நிறுவனத்துடன் கடன் அடிப்படையில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், ஏப்ரல் திங்கள் 2018 முதல் மார்ச் திங்கள் 2019 வரை ரூ.12.13 இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளது. மேலும், "முன் வைப்புத் தொகை அறை ஒதுக்கும் திட்டத்தின்"மூலம் ஒப்பந்தம் செய்யப்பட்டு வைப்புத் தொகையாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், ரூ.180.00 இலட்சம் அளவில் வருவாய் ஈட்டியுள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்கள், சுற்றுலாக்கள் மற்றும் படகுக் குழாம்களை சந்தைப்படுத்தும்

நோக்கத்தோடு "சந்தைப்படுத்தும் பிரிவு" ஒன்று பிரத்யேகமாக உருவாக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வருவாய், ஆன்லைன் வசதிமூலம் ஒவ்வொரு வருடமும் அதிகரித்து வருகிறது. 2018–2019 ஆம் ஆண்டில் இணையதள முன்பதிவுமூலம் ஈட்டிய வருவாய் ரூ.14 கோடியாகும். கடந்த ஆண்டு ஈட்டிய வருவாய் ரூ.12.80 கோடியாகும்.

தற்போதைய சுற்றுலாத் தகவல்கள் மற்றும் நிகழ்வுகளை சுற்றுலாப் பயணிகள் அறியும் வண்ணம் சமூக வலைதளங்களான Facebook, Twitter, Youtube மற்றும் Instagram ஆகியவைமூலம் "டிஜிட்டல் சந்தைப்படுத்துதல்" உருவாக்கப்பட்டு, 2018–2019 ஆம் வருடத்தில் சுற்றுலா நிகழ்வுகள் Facebook மூலம் பிரச்சாரம் செய்யப்பட்டதில் 1.30 கோடி மக்களைச் சென்றடைந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய அளவிலும், பன்னாட்டு அளவிலும் மிகவும் விரும்பத்தக்க சுற்றுலா செல்லுமிடமாக தமிழ்நாடு விளங்கும் வகையில் அனைத்து நடவடிக்கைகளும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அலைமகளே அம்மாவைத் தாலாட்டிப் பாராட்ட, கலைமகளாம் நம் தாயின் காற்சுவட்டைப் பின்பற்றி, நடைபோடும் தமிழ்நாடு சுற்றுலாத் துறை, பிறர் எடைபோடா அளவிற்கு உயர்ந்தோங்கி நிற்கிறது. இன்னும் அது வானுயர வளர்ந்தோங்கும் என்பதிலே சின்னதொரு ஐயமுமே எவரும் கொள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி)

அன்றைக்கு நம் அம்மா சுற்றுலாத் துறைமீது வைத்திருந்த ஆர்வம் மற்றும் அக்கறையினாலும், அவர் எங்களுக்குச் சொல்லித் தந்த பாடத்தினாலும், அறிவுரையாலும், இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களும் தரும் ஊக்கத்தினாலும், ஆக்கத்தினாலும், தமிழக சுற்றுலாத் துறை வெற்றிப் பாதையில் வீறு நடைபோட்டு வருகிறது என்பதனைப் பெருமையுடன் இப்பேரவையில் பதிவு செய்து, இதன் சீரான பணிகளுக்கு சிரத்தையுடன் தோள் கொடுத்து துணை நிற்கும் மாண்புமிகு அருமை அண்ணன் முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் சுற்றுலாத் துறை அலுவலர்கள் உள்ளிட்ட

அத்துணை நல்ல உள்ளங்களுக்கும் நன்றி கூறி, அறிவிப்புகளைத் தொடங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எங்களை அரியாசனம் அமர்த்தி, அழகு பார்த்துவிட்டு, அவையில் இல்லாமல் ஏதும் அறியாததுபோல் அயர்ந்து துயில்கொள்ளும், அறிவு மேதையே! விடியலை நாட்டுக்குத் தந்தாய், ஆனால், விடியும் முன்னே எங்களை விட்டு விரைந்து விட்டாய், தாயே! பன்னூறு முறை உம்மைப் போற்ற வந்தோம், கண்ணீரில் மிதக்கின்றோம், கண் விழித்து வருவீரோ? என்றுவரை செங்கதிரில் ஒளியிருக்கும், என்றுவரை வெண்ணிலவில் குளிரிருக்கும், என்றுவரை கடலினிலே நீரிருக்கும் அன்றுவரை உம் புகழும் நிலைத்திருக்கும் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியோடும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அனுமதியோடும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அருமை அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களின் அனுமதியோடும் துறைக்கான புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

இரவு 7–35

அறிவிப்புகளின் முக்கிய அம்சங்களை மட்டும் இப்பேரவையில் அறிவிக்கின்றேன். இதுபற்றிய முழுமையான விவரங்கள் அவைக்கு புத்தக வடிவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதை அறிவித்ததாக ஏற்று பதிவு செய்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அறிவிப்புகள்

1. பள்ளி மாணாக்கர்களுக்கு சுற்றுலாவைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மாவட்ட அளவிலான உள்ளூர் சுற்றுலாவை ஏற்பாடு செய்தல்

கடந்த இரண்டு ஆண்டுகளில் பள்ளி மாணாக்கர்களுக்கு சுற்றுலாவைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும்வகையில், அவர்களது சொந்த மற்றும் அருகிலுள்ள மாவட்டங்களில் அமைந்துள்ள சுற்றுலாத் தலங்களைக் கண்டு மகிழ நடத்தப்பட்ட சுற்றுலா, அவர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றது. அதேபோல் இந்த ஆண்டும், பள்ளி மாணாக்கர்களுக்கு ஒரு நாள் சுற்றுலா சென்று வருவதற்கு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சுற்றுலாத் துறைமூலம் மாவட்டம் ஒன்றிற்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் வீதம் 32 மாவட்டங்களுக்கு மொத்தம் 64 இலட்சம் ரூபாய் செலவிடப்படும்.

2. 2019 ஆம் ஆண்டு உலக சுற்றுலா தின விழாவினை சேலத்தில் (மாநில அளவில்) கொண்டாடுதல்

ஐக்கிய நாடுகள் உலக சுற்றுலா அமைப்பு, சுற்றுலா பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் 27 ஆம் நாள், உலக சுற்றுலா தினமாக கொண்டாடி வருகிறது. ஒவ்வோர் ஆண்டும் அனைத்து மாவட்டங்களிலும் சுற்றுலாத் துறையால் உலக சுற்றுலா தினம் கொண்டாடப்படுகிறது. அப்போது, மாநில அளவில் ஏதேனும் ஒரு முக்கிய நகரத்திலும் இவ்விழா கொண்டாடப்படும். இவ்வாண்டு உலக சுற்றுலா தின விழா மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மாநில அளவில் சேலத்தில் கொண்டாட 25 இலட்சம் ரூபாய் நிதி ஒப்பளிப்பு வழங்கப்படும்.

3. சுற்றுலா அலுவலகக் கட்டடங்களைப் புனரமைத்தல்

திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி, கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் ஆகிய இடங்களில் உள்ள சுற்றுலா அலுவலகங்கள் சொந்த கட்டடங்களில் சுமார் 15 ஆண்டுகளுக்கும் மேலாக செயல்பட்டு வருகின்றன. இந்தக் கட்டடங்கள் புனரமைக்கப்பட வேண்டும். எனவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மேற்காணும் அலுவலகங்களில் மொத்தம் 100 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

4. சிதம்பரம் சுற்றுலா அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல்

“பூலோக கைலாசம்” என்று அழைக்கப்படும் கடலூர் மாவட்டம், சிதம்பரம் ஆன்மிக சுற்றுலாவிற்கு பெயர் பெற்ற நகரமாகும். சிதம்பரம் ஓட்டல் தமிழ்நாடு வளாகத்தில், முப்பது ஆண்டுகளுக்கு மேலாக சுற்றுலா அலுவலகம் இயங்கி வருகிறது. இக்கட்டடம் தற்போது சிதிலமடைந்த நிலையில் உள்ளது. எனவே,

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சிதம்பரத்தில், புதிய சுற்றுலா அலுவலகம் 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

5. படகு இல்லங்களை மேம்படுத்துதல்

(அ) பைக்காரா படகு இல்லத்தில் மிதவை படகு தளம் அமைத்தல்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டில் 8 படகு இல்லங்கள் இயங்கி வருகின்றன. நீலகிரி மாவட்டத்தில் உள்ள பைக்காரா படகு இல்லத்தில், ஏரி நீரின் அளவு அவ்வப்போது மாறுபடுவதன் காரணமாக மிதவை படகு தளம் அமைக்கப்பட்டுள்ளது. அப்படகு இறங்கு தளமானது தற்போது சேதமடைந்துள்ளது. எனவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இந்த மிதவை படகு தளம் 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படும்.

(ஆ) கொடைக்கானல் படகு இல்லம் (அலகு–II)–ல் மேம்பாட்டுப் பணிகள்

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டில் இரண்டு படகு இல்லங்கள் இயங்கி வருகின்றன. கொடைக்கானல் படகு இல்லம் (அலகு–II)–ஐ தனியார் படகு இல்லத்திற்கு இணையாக மேம்படுத்தும் வகையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அலுவலகம், இறங்கு தளம் மற்றும் படகு இல்லத்தில் உள்ள படிகள் 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

6. ஓட்டல் தமிழ்நாடு, திருத்தணியில் கூடுதல் கழிவறைகள் கட்டுதல்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்பட்டு வரும் திருத்தணியில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு, திருப்பதிக்கு செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்மூலம் நடத்தப்படும் ‘‘திருமலை–திருப்பதி’’ சுற்றுலாவில் அதிக சுற்றுலாப் பயணிகள் இளைப்பாறும் பொருட்டும் இந்த விடுதி செயல்பட்டு வருகிறது.

இங்கு தற்போதுள்ள கழிவறைகள் சுற்றுலாப் பயணிகளுக்கு போதுமானதாக இல்லாத காரணத்தினால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இரண்டு கூடுதல் கழிவறைகள் 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்படும்.

7. உதகமண்டலம், ஒட்டல் தமிழ்நாடு வளாகத்தில் தார்ச் சாலை அமைத்தல்

நீலகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டில் உள்ள, உதகமண்டலம் ஓட்டல் தமிழ்நாட்டில் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக 65 அறைகள் உள்ளன. இத்தங்கும் விடுதி வளாகத்தில் உள்ள சாலையில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 8 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தார்ச் சாலை அமைக்கப்படும்.

8. உதகமண்டலம், இளைஞர் விடுதியில் மேம்பாட்டுப் பணிகள்

(அ) உதகமண்டலம், இளைஞர் விடுதியில் உள்ள 25 படுக்கை வசதிகள் கொண்ட பலர் தங்கும் துயில் கூட அறையினை 2 குடும்ப அறைகளாக மாற்றியமைத்தல்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ், உதகமண்டலத்தில் இளைஞர் விடுதி உள்ளது. தற்போது சுற்றுலாப் பயணிகள் தனி அறைகளில் தங்குவதையே அதிகம் விரும்புகின்றனர். எனவே, பலர் தங்கும் துயில் கூட அறைகளின் தேவை மிகவும் குறைவாக உள்ளது. சுற்றுலாப் பயணிகளின் தேவைக்கேற்ப வசதிகளை மேம்படுத்தும்பொருட்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 25 படுக்கை வசதிகள் கொண்ட பலர் தங்கும் துயில் கூட அறைகள், 2 குடும்ப அறைகளாக 9 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மாற்றியமைக்கப்படும்.

(ஆ) உணவகம் மற்றும் சமையலறை–புனரமைத்தல்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டில் உதகமண்டலத்தில் உள்ள இளைஞர் விடுதி

கட்டடத்தில் இயங்கிவரும் உணவகம் மற்றும் சமையலறை புனரமைக்கப்பட வேண்டும். ஆகையால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உணவகம் மற்றும் சமையலறை புனரமைக்கப்படும்.

9. ஓட்டல் தமிழ்நாடு, கோயம்புத்தூரில் 14 அறைகளைப் புனரமைத்தல்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டில் கோயம்புத்தூரில் உள்ள ஓட்டல் தமிழ்நாட்டில், சுற்றுலாப் பயணிகளின் தங்கும் வசதியை மேம்படுத்த, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 14 அறைகள் 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்படும்.

10. ஓட்டல் தமிழ்நாடு, மதுரை (அலகு–1)–ல் 10 அறைகளைப் புனரமைத்தல்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு, மதுரை (அலகு–1)–ல் சுற்றுலாப் பயணிகளின் தங்கும் வசதியை மேம்படுத்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 10 அறைகள் 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்படும்.

11. ஓட்டல் தமிழ்நாடு, திருச்சியில் 10 அறைகளைப் புனரமைத்தல்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டில் உள்ள திருச்சி, ஓட்டல் தமிழ்நாட்டில், சுற்றுலாப் பயணிகள் தங்கும் வசதியை மேம்படுத்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 10 அறைகள் 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்படும்.

12. ஓட்டல் தமிழ்நாடு, தஞ்சாவூரில் 12 அறைகளின் குளியல் அறைகளைப் புனரமைத்தல்

தஞ்சாவூருக்கு ஆண்டு முழுவதும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருகை

புரிகின்றனர். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டில் உள்ள, தஞ்சாவூர் ஓட்டல் தமிழ்நாடு பாரம்பரிய கட்டடத்தில் இயங்கி வருகிறது. இங்கு சுற்றுலாப் பயணிகள் தங்கும் வசதியை மேம்படுத்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 12 அறைகளில் உள்ள குளியலறைகள் 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்படும்.

13. உதகமண்டலத்தில் உள்ள கூடுதல் படகு இல்லத்தில் இரண்டு உலர் கழிவறை வசதிகள் ஏற்படுத்துதல்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டில் நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் இரண்டு படகு இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. இங்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளுக்கு சுகாதாரமான கழிவறை வசதியை ஏற்படுத்தித்தரும் பொருட்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இரண்டு உலர் கழிவறைகள் (Bio Toilet) 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

மாண்புமிகு மறைந்த தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசிகளோடும், கழகத்தினுடைய இணை ஒருங்கிணைப்பாளர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அருமை அண்ணன் எடப்பாடியார் மற்றும் கழகத்தினுடைய ஒருங்கிணைப்பாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுடைய நல்லாசியோடும் நான் இந்த மாமன்றத்தில் வைத்த கருத்துகள், மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மன நிறைவை அளித்திருக்கும் என நம்புகின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் வழங்கிய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொண்டு, எனது உரையினை இத்துடன் நன்றியோடு நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத்

தலைவர் அவர்களே, ஆயிரம் கரங்கள் நீட்டி, அணைத்திடும் தாய்போல், எங்களைக் காத்து நிற்கும் கலை தெய்வமாம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். பண்பின் இலக்கணமாய், பண்பாட்டின் காவலராய், இந்தத் துறையில் பணிபுரிய வாய்ப்பளித்த முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி. உள்ளத்தில் உண்மையொளி ஊற்றெடுத்து நிற்பதனால், வாக்கில் ஒளி படைத்த துணை முதல்வர் அண்ணன் அவர்களுக்கும் நல் வணக்கங்கள். அமைச்சகம் இல்லாத மூன்று சிறு துறைகளுக்கும் மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த சமன்செய்து சீர்தூக்கும் துலாக்கோல் போல் இந்த அவையை நடத்தி வரும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் துறைகளில் முதலில் நான் பேச ஆரம்பித்தபோது—இளம் வயதில் முதல்வராகி அம்மா அவர்கள் 1991 ஆம் ஆண்டில் முதலில் உருவாக்கிய துறை இந்தக் கலை பண்பாட்டுத் துறைதான். நான் ஏன் என்று யோசித்துப் பார்த்தேன். எதற்காக அம்மா அவர்கள் இந்தத் துறையை உருவாக்கினார்கள்? 5 துறைகளில் இருந்த சிறு, சிறு அமைப்புகளை ஒன்றாக்கி எதற்காக உருவாக்கினார்கள்? அவர்கள் அழகாகப் பேசியிருந்தார்கள். சட்டமன்றத்தில் அவர்கள் பேசிய ஒரு வரியை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். பண்பாடு என்பது மனித சமுதாயத்திற்கு அடித்தளம். பாரம்பரியம், தொன்மை, மரபு என்று சொல்வது ஒரு தனி மனிதனுக்கு உயிர் போன்றது. இதனை இரண்டுவிதமான மரபுகளாகப் பிரிக்கலாம்.

இரவு 7–40

ஒன்று, தொட்டு உணரக்கூடிய மரபு, இன்னொன்று, உணர்ந்து ரசிக்கக்கூடிய மரபு. தொட்டு உணரக்கூடிய மரபு, tangible heritage என்பது கோயில்கள், அரும்பொருட்கள், அருங்காட்சியகங்கள், புதையல்கள், heritage buildings, மாடமாளிகைகள், கூடகோபுரங்கள் போன்ற எல்லாவற்றையும் தொட்டு உணர முடியும். இவை tangible heritage.

உணர்ந்து ரசிக்கக்கூடிய மரபு, தமிழினத்தில் மிக அபரிமிதமாகக் கிடைக்கிறது. இசை, நடனம், நாடகம், திரைப்படம், இலக்கியம், ஓவியம், புகைப்படம், சிற்பம் ஆகிய இந்த 8 துறைகளையும் சேர்த்து கலை என்று பெயர் வைத்தோம் என்றால், மொழியும், கலையும், சமயமும், சாஸ்திரங்களும், விழுமியங்களும் (values) பழக்க

வழக்கங்களும் சேர்ந்தது வாழ்வியல் நெறிகள். இதுதான் நம்முடைய அடித்தளம் என்று அம்மா சொல்கிறார்கள். பண்பாடு என்பது ஒரு சமுதாயத்தின் அடித்தளம். இந்த கலை, பண்பாட்டுத் துறை ஏன் தொல்லியலோடு, அருங்காட்சியகங்களோடு சேர்ந்து இருக்கிறது என்றால், அம்மாவின் இந்தத் தொலைநோக்குப் பார்வைதான் இதற்குக் காரணம். அம்மாவின் 'தொலைநோக்குப் பார்வை 2023'–ல் அருமையாகச் சொல்லியிருப்பார்கள், ஒரு சமுதாயத்தில் இரண்டுவிதமான கட்டமைப்புகள் இருக்க வேண்டும். Hard infrastructure, soft infrastructure. வன் உட்கட்டமைப்பு என்றால் என்ன அர்த்தம்? P.W.D., Highways, E.B. இவையெல்லாம் சமுதாயத்தில் அடிப்படையில் இருக்க வேண்டிய hard infrastructure. கலை, பண்பாடு, கல்வி இவையெல்லாம் மென் கட்டமைப்புகள். இந்த இரண்டையும் வைத்து அம்மாவின் தொலைநோக்குப் பார்வை இருந்திருக்கிறது. 1991–லும், 2011–2012–லும் அவர்கள் தொலைநோக்குப் பார்வையைச் சொன்னபொழுதுதான் இது குறித்து அறிய முடிந்தது. இந்த 10 நிமிட உரையில், 3 துறைகளையும் ஒன்றாகச் சேர்த்துத்தான் பேசப்போகிறேன்.

முதல் சாதனை என்று சொன்னால், சென்ற வாரம் நெஞ்சை நெகிழ வைக்கும் நிகழ்ச்சி ஒன்று நடந்தது. இங்கிருந்து 20 பேர் உலகத் தமிழ் மாநாட்டிற்கு சிகாகோ சென்றிருந்தோம். உள்ளே நுழைந்தவுடனே, 6,000 பேர் இருந்த அரங்கில் எல்லோரும் பலத்த கரகோஷத்துடன் வரவேற்றார்கள். ஏனென்று எனக்குப் புரியவில்லை. அந்த மாநாட்டின் மையக் கருத்தே, 'கீழடி என் தாய் மடி' என்பது தான் கீழடியில் இன்றைக்கு நாம் செய்திருக்கின்ற சாதனைகளை அண்ணன் எடப்பாடியார் அவர்கள் சாதித்திருக்கின்ற சாதனையை (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு உலக அளவில் போற்றிப் புகழ்கிறார்கள். என்ன நடந்தது கீழடியில்? அதேபோல் என்ன நடந்தது அதிரம்பாக்கத்தில்? பலருக்கும் தெரிவதில்லை. ஆனால், அங்கே வெளிநாட்டுத் தமிழர்கள் அதைப் புரிந்துகொள்கிறார்கள், அதைப் போற்றுகிறார்கள். அதிரம்பாக்கம் பற்றியும், கீழடி பற்றியும், ஒரு பெரிய floor முழுக்க கண்காட்சி நடத்தினார்கள். கீழடியில் என்ன கண்டுபிடித்திருக்கிறோம் என்றால், இந்திய சமுதாயத்தின் முதல் நாகரிகம் மொகஞ்சதாரோ, ஹரப்பா என்ற சிந்து–சமவெளி நாகரிகம் பற்றி நம் மாணவர்கள் படிக்கிறார்களே, அதையே புரட்டிப் போடக்கூடிய அளவிற்குக் கீழடியில் இன்று நமக்குச் சான்றுகள் கிடைத்துக்கொண்டிருக்கின்றன. நம் தமிழகத்தில்

தொல்லியல் துறையில் 40 அகழ்வாய்வுகளை இதுவரைக்கும் செய்திருக்கிறோம். மத்திய அரசாங்கத்தின் A.S.I., தமிழகத்தில் இதுவரைக்கும் 142 அகழ்வாய்வுகளைச் செய்திருக்கிறது. ஆனால், இப்போது கிடைத்திருக்கும் இந்த 2 விஷயங்கள், அதிரம்பாக்கத்தில் Centre for Heritage Education என்ற அமைப்போடு நாம் இணைந்து செய்தோம். அவர்கள் கண்டுபிடித்திருக்கிற முக்கியமான விஷயம், அன்புத் தம்பி மாண்புமிகு உறுப்பினர் திரு. சண்முகையா, 'தமிழ் வரலாறு 10,000 ஆண்டுகள் பழமையானது' என்று சொன்னார். இன்றைக்கு உலகத்தில் எல்லோரும் என்ன சொல்கிறார்கள் என்றால், தமிழக வரலாறு 3,75,000 ஆண்டுகளானது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) Robert Bruce என்பவர் எடுத்த கல்லாயுதங்கள்; Dr. சாந்தி அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் அந்தக் கல்லாயுதங்களின் தொன்மையைக் கணக்கிடும்பொழுது, தமிழ் வரலாறு என்பது pre–historic–க்கு முன்னால் என்று ரொம்ப அழகாகக் கண்டுபிடித்துச் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய திருவள்ளூர் மாவட்டத்தில், அதிரம்பாக்கத்தில் எடுத்த கல்லாயுதங்கள், அதை வைத்து செய்த ஆய்வுகள், சென்ற வருடம் luminescence dating என்ற புதிய தொழில்நுட்பம் மூலமாக இதை ஆய்வு செய்து சொல்லியிருக்கிறார்கள். முன்பெல்லாம் carbon dating, கலிபோர்னியாவுக்கு அனுப்புங்கள் என்று சொல்வார்கள். இப்பொழுது அதெல்லாம் தேவையில்லை. Fluorescence testing மூலமாக அழகாக establish செய்திருக்கிறார்கள்.

இந்த ஆண்டில் இது உலகைப் புரட்டிப் போட்ட ஒரு கண்டுபிடிப்பு. கீழடியைப் பொறுத்தவரைக்கும், நகர்ப்புற நாகரிகம் என்பதற்கு என்னவெல்லாம் இலக்கணம் இருக்க வேண்டுமோ, அந்த இலக்கணங்கள் எல்லாமே சிந்து சமவெளி நாகரிகத்திற்கு 600 ஆண்டுகளுக்கு முன்னாலே இருந்தது என்பது உறுதிபடுத்தப்பட்டிருக்கிறது. அயல்நாட்டு அறிஞர்கள் இதை வந்து பார்த்திருக்கிறார்கள். எல்லோரும் செய்திருக்கிறார்கள். அதைப்போல நாம் செய்த மற்ற அகழ்வாய்வுகள்; பட்டரைபெரும்புதூர், கொடுமணல். கொடுமணலில் A.S.I. செய்த அகழ்வாய்வுகள் போன்றவை இதில் ஒரு நல்ல விஷயம் என்ன செய்திருக்கிறோம் என்றால், A.S.I–ஐ விரோதிகள்போல பார்க்காமல், A.S.I., உடன் கைகோர்த்து இந்தமுறை நாங்கள் செயல்பட்டிருக்கிறோம். இந்தமுறை நாம் 24 கோடி ரூபாய் கோட்டையைச் சீர் செய்ய செலவு செய்கிறோம் என்றால், அவர்களையும் 8 கோடி ரூபாய் முதலீடு செய்ய வைத்திருக்கிறோம். இந்த ஆண்டு 12 கோட்டைகள், தமிழகத்தின்

மிக முக்கியமான கோட்டைகளைச் சீர்படுத்துவதற்காக Asian Development Bank–லிருந்து 24 கோடி ரூபாய் பெற்று இந்த முறை நாம் செலவு செய்யப் போகிறோம். உறுப்பினர் திரு. சண்முகையா அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய ஒட்டப்பிடாரம் தொகுதி, பாஞ்சாலங்குறிச்சி கிராமத்தில் இருக்கின்ற கட்டபொம்மன் கோட்டை ரூ.94 இலட்சம் செலவில் இந்த முறை சீர்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. நாகப்பட்டினம் டச்சுக் கல்லறை, சர்வேந்திரராஜபட்டணம், தஞ்சாவூர் மனோரா கோட்டை, மருதுபாண்டியர் கோட்டை, திருமலைநாயக்கர் மகால், உதயகிரி கோட்டை—இதில் கேள்விகூட எழுப்பப்பட்டது—தியாகதுருகம் மலைக்கோட்டை, பூண்டி அருகர் கோயில், கங்கைகொண்ட சோழீஸ்வரர், கூளமந்தல், திருவண்ணாமலை மாவட்டம், தடாகபுரீஸ்வரர் கோயில், மடம் கிராமம், சின்னையன்குளம், திருவண்ணாமலை மாவட்டம், ஆலம்பறைக்கோட்டை இவையனைத்தையும் இந்த ஆண்டில் சீர்படுத்துவதற்காக எடுத்துக்கொண்டு, செயல்படுத்திக்கொண்டிருக்கிறோம். இதற்காக ரூ.24 கோடி நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இரவு 7–45

இதேபோன்று, கடந்த மூன்று ஆண்டுகளில் A.S.I.–உடன் இந்த அரசு இணைந்து பணியாற்றியதில், 70 வரலாற்றுச் சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டில் 413 வரலாற்றுச் சின்னங்களை A.S.I. maintain செய்கிறார்கள். தமிழக அரசு சார்பில் 91 வரலாற்றுச் சின்னங்கள் maintain செய்யப்பட்டு வருகின்றன. ஒரு நல்ல விஷயம். சென்ற ஆண்டு தரங்கம்பாடியில் டேனிஷ்கோட்டையை எப்படி அமைத்தோம் என்பதைப் பார்த்து, Asian Development Bank–ல் ரூ.4½ கோடி நிதி வழங்கியிருக்கிறார்கள். Tranquebar என்று சொல்லக்கூடிய தரங்கம்பாடியில் உள்ள டேனிஷ்கோட்டை இன்று உலகத் தரத்தில் மேம்படுத்தப்பட்டிருக்கிறது. அதைப் பார்த்த டென்மார்க் அரசாங்கம் டேனிஷ்காரர்கள் இங்கு இருந்தபோது வைத்திருந்த Governor's Bungalow–ஐ சீர்படுத்துவதற்கு இந்த ஆண்டு இந்தத் துறையிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். அதைச் சீர்படுத்துவதற்கு அவர்களே ½ மில்லியன் யூரோ, அதாவது, சற்றொப்ப 4 கோடி ரூபாய் தருவதாக வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். அதைச் சீர்படுத்தி, தரங்கம்பாடி ஓர் உன்னதமான சுற்றுலாத் தலமாக உருவாக்கப்படும். ஏற்கெனவே நல்ல முறையில் வளர்ந்து

கொண்டிருக்கிறது, அதைவிட இன்னும் சிறப்பாக வளர்ச்சியடைய இந்த ஆண்டு இந்த அரசு ஏற்பாடு செய்யவிருக்கிறது.

தொல்லியலுக்கென ஒரு தொலைநோக்குப் பார்வையை ஏற்படுத்தியிருக்கிறோம். தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறோம். தற்காலத்தில் தண்ணீர் divining செய்வதற்குக்கூட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறார்கள். தொல்பொருட்களைத் தேடி அலைவதற்காக, புவி காந்தயியல், அதாவது Geo Bio–magnetism என்ற ஒரு துறையை எடுத்து, அவர்களோடு அதைப் பயன்படுத்தி வருகிறோம். Radar, அதாவது விமானங்களை இயக்குவதற்கு உதவும் Radar கருவிகளை underground–லும் உபயோகப்படுத்தலாம் என்பதைக் கண்டுபிடித்து, பல தொழில்நுட்பங்களை இதில் கொண்டு வந்திருக்கிறோம். உலகத் தரம் வாய்ந்த பல்கலைக்கழகங்களின் பங்களிப்பை இதற்காகக் கொண்டு வந்திருக்கிறோம். முசிறிப்பட்டணம் என்று முன்னால் அழைக்கப்பட்ட, நம்முடைய சேர நாட்டின் துறைமுகமாக இருந்த 'பட்டணம்' அதில் தற்பொழுது Oxford பல்கலைக்கழகத்தின் பங்களிப்பைச் செய்து கொண்டிருக்கிறார்கள். Harvard University தமிழகத்திற்கு வந்து நம்முடன் பணி செய்வதற்கான முயற்சிகளை நாம் செய்து கொண்டிருக்கிறோம். அதேபோல, கல்வெட்டுகள், சுவடிகள், செப்பேடுகள், குகை ஓவியங்கள், நடுகற்கள் மற்றும் அகழ்வாய்வில் கண்டெடுக்கப்படும் தொல் பொருட்கள் இவை அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்து இலக்கியச் சான்றுகளுடன் அவற்றை இணைத்துப் பார்த்து, வரலாற்றை அர்த்தப்படுத்தும் பணியை தொலைநோக்குப் பார்வையில் நாங்கள் எடுத்துச் செய்துகொண்டிருக்கிறோம்.

அதேபோல, உலகத் தரம்மிக்க அருங்காட்சியகங்களாக நம்முடைய 36 அருங்காட்சியகங்களை உருவாக்குகின்ற பணியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம். ICOM என்ற ஓர் அமைப்பில், International Organisation–ல் சேர்ந்திருக்கிறோம். 5C என்று சொல்கிறார்கள். அந்த 5C–ஐ சரி செய்து கொடுத்தால், உலகத் தரத்தை நீங்கள் எய்திவிடுவீர்கள் என்று சொல்கிறார்கள். (1) collection, அதாவது அரும்பொருட்களைத் தேடி அலைந்து கண்டுபிடித்துக் கொண்டு வருவது; (2) Conservation. Conservation என்றால் பாதுகாப்பது; (3) Correlation–ஒப்பியல், ஒன்றோடொன்று ஒப்பிட்டுப் பார்த்து இலக்கியச் சான்றுகள் என்னென்ன இருக்கின்றன, இது என்ன சொல்கிறது, இதுவும், அதுவும்

சம்பந்தப்படுகிறதா என்று பார்ப்பது; (4) Curation–எல்லாவற்றிற்கும் முக்கியமான அடிப்படையாக இருப்பது, கருத்துசார் காட்சி அமைத்தல்; எனக்கு அங்கே போன பிறகுதான் தெரிந்தது, உலகத்திலே நல்ல curators தமிழ்நாட்டிலிருந்துதான் வருகின்றனர். புரட்சித் தலைவர் அவர்களுக்குத்தான் இந்தப் புகழ் முழுமையாகச் சென்று சேர வேண்டும். ஏனென்றால் அவர்தான் முதலில் Curation–க்கு வித்திட்டவர். (குறுக்கீடு) உரையை முடித்து விடுகிறேன். Curation–க்கும் மற்ற படிப்புகளுக்கும் முதலில் இந்தியாவிலேயே பாடத் திட்டத்தை உருவாக்கி, சொல்லிக் கொடுத்தது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். நாம் இதில் இந்த 5C–ஐ எடுத்து, உலகத் தரம் வரை பயணத்தைத் தொடங்கியிருக்கிறோம். 169 ஆண்டுகள் பழமை வாய்ந்தது எழும்பூர் மியூசியம். National Art Gallery–க்கு ரூ.11 கோடி; Interpretation Centre–க்கு ரூ.2 கோடி; ரூ.11.7 கோடியில் உட்கட்டமைப்புத் திட்டங்கள், சுமார் ரூ.25 கோடியில் இந்த அமைப்பின்மூலம் இப்போது எழும்பூர் அருங்காட்சியகத்தை உலகத் தரத்திற்கு உயர்த்திக்கொண்டிருக்கிறோம்.

அதேபோல, புதுக்கோட்டை, நெல்லை, திருச்சி, உதகை ஆகிய 4 District Museums–ஐ மத்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் ரூ.12 கோடியில் இந்தத் தடவை upgrade செய்திருக்கிறோம். புதிய அருங்காட்சியகங்கள், தேனி மற்றும் திருவண்ணாமலையில் உருவாக்கப்பட்டு வருகின்றன. அரியலூர் Dinosaur Museum அடுத்த வாரம் துவங்கப்படவிருக்கிறது.

நான்கு அகழ்வைப்பகங்கள்–site museums கீழடி, ஆதிச்சநல்லூர், கொற்கை, அழகன்குளம் ஆகிய இடங்களில் இந்த ஆண்டு மத்திய அரசாங்கத்தின் உதவியுடன் அவற்றைச் செயல்படுத்த முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறோம். இந்த ஆண்டு இறுதியில் 42 அருங்காட்சியகங்கள் இருக்கக்கூடிய உன்னதமான மாநிலமாக இந்தியாவிலே முதன்மை மாநிலமாக அருங்காட்சியகத் துறையில் தமிழகம் உருவெடுக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றரை இலட்சம் அரும்பொருட்களை வைத்திருக்கிறோம். ஒன்றரை இலட்சம் அரும்பொருட்களின் விலை, இன்றைய தேதியில் மதிப்பு என்பது ரூ.10 இலட்சம் கோடிக்கும் மேலாகும். ‘கோரிக்கையற்று கிடக்குதண்ணே, இங்கு வேரில் பழுத்த பலா’ என்று பாரதிதாசன் பாடுவார். இந்த மதிப்பை நாம் புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக இந்த value–ஐ சொல்கிறேன். 15 இலட்சத்து 30 ஆயிரம் பார்வையாளர்கள் சென்ற முறை வந்திருக்கிறார்கள். தற்போது பார்வையாளர்கள் எண்ணிக்கையை 10 சதவீதம்

உயர்த்தியிருக்கிறோம். இந்த அருங்காட்சியகங்கள்மூலம் ரூ.2.6 கோடி வருமானத்தை சம்பாதித்திருக்கிறோம். இது தொடர்பாக 1,000 புத்தகங்கள் publish செய்திருக்கிறோம். புத்தகங்களை market செய்து சந்தைப்படுத்துவதற்கு இந்த ஆண்டு முயற்சி எடுக்கவிருக்கிறோம்.

இரவு 7–50

அடுத்து, புதையல். புதையல் அதிகமாகக் கிடைக்கின்ற மாநிலம் தமிழகம். வருவாய்த் துறையுடன் இணைந்து புதையல் எடுக்கின்ற process–ஐ streamline செய்திருக்கிறோம். இந்த ஆண்டு நாகை திருவாரூர், தருமபுரி மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் 1,307 அரும்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றிற்கு compensation எவ்வளவு கொடுப்பது என்பதில் பெரிய தகராறு இருந்தது. இதையெல்லாம் இந்த ஆண்டு sort out செய்திருக்கிறோம். Preservation, display, meaning making–அர்த்தப்படுத்துதல்; இதையெல்லாம் சரியாக செய்து கொண்டிருப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். புரட்சித் தலைவி அம்மாவின் பெயரைத் தாங்கி நிற்கக்கூடிய ஒரே பல்கலைக்கழகமான இசை கவின் கலைப் பல்கலைக்கழகம், இந்த ஆண்டு புரட்சித் தலைவி அம்மாவின் vision ஆன Shantiniketan Vishwabharathi–ஐப் போல அதை மாடல் செய்து, ரீ மாடல் செய்யபோகிறோம். 21 affiliate colleges–க்கு இந்த ஆண்டு NAAC வாங்கிவிடுவோம். கண்டிப்பாக National Institution Ranking Framework (NIRF)–க்குத் தகுதிபெற ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். அங்கீகாரங்கள், யூனஸ்கோ பற்றி பேசினீர்கள். யூனஸ்கோ இந்த ஆண்டு ஸ்ரீரங்கம் அரங்கநாத சுவாமி கோயிலுக்கும் இந்த முறை அங்கீகாரம் கொடுத்திருக்கிறார்கள். அதுபோக, Chettinad Bungalows என்று சொல்லக்கூடிய காரைக்குடியில் இருக்கக்கூடிய புராதனக் கட்டடங்களுக்கு இந்த ஆண்டு யூனஸ்கோ அங்கீகாரம் வாங்கப்போகிறோம். GI புவிசார் குறியீடு சென்ற ஆண்டு தஞ்சாவூர் தட்டிற்குக் கிடைத்திருக்கிறது. இந்த ஆண்டு ஏழு craft clusters, சிற்பக் கலையில் இருக்கக்கூடிய ஏழு திறன்கொத்துகளுக்கு புவிசார் குறியீடு பெற உள்ளோம். திருப்பூர் பக்கத்தில் இருக்கிற திருமுருகன்பூண்டி, திருப்பரங்குன்றத்தில் இருந்து, மகாபலிபுரம், நாச்சியார் கோயில் என மொத்தம் ஏழு இடங்களில் சிற்பக் கலைகள் தனித்துவம் மிக்க அமைப்பாக இருக்கிறது.

அவற்றிற்கு புவிசார் குறியீடு geographic indication வாங்குவதற்கு இந்த ஆண்டு முயற்சி எடுக்கப்போகிறோம். ஜவகர் இளஞ்சிறார் மன்றம் உயிரூட்டப்பட்டிருக்கிறது. மாவட்டக் கலை மன்றம் உயிரூட்டப்பட்டிருக்கிறது. 202 பேருக்கு கலைமாமணி விருது கொடுத்திருக்கிறோம். பாரதி விருது கொடுத்திருக்கிறோம். எம்.எஸ் சுப்புலட்சுமி விருது, பாலசரஸ்வதி விருது, கலைச்செம்மல் விருது, அதேபோல கலை இளமணி, வளர்மணி, சுடர்மணி, நன்மணி, முதுமணி என்று விருதுகள் கொடுக்கிற ஒரே மாநிலம் தமிழகம்தான். இன்றைக்கு கலைஞர்களைப் போற்றும் மாநிலமாக தமிழகம் உருவெடுத்திருக்கிறது. மத்திய அரசு அமைப்புகளுடன் நல்லுறவு வைத்திருக்கிறோம். A.S.I. ஒரு பக்கம்; தென்னகப் பண்பாட்டு மையம், இன்றைக்கு தமிழ்நாட்டில் ரூ.13 கோடி செலவு செய்கிறார்கள். அதை ஏற்படுத்திக் கொடுத்தது நம்முடைய கவர்னர் அவர்கள். அவர்களின் தலைமையில் இந்த அமைப்பு இயங்கிக் கொண்டிருக்கிறது. Lalit Kala Academy, ICCR, Sangeet Natak Academy ஆகிய நிறுவனங்களுடன் மத்திய பண்பாட்டு அமைச்சகத்தின் மொத்த பட்ஜெட் இன்றைக்கு ரூபாய் இரண்டாயிரம் கோடி. அதில் 5 சதவீதம் கிடைத்தால் நமக்கு ரூ.100 கோடி கிடைக்க வேண்டும். அந்த ரூ.100 கோடியைக் கேட்டு வாங்குவதற்கு எல்லா முயற்சிகளையும் முனைப்போடு செய்து கொண்டிருக்கிறோம். வெளிநாடுகளிலும், வெளி மாநிலங்களிலும் கலைப் பரிமாற்றங்கள் நடைபெறுகின்றன. மலேஷியா, அமெரிக்கா, South Africa, Central Province of France இந்த வெளிநாடுகளிலேயும் கலைக் குழுக்கள் இந்த ஆண்டு சென்றிருக்கின்றன. அதைப்போல் இந்தியாவில் இருக்கிற 20 மாநிலங்களுக்கு கலைக் குழுக்களை அனுப்பி இருக்கிறோம். அங்கிருந்தும் வாங்கியிருக்கிறோம், கொண்டு வந்திருக்கிறோம்.

உட்கட்டமைப்பைப் பொறுத்தவரைக்கும், இசைப் பள்ளிகள், கல்லூரிகளுக்குச் சொந்தக் கட்டடங்கள், ஜவஹர் சிறுவர் மன்றத்திற்கு ஒரு கட்டடம், எம்.எஸ். பெயரில் ஒரு ஆடிட்டோரியம், தாகூர் பெயரில் ஒரு அரங்கம் இதையெல்லாம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம்.

இறுதியாக, கலைஞர்கள் நலனைப் பற்றி திரு. எ.வ. வேலு அவர்கள் கேள்வியைக் கேட்டார்கள். முக்கியமானது நல வாரியங்கள். நாட்டுப்புற நல வாரியங்கள் உயிரூட்டப்பட்டு வருகின்றன. அதுபோக, நீங்கள் கேட்கிற பேருந்து பயண அட்டை குறித்து ஓரளவிற்கு செய்திருக்கிறோம். ஆனால்,

முழுமையாகச் செய்வதற்கு முடியவில்லை. அதை ஏற்பாடு செய்வதற்கு தடையாக இருப்பது 8½ இலட்சம் கலைஞர்கள்; இந்தக் கலை அடையாளத்தோடு இருப்பவர்கள். சற்றொப்ப IT professionals எந்தளவிற்கு இருக்கிறார்களோ அந்த அளவிற்கு இருக்கிறார்கள். அந்தளவுக்குக் கொடுப்பது அவ்வளவு எளிதானது அல்ல, போக்குவரத்துத் துறைக்கு. ஏழைக் கலைஞர்களாகப் பார்த்து, எல்லோருக்கும் கார்டு கொடுத்துவிடுகிறோம். அதனால் கண்டிப்பாக அந்தக் கோரிக்கையையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துச்சென்று, நல்ல முறையில் செய்ய முடியும் என்று நம்பிக்கை இருக்கிறது. தொல்லியலின் பொற்காலம் ஆக இருந்தது சென்ற ஆண்டு. தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் தொல்லியலில் மிகப் பெரிய தாக்கத்தை உருவாக்கினோம். இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகத்தின் மூலமாகக் கலைப் பண்பாட்டுத் துறைக்கும் இந்த ஆண்டு ஒரு பொற்காலமாக இருக்கும் என்ற நம்பிக்கையுடன் சட்டமன்றத்தின் பார்வைக்கு இந்த மானியக் கோரிக்கையை உங்கள் முன்னால் வைத்துவிட்டு, விடைபெறுகிறேன். நன்றி, வாழ்க பாரதம், வாழ்க தமிழ், வெல்க தமிழ், நன்றி, வாழ்க தமிழ்நாடு, மெல்லத் தமிழ் இனி வெல்லும்!

அறிவிப்புகள், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன்.

கலை, பண்பாட்டுத் துறை பற்றிய புதிய அறிவிப்புகளின் தலைப்பை மட்டும் நான் வாசிக்கின்றேன். மற்றவற்றை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ள வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அறிவிப்புகள்

கலை, பண்பாட்டுத் துறை

1. தஞ்சாவூர் மண்டலக் கலை பண்பாட்டு மையத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல்

ஏழு கலை பண்பாட்டு மையங்கள் இருக்கின்றன. அதில் தஞ்சாவூருக்கு இந்த ஆண்டு ஒரு கோடி ரூபாயில் கட்டப் போகிறோம். தஞ்சாவூர், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கி, தஞ்சாவூரைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் தஞ்சாவூர் மண்டலக் கலை பண்பாட்டு மையத்திற்கு இதய

தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் வட்டம் பிள்ளையார்பட்டி கிராமத்தில் புதிய கட்டடம் கட்டப்படும். இதற்கென, தொடராச் செலவினமாக ரூ.100 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

2. தூத்துக்குடி மாவட்ட அரசு இசைப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டுதல்

இசைப் பள்ளி மற்றும் சவகர் சிறுவர் மன்றத்தில் பயிலும் மாணாக்கர்களின் இசைக் கல்வி நலன் கருதி, தூத்துக்குடி மாவட்ட அரசு இசைப் பள்ளிக்கு இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தூத்துக்குடி மாவட்டம் மற்றும் வட்டம், மாப்பிள்ளையூரணி கிராமத்தில் புதிய கட்டடம் கட்டப்படும். இதற்கென, தொடராச் செலவினமாக ரூ.100 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

3. கலை பண்பாட்டுத் துறைக்குச் சொந்தமான கட்டடங்களைப் பராமரிக்க ஒதுக்கீடு செய்யப்படும் தொகையினை ரூ.80 இலட்சமாக உயர்த்தி வழங்குதல்

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பொதுப் பணித் துறையால் பராமரிக்கப்படும் கலை பண்பாட்டுத் துறைக்குச் சொந்தமான கட்டடங்களின் ஆண்டு பராமரிப்புப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீட்டுத் தொகை ரூ.30 இலட்சத்திலிருந்து ரூ.80 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும். இதற்கென, ஆண்டொன்றுக்கு தொடரும் செலவினமாக ரூ.50 இலட்சம் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

4. அரசு இசைக் கல்லூரி ஆசிரியர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி அளித்தல்

இசைக் கல்வியில் சிறந்த மாணாக்கர்களை உருவாக்கும் வண்ணமும், தற்போது இசை உலகில் உள்ள மாற்றங்கள், நவீன கற்பித்தல் முறைகள் என ஆசிரியர்கள் தங்களைப் புதுப்பித்துக் கொள்ளும்வகையில், இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

அவர்களின் ஆணைப்படி, சென்னை, மதுரை, திருவையாறு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு அரசு இசைக் கல்லூரிகளின் ஆசிரியர்களுக்கு, சிறந்த கலை வல்லுநர்களைக் கொண்டு, புத்தாக்கப் பயிற்சிகள் வழங்கப்படும். இதற்கென, தொடராச் செலவினமாக ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

5. அரசு கவின் கலைக் கல்லூரிகள் மற்றும் அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி ஆசிரியர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி அளித்தல்

கவின் கலைகளில் சிறந்த மாணாக்கர்களை உருவாக்கும் வண்ணமும், தற்போது கவின் கலைகளில் உள்ள மாற்றங்கள், நவீன கற்பித்தல் முறைகள் என ஆசிரியர்கள் தங்களைப் புதுப்பித்துக் கொள்ளும்வகையிலும், நவீன தொழில்நுட்பங்களை அறிந்துகொள்ளும் வகையிலும் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னை, கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரிகள் மற்றும் மாமல்லபுரம், அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி ஆசிரியர்களுக்கு சிறந்த கலை வல்லுநர்களைக் கொண்டு, புத்தாக்கப் பயிற்சிகள் வழங்கப்படும். இதற்கென, தொடராச் செலவினமாக ரூ.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

6. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்மூலம் வழங்கப்படும் பொற்கிழியினை உயர்த்தி வழங்குதல் மற்றும் அதற்கான மூலநிதியினை, ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.30 இலட்சமாக உயர்த்தி வழங்குதல்

கலைமாமணி விருது பெற்று, வறிய நிலையில் உள்ள மூத்த கலைஞர்களுக்கு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் வாயிலாக, ஒரு முறை மட்டும் வழங்கப்படும் பொற்கிழி இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.25,000/–லிருந்து, ரூ.50,000/– ஆக உயர்த்தி வழங்கப்படும். இதற்காக மன்றத்தில் ஏற்படுத்தப்பட்ட மூலநிதி ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.30 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும். இதற்கென, தொடராச் செலவினமாக கூடுதலாக ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

இரவு 7–55

7. மறைந்த மூத்த கலைஞர்களுக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்மூலம் வழங்கப்படும் குடும்ப பராமரிப்பு உதவித் தொகையினை உயர்த்தி வழங்குதல் மற்றும் அதற்கான மூல நிதியினை ரூபாய் 28.76 இலட்சத்திலிருந்து ரூபாய் 50 இலட்சமாக உயர்த்தி வழங்குதல்

மறைந்த புகழ்பெற்ற கலைஞர்களின் வாரிசுதாரர்களுக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் வாயிலாக ஒருமுறை மட்டும் வழங்கப்படும் குடும்ப பராமரிப்பு உதவித் தொகை, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூபாய் 10 ஆயிரத்திலிருந்து ரூபாய் 25 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும். இதற்காக மன்றத்தில் ஏற்படுத்தப்பட்ட மூல நிதி ரூபாய் 28.76 இலட்சத்திலிருந்து ரூபாய் 50 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும். இதற்கென, தொடராச் செலவினமாக கூடுதலாக ரூபாய் 21.24 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

8. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்மூலம் கலைஞர்கள் மற்றும் கலைக் குழுக்களுக்கு இசைக் கருவிகள், ஆடை மற்றும் அணிகலன்கள் வாங்கிட நிதியுதவி வழங்குதல்

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தொன்மை சிறப்புமிக்க தமிழக கிராமியக் கலைகளைப் போற்றி வளர்க்கும் கலைஞர்களையும், கலைக் குழுக்களையும் ஊக்குவிக்கும் வகையில், இசைக் கருவிகள், ஆடை மற்றும் அணிகலன்கள் வாங்கிட தனிப்பட்ட கலைஞர் ஒவ்வொருவருக்கும், ரூபாய் 5 ஆயிரம் வீதம் 500 கலைஞர்களுக்கு ரூபாய் 25 இலட்சமும், கலைக் குழு ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 10 ஆயிரம் வீதம், 100 கலைக் குழுக்களுக்கு, ரூபாய் 10 இலட்சமும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்மூலம் நிதியுதவி வழங்கப்படும். இதற்கென, தொடராச் செலவினமாக ரூபாய் 35 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

சென்ற முறை மாண்புமிகு முதல்வர் அவர்கள் 320 கலைஞர்களுக்கு தலா ரூ.10,000/– வழங்கினார்கள். இந்த முறை அதற்கும் மேலாக, குழுக்களாக அடையாளப்படுத்தி, 100 கலைக் குழுக்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள்.

9. அரிய கலை நூல்களை மறுபதிப்பித்து வெளியிடுவதற்கு நல்கை வழங்குதல்

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் வாயிலாக, இயல், இசை, நாட்டியம், நாடகம் ஆகிய கலைகள் குறித்த அரிய நூல்களைப் பதிப்பிக்க மானியம் வழங்கப்பட்டு வருகிறது. மன்றத்தில் அதிக அளவில் விற்பனை செய்யப்பட்டு, இருப்பில் குறைவாக உள்ள 18 அரிய நூல்கள் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மறுபதிப்பு செய்யப்படும். இதற்கென தொடராச் செலவினமாக ரூபாய் 3.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். 18 அரிய நூல்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். அவற்றை market *செய்யவிருக்கிறோம்.*

10. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் அலுவலகப் பயன்பாட்டிற்கு புதியதாக கணினிகள் மற்றும் இதர உபகரணங்கள் வாங்குதல்

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் அலுவலகப் பயன்பாட்டிற்கு புதியதாக கணினிகள், பிரிண்டர்கள் உள்ளிட்ட இதர உபகரணங்கள் வாங்கப்படும். இதற்கென தொடராச் செலவினமாக ரூபாய் 4.92 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

11. தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகத்திற்கு புதியதாக இசைக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல்

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகத்தில் பயிலும், முதுகலை/முதுகவின்கலை பட்டப் படிப்பு மற்றும் பொதுப் பிரிவில் பயிலும் மாணாக்கர்களின் கல்வி நலன் கருதி, புதியதாக இசைக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்கப்படும். இதற்கென, தொடராச் செலவினமாக ரூபாய் 32.92 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

அருங்காட்சியகங்கள் துறை சார்பான புதிய அறிவிப்புகளின் தலைப்பை மட்டும் நான் வாசிக்கின்றேன். மற்றவற்றை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ள வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அருங்காட்சியகங்கள் துறை

1. சென்னை அரசு அருங்காட்சியகத்தின் இரு சிற்பப் பூங்காக்களை மேம்படுத்துதல் மற்றும் ஒரு புதிய சிற்பப் பூங்கா அமைத்தல்

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னை அரசு அருங்காட்சியகத்தில் தற்போதுள்ள இரு சிற்பப் பூங்காக்கள் மேம்படுத்தப்படும். மேலும், சேமிப்பில் உள்ள அனைத்து கற்சிற்பங்களை, பார்வையாளர்கள் எளிதில் பார்வையிட ஏதுவாக, ஒரு புதிய சிற்பப் பூங்கா இவ்வளாகத்தில் உள்ள பாரம்பரிய கட்டடங்களுக்கு ஏற்றவாறு ஏற்படுத்தப்படும். இதற்கென, தொடராச் செலவினமாக ரூபாய் 70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

2. சென்னை அரசு அருங்காட்சியகத்தில் புனை மெய்யாக்கம் (Augmented Reality) மெய்நிகர் காட்சி (Virtual Reality) மற்றும் உடல் அசைவுகள் அடிப்படையிலான தொழில்நுட்பத் தீர்வுகள் (Touch based Technology Solutions) அமைத்தல்

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னை அரசு அருங்காட்சியகத்தில், புனை மெய்யாக்கம், மெய்நிகர் காட்சி மற்றும் உடல் அசைவுகள் அடிப்படையிலான தொழில்நுட்பத் தீர்வுகளைக் கொண்ட ஊடாடும் காட்சித் தளங்களில் முக்கிய காட்சிப் பொருட்கள் தொடர்பான விவரங்களும் நுணுக்கங்களும் காட்சிப்படுத்தப்படும். இதற்கென, தொடராச் செலவினமாக ரூபாய் 100 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். சென்றமுறை TANII–லிருந்து செய்தோம். இந்த முறை மாண்புமிகு முதல்வர் அவர்களால் நேரடியாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

3. சென்னை அரசு அருங்காட்சியக காட்சிக் கூடங்களில் காணொலிக் காட்சித் திரைகள் (Video Wall) அமைத்தல்

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னை அரசு அருங்காட்சியக காட்சிக்கூடங்களில், கலைப் பொருட்கள் மற்றும் அறிவியல் மாதிரிகள் தொடர்பான கூடுதல் தகவல்களைத் தரும் வகையில், காட்சி பின்புலம் மற்றும் முன்புற

காட்சியமைப்புகளை நவீன தொழில்நுட்பச் சாதனங்கள்மூலம் உருவாக்கி, அவற்றைப் பார்வையாளர்கள் காணும் வகையில் சிறப்புமிக்க காட்சிக்கூடங்களில் காணொலி காட்சித் திரைகள் நிறுவப்படும். இதற்கென, தொடராச் செலவினமாக ரூபாய் 100 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

4. சென்னை அரசு அருங்காட்சியகத்தில் பாதுகாப்பு மேலாண்மை கட்டுப்பாட்டு அமைப்பினை (Security Management Control System–SMCS) நிறுவுதல்

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னை அரசு அருங்காட்சியகத்தில், தற்போது உள்ள பாதுகாப்பு சாதனங்களை மாற்றி, புதியதாக உள்சுற்று தொலைக்காட்சி கேமராக்கள், டிஜிட்டல் வீடியோ ரிகார்டர்கள், மானிட்டர்கள், காட்சிப்பொருள் பாதுகாப்பு அமைப்பு, பொது தகவல் அளிக்கும் அமைப்பு மற்றும் கூடுதல் தீ பாதுகாப்பு முன்னறிவிக்கும் சாதனங்களை உள்ளடக்கிய பாதுகாப்பு மேலாண்மை கட்டுப்பாட்டு அமைப்பை (SMCS) உள்வலைச் சுற்றில் (LAN) இயங்கும் வகையில் நிறுவப்படும். இதற்கென, தொடராச் செலவினமாக ரூபாய் 250 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

5. மாவட்ட அரசு அருங்காட்சியகங்களில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அருங்காட்சியகங்கள் துறையின்கீழ் செயல்படும், 20 மாவட்ட அரசு அருங்காட்சியகங்களில் பார்வையாளர்களை ஈர்க்கும் வகையில் தலா ரூபாய் 3 இலட்சம் செலவில் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும். இதற்கென, தொடராச் செலவினமாக ரூபாய் 60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

6. சென்னை அரசு அருங்காட்சியக படிம காட்சிக்கூடங்களில் குளிர்சாதனக் கருவிகளை மாற்றியமைத்தல்

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னை அரசு அருங்காட்சியகத்தில், சுமார் 15,000 சதுர அடி பரப்பளவில் சைவம், வைணவம், பௌத்தம் மற்றும் சமண

படிமங்கள் உள்ள தனித்த படிம காட்சிக்கூட கட்டடத்தின் மூன்று தளங்களில் உள்ள பழைய குளிர்சாதனக் கருவிகளை முற்றிலுமாக மாற்றிவிட்டு, நவீன வி.ஆர்.வி. (Variable Refrigerant Volume) குளிர்சாதனக் கருவிகள், உரிய மின் பேனல்களுடன் நிறுவப்படும். இதற்கென, தொடராச் செலவினமாக ரூபாய் 70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

தொல்லியல் துறை சார்பான புதிய அறிவிப்புகளின் தலைப்பை மட்டும் நான் வாசிக்கின்றேன். மற்றவற்றை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ள வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தொல்லியல் துறை

1. தமிழ்நாட்டின் கலாச்சார மரபினை வெளிக்கொணரும் வகையில் தமிழகத்தின் தொல்லியல் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் முறையான தொடர் தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள் மேற்கொள்ளுதல்

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழகத்தின் தொல்லியல் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் நவீன தொழில்நுட்பக் கருவிகளைக் கொண்டு ஆய்வு நடத்துவதன்மூலம் தமிழ்நாட்டின் சிறந்த கலாச்சார மரபினை அனைத்து மக்களுக்கும் வெளிச்சமிட்டுக் காட்ட இயலும் என்ற வகையில் முறையான தொடர் தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள் மேற்கொள்ளப்படும். இதற்கென, தொடரும் செலவினமாக ரூபாய் 2 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

இது முக்கியமான அறிவிப்பு. ஒவ்வொரு முறையும் கேட்கும்போது 40 இலட்சம், 50 இலட்சம் என வழங்கப்பட்டது. தொடர்ந்து அந்த ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தில், தற்போது மொத்தமாக 2 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. பத்மஸ்ரீ ஐராவதம் மகாதேவன் அவர்களின் நினைவாக “பண்டைய தமிழ் பண்பாடு மற்றும் மரபு” என்னும் தலைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கம் ஆண்டுதோறும் நடத்துதல்

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,

தமிழ் பிராமி கல்வெட்டுகளைப் படித்து பொருள் அறிவதிலும், சிந்து சமவெளி கல்வெட்டுகளைப் படிப்பதிலும், நிபுணத்துவம் பெற்ற, பத்மஸ்ரீ ஐராவதம் மகாதேவன் அவர்கள் தமிழ் பண்பாடு மற்றும் மரபிற்கு ஆற்றிய பங்களிப்பினைப் போற்றும் வகையில், அன்னாரின் நினைவாக, "பண்டைய தமிழ் பண்பாடு மற்றும் மரபு" என்னும் தலைப்பில், தொல்லியல் துறையால் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்படும். இதற்கென, தொடரும் செலவினமாக ரூபாய் 30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

3. வருங்கால தலைமுறையினரின் நலனுக்காக தமிழ்நாட்டிலுள்ள ஓலைச் சுவடிகளை ஆவணப்படுத்திட மாநில அளவிலான சுவடிக் குழுமம் (State Manuscript Mission) ஏற்படுத்துதல்

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, வருங்கால தலைமுறையினரின் நலனுக்காக தமிழ்நாட்டில் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களிடம் உள்ள ஓலைச்சுவடிகள் அனைத்தையும் முறையாக பாதுகாத்து, எண்ணிலக்கம் செய்து ஆவணப்படுத்திட "மாநில அளவிலான சுவடிக் குழுமம்" (State Manuscript Mission) ஏற்படுத்தப்படும். இதற்கென, தொடராச் செலவினமாக ரூபாய் 10 இலட்சமும், தொடரும் செலவினமாக ரூபாய் 50 இலட்சமும், ஆக மொத்தம் ரூபாய் 60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

ஏற்கெனவே நாம் 98,000 manuscripts வைத்திருக்கிறோம். State Manuscript Centre–க்கு Central Government approval வாங்கியிருக்கிறோம்; அதனை மேலும் வலுப்படுத்துகிறோம்.

4. தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பாதுகாக்கப்பட்ட சின்னங்களில் தமிழ் மரபுசார் கலை நிகழ்ச்சிகள் நடத்துதல்

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மக்கள் கூட்டம் அதிகமாக வரும் திருவிழாக் காலங்களில் மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை, தஞ்சாவூர் அரண்மனை, டேனீஷ் கோட்டை போன்ற முக்கிய பாதுகாக்கப்பட்ட சின்னங்களின் வளாகங்களில் தமிழ் மரபுசார் கலை நிகழ்ச்சிகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பார்வையாளர்களை ஈர்க்கும் வகையில் நடத்தப்படும். இதற்கென, தொடரும் செலவினமாக ரூபாய் 10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

இது மிகவும் முக்கியமானது. வெளிநாட்டுப் பார்வையாளர்களை ஈர்க்கும் வகையில் அங்கே கலை நிகழ்ச்சிகள் நடத்துவதால் Museum dynamic ஆகிவிடும்.

5. தொல்லியல் துறையின் அகழ்வைப்பகங்கள் மற்றும் சார் அலுவலகங்களின் பாதுகாப்பினைக் கண்காணிக்க நவீன கண்காணிப்பு கேமராக்கள் பொருத்துதல்

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தொல்லியல் துறையின் அகழ்வைப்பகங்கள் மற்றும் சார் அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ள தொல்பொருட்கள், கல்வெட்டுப்படிகள், ஆவணங்கள் ஆகியவற்றின் பாதுகாப்பினை, சென்னை தலைமை அலுவலகத்திலிருந்து கண்காணிக்க நவீன கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்படும். இதற்கென, தொடராச் செலவினமாக ரூபாய் 32 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

இவற்றையெல்லாம் செய்து முடிக்கும்போது, இந்தத் துறை கண்டிப்பாக மிக மிக உன்னதமான நிலையை அடையும் என்பதைத் தெரிவித்து, தங்கள் அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களின் கேள்விகளுக்கு நாங்கள் இருவரும் அளித்த பதிலுரை அவர்களுக்கு மனநிறைவைத் தந்திருக்கும் என்று நம்புகிறேன். எனவே, மாண்புமிகு மாமன்ற உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(ஈ) கோரிக்கை எண் 29–சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 29–சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

“சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.112,00,59,000/–, மூலதனக் கணக்கில் ரூ.161,95,10,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்” என்னும் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(உ) கோரிக்கை எண் 47–இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 47–இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.278,86,41,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (16–7–2019), செவ்வாய்க்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை இரவு 7–59 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

40. 2017–2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் நாற்பத்து ஏழாவது ஆண்டறிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 49(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்)

41. 2017–2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் ஐம்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)